2701

T. N. L. A. Debates

OFFICIAL REPORT

VOL: XLVII NO: 1

March 26. 1983

C

D 1
V211,31 N83
N83:47·1
136017

வெளியீடு 10-11-1983] [Issued 10-11-1983

ஆணையர்
தமிழ்நாடு ஆவணக்காப்பகம் மற்றும்
வரலாற்று ஆராய்ச்சி
10 சன 1984
2701
தமிழ்நாடு ஆவணக்காப்பகம்
எழும்பூர், சென்னை-600 008

# தமிழ் நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES

## பணித்துறை வெளியீடு—OFFICIAL REPORT

சனிக்கிழமை மார்ச் 26, 1983—தொகுதி XLVII எண் 1
Saturday 26th March 1983—Volume XLVII No. 1

சட்டமன்றப் பேரவைத் துறை, சென்னை-600 009
Legislative Assembly Department, Fort St. George
Madras-600009

விலை ரூ. 3-50 காசுகள்] [Price Rs. 3-50 Paise

உள்ளடக்கம்.

26-3-1983


| | | பக்கங்கள் |
|---|---|---|
| (i) | தமிழ்நாடு அரசின் ஆளுநரும், அமைச்சரவையும் | i |
| (ii) | தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள் | v |
| (iii) | தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களின் பெயர்ப்பட்டியல் (தொகுதிகள் உள்பட அகர வரிசையில் | ix |
| 1. | வினாக்கள்—விடைகள்— | |
| | உடுக்குறியிட்ட வினாக்கள் .. .. | 1—35 |
| 2. | தகவல் கோரல்— | |
| | (அ) தொழிலாளர்கள் பல மாவட்டங்களில் இருந்து சென்னைக்கு வர ஒப்பந்தம் செய்துகொள்ளப் பெற்ற பேருந்துகளுக்கு அனுமதி .. .. | 36—39 |
| | (ஆ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிக்கைகள் .. .. | 40—42 |
| 3. | கவன ஈர்ப்பு— | |
| | தஞ்சை மாவட்டம் குடவாசல் ஆதி திராவிடர் மாணவர் இல்லம் சீரமைக்கப்படுதல் .. .. | 42—45 |
| 4. | இறுதித்துணை நிதி அறிக்கை, 1982-83, அளித்தல் | 45—47 |
| 5. | அறிவிப்புகள்— | |
| | (அ) வெட்டுத் தீர்மானங்கள் கொடுப்பது | 47 |
| | (ஆ) பேரவை அலுவல். .. | 113—116 |
| 6. | வரவு-செலவுத்திட்டம், 1983-84—வாக்கெடுப்பு (தொடர்ச்சி). .. | |
| | (அ) கோரிக்கை எண். 33—வீட்டுவசதி .. (ஆ) கோரிக்கை எண். 34—நகர்ப் பகுதி வளர்ச்சி .. .. | 47—128 |
| | மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் | 49—50, 116—128 |
| | திரு. சு. பாலன் | 50—57 |
| | திரு. எம். எஸ். மாணிக்கம் | 57—61 |
| | திரு. எல். இளையபெருமாள் | 61—72 |
| | திரு. எஸ். டி. உகம்சந்த் | 72—76 |

6, வரவு-செலவுத் திட்டம், 1983-84—வாக்கெடுப்பு (தொடர்ச்சி)

திரு. பி. முகமது இஸ்மாயில் .. 76 7

திரு. கு. ரமணி .. 79—89

திரு. தி. கா. நல்லப்பன் .. 89—93

திரு. இரெ. இராசமாணிக்கம் .. 94—98

டாக்டர் கே. சௌரிராஜன் .. 98—103

திரு. சீ. சிவப்பிரகாசம் .. 103—106

திரு. ஜே. எஸ். இராசு .. 106—113

7. அறிக்கை அளித்தல்—

வறட்சி துயர்தணிப்புப் பணிகளில் ஒன்றாக விவசாயத் தொழிலாளர்களுக்கு புத்தாடை வழங்குதல். . .. 116

8. பேரவைமுன் வைக்கப் பெற்ற ஏடுகள் .. 128

—X—

136017
சென்னை-600 008.

V2N,31 N83
2701

## தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும்.

### தமிழ்நாடு ஆளுநர்

திரு. சுந்தர்லால் குரானா

*அமைச்சரவையின் உறுப்பினர்கள்:*

1. மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் (முதலமைச்சர்)—பொது, பொது நிர்வாகம், இந்திய ஆட்சிப் பணியாளர், மாவட்ட வருவாய் அதிகாரிகள், மாவட்ட துணை ஆட்சியாளர் சம்பந்தப்பட்டவை, காவல், இலஞ்ச ஒழிப்பு, திட்டம் சர்க்கரை பாகு கழிவு, தொல்பொருள் இயல்.

2. மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் (நிதி அமைச்சர்)—நிதி, சட்டமன்றம், தேர்தல்கள், உணவு, மீன் வளம், பிற்பட்ட வகுப்பினர், இளைஞர் அணி, விலைவாசிக் கட்டுப்பாடு, முன்னாள் ராணுவத்தினர்.

3. மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் (மின் துறை அமைச்சர்)—மின்சாரம், இரும்பு எஃகுக் கட்டுப்பாடு.

4. மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி (ஊரகத் தொழில் துறை அமைச்சர்)—கிராம குடிசை சிறுதொழில்கள் உள்ளிட்ட ஊரகத் தொழில்கள், பால், பால் பெருக்குத் திட்டம், ஆவணப் பதிப்புத் துறை, முத்திரைச் சட்டம்.

5. மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் (வருவாய்த்துறை அமைச்சர்)—வருவாய்கள், வணிக வரிகள், ஆயத்துறை, மக்கள் தொகைக் கணக்கு.

6. மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் (செய்தி அறநிலையத் துறை அமைச்சர்)—செய்தி மற்றும் விளம்பரம், திரைப்பட தொழில் நுட்பவியல், சுற்றுலா, சுற்றுலா வளர்ச்சிக் கழகம், திரைப்படச் சட்டம், இந்து அறநிலையத்துறை, வனங்கள், சின்கோனா, மது அனுமதிச் சீட்டு வழங்கல்.

7. மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் (கல்வி அமைச்சர்)—தொழில் நுட்பக்கல்வி உள்ளிட்ட கல்வி, ஆட்சிமொழி, கைத்தறி

8. மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து (வேளாண்மைத்துறை அமைச்சர்)— வேளாண்மை, வேளாண்மை மறுநிதி, வேளாண்மைப் பொறியியல் பிரிவு மற்றும் அக்ரோ பொறியியல்.

9. மாண்புமிகு திரு. சி. பொன்னையன் (கூட்டுறவு—சட்ட அமைச்சர்)—சட்டம், நீதிமன்றங்கள், சிறைகள், எடைகள் மற்றும் அளவைகள் பற்றி சட்டம் இயற்றல், நிறுவனங்கள் பதிவு, கடன் வழங்கல் மீதான நிவாரணச் சட்டம், சீட்டு பற்றிய சட்டம், கூட்டுறவு.

10. மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு (உள்ளாட்சித்துறை அமைச்சர்)—நகராட்சிகள், ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், சமுதாய வளர்ச்சி, கிராமப்புறக் கடன் நிவாரணம், பூமிதானம், கிராமதானம், நெடுஞ்சாலைகள்.

11. மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் (தொழிலாளர் நலத்துறை அமைச்சர்)—தொழிலாளர் வீட்டுவசதி, குடிசை மாற்று வாரியம், புள்ளிவிவரங்கள் தமிழ்நாடு, குடிநீர்வடிகால் வாரியம், நகர அமைப்பு, இடவசதிக் கட்டுப்பாடு.

12. மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே (மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்)—மக்கள் நல்வாழ்வுத்துறை.

13. மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது (நீர் பாசனத்துறை அமைச்சர்)—வேளாண்மைப் பணி, கூட்டுறவு சங்கங்கள், சிறு பாசனம் உள்ளிட்ட பாசனத் திட்டங்கள், வஃப்.

14. மாண்புமிகு திரு. சு. முத்துசாமி (போக்குவரத்துத்துறை அமைச்சர்)—அரசுடமையாக்கப்பட்ட போக்குவரத்து இயக்கூர்திகள் சட்டம், துறைமுகங்கள்.

15. மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு (தொழில் துறை அமைச்சர்)—பெருந்தொழில்கள், சுரங்கங்கள், கனிப்பொருள்கள், நெசவாலைகள்.

16. மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன்: (கதர் மற்றும் பொதுப்பணித்துறை அமைச்சர்)—கதர், மது அனுமதி சீட்டு வழங்கல், நீங்கலாக மது விலக்கு பயண இசைவுச் சீட்டு பொதுப் பணித்துறை மற்றும் பொதுப்பணித்துறை அலுவல்கள் சம்பந்தமாக,



17. மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி (ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்)—ஆதிதிராவிடர் நலம், எழுதுபொருள், அச்சுத் துறை, அரசு அச்சகம், அச்சு காகிதக் கட்டுப்பாடு, மலைவாழ் பழங்குடியினர் பிணைத் தொழிலாளர், வேலை வாய்ப்புப் பயிற்சியும்.

18. மாண்புமிகு திருமதி கோமதிசீனிவாசன் (சமூகநலத்துறை அமைச்சர்)—மகளிர் குழந்தகள் நலம் உள்ளிட்ட சமூகநலம் கால்நடைப் பராமரிப்பு, பிச்சக்காரர்கள் விடுதி, அநாதை விடுதிகள், வெளிநாடு வாழ் இந்தியர்கள், அகதிகள், வெளியேற்றப் பட்டவர்கள் நலம் சீர்திருத்த நிர்வாகம்.

## PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU.

Governor of Tamil Nadu.

Thiru S. SUNDAR LAL KURANA.

### MEMBERS OF THE COUNCIL OF MINISTERS.

1. Hon. Thiru M. G. RAMACHANDRAN (Chief Minister)—Public, General Administration, IndianAdministrative Service, District Revenue Officers, Deputy Collector, Police, Prevention of Corruption, Planning, Molasses and Archaeology.

2. Hon. Dr. V. R. NEDUNCHEZHIYAN(Minister for finance), —Finance, Legislature, Election, Food, Fisheries, Backward Classes, Youth Service Corps, Price Control and Ex-Servicemen.

3. Hon. Thiru S. RAMACHANDRAN (Minister for Electricity Electricity, Iron and Steel Control.

4. Hon. Thiru K. A. KRISHNASAMY, (Minister for Rural Industries)— Rural Industries including Village, Cottage and Small Industries, Milk, Dairy Development, Registration and Stamp Act.

5. Hon. Thiru S. D. SOMASUNDARAM (Minister for Revenue)—Revenue, Commercial Taxes, Excise and Census.

6. Hon. Thiru R. M. VEERAPPAN (Minister for Information and Religious Endowments)— Information and Publicity, Film Technology, Tourism, Torism Development Corporation, Cinematograp Act, Hindu Relgious and Charitable Endowments, Forest and Cinchona and grant of Liquor Permits.

7. Hon. Thiru C. ARANGANAYAKAM (Minister for Education)—Education including Technical Education, Official Language and Handlooms.

8. Hon. Dr. K. KALIMUTHU (Minister for Agriculture) Agriculture, Agriculture Refinance, Agricultural Engineering wing and Agro Engeneering.

9. Hon. Thiru C. PONNAIAN (Minister for Co-operation and Law)—Law, Courts, Prisons, Legislation on Weights and Measures, Registration of Companies Debt Relief including Legislation on Money Lending and Legislation on Chits and Co-operation.

10. Hon. Thiru P. KULANDAIVELU (Minister for Localt Administration), Municipal Administration Panchayats and Panchya Unions,Community Development, Rural Indebtedness, Bhoodan and Gramdhan and Highways.

11. Hon. Thiru S. RAGHAVANANDHAM (Minister for Labour)—Labour, Housing, Slum Clearance Board, Statistics, Tamil Nadu Watter Supply and Drainage Board, Town Planning and Accommodation Countiol.

12. Hon. Dr. H. V. HANDE (Minist.r for Health)—Health.

13. Hon. Thiru K. RAJA MOHAMMED (Minis er fcr Irrigation —Agro Service Co-operative Societi s, Irriga i n jucluding Minor Irrigation and Wakf.

14. Hon. Thiru S. MUTHUSAMY (Minister for Transport)—Transport, Nationalised Transport, Motor Vehicles Act and Ports.

15. Hon. Thiru S. THIRUNAVUKKARASU (Minister for Industries)—Large Scale Industries, Mines and Minerals and Textiles.

16. Hon. Thiru S. N. RAJEDRAN (Minister for Public Works and Khadi) Handlooms, Khadi, Prohibition excluding grant of Liquor permits, Passports Public Works Department and Establishment matter relating to Public Works Department.

17. Hon. Thiru M. VIJAYASARATHI (Minister for Adi-Dravidar Welfare)—Adi-Dravidar Welfare, Stationery and Printing, Government Press, News Print Control, Hill Tribes and Bonded Labour and Employment and Training.

18. Hon. Thirumathi GOMATHI SRINIVASAN (Minister for Social Welfare)—Social welfa e including Women and Children Welfare, Animal Husbandry, Beggars Home, Orphanages, Indian Overseas, Refugees and Evacuees and Correctional Administration.

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள்.

### பேரவைத்தலைவர்:

*மாண்புமிகு திரு. க. இராசாராம்.

### பேரவைத் துணைத்தலைவர்:

*மாண்புமிகு திரு. பி. எச். பாண்டியன்.

### **மாற்றுத்தலைவர்கள் பட்டியல்.

1. திரு. க. பாலசுப்பிரமணியன்.
2. திரு. ஆர். டி. கோபாலன்.
3. திரு. ப. பொன்னுரங்கம்.
4. திருமதி தா. இராசாம்பாள்.
5. திரு. கு. ரமணி.

### சட்டமன்றப் பேரவைச் செயலாளர்.

திரு. கி. மு. அழகர்சாமி, பி. ஏ. பி. எல்.

### துணைச் செயலாளர்கள்,

திரு. த. இராதாகிருஷ்ணன்.
திரு. இரா. பாலகுரு, பி.ஏ.
திரு. பி. எம். பத்மநாப நம்பியார், பி.ஏ., பி.ஜி.எல்.
திரு. கா. சீனிவாசன், பி.எஸ்.சி. (குழு அலுவலர்)
திரு. வி. சீதாராமன், பி.காம்., பி.ஜி.எல். (சார்புச் செயலாளர்)
திரு. பெ. பள்ளிக்கொண்ட பெருமாள், பி.ஏ.,பி.எல். (சார்புச் செயலாளர்.)
திரு. செ. சு. ஜானகிராமன், பி.ஏ.,பி.எல் (சார்புச்செயலாளர்.)
திரு. பெ. பாலகிருஷ்ணன், பி.காம். (சார்புச் செயலாளர்.)
திரு. ஜே. ரெஜினால்ட் ஜான், பி.ஏ. (சார்புச் செயலாளர்.)
திரு. கே. தியாகராஜன், பி.ஏ., பி.எல். (எஜ்டேட் அலுவலர்.
திரு. பி. கோதண்டராமன், பேரவைத் தலைவரின் தனிச் செயலாளர்.)
திரு. சீ. பாலசுப்பிரமணியன் (தலைமை நிருபர்.)

### (விவாதப் பதிப்பாளர்.)

திரு. வி. இராமச்சந்திரன், எம்.ஏ., எல்.எல்.பி.

---

*21—6—1980 அன்று தேர்ந்தெடுக்கப் பெற்றார்கள்.
**27—1—1983 அன்று நியமனம் செய்யப் பெற்றார்கள்.

தொகுதிகள் உள்ளிட்ட தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களின் (தமிழ் அகர வரிசைப்படி தயாரிக்கப் பெற்ற) பெயர்ப் பட்டியல்.

| தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். | | தொகுதியின் பெயர். |
|---|---|---|
| | (1) | (2) |
| 1 | அங்குசாமி, திரு. ச. | திருவாடானை |
| 2 | அண்ணாதாசன், திரு. எம். | திருவரும்பூர் |
| 3 | அப்துல் ரசாக், திரு. கே. எம். | ஆலந்தூர் |
| 4 | அப்பாதுரை, திரு. மு. | ஒட்டப்பிடாரம் (செ.வ.) |
| 5 | அம்பிகாபதி, திரு. மு. | மன்னார்குடி |
| 6 | அரங்கநாதன், திரு. எஸ். | தர்மபுரி |
| 7 | அரங்கநாதன், திரு. மு. | கூனூர் (செ.வ.) |
| 8 | அரங்கநாயகம், திரு. செ. | கோவை (மேற்கு) |
| 9 | அரங்கராசன், திரு. வெ. | உப்பிலியாபுரம் |
| 10 | அருணகிரி, திரு. இரா. | திருப்பத்தூர் |
| 11 | அருணாசலம், திரு. இரா. | நாமக்கல் (செ.வ.) |
| 12 | அழகர்சாமி, திரு. சோ. | கோவில்பட்டி |
| 13 | அன்பழகன், திரு. க. | புரசைவாக்கம் |
| 14 | அன்பழகன், திரு. தி. | நாட்ராம்பள்ளி |
| 15 | அன்டல் தர்மலிங்கம், திரு. | லால்குடி |
| 16 | ஆண்டி அம்பலம், திரு. மெ. | நத்தம் |
| 17 | ஆண்டித் தேவர், திரு. எஸ். | உசிலம்பட்டி |
| 18 | ஆறுமுகம், திரு. எம். | அவினாசி (செ.வ.) |
| 19 | சேலம் ஆறுமுகம், திரு. மு. | சேலம்—2 |
| 20 | ஆறுமுகம், திரு. த. | அரியலூர் |
| 21 | அனூர் ஜெகதீசன், திரு. பு. கே. | செங்கல்பட்டு |
| 22 | இரத்தினம், திரு. எம். வி. | பொள்ளாச்சி |
| 23 | இராசகுமார், திரு. மெ. அ. | மருங்காபுரி |
| 24 | இராசமாணிக்கம், திரு. இ. ரெ. | குத்தாலம் |
| 25 | இராசரத்தினம், திரு. து. | பூந்தமல்லி |
| 26 | இராசாம்பாள், திருமதி. தா. | தலைவாசல் (செ.வ.) |

| தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். | தொகுதியின் பெயர். |
|---|---|
| (1) | (2) |
| 27 இராசாராம், திரு. க. | பனமரத்துப்பட்டி |
| 28 இராமராமன் திரு. எஸ். | பாபநாசம் |
| 29 இராசு, திரு. ஜே. எஸ், | பெரம்பலூர் (செ.வ.) |
| 30 இராசேந்திரன், திரு. எஸ். என். | தூத்துக்குடி |
| 31 இராமச்சந்திரன், திரு. எம். ஜி. | மதுரை (மேற்கு) |
| 32 இராமச்சந்திரன், திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். | சாத்தூர் |
| 33 இராமச்சந்திரன், திரு. ச. | பண்ருட்டி |
| 34 இராமச்சந்திரன், திரு. செஞ்சி, ந. | செஞ்சி |
| 35 இராமசாமி, திரு. எஸ். என். | சாத்தான்குளம் |
| 36 இராமசாமி, திரு. ந. | இராமநாதபுரம் |
| 37 இராமசுப்பிரமணியன், திரு. இ. | ஸ்ரீவைகுண்டம் |
| 38 இராமலிங்கம், திரு. ஏ. | காட்டுமன்னார் (செ.வ.) |
| 39 இராமலிங்கம், டாக்டர். கே. பி. | இராசிபுரம் |
| 40 இராமலிங்கம், திரு. செ. | திருவிடைமருதூர் |
| 41 இராஜசேகரன், திரு. வே. | இராதாகிருஷ்ணநகர் |
| 42 இராஜாராம் நாயுடு, திரு. தெ. இரா. | தல்லி |
| 43 இராஜேந்திரன், திரு. எஸ். எஸ். | ஆண்டிப்பட்டி |
| 44 இளையபெருமாள், திரு. எல். | எழும்பூர் (செ.வ.) |
| 45 ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், திரு. பி. | அம்பாசமுத்திரம் |
| 46 உகம்சந்த், திரு. எஸ். டி. | மதுராந்தகம் |
| 47 உச்சி, திரு. கே. | கூடலூர் |
| 48 உத்திராபதி, திரு. பொ. | திருத்துறைப்பூண்டி (செ.வ) |
| 49 உமாநாத், திரு. ரா. | நாகை |
| 50 கண்ணன், திரு. ம. | கண்டமங்கலம் (செ.வ.) |
| 51 கணபதி, திரு. கே. ஆர். | சிதம்பரம் |
| 52 கணேசன், திரு. இ. | இடைப்பாடி |
| 53 கணேசன், திரு. சி. | அச்சரப்பாக்கம் (செ.வ.) |



| தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். | தொகுதியின் பெயர், |
|---|---|
| (1) | (2) |
| 54 கந்தசாமி, திரு. கா. வே. | கிணத்துக்கடவு |
| 55 கந்தசாமி, திரு. பி. | பொங்கலூர் |
| 56 கபாலி, திரு. டி. கே. | மைலாப்பூர் |
| 57 கருணாநிதி, டாக்டர் மு. | அண்ணாநகர் |
| 58 கருப்பசாமிப்பாண்டியன், திரு. வி. | பாளையங்கோட்டை |
| 59 கருப்பையா, திரு. இரா. | குளித்தலை |
| 60 கருப்பையா, திரு. ஏ. டி. | வால்பாறை |
| 61 கல்லன், திரு. கே. | உதகமண்டலம் |
| 62 கலிதீர்த்தான், திரு. கோ. | சங்கராபுரம் |
| 63 கலியமூர்த்தி, திரு. பெ. | மங்களூர் (செ.வ.) |
| 64 கலையரசன், திரு. நன்னிலம் அ. | நன்னிலம் (செ.வ.) |
| 65 காளிமுத்து, டாக்டர். கா. | திருப்பரங்குன்றம் |
| 66 கிட்டப்பா, திரு. எஸ். | மாயவரம் |
| 67 கிருஷ்ணசாமி, திரு. கா. கோ. | காங்கேயம் |
| 68 கிருஷ்ணசாமி, திரு. கே. ஏ. | ஆயிரம் விளக்கு |
| 69 கிருஷ்ணமூர்த்தி, திரு. சா. | ஆண்டி மடம் |
| 70 கிருஷ்ணமூர்த்தி, திரு. வி. | நெல்லிக்குப்பம் |
| 71 கிருஷ்ணராஜ், திரு. ஜி. | சேலம்—1 |
| 72 கிருஷ்ணன், திரு. ரா. | வாசுதேவநல்லூர் |
| 73 குப்புசாமி, திரு. என். | மொரப்பூர் |
| 74 குப்புசாமி, திரு. கே. | ஒட்டன்சத்திரம் |
| 75 குப்புசாமி, திரு. செ. | வந்தவாசி (செ.வ.) |
| 76 குமரி அனந்தன், திரு. | திருவொற்றியூர் |
| 77 குருசாமி, திரு. ப. | அந்தியூர் (செ.வ.) |
| 78 குலசேகர், திரு. ஏ. டி. | சிங்காநல்லூர் |
| 79 குலசேகரப்பாண்டியன், திரு. ந. | வாணியம்பாடி |
| 80 குழந்தைவேலு, திரு. ப. | உடுமலைப்பேட்டை |
| 81 அமிர்தராஜ், திரு (வெற்றிடம்) | திருச்செந்தூர் |
| 82 கோபால், திரு. சி. | சோளிங்கர் |
| 83 கோபாலகிருஷ்ணன், திரு. கா. | பெரியகுளம் |
| 84 கோபாலன், திரு. ஆர். டி. | கம்பம் |

| | தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|---|
| 85 | கோமதி சீனிவாசன், திருமதி | வலங்கை (செ.வ.) |
| 86 | கோவேந்தன், திரு. எம். ஆர். | பேராவூரணி |
| 87 | கோவைத்தம்பி, திரு. | பேரூர் |
| 88 | சக்கரபாணி, திரு. ஆர். | பொன்னேரி |
| 89 | சங்கரய்யா, திரு. என். | மதுரை (கிழக்கு) |
| 90 | சட்டநாத கரையாளர், திரு. சி. | தென்காசி |
| 91 | சண்முகம், திரு. இரா. | திருத்தணி |
| 92 | சண்முகம், திரு. ஏ. சி. | ஆரணி |
| 93 | சத்தியமூர்த்தி, திரு. வ. | கடலாடி |
| 94 | சந்திரசேகரன், திரு. ஏ. | சோழவந்தான் |
| 95 | சபாபதி, திரு. சி. | ஆரூர் (செ.வ.) |
| 96 | சமரசம், டாக்டர், கே. | காவேரிப்பட்டிணம் |
| 97 | சாகுல் ஹமீது, திரு. ஏ. | கடையநல்லூர் |
| 98 | சாமிக்கண்ணு, திரு. தா. | செங்கம் |
| 99 | சித்தன், திரு. என். எஸ். வி. | திருமங்கலம் |
| 100 | சிதம்பரம், திரு. சி. த. | காரைக்குடி |
| 101 | சிவசாமி, திரு. செ. | இளையான்குடி |
| 102 | சிவஞானம், திரு. ந. | திருவோணம் |
| 103 | சிவப்பிரகாசம், திரு. சீ. | சேந்தமங்கலம் (செ.வ.) |
| 104 | சிவப்பெருமாள், திரு மு. | ஓமலூர் |
| 105 | சிவராமன், திரு. எஸ். | சின்னசேலம் |
| 106 | சின்னசாமி, திரு. எம். | கரூர் |
| 107 | சின்னதுரை, திரு. ஏ. | மேல்மலையனூர் |
| 108 | சின்னராசு, திரு. க. இரா. | கிருஷ்ணகிரி |
| 109 | சின்னராசு, திரு. மா. | தொண்டாமுத்தூர் |
| 110 | சுந்தரம், திரு. கே. ஆர். | குடியாத்தம் |
| 111 | சுந்தரம், திரு. ப. | திருப்பத்தூர் |
| 112 | சுந்தரம், திரு. மு. | ரிஷிவந்தியம் |
| 113 | சுந்தரமூர்த்தி, திரு. ஆர். | முகையூர் |
| 114 | சுந்தரராஜ், திரு. நா. | திருமயம் |
| 115 | சுந்தரராஜன், திரு. மு. | விருதுநகர் |
| 116 | சுப்பிரமணியன், திரு. உ. | சிவகங்கை |
| 117 | சுப்பிரமணியன், திரு. கே. எம். எஸ். | போடிநாயக்கனூர் |



| | தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|---|
| 118 | சுப்பிரமணியன், திரு. மா. | திருவையாறு |
| 119 | சுப்பிரமணியன், திரு. வி. | திருநாவலூர் |
| 120 | சுப்பிரமணியன், திரு. ஜி. கே. | பவானிசாகர் |
| 121 | சுவாமிநாதன், திரு. வி. வி. | புவனகிரி |
| 122 | செங்கோட்டையன், திரு. அ. | கோபிசெட்டிப்பாளையம் |
| 123 | செம்மலை, திரு. செ. | தாரமங்கலம் |
| 124 | செல்லமுத்து, திரு. எம். | திருவாரூர் (செ.வ.) |
| 125 | செல்வராஜன், திரு. அ. | துறைமுகம் |
| 126 | சென்னிமலை என்கிற கந்தசாமி, திரு. ப. செ. | அரவக்குறிச்சி |
| 127 | சேதுராமன், திரு. ஏ. எம். | ஆற்காடு |
| 128 | சொக்கலிங்கம், திரு. கெ. | திருப்போரூர் |
| 129 | சோமசுந்தரம், திரு. எஸ். டி. | பட்டுக்கோட்டை |
| 130 | சோமு, திரு. என். வி. என். | பூங்காநகர் |
| 131 | சௌந்திரராஜன், திரு. கே. | திருச்சி—2 |
| 132 | சௌரிராஜன், டாக்டர்: திரு. கே. | தி. நகர் |
| 133 | தங்கமணி, திரு. | திண்டிவனம் |
| 134 | தங்கராசு, திரு. ஏ. | குறிஞ்சிப்பாடி |
| 135 | தங்கவேல்ராஜ், திரு. பி. எம். | கிருஷ்ணராயபுரம் (செ.வ.) |
| 136 | தங்கவேலு, திரு. பி. | செயங்கொண்டான் |
| 137 | தவசி, திரு. ஆர். | பரமக்குடி (செ.வ.) |
| 138 | தனபால், திரு. ப. | சங்கரி (செ.வ.) |
| 139 | தனுக்கோடித்தேவர், திரு. கே. | முதுகளத்தூர் |
| 140 | தாமரைக்கனி, திரு. இரா. | ஸ்ரீவில்லிப்புத்தூர் |
| 141 | தியாகராசன், திரு. ஆர். | விருத்தாசலம் |
| 142 | திருச்சி சௌந்திரராசன், திரு. ஆர். | ஸ்ரீரங்கம் |
| 143 | திருநாவுக்கரசு, திரு. எஸ். | அறந்தாங்கி |
| 144 | திருமாறன், திரு. பெ. | ஆலங்குடி |
| 145 | திருமான், திரு. இரா. | ஏற்காடு (செ.வ.) |
| 146 | திருவேங்கடம், திரு. பெ. சு. | கலசப்பாக்கம் |
| 147 | தீர்த்தராமன, திரு. ப. | பென்னகரம் |
| 148 | துரைசாமி, திரு. பி. எஸ். | பர்கூர் |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | | தொகுதியின் பெயர். (2) |
|---|---|---|
| 149 | துரைமுருகன், திரு. | ராணிப்பேட்டை |
| 150 | துரை ராமசாமி, திரு. | வெள்ளக்கோவில் |
| 151 | துரைராஜ், திரு. பி. | சங்கரநயினார் கோவில் (செ.வ.) |
| 152 | தேவராஜ், திரு. வி. எம். | வேலூர் |
| 153 | நடராசன், திரு. எஸ். | தஞ்சாவூர் |
| 154 | நரசிம்மன், திரு. பூ. மு. | பள்ளிப்பட்டு |
| 155 | நல்லப்பன், திரு. தி. கா. | பெருந்துறை |
| 156 | நவநீதகிருஷ்ண பாண்டியன், திரு. ஆர். | ஆலங்குளம் |
| 157 | நாச்சிமுத்து, திரு. கே. பி. | மேட்டூர் |
| 158 | நாராயணசாமி, திரு. கே. | திருவண்ணாமலை |
| 159 | நாராயணன், திரு. பி. ஜி. | பவானி |
| 160 | நெடுஞ்செழியன், டாக்டர் இரா | திருநெல்வேலி |
| 161 | நெடுமாறன், திரு. ப. | மதுரை (மத்திய) |
| 162 | பக்கீர் முகமது, திரு. இ. என். எம். | கும்பகோணம் |
| 163 | பட்டாபிராமன், திரு. செ. | திருவள்ளூர் |
| 164 | பம்மல் நல்லதம்பி, திரு. | தாம்பரம் |
| 165 | பரமசிவகவுண்டர் திரு. பி. எஸ். | பல்லடம் |
| 166 | பலராமன், திரு. இல. | போளூர் |
| 167 | பழனிசாமி, திரு. சு. | மேட்டுப்பாளையம் |
| 168 | பழனிமுத்து, திரு. சி. | ஆத்தூர் |
| 169 | பழனியப்பன், திரு. கு. பா. | விழுப்புரம் |
| 170 | பழனிவேல், திரு. என். | பழனி (செ.வ.) |
| 171 | பாண்டியன், திரு. பி. எச். | சேரன்மாதேவி |
| 172 | பாபு கோவிந்தராஜன், திரு. | கடலூர் |
| 173 | பாபு ஜனார்த்தனன், திரு. | செய்யாறு |
| 174 | பாரமலை, திரு. க. | மானாமதுரை (செ.வ) |
| 175 | பாலகிருஷ்ணன், திரு. ச. | மொடக்குறிச்சி |
| 176 | பாலகிருஷ்ணன், திரு. பி. | சிவகாசி |
| 177 | பாலசுப்பிரமணியன், திரு. க. | சீர்காழி (செ.வ.) |
| 178 | பாலசுப்பிரமணியன், திரு. வி. பி. | வேடசந்தூர் |
| 179 | பாலன், திரு. சு. | பெரம்பூர் (செ.வ.) |



| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | | தொகுதியின் பெயர். (2) |
|---|---|---|
| 180 | பாலுச்சாமி, திரு. ஏ. | சமயநல்லூர் (செ.வ.) |
| 181 | பிச்சை, திரு. எம் | அருப்புக்கோட்டை |
| 182 | பிரபாகரன், திரு. ஜே. சி. டி. | வில்லிவாக்கம் |
| 183 | புருஷோத்தமன், திரு. து. | சைதாப்பேட்டை சென். |
| 184 | பூங்காவனம், திரு. என். ஏ. | காட்பாடி |
| 185 | பெரியசாமி, திரு. ஏ. | தாராபுரம் (செ.வ.) |
| 186 | பெரியசாமி, திரு. ரா. | தொட்டியம் (செ.வ.) |
| 187 | பெருமாள், திரு. என். | வரகூர் (செ.வ.) |
| 188 | பெருமாள், திரு. ரா. கு. | விளாத்திகுளம் |
| 189 | பொன்னம்மாள், திருமதி ஏ. எஸ். | நிலக்கோட்டை (செ,வ.) |
| 190 | பொன்னுரங்கம், திரு. ப. | இராயபுரம், சென்னை. |
| 191 | பொன்னையன், திரு. சி. | திருச்செங்கோடு |
| 192 | மணி, திரு. டி. | விளவங்கோடு |
| 193 | மணிமாறன், திரு. ஆர். | திருப்பூர் |
| 194 | மாணிக்கம், திரு. எம். எஸ். | வேதாரண்யம் |
| 195 | மாரிமுத்து, திரு. த. | குளத்தூர் (செ.வ.) |
| 196 | முகமது இஸ்மாயில், திரு. பி. | பத்மநாபபுரம் |
| 197 | முசிறிப்புத்தன், திரு. பி. | திருச்சி—1 |
| 198 | முத்துக்கிருஷ்ணன், திரு. சு. | கன்னியாகுமரி |
| 199 | முத்துசாமி, திரு. சு. | ஈரோடு |
| 200 | முத்துராமலிங்கம், திரு. இ. | ராதாபுரம் |
| 201 | முத்துவேல், திரு. என். | வானூர் (செ.வ.) |
| 202 | முத்தையா, திரு. இரா. | சேடப்பட்டி |
| 203 | முனிரத்தினம், திரு. இரா. சா. | கும்மிடிப்பூண்டி |
| 204 | முனுசாமி, திரு. மு. ப. | பாலக்கோடு |
| 205 | மூர்த்தி, திரு. ஜி. | பேரணாம்பட்டு (செ.வ.) |
| 206 | மொக்கையன், திரு. பி. | ராஜபாளையம் (செ.வ.) |
| 207 | யசோதா, திருமதி, டி. | ஸ்ரீபெரும்புத்தூர் (செ.வ.) |
| 208 | ரகுமான்கான், திரு. அ. | சேப்பாக்கம் |
| 209 | ரங்கசாமி, திரு. ஆர். | சத்தியமங்கலம் |
| 210 | ரங்கசாமி, திரு. க. | உளுந்தூர்பேட்டை (செ.வ.) |
| 211 | ரமணி, திரு. கு. | கோயம்புத்தூர் (கிழக்கு) |

| தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். (1) | | தொகுதியின் பெயர். (2) |
|---|---|---|
| 212 | ராம்குமார் விஜயரெகுநாத தொண்டமான், திரு. | புதுக்கோட்டை |
| 213 | ராஜமாணிக்கம், திரு. எம். கே. | முசிறி |
| 214 | ரெத்தினராஜ், திரு. எஸ். | குளச்சல் |
| 215 | வரதராஜன், திரு. என். | திண்டுக்கல் |
| 216 | விசயலட்சுமி, செல்வி. வி. | வீரபாண்டி |
| 217 | வின்சென்ட், திரு. மி. | நாகர்கோவில் |
| 218 | விஜயசாரதி, திரு. எம். | அரக்கோணம் (செ.வ.) |
| 219 | விஜயபாலன், திரு. என். | பூம்புகார் |
| 220 | விஜயராகவன், திரு. பொ. | கிள்ளியூர் |
| 221 | விஸ்வநாதன், திரு. கொ. | அணைக்கட்டு |
| 222 | வீராசாமி, திரு. த. | ஒரத்தநாடு |
| 223 | வீராணம்பலம், திரு. க. வெ. | மேலூர் |
| 224 | வெங்கடசுப்பிரமணியம், திரு. ப. | காஞ்சிபுரம் |
| 225 | வெங்கடரெட்டி, திரு. டி. | ஓசூர் |
| 226 | வெங்கடேசன், திரு. பி. எம். | பெரணமல்லூர் |
| 227 | வெள்ளைச்சாமி, திரு. ஆ. | ஆத்தூர் |
| 228 | வேணுகோபால், திரு. த. | தண்டராம்பட்டு |
| 229 | வேலப்பன், திரு. சி. வி. | கபிலர்மலை |
| 230 | ஜகத்ரட்சகன், திரு. எஸ். | உத்திரமேரூர் |
| 231 | ஜான் வின்செண்ட், திரு. மு. | நான்குனேரி |
| 232 | ஜெயராமன், திரு. வே. இரா. | தேனி |
| 233 | ஹாஜா செரீப், திரு. கே. எஸ். ஜி. | திருவல்லிக்கேணி |
| 234 | ஹேமச்சந்திரன், திரு. ஜே. | திருவட்டார் |
| 235 | மார்கரெட்எலிசபெத்பீலிக்ஸ், திருமதி | நியமன (உறுப்பினர்) |

பேரவை நடவடிக்கைகளில் பங்கு கொள்ள உரிமை பெற்றவர்கள்

1 மாண்புமிகு திரு. இராம. வீரப்பன்—அமைச்சர்
2 மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்—அமைச்சர்
3 மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே—அமைச்சர்
4 மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது—அமைச்சர்
5 திரு. ஆர். கிருஷ்ணமூர்த்தி—தலைமை வழக்கறிஞர்

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

சனிக்கிழமை, 1983 மார்ச் 26.
பங்குனி 12, துந்துபி—திருவள்ளுவர் ஆண்டு 2014.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9-00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

''வெள்ளத் தனைய மலர்நீட்டம் மாந்தர்தம்
உள்ளத் தனையது உயர்வு''

நீரில் வளரும் பூக்களின் நீளம் அவை நிற்கும் நீரின் அளவினதாக இருக்கும். அதைப் போல மக்களின் உயர்வு அவர்களுடைய ஊக்கத்தின் அளவினதாக அமையும்.

## 1. வினாக்கள்—விடைகள்.

### உடுக்குறியிட்ட வினாக்கள்.

வேலையில்லாதிருக்கும் பொறியியல் பட்டதாரிகளுக்கான
தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கும் திட்டம்

*வினா எண். 551—திரு. ப. வெங்கடசுப்பிரமணியம் : மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலையில்லாதிருக்கும் பொறியியல் பட்டதாரிகள் தொழில் கூட்டுறவு சங்கங்கள் அமைத்து வேலைவாய்ப்புத் தர அரசு செயற்குறிப்பு ஏதேனும் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் விவரங்கள் என்ன?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : (அ) மற்றும் (ஆ) பொறியியற் பட்டதாரிகளுக்குக் கட்டிடப் பொறியியற் கூட்டுறவு சங்கம் ஒன்று கூட்டுறவுத் துறையின்கீழ் தொடங்கப்பட்டு இருக்கிறது.

திரு. ப. வெங்கடசுப்பிரமணியம் : பேரவைத் தலைவரவர்களே, இதுபோன்ற பொறியியல் பட்டதாரிகள் தொழில் கூட்டுறவுச் சங்கங்களுக்கு அரசு என்ன, என்ன வகையில் உதவி செய்கிறது? இக் கூட்டுறவுச் சங்கங்களை வளர்க்க அரசு என்ன, என்ன நடவடிக்கையை எடுத்திருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

[1983 மார்ச் 26

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : 6–8–1981 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட இக்கூட்டுறவுச் சங்கத்தின் வாயிலாக, வேலையில்லாதிருக்கும் பொறியியல் பட்டதாரிகள் வறட்சி நிவாரணப் பணிகளை அமல்படுத்துகின்ற பணிகளிலே ஈடுபடுத்துகின்ற வாய்ப்புகளையும், அரசு கட்டுகின்ற முக்கியமான வீடுகளை அவர்களுக்கே ஒதுக்குகின்ற பணியையும் இன்றைக்கு நல்கி வருகிறது.

திரு. ப. வெங்கடசுப்பிரமணியம் : பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதுபோன்று ஒரே ஒரு கூட்டுறவுச் சங்கம்தான் இருப்பதாகக் கூறுகிறார்கள். மாவட்ட அளவில் இதுபோன்ற கூட்டுறவு அமைப்பினை ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு தலைவர் அவர்களே, சம்பந்தப்பட்ட பொறியியல் பட்டதாரிகள் அரசை அணுகினால் தக்க ஏற்பாடுகளைச் செய்யும்.

திரு. தி. கா. நல்லப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வேலையில்லா பொறியியல் பட்டதாரிகள் படித்திருப்பது தொழிலியல். அவர்கள் எந்தத் தொழிலியலைப் படித்திருக்கிறார்களோ, அந்தத் தொழிலைத் தனியாகச் செய்வதற்கு, அரசாங்கத்திடம் நிதி, கடன் கேட்டால், அரசு வழங்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு தலைவர் அவர்களே, உரிய நிதி நிறுவனங்களிடம் கேட்டால் நிச்சயமாகக் கிடைக்கும்.

திரு. த. வேணுகோபால் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பொறியியல் பட்டதாரிகள் தங்களுக்கு வேலையில்லாத நேரத்திலே, வேலைகளைச் செய்வதற்கு, மற்ற மாவட்டங்களிலே சங்கங்கள் அமைப்பதற்கு அரசிடம் கோரிக்கை ஏதேனும் வந்துள்ளதா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு தலைவர் அவர்களே, அதுபற்றிய தகவல் என்னிடத்திலே இல்லை.

மாதவரம் பால் வழங்கும் நிறுவனம்மூலம் வழங்கப்படும் பால்.

*வினா எண். 552—திரு. து. புருஷோத்தமன் : மாண்புமிகு ஊரகத்தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மாதவரம் பால் வழங்கும் நிறுவனத்தின்மூலம் வழங்கப்படும் பாலில் கலப்படம் செய்யப்படுவதாக அரசுக்கு ஏதேனும் புகார்கள் வந்துள்ளனவா?



1983 மார்ச் 26]

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : அரசு மட்டத்தில் புகார்கள் ஏதும் வரவில்லை. தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர் இணையத்திற்குப் புகார்கள் வந்து அவைகளின் மேல் தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

திரு. பெ. சு. திருவேங்கடம் : பேரவைத் தலைவர் அவர்களே, மாதவரத்தில் விற்கப்படுகின்ற பாலினுடைய அளவு குறைவதாகவும்கூட சொல்கிறார்கள். பல்வேறு இடங்களில் தற்சமயம் கொடுக்கப்படுகின்ற பால் கெட்டுள்ளதாகவும் சொல்லப்படுகிறது. அதுபற்றி அமைச்சருக்குத் தகவல் வந்துள்ளதா? அதன்மீது நடவடிக்கை எடுத்துள்ளார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு தலைவர் அவர்களே, தகவல்கள் வந்திருக்கின்றன. தகவல்கள் அடிப்படையில் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. ஒரு விவரத்தைச் சொல்லுகிறேன். 1981 ஆம் ஆண்டு பாலில் கலப்படம் செய்ததாக 157 புகார்கள் வந்தன. ஆனால், தக்க நடவடிக்கை எடுத்த காரணத்தினால், 1982—வது ஆண்டு அது 41 ஆகக் குறைந்துள்ளது. காலதாமதமாகப் பால் விநியோகிக்கப்படுகிறது என்று 1981—வது ஆண்டில் 112 புகார்கள் வந்தன. இப்பொழுது, அது 42-ஆகக் குறைந்திருக்கிறது. பாலுக்கு அதிக விலை கேட்கிறார்கள் என்ற புகார் 41 ஆக இருந்தது, இன்றைய தினம் 20 ஆக மாறியிருக்கிறது. பாலை வழங்க மறுத்தல் என்ற குற்றத்திற்காக, அதாவது அங்கே பால் இருந்தும்கூட விற்க மறுக்கின்ற குற்றங்கள், 1981 ஆம் ஆண்டில் 288 ஆக இருந்தது. இன்றையதினம் 70 ஆகக் குறைக்கப்பட்டிருக்கின்றன.

முறைகேடான நடத்தை, அதாவது இம்ப்ராப்பர் பிஹேவியர் என்ற வகையில் 34 ஆக இருந்தது இன்றையதினம் 12 ஆகக் குறைக்கப்பட்டிருக்கிறது.

பால் திரிதல், கொடுத்த பால் திரிந்து, அதாவது உரிய காலத்தில் வழங்காத காரணத்தினாலே திரிந்து போனதாக 112 புகார்கள் வந்தது. அதற்குத் தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு அது 62 ஆகக் குறைக்கப்பட்டிருக்கிறது.

மிஸ்லேலேனியஸ் புகார்கள் என்ற வகையில் 157 ஆக 1981 ஆம் ஆண்டில் இருந்தது, 1982—வது ஆண்டில் 77 ஆகக் குறைந்துள்ளது. இப்படி எல்லாத் துறைகளிலும் கணிசமான அளவிற்கு அரசு விழிப்பாக நடவடிக்கை எடுத்த காரணத்தாலே குறைகள் களையப்பட்டிருக்கின்றன. இருக்கின்ற குறைகளும் எதிர்காலத்திலே முழுமையாகக் களையப்படும்.

[1983 மார்ச் 29

திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையில் அதிக அளவிற்குப் பால் விநியோகிக்கப் படுகிறது. பாலில் கலப்படம் இல்லாத அளவிற்குப் பொது மக்களுக்குக் கொடுக்கின்ற அளவிற்கு அரசு தகுந்த முறையில் நல்ல ஏற்பாடுகளையெல்லாம் செய்திருக்கிறது. இந்த ஆண்டு சென்னையில் பாலில் கலப்படம் இல்லாமல் தடுப்பதற்கு அரசு ஏதாவது ஏற்பாடு செய்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு தலைவர் அவர்களே, சென்னையைப் பொறுத்தவரையில் இன்றையதினம் 3,25,000 லிட்டர் நாள்தோறும் நாங்கள் விநியோகம் செய்து வருகிறோம்; இன்றையதினம் 25 ஆட்டோமேட்டிக் வெண்டிங் மெஷின் என்ற தானே இஜங்குகின்ற இயந்திரங்களின் வாயிலாக 80,000 லிட்டர்கள் விநியோகம் செய்யப்படுகிறது. நுகர்வோர்கள் கூட்டுறவுச் சங்கம்—கன்ஸ்யூமர்ஸ் மில்க் கோவாப்பரேட்டிவ் சொசைட்டி 25 வாயிலாக 40,000 லிட்டர் விநியோகம் செய்யப்படுகிறது. ஆகவே, 1,20,000 லிட்டர், இந்த வகையிலே முறைகேடுகளை அதிக அளவிற்குத் தவிர்ப்பதற்காக இந்த முறை கையாளப்படுகின்றது. எதிர்காலத்தில், அடுத்த ஆண்டும், மற்றைய தொடர்ந்த ஆண்டுகளிலும் 75 ஏ.வி.எம். யூனிட்டுகள் வாயிலாகவும், 75 கன்ஸ்யூமர்ஸ் கோவாப்பரேட்டிவ் சொசைட்டியினுடைய வாயிலாகவும் அதிக அளவிற்கு இந்த முறைகளைப் பின்பற்றி இந்தக் குறைகளையெல்லாம் போக்குவதற்கு நாங்கள் முயன்று கொண்டிருக்கிறோம்.

அதுமட்டுமல்லாமல், இந்த ஆண்டு 50,000 லிட்டரை அதிக அளவிற்குச் சென்னையிலே விநியோகிக்க ஏற்பாடு செய்து, அது பாலிதீன் பைகளினுடைய வாயிலாக, அண்மையிலே அம்பத்தூரிலே 50 இலட்சம் ரூபாய் முதலீட்டிலே எக்ஸ்பேன்ஷன் ஸ்கீம் போடப்பட்டு, இரண்டு நாட்களுக்கு முன்பு அது வேலையைத் தொடங்கியிருக்கிறது. அதன் வழியாக 3,75,000 லிட்டர் என்ற அளவிற்கு இந்த ஆண்டின் இறுதிக்குள்ளாக சென்னையில் விநியோகிக்கப்படும். எல்லாக் குறைகளும் களையப்படும்.

திரு. சேலம் மு. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாதவரம் பால் பண்ணையிலிருந்து லாரிகளில் டேங்கர் மூலமாக எடுத்துச் செல்லப்படுகிறது. அப்படி எடுத்துச் செல்லப்படும்பொழுது பாலில் வழியிலே கலப்படம் செய்வதாகக் கூறப்படுகிறதே, அதை அரசு அறியுமா? அதைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளை அரசு எடுக்குமா? அதுமட்டுமல்லாமல், சென்னைப் பெருநகரைச் சுற்றியுள்ள இடங்களில் மட்டும் கலப்படம் அற்ற பாலை மக்களுக்கு விநியோகம் செய்வதற்கான ஏற்பாடு இருப்பதை நான் வரவேற்கிறேன். அதேநேரத்தில் மாவட்டங்களில் பல பகுதிகளில் அவர்கள் கேன்களில் சீல் இல்லாமல் எடுத்துச் செல்வதால் மேல் மூடியை எடுத்துவிட்டு,



1983 மார்ச் 27]

நீர் கலப்படம் செய்து மக்களுக்கு விநியோகம் செய்ய ஏதுவாக இருக்கிறதே, இதைத் தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு தலைவர் அவர்களே, சென்னையில் மட்டுமல்ல, மாநிலமெங்கும் இந்த முறைகேடுகள் நடக்கின்றன என்ற தகவல் வந்தாலும் மூன்று அமைப்புகளினுடைய வாயிலாக இன்றைக்குப் பால் வள நிறுவனம் தக்க நடவடிக்கைகளை எடுக்கிறது. ஒன்று, இதற்காகவே மார்க்கெட்டிங் விங்கில், விற்பனைத் துறையில் தரக்கட்டுப்பாடு பிரிவு என்ற ஒரு பிரிவை வைத்திருக்கிறோம். அந்த அலுவலகத்தின் வாயிலாக இந்தக் குறைகளைக் களைகிறோம். இரண்டாவதாக, இதற்கு ஸ்பெஷல் போலீஸ் கார்டு இருக்கிறது. இதற்காகத் தனிப் போலீஸ் படையே இருக்கிறது. அவர்கள் எங்கெங்கு குறைகள் இருக்கின்றன என்று அவர்களுக்கு தெரிய வருகின்ற நேரத்தில் கண்காணிக்கச் செல்கிறார்கள். மூன்றாவதாக, இப்படிப் பொதுமக்கள், மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள், இவர்களிடமிருந்து ஏதாவது தனித் தகவல் வரும்பொழுது அமைச்சரைப் போன்றவர்கள், சம்பந்தப்பட்ட எம். டி. போன்றவர்கள் நேரடியாக ஈடுபட்டு, நாங்கள் களைந்து இன்றைக்கு ஒரு சீரான நிர்வாகத்தைச் செய்து வருகிறோம்.

திரு. செ. சிவசாமி : பேரவைத் தலைவரவர்களே, மாதவரம் பால் வள நிறுவனத்தால் தரப்படும் பாலில் கொழுப்புச் சத்தானது 4.5 இருப்பதற்குப் பதிலாக மிகவும் குறைவாக இருக்கிறது என்று சொல்லப்படுகிறது. அது வாஸ்தவம்தானா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் தனித் தகவல் என்னிடத்தில் தந்தால் தொடர் நடவடிக்கை எடுக்கிறேன்.

பாலிடெக்னிக்குகளில் ஷிப்டுமுறையைக் கொண்டுவரும் திட்டம்.

*வினா எண் 553—திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் :

திரு. இரா. தாமரைக்கனி : திரு. வேடசந்தூர் வி. பி. பால சுப்பிரமணியன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தொழில் நுட்பக்கல்வி பயிலகங்களில் (பாலிடெக்னிக்குகளில்) ஷிப்டு முறையை கொண்டுவர தமிழக அரசிடம் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இது பற்றிய விவரம் என்ன?

(இ) எங்கெங்கு அமுலில் உள்ளது?

(ஈ) மேலும் விஸ்தரிக்க திட்டம் உண்டா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ), (ஆ) மற்றும் (இ): சிதம்பரம், முத்தையா பல்தொழில் பயிற்சி பயிலகம் மற்றும் செட்டிநாடு, அண்ணாமலை பல்தொழிற் பயிற்சி பயிலகத்திலும் தலா 120 மாணவர்களைக்கொண்டு 1981-82-ம் ஆண்டு முதல் சோதனைத் திட்டமாக (Experimental basis) ஷிப்டுமுறை படிப்பை அரசு தொடங்கி நடத்தி வந்தது.

(ஈ) அவ்விரு பாலிடெக்னிக்குகளிலும் ''ஷிப்டுமுறை'' வெற்றிகரமாக செயல்பட்டு வருவதால், கீழ்க்கண்ட ஐந்து பாலிடெக்னிக்குகளிலும் 1983-84ம் கல்வி ஆண்டு முதல் ஷிப்டு முறையை அமல்படுத்தி நடத்த அரசு ஆணை வழங்கியுள்ளது.

(1) சி.ஐ.டி. சாண்ட்விச் பாலிடெக்னிக், கோயம்புத்தூர்

(2) வி.எஸ்.வி. நாடார் பாலிடெக்னிக், விருதுநகர்.

(3) நாச்சிமுத்து பாலிடெக்னிக், பொள்ளாச்சி.

(4) சி.என். பாலிடெக்னிக், வேப்பேரி.

(5) ராமகிருஷ்ணாமிஷின் வித்யாலயா பாலிடெக்னிக், கோயம்புத்தூர்.

(முற்பகல் 9-10)

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : மாண்புமிகு தலைவரவர்களே இந்த பாலிடெக்னிக் 'ஷிப்டு முறை' முதலிலே இரண்டு இடங்களிலும் வெற்றிகரமாகச் செயல்படுவதால், இந்த ஆண்டில் 5 இடங்களில் அமல்படுத்துகின்ற முறையிலே அரசாங்கம் ஏற்பாடு செய்திருப்பதாக அமைச்சரவர்கள் கூறினார்கள். ஏற்கனவே, இட நெருக்கடி, வேறு பல காரணங்களால் இது அமல்படுத்தப்படுகிறது என்று நான் கருதுகிறேன். இது ஒருபுறமிருக்க, மேலும் அதிக அளவுக்கு பாலிடெக்னிக்குகளைத் துவக்க அரசாங்கம் முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : புதிய பாலிடெக்னிக்குகள் 1980-81—ல் 5 பாலிடெக்னிக்குகளும், 1981-82—ல் 5 பாலிடெக்னிக்குகளும், 1982-83—ல் 9 பாலிடெக்னிக்குகளும், தமிழ்நாட்டிலே ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : ஆரம்பிதிருப்பதற்காக வரவேற்கிறோம். ஏற்கனவே மாணவர்களுக்கு அதிக அளவில் இடம் கிடைக்காத காரணத்தால்தான் இந்த ஷிப்டு முறை என்று உணர்ந்து கொள்கிறோம். ஆனால் அதிகப்படியான மாணவர்கள் விருப்பமுடன் இந்த பாலிடெக்னிக்குகளில் சேர்வதற்கு, பல இடங்களில் இடம் கிடைக்காமல் போய்





விடுகிறது. ஆகவே புதிதாக பாலிடெக்னிக்குகள் இன்னும் அதிகமாக ஆரம்பிப்பதற்கு அரசாங்கம் ஏதாவது நடவடிக்கை மேற்கொள்ளுமா? அப்படி இருந்தால், அதைப்பற்றிய விவரம் என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அரசினுடைய நிதி ஆதாரத்தைப் பொறுத்துத்தான் அரசு ஆரம்பிக்க முடியும். ஆனால் தனிப்பட்டவர்கள் முழுப் பொறுப்பையும் ஏற்று நடத்த முன்வருவார்களேயானால், அந்த நிறுவனம் முறையாகவும், ஒழுங்காகவும், இந்த பாலிடெக்னிக்குகளை நடத்தும் என்று நாங்கள் கருதுவோமேயானால், அதற்கு அனுமதி தருவோம்.

திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு தலைவரவர்களே, அதிக மாணவர்கள் சேர விரும்புகிறார்கள், அதுமட்டுமல்ல, அரசு, தொழில் நுட்பக்கல்வி பயிலும் மாணவர்களை ஊக்குவிக்கும் காரணத்தால், 'ஈவினிங் பாலிடெக்னிக்' ஆரம்பிக்க அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்த ஷிப்டு முறையை ஏற்படுத்தியிருக்கின்றோம். அது ஓரளவுக்கு நல்லபடியாக நடந்துவருகிறது. அதை நாம் பின்பற்றி நடத்த இருக்கின்றோம். அந்தக் கலைக் கல்லூரியைப் போல், மாலை நேரப் பாலிடெக்னிக் என்ற அளவிலே நாம் போவோமேயானால், அல்லது தரத்தைக் குறைக்கின்ற முயற்சியில் நாம் ஈடுபடுவோமேயானால், அதற்குப் பிறகு அதில் படித்து வெளியே வரும் மாணவர்களுக்கு வேலை கிடைக்காமல் போவதோடு மட்டுமல்ல, வேலைக்குப் பயன்படாமலும் போய்விடுவார்கள். ஆகவே நாம் தரத்தைப் பார்க்க வேண்டும். அதனாலே, நாம் கொஞ்சம் நிதானமாகவும் அனுபவத்தை அடிப்படையாக வைத்துக் கொஞ்சம் கொஞ்சமாக இந்த முயற்சிகளை மேற்கொண்டு வருகிறோம்.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தனியார் பாலிடெக்னிக்குகளை ஆரம்பிக்கும்பொழுது ஒருசில பகுதிகளில் கூடுதலாக பாலிடெக்னிக்குகள் இருக்கின்றன. ஒரு சில மாவட்டங்களில் மிகக் குறைவான பாலிடெக்னிக்குகள் இருக்கின்றன. இதை அரசு கருத்திற்கொண்டு, குறைவான பாலிடெக்னிக்குகள் உள்ள மாவட்டங்களுக்கு முன்னுரிமை கொடுத்து, இந்த ஷிப்டு முறையை அமல்படுத்துமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : ஷிப்டு முறையை நாங்களாகவே திணிப்பது அல்ல. அந்தந்த பாலிடெக்னிக்கிலே இருக்கின்ற ஆசிரியர்களை கலந்துகொண்டு ஒரு திட்டத்தைத் தீட்டி, நாங்கள் அதை நடத்த முடியும் என்று அவர்கள் கருதுவார்களேயானால், அதற்குப் பிறகு அரசு ஆராய்ந்து, அதற்கு

ஒப்புதல் தருகிறது. நாங்கள் எந்த பாலிடெக்னிக்கிலும் இதைக் கொண்டு திணிக்கவில்லை. காரணம், ஆசிரியர்களுடைய முழு ஒத்துழைப்பு இல்லாமல் இந்த ஷிப்டு முறையை வெற்றிகரமாக நடத்த முடியாது.

திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு தலைவரவர்களே, செமஸ்டர் முறை தேர்வு வெற்றிபெற்றுள்ளதா? பாலிடெக்னிக்கில் செமஸ்டர் முறைத் தேர்வு தொடர்ந்து அமல்படுத்தப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு தலைவரவர்களே, ஷிப்டு முறை வெற்றிகரமாக இருக்கிறது என்ற காரணத்தாலேதான், இந்த ஆண்டு மேலும் 5 பாலிடெக்னிக்குகளைக் கொண்டு வந்திருக்கிறோம்.

திரு. சோ. அழகர்சாமி: இந்த பாலிடெக்னிக் பயிற்சி நிலையங்களில் ஷிப்டு முறை வெற்றிகரமாக நடந்துவருவதாகவும் அதை மேலும் எல்லா மாவட்டங்களிலுள்ள பாலிடெக்னிக்குகளுக்கும் விஸ்தரிப்பதாகவும் அமைச்சரவர்கள் சொன்னார்கள் காலை 10 மணிக்கு ஆரம்பித்து மாலை 5 மணி வரை தற்போது வகுப்புக்கள் நடந்து வருகிறது. அந்த வகுப்புகளிலுள்ள மாணவர்களும், அங்கிருக்கும் ஆசிரியர்களும் மிகக் கடுமையான வேலையால் களைப்படைகிவிடுகிறார்கள். ஷிப்டு முறை என்று சொன்னால், ஒரு நாளில் 2 முறை என்று ஏழு, ஏழு மணிநேரத்திற்கு செயல்படமுடியாது. ஒரே ஆசிரியர் இரண்டு ஷிப்டிலும் பணியாற்ற முடியாது. ஆகவே இந்த மாதிரியான ஷிப்டு முறையை பாலிடெக்னிக்கில் புகுத்தி, கல்வியின் தரம் குறையாமலிருப்பதற்கும், ஆசிரியர்களின் வேலைப் பளுவை அதிகரிக்காமல் இருப்பதற்கும், மாணவர்கள் தங்களது குறிப்பிட்ட நேரம் அந்த 7 மணிநேரம் பயில்வதற்கு அரசு என்ன ஏற்பாடு செய்திருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, ஷிப்ட் முறைத்திட்டம் அமலில் உள்ள பாலிடெக்னிக்குகளில் காலை 7 முதல் $1\frac{1}{2}$ மணி வரையில் ஒரு பிரிவினரும் பிறகு $2\frac{1}{2}$ மணியிலிருந்து 7 மணி வரைக்கும் ஒரு பிரிவினரும் பயிலுகின்றார்கள். இதுபோல் எல்லாப் பாலிடெக்னிக்குகளுக்கும் கொண்டுவருகின்ற எண்ணம் நமக்கு இல்லை. நாம் இதைத் திணிப்பதாகவும் இல்லை. ஆகவே ஆசிரியர்களும். அந்த பாலிடெக்னிக்கைச் சேர்ந்த நிர்வாகமும் சேர்ந்து எங்களால் நடத்த முடியும் என்று சொல்லி அரசாங்கத்தைக் கேட்டால், அதற்குப்பிறகு நாங்கள் அனுமதி தருகிறோமே தவிர பாலிடெக்னிக்குகளிடம் போய் நீங்கள் ஆரம்பியுங்கள் என்று நாங்கள் சொல்வதில்லை.



## ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகளில் பி.ஏ பொருளாதாரம் படித்தவர்களை அனுமதிக்கும் திட்டம்.

*வினா எண் 554 — திரு. ஆர். நவநீதகிருஷ்ண பாண்டியன்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் B.Ed பட்டப் படிப்பிற்கு B.A. பொருளாதாரம் படித்தவர்களையும் சேர்க்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் யாது?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) ஏற்கனவே அரசு மற்றும் நிதியுதவி பெறும் கல்லூரிகளில் கல்வியியல் பட்ட வகுப்பில் 'பொருளாதாரம்' விருப்பப்பாடமாக போதிக்கப்பட்டு இளநிலை பொருளாதாரப் பட்டப் படிப்புப் படித்த மாணவ, மாணவிகள் அனுமதிக்கப்பட்டு வருகின்றனர்.

இவ்விதம் அனுமதிக்கப்படும்பொழுது மேற்பட்டப் படிப்பு படித்துள்ளவர்களுக்கு முன்னுரிமை அளித்து சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர்.

(ஆ) கேள்விக்கிடமில்லை.

## வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படும் பட்டுநூல், பட்டுத்துணிகள்.

*வினா எண் 555— திரு. வேடசந்தூர் வி.பி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் இருந்து பட்டுநூல், பட்டுத்துணிகள் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) பட்டுத்துணிகள் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. ஆனால் பட்டுநூல் (Raw Silk) ஏற்றுமதி செய்யப்படுவதில்லை.

(ஆ) 1981—82—ஆம் ஆண்டு, தமிழ்நாட்டிலிருந்து ரூ. 38758 இலட்சம் மதிப்புள்ள 7.66 இலட்சம் சதுர மீட்டர் பட்டுத்துணி வெளிநாடுகளுக்கு ஏற்றுமதியாகிறது. நடப்பு ஆண்டில் (1982—83) ரூ. 426.33 இலட்சம் மதிப்புள்ள 8.42 இலட்சம் சதுர மீட்டர் துணிகள் ஏற்றுமதியாகுமென மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

[1983 மார்ச் 26

**திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. இந்த ஏற்றுமதி செய்யப்படுகின்ற பட்டுத்துணிகள் எந்தெந்த நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன? இதை விரிவாக்குகின்ற வகையிலே பட்டுத் துணிகளுக்கு அதிக அளவு வெளிநாடுகளிலே கிராக்கி ஏற்படுத்துவதற்காகவும், வேறு சில நாடுகளுக்கும் அதை ஏற்றுமதி செய்வதற்கும் அரசு என்னென்ன நடவடிக்கைகள் எடுத்துள்ளது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலிருந்து சிங்கப்பூர், மலேசியா, இத்தாலி, மேற்கு ஜெர்மனி, இங்கிலாந்து போன்ற நாடுகளுக்கு அதிக அளவிலே ஏற்றுமதி செய்யப்படுகின்றன. இந்த பட்டுத்துணிகளுக்கு வெளிநாடுகளில் நல்ல வரவேற்பு இருப்பதாக மத்திய பட்டுக்குழு வாயிலாகத் தெரிகிறது. மேற்கொண்டு வேறு பல இடங்களிலேயும், அந்தத் துணிக்கு கிராக்கி ஏற்படுத்துவதற்காக நம்முடைய கோ–ஆப்டெக்சின் சார்பில் தனி அதிகாரியும், கைத்தறித் துணி இயக்குநர் அவர்களும் மேலைநாடுகளுக்குச் சென்று வந்திருக்கிறார்கள். ஆகவே அந்த அடிப்படையிலே நாம் இதிலே தீவிரமான முயற்சிகளை எடுத்து வருகிறோம்.

**திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் :** பேரவைத் தலைவர் அவர்களே, இப்படி ஏற்றுமதி செய்யப்படுவதுபோல் வேறு நாடுகளில் இந்தப் பட்டுத்துணிகளை விற்பனை செய்வதற்கு விற்பனை நிலையங்கள் ஏதாகிலும் நமது அரசு ஏற்படுத்தியிருக்கிறதா? அப்படி இல்லையென்றால் இனிமேல் ஏற்படுத்துவதுபற்றி அரசு யோசிக்குமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்தவிதமான விற்பனை நிலையத்தையும் நாம் வைத்துக்கொண்டிருக்கவில்லை. கோ–ஆப்டெக்ஸ் சார்பாகக் சிங்கப்பூரில் ஒரு கடையை ஏற்படுத்தியிருக்கிறோம். அந்தக் கடையில் வியாபாரம் இன்னும் எதிர்பார்த்த அளவிற்கு அதிகரிக்கவில்லை. மேற்கொண்டு ஸ்ரீலங்காவில் ஒரு கடையை வைத்தால் வியாபாரம் நடக்குமா என்பதைப்பற்றி நாம் ஆராய்ந்து வருகிறோம்.

**திரு. உ. சுப்பிரமணியன்:** பேரவைத் தலைவர் அவர்களே, சில ஆண்டுகளுக்கு முன்னர் அமெரிக்கா போன்ற வெளிநாடுகளில் பிளிடிங் மெட்ராஸ் என்று தமிழகத்திலே உற்பத்தி செய்த துணி மிக அதிகமான அளவில் விற்பனையானதாகவும் பின்னால் தரக்குறைவின் காரணமாக அந்த விற்பனை குறைந்தது என்று சொல்லப்பட்டது. அது உண்மையா? அப்படியானால் மீண்டும் அந்தத் தரத்தை....



1983 மார்ச் 26]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது பட்டுத்துணியைப் பற்றிய கேள்வி. பிளிடிங் மெட்ராஸ் என்பது சாதாரணமாக நூலினால் செய்யப்படுகின்ற துணி.

**திரு. ப. வெங்கடசுப்பிரமணியம்:** பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்ற பட்டுத் துணி வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்கு அந்தத் துறையைச் சேர்ந்த அதிகாரிகள் வெளிநாடுகளுக்குப் போய் வந்ததாக அமைச்சர் அவர்கள் கூறினார்கள்: இதிலே இந்தத் தொழில் செய்கின்ற நெசவாளர்களைக் கொண்ட உறுப்பினர்களை அந்தத் தூதுக் குழுவில் அனுப்பி, அங்கே எந்தமாதிரியான டிசைன்களுக்கு நல்ல வரவேற்பு இருக்கிறது என்பதை பார்வையிட அரசு ஏற்பாடு செய்யுமா? அதன் மூலமாக மேலும் இன்சென்டிவ் கிடைக்கக்கூடிய வகையில் மேலும் அந்நியச் செலாவணி அதிக அளவில் கிடைக்கக்கூடிய வகையில் ஏற்பாடு செய்யப்படுமா என்பதை அறியவிரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** பேரவைத் தலைவர் அவர்களே, அதிகாரிகளை நாம் அனுப்புகிறோம் என்றால் அவர்கள் ஓரளவுக்கு விவரம் தெரிந்தவர்கள் என்ற முறையில் நாம் அனுப்புகிறோம். அவர்கள் வெளிநாடுகளில் இருக்கின்ற சம்பந்தபபட்ட அதிகாரிகள், அந்த நிறுவனத்தைச் சேர்ந்தவர்களைச் சந்தித்துப் பேசவேண்டும் என்றால் இந்தத் துறையிலே ஓரளவு தகுதிபெற்றவர்கள், அனுபவம் வாய்ந்தவர்களை அனுப்புவது தான் நல்லது. அப்படி அனுப்பினால்தான் அவர்கள் நமக்கு நல்ல வியாபாரத்தைப் பெற்றுத்தரமுடியும். எனவே தொழிலில் ஈடுபட்டிருக்கிறார்கள் என்பதற்காக நம் அனுப்புவது என்பது எதிர்பார்க்கின்ற வெற்றியைத் தராது.

(முற்பகல் 9–20)

**திரு. எம். எஸ். மாணிக்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிங்கப்பூரிலே கோ–ஆப்டெக்ஸ் நிறுவனத்தின் கடை வைத்திருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அங்கே வைக்கப்பட்டு இருக்கும் கடை வெளியே இருக்கும் மக்களுக்குத் தெரியாமல்; ஒரு ஷாப்பிங் சென்டரிலே நல்ல மையமான இடத்திலே இல்லாமல் இருக்கிறது. எனவே, தமிழர்களுக்கும், மற்றவர்களுக்கும் பயன்படும் வகையில், ஒரு நல்ல பகுதியில் குறிப்பாகச் சொல்லப்போனால், சிரம்பன் ரோடு பகுதியில், அதை வைத்தால் நன்றாக வியாபாரம் நடக்கும். அந்த இடத்தில் வைக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** தலைவர் அவர்களே, இப்போது இருக்கிற இடம் ஒரு பெரிய ஷாப்பிங் சென்டரிலே இருக்கிறது. அங்கே பெருவாரியான மக்கள் மற்ற சாமான்கள் வாங்க வருகின்ற நேரத்தில்கூட அங்கே இருக்கின்ற அந்தக்

கடைக்குள் நுழைந்து ஏதாவது வாங்கிக்கொண்டு செல்லும் நிலையில்தான் இருக்கிறது. தமிழர்கள் அதிகம் வாழும் பகுதியில் ஒரு கடை திறக்கலாமா என்பதைப் பற்றி நாம் ஆராய்ந்து கொண்டு வருகிறோம்.

கைத்தறியில் ஜனதா துணி தயாரிக்கும் திட்டம்.

*வினா எண். 556—திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு அரசு கைத்தறியில் ''ஜனதா துணி தயாரிக்க நடவடிக்கை எடுத்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

(இ) அதனால் பலன் பெறுவோர் எவ்வளவு பேர்?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) ஆம்.

(ஆ) கைத்தறியில் ஜனதா ரக மலிவு துணிகளை தமிழகத்திலுள்ள பிரதம நெசவாளர் கூட்டுறவு சங்கங்களில் உற்பத்தி செய்யும் திட்டம் 1976–ஆம் ஆண்டு முதல் செயல் படுத்தப்பட்டு வருகிறது. 1976 ஆம் ஆண்டு கோ–ஆப்டெக்ஸ் நிறுவனம் ஜனதா ரகத் துணிகள் உற்பத்தியை மேற்கொண்டு, சுமார் 1000 தறிகளில் ஜனதா ரகச் சேலைகள்; வேட்டிகள் முதலியவற்றை உற்பத்தி செய்யத் தொடங்கியது. பிறகு தறிகளின் எண்ணிக்கை 10 0–ல் இருந்து 20.000–த்துக்கு உயர்த்தப்பட்டு, சுமார் இரண்டு மில்லியன் சதுர மீட்டர் ஜனதா துணிகள் மாதம் ஒன்றுக்கு பிரதம நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் மூலம் உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றன. இப்போது இதிலேதான் நாம் ஒரு மாற்றத்தை ஏற்படுத்தியிருக்கிறோம். அந்தச் சங்கங்களுக்குப் பதிலாக நம்முடைய பிராஜெக்டிலே, அரசின் மேற்பார்வையில் நடக்கும் அந்தப் பிராஜெக்டிலே, ஜனதா ரகத் துணிகளை உற்பத்தி செய்வது என்று நாம் முடிவு எடுத்து இருக்கிறோம்.

(இ) ஜனதா ரக துணிகளை உற்பத்தி செய்யும் திட்டத்தினால் சுமார் 50,000 நெசவாளர்களுக்கு தொடர்ச்சியாக வேலை வாய்ப்புக்கிடைப்பத்தோடு, மேற்படி ஜனதா ரகங்களை மலிவு விலையில் வாங்குவதின் மூலம் சுமார் 10 லட்சம் நலிவுற்ற மக்கள் இந்தியா முழுவதிலுமாக பயனடைகின்றனர்.

திரு. பெ. சு. திருவேங்கடம்: பேரவைத் தலைவர் அவர்களே, ஜனதா ரகத் துணி உற்பத்தி செய்வதால் பயன்படுகிறவர்களின் பட்டியலை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். அதை அதிகப்படுத்தும் நோக்கம் அரசுக்கு உண்டா? கிராமங்களில் ஏற்கனவே ஜனதா ரகம் என்று கூட்டுறவுச் சங்கள்கள்



மூலம் விற்பனைக்குக் கொடுக்கப்பட்டன. இப்போது அவைகள் எல்லாம் நிறுத்தப்பட்டு விட்டனவா என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, மத்திய அரசின் கைத்தறி மேம்பாட்டு ஆணையாளர் அவர்கள் 1982–83 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் சுமார் நாற்பது மில்லியன் சதுர மீட்டர் உற்பத்தி செய்யவேண்டும் என்று குறியீடு நிர்ணயித்ததைக் கருத்தில்கொண்டு, தற்போது தமிழகத்திலே 20,000 கைத்தறிகளிலாவது ஜனதா ரகத் துணிகளை உற்பத்தி செய்யும் முயற்சி எடுக்கப்பட்டு இருக்கிறது. இதற்கு அவர்கள் பணம் தருகிறார்கள் என்பதால், அவர்கள் வைக்கிற குறியீடின் அடிப்படையில் நாம் இந்தத் துணி உற்பத்தியை வைத்து இருக்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வி நேரத்தில் மாண்புமிகு உறுப்பினர்கள் அவரவர் இருக்கையில் அமரவேண்டும்.

திரு. பெ. சு. திருவேங்கடம்: பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது ஜனதா துணி என்று மலிவு விலையில் தயாரிக்கக் கூடிய துணிகள் கிராமங்களில் இருக்கும் கூட்டுறவு சங்கங்கள் மூலம் ஏழை எளியவர்களுக்குக் கிடைக்க ஏற்பாடு செய்யப்பட்டு வந்தது. அவைகள் எல்லாம் தற்சமயம் வருவது இல்லை. அதற்கு என்ன காரணம் என்பதையும், 20,000 கைத்தறி மூலம் உற்பத்தியை மேலும் அதிகப்படுத்த, மத்திய அரசுக்கு மாநில அரசாங்கம் எழுதி, அந்த அனுமதியை வழங்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, இப்போது நாம் உற்பத்தி செய்து இருக்கும் ஜனதா ரகத் துணிகளே விற்பனையாகாமல், தேக்கத்தில் இருக்கின்றன.

திரு. கு. ரமணி: தலைவர் அவர்களே, ஜனதா ரகத் துணிகள் உற்பத்தி செய்வது ஏழை மக்கள், அதிகப்படியான உயர்ந்த ரகத் துணிகளை வாங்கமுடியாதவர்கள் வாங்குவதற்காகத்தான் இலட்சக்கணக்கான விவசாயிகளும் ஏழை மக்களும் குறைந்த விலையில் இந்தத் துணிகளை வாங்கக்கூடிய ஏற்பாட்டிற்கு ஊக்கமளிக்கக்கூடிய முறையில்—அரசாங்கம் பல தொழில்களுக்கெல்லாம் ஊக்கம் அளிக்கக்கூடிய முறையில் நிதி உதவி செய்யப்படுகிற விதத்தில் அந்த முறையில் ஊக்கமளித்து நிதி உதவி அளித்து இன்று 20,000 தறிகள் என்பதற்குப் பதிலாக ஒட்டுமொத்தமாக உள்ள ஐந்தரை இலட்சம் தறிகளில் பாதி அளவிற்காவது கொண்டு வருவதற்கு அரசு துணிந்து நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, இப்போது நாம் உற்பத்தி செய்திருக்கிற ஜனதா ரகத் துணிகள் விற்பனையாகாமல் இருக்கிறது என்ற இன்றைய நிலையில் நாம் அதற்காக ஒரு பிராத்தியேக முயற்சியை மேற்கொண்டிருக்கிறோம். ஆகவே இந்தத் துணிகளை வாங்குவதற்கான கிராக்கியை அதிகப்படுத்தும் போதுதான் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எடுத்துச் சொன்ன யோசனையை நாம் பரிசீலிக்க முடியும்.

திரு. இரா. சண்முகம்: தலைவர் அவர்களே, ஜனதா ரகத் துணிகள் நெய்பவர்களுக்கு கூலி கட்டுபடியாகவில்லை என்று சொல்கிறார்களே, அவர்களுக்கு அரசாங்க மானியம் கிடைக்க வழிவகைசெய்யப்படுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, மானியம் தந்துதான் இந்தத் துணிகளை மலிவுவிலையில் விற்றுக் கொண்டிருக்கிறோம் இதற்குக் கிடைக்கக்கூடிய கூலி மற்ற ரகங்களை விட குறைவாகத்தானிருக்கும்.

திரு. எல். இளையபெருமாள்: தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதில்சொல்லும்போது ஆயிரக்கணக்கான மீட்டர் அளவிற்கு இந்த ஜனதா துணி தேக்கம் இருப்பதாகச் சொன்னார்கள். இதை நெய்பவர்கள் ஏழை கைத்தறி நெசவுத் தொழிலாளர்கள். அவர்களுக்கு மார்க்கெட் வசதிகளும் இல்லை, இவற்றை விற்பதற்கு. நாம் ஜெயில், ஹாஸ்டல்ஸ் போன்றவற்றிற்கு மில் துணிகளை வாங்குகிறோம். ஆகவே இந்த ஜனதா ரகத்துணிகளை ஜெயில் டிப்பார்ட்மென்ட், ஏழை மாணவர்களுக்குக் கொடுப்பது போன்றவற்றிற்கு வாங்கிக் கொடுக்கும் ஒரு ஏற்பாட்டைச் செய்தால் தேக்கமும் குறையும், இதனால் ஏழை கைத்தறி நெசவுத் தொழிலாளர்களுக்கு உதவி செய்ததாகவும் அமையும். எனவே இதைப்பற்றி அரசு ஆலோசிக்குமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே இப்போது இந்தத் துணிகளை விற்பதுஎன்பது கோஆப்டெக்ஸிற்கு ஒரு பிரச்னையாக இருக்கிறது. அதற்குப் பல்வேறு யோசனைகளை ஆராய்ந்து வருகிறோம். நாம் இந்தத் துணிகளை விற்க ஆரம்பிக்கவேண்டும். தேக்கம் குறைந்தால் உற்பத்தியை நல்ல முறையில் செய்ய நாம் ஆதரவு தரமுடியும்.

பாமணி கள்ளிமேடு சாலையை மேம்பாடு செய்யும் திட்டம்.

*வினா எண். 5 7—திரு. எம். எஸ். மாணிக்கம்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தலைஞாயிறு ஒன்றியத்தில் பாமணி—கள்ளிமேடு சாலையை மேம்பாடு செய்யும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதன் விவரங்கள் யாவை?



மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: (அ) மற்றும் (ஆ) பாமணி-கள்ளி மேடு சாலையின் மொத்த நீளம் 18·8 கி. மீ. ஆகும், இதில் முதல் பிரிவு கி. மீ. 0/0—8/0 வரை நெடுஞ்சாலைத்துறையின் இதர மாவட்டச் சாலைப் பிரிவைச் சேர்ந்தது. இரண்டாம் பிரிவு கி. மீ. 8/0—18 8 வரை பொதுப்பணித் துறையைச் சார்ந்த கரைச் சாலையாகும். இ பகுதியில் 6 கி. மீ. நீளமுள்ள சாலையை ரூ. 13.97 லட்சம் செலவில் மீன்வளத் துறை நிதியிலிருந்து மேம்பாடு செய்ய அனுமதி வழங்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன. மீதமுள்ள பகுதிகளுக்கு இனிவரும் ஆண்டுகளில் அரசின் நிதி வளம், பணியின் முக்கியத்துவம் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு திட்ட வேலைகளின் கீழ் இப்பணியினை எடுத்துக் கொள்ள பரிசீலனை செய்யப்படும்.

திரு. எம். எஸ். மாணிக்கம்: தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆறு கிலோ மீட்டர் நீளமுள்ள சாலை வேலை மீன்வளத்துறை சார்பில் நடைபெற்று வருகிறது என்று சொன்னார்கள். அதற்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். அங்கே மீதமிருக்கிற எட்டு கிலோ மீட்டர் தூரம் வடிகால் ஆற்றின் பக்கத்தில் செல்கிற காரணத்தால் அந்தப் பாதை குறுகலாகயிருக்கிறது. இப்போது கப்பி மட்டும் போடப்பட்டிருக்கிறது. எனவே நெடுஞ்சாலைத்துறை அந்தச் சாலையை எடுத்து விரைவில் சீரமைத்தால் திருத்துறைப்பூண்டி, வேதாரண்யம், கள்ளிமேடு வழி செல்லும் சாலையில் ஒரு பேருந்து தடம் உருவாகும். அந்த ஊர்களுக்கு செல்லும் தூரமும் குறைவாக இருக்கும். எனவே அதை விரைவில் முடித்துக்கொடுக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே, இப்போது ஒதுக்கப்பட்டுள்ள நிதி மூலம் கப்பிச்சாலை மட்டும்தான் போட முடியும். தார்ச் சாலை போடமுடியாது. ஆகவே கப்பிச் சாலை போடதற்குப் பின்னால் இதை தார்ச்சாலையாக மாற்றுவதற்குரிய திட்டம் பரிசீலனை செய்யப்படும்.

திரு. எம். எஸ். மாணிக்கம்: தலைவர் அவர்களே, அதுமட்டுமல்ல. இந்த எட்டு கிலோ மீட்டர் தூரத்திலிருந்து கத்திரிக்குளம் கருப்பங்குளம் வழியாகப் போகும் நெடுஞ்சாலையை ஆர். ஆர். செய்து கொண்டிருக்கிறார்கள். எனவே இந்த எட்டு கிலோ மீட்டர் வேலையை விரைவில் செய்தால் மூன்று நான்கு சாலைகள் சேர்ந்த ஒரு பாதையை நல்லமுறையில் அமைக்க முடியும். எனவே அதை விரைவில் உருவாக்குவதற்கு அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

### செங்கற்பட்டு நகரின் அருகே தேசிய நெடுஞ்சாலையிலுள்ள இரயில்வே கேட்டிற்குப் பதிலாக மேம்பாலம் கட்டும் திட்டம்

*வினா. எண். 558— திரு. பு. கோ. ஆனூர் ஜெகதீசன்: திரு. செஞ்சி ந. இராமச்சந்திரன்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) செங்கல்பட்டு நகரை ஒட்டி (G. S-T. Road) தேசிய நெடுஞ்சாலையின் குறுக்கே உள்ள இரயில்வே கேட்டிற்குப் பதிலாக மேம்பாலம் கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விரைவாகத் திட்டம் நிறைவேற அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு, ப. குழந்தைவேலு: (அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

(முற்பகல் 9-30)

திரு. கோ.பு. ஆனூர் ஜெகதீசன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மேம்பாலம் கட்டுவதற்கு இயலாது என்றாலும்கூட, செங்கற்பட்டு நகரத்திற்கு போகும் இந்தச் சாலையில் தினமும் விபத்துக்கள் தொடர்ந்து நடப்பதினால், மாற்று வழிப் பாதை போடுவதற்கான திட்டம் நம் அரசிடம் உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதற்காக புற வழிச் சாலை போடுவதற்கான திட்டம் தீட்டப்பட்டு, மத்திய அரசுக்கு அனுப்பி வைத்தோம். ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இந்தத் திட்டத்தை எடுத்துக் கொள்ளச் சொல்லி, அதற்கான நிலம் போன்றவைகள் எல்லாம் ஆர்ஜிதம் செய்வதற்காகவும், இந்தப் பாதையை அமைப்பதற்காகவும் ஏறத்தாழ 1 கோடி ரூபாய் செலவாகும் என்று மதிப்பீடு செய்யப்பட்டு மத்திய அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. ஆனால், ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே இந்தத் திட்டம் சேர்க்கப்படவில்லை இப்போது மத்திய அரசைப் பொறுத்த அளவில், இதுபோன்ற நகரசபை எல்லைக்குள் மேம்பாலம் கட்ட வேண்டுமென்று சொன்னால், அங்கே உள்ள அந்த நகரசபையைப் பொறுத்த அளவில் 50சதவீதம் இந்தத் திட்டத்திற்காகும் செலவை ஏற்றுக் கொள்ளவேண்டும். இந்த ஜி. எஸ். டி. சாலையில் மேம்பாலம் கட்டுவதற்காக, ஏற்கனவே, இதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு, இது செங்கற்பட்டு நகராட்சிப் பகுதியிலே இருப்பதால் அந்த நகராட்சிக்குப் போதிய நிதி வசதி



இல்லாத காரணத்தால். இந்த மேம்பாலம் தேவையில்லை, புற வழி அமைத்தால் போதும் என்ற முடிவுக்கு வந்தோம். ஆகவே, புற வழிச் சாலை அமைப்பதற்கான திட்டத்திற்கு ஒப்புதல் அளிக்கப்பட இருக்கிறது. ஒப்புதல் அளித்தவுடன், உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

திரு. பு. கோ. ஆனூர் ஜகதீசன்: மாண்புமிகு பேரவைத்துணைத் தலைவர் அவர்களே, நகரசபையால் 50 விழுக்காடு இதற்கு கட்ட முடியாத காரணத்தினால், மாற்று வழிப் பாதை அமைப்பதற்கு முடிவெடுத்திருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். மகிழ்ச்சிக் குரியது. ஆனாலும்கூட, மத்திய அரசு இந்தத் திட்டத்தை ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே சேர்க்காததினால், இந்த ஜி. எஸ். டி. சாலையின் அவசியத்தை வற்புறுத்தி, இதனால் ஏற்படும் நன்மையைக் கருதி, மீண்டும் மீண்டும் இதுபற்றி மத்திய அரசுக்கு மாநில அரசு வற்புறுத்தி இந்த பை-பாஸ் சாலையை அமைப்பதற்கான முயற்சியை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே இதைப்பற்றி நாம் எழுதி வற்புறுத்திக் கொண்டிருக்கிறோம். இதுபோன்று தமிழகத்தில் பல்வேறு இடங்களில் இப்படிப்பட்ட தடைகள் இருப்பதன் மூலமாக, வாகனங்களுக்கும் அதே நேரத்தில் பொது மக்களுக்கும் இடைஞ்சல் ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. ஆகவே, இதுபோன்ற மேம்பாலம் கட்டவேண்டுமென்று மத்திய அரசுக்கு எடுத்துச் சொன்னோம். அவர்கள் கேளாகாதினர்களாக இருக்கிறார்களோ என்ற சந்தேகத்தை எழுப்புகின்ற வகையில் காரியங்கள் அங்கே நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. ஆனாலும், ஊதுகின்ற சங்கை எவ்வளவு உரக்க, அதே நேரத்தில் வேகமாக ஊதி இதை வற்புறுத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும்.

### திருச்சி நகராட்சி எல்லையிலுள்ள கழிப்பிடங்கள்

*வினா எண்.—559 திரு. இரா. கருப்பையா :மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சி நகராட்சி எல்லையில் உள்ள கழிப்பிடங்கள் எத்தனை?

(ஆ) இவை அனைத்தையும் நவீன கழிப்பிடங்களா மாற்றும் திட்டம் உள்ளதா?

(இ) எப்போது மாற்றப்படும்?

[1983 மார்ச் 26

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: (அ) 125 பொதுக் கழிப்பிடங்களும், 82 செப்டிக் டாங்க் கழிப்பிடங்களும் உள்ளன.

(ஆ) ஆம்.

(இ) புதை பாதாள சாக்கடைத் திட்டம் செயல்பட ஆரம்பித்தவுடன் இவை நவீனக் கழிப்பிடங்களாக மாற்றப்படும்.

திரு. இரா. கருப்பையா: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த திருச்சி நகராட்சி எல்லையில் கட்டப்பட்ட 125 கழிப்பிடங்கள், ஆரம்ப காலத்திலே கட்டப்பட்ட கழிப்பிடங்கள். அன்றைய தினம் இருந்த ஜனத்தொகையைவிட இன்றைக்கு மூன்று மடங்கு அந்த நகராட்சியில் உயர்ந்திருக்கிறது. அதுவும் இப்போது நகரம் விஸ்தரிக்கப்பட்டிருக்கிறது. இந்நிலையில் இந்தக் கழிப்பிடங்கள் அனைத்தும், நகரத்தின் மைய இடங்களிலே இருந்து சுகாதாரத்தைக் கெடுத்து வருகின்றன. ஆகவே, இவைகளை உடனடியாக நவீன கழிப்பிடங்களாக மாற்றுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் அவர்களே, திருச்சி நகரத்தைப் பொறுத்த அளவில், இப்போது இருக்கக்கூடிய ஜனத்தொகை 3.07,125 பேர்கள் இருக்கிறார்கள் என்ற கணக்கு எடுக்கப்பட்டிருக்கிறது. 2001 ஆம் ஆண்டு வருகின்ற நேரத்தில் இதுவே 4½ இலட்சமாக உயரும் என்ற கணக்கும் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, அதற்குரிய நடவடிக்கைகள் எடுப்பதற்கு, நவீன கழிப்பிடங்களைக் கட்டுவதற்கு நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறோம். திருச்சி நகரத்தைப் பொறுத்த வரையில், 6 பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. பாதாள சாக்கடை திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு ·43 கோடி அதற்கு நிதி தேவை என்று ஒதுக்கீடு செய்யப்பட்டு, அதிலே ஒரு பகுதி பாகம் முடிவடைந்திருக்கிறது· இன்னும் 5 பாகங்கள் முடிவடையவில்லை. இந்த பாதாள சாக்கடைத் திட்டத்தை முழுமையாக செயல்படுத்தும்வரை, இந்த கழிப்பிடங்களை நவீன கழிப்பிடங்களாக இதுவரையில் மாற்ற முடியாத நிலைமையில் இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. மு. அம்பிகாபதி: துணைத் தலைவரவர்களே, திருச்சி நகரில் இருக்கிற மக்கள் தொகை பெருகி வருவதற்கேற்ப நவீன கழிப்பிடங்கள் இல்லாத காரணத்தால் நகரசுத்தி தொழிலாளர்கள் மலத்தை சுமந்துகொண்டு செல்வது பரிதாபமாக இருக்கிறது. ஆகவே தகுந்த நடவடிக்கை எடுத்து விரைவிலே நவீன கழிப்பிடங்களைக் கட்ட அரசு முன்வருமா?



1983 மார்ச் 26]

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: துணைத் தலைவரவர்களே, இப்போதெல்லாம் நவீன கழிப்பிடங்களைக் கட்ட வேண்டுமென்பதுதான் அரசின் கொள்கை. உலர் கழிப்பிடமாக் (ட்ரை லட்ரின்) இருக்கக்கூடாது; ஸ்காவஞ்சர் ஃப்ரீ லட்ரீனாக இருக்க வேண்டும் என்பதற்கு தகுந்த நடவடிக்கை எடுத்து வருகிறோம். அந்த அடிப்படையிலே இது கண்டிப்பாக பரிசீலிக்கப்படும்.

திரு. இரா. கருப்பையா: துணைத் தலைவரவர்களே, திருச்சி நகரில் பாதாளச் சாக்கடைத் திட்டம் பூர்த்தியாகும்போது அவை அனைத்தும் முடிக்கப்பட்டுவிடும் என்று குறிப்பிட்டார்கள். பாதாளச் சாக்கடை வேலை தொடங்கப்பட்டு இன்றைக்கு இத்தனை ஆண்டுகளுக்கு மேலாகியும் ஒரு பகுதியிலேதான் வேலை முடிந்து இருக்கிறது. மற்ற 5 பகுதிகளிலும் வேலை முடிய இன்னும் 20 ஆண்டுகளாகும். ஏனென்றால் அரசிலே திட்டவட்டமாக இந்த காலத்திற்குள் முடியும் என்று கூறும் நிலைமை இல்லை. இந்த நிலையில் இன்னும் 15, 20 ஆண்டுகளுக்கு உலர் கழிப்பிடமாக இருப்பதைத் தவிர்க்க வேண்டும். எல்லா இடத்திலும் உடனடியாக முடியாவிட்டாலும் முக்கியமான பகுதிகளில், மார்க்கெட்டை ஒட்டி இருக்கிற மதுரை ரோடு, உறையூர் போன்ற இடங்களில், இருக்கிற உலர் கழிப்பிடங்களை ஒன்றிரண்டு ஆண்டுகளுக்குள் நவீன கழிப்பிடமாக மாற்ற அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: துணைத் தலைவரவர்களே, பாதாளச் சாக்கடைத் திட்டத்தைப் பொறுத்த மட்டில் நாம் 6 பகுதிகளாகப் பிரித்திருப்பதில் ஒரு பகுதியிலேதான் முடித்திருக்கிறோம் என்றாலும் 5 பகுதிகளில் வேலை நடந்து கொண்டிருக்கிறது. அந்த வேலைகள் பல்வேறு நிலைகளில் இருக்கின்றன. இன்னும் 3 ஆண்டு காலத்தில் முடிந்துவிடும் என்று அறிகிறோம். எவ்வளவு சீக்கிரம் பாதாளச் சாக்கடைத் திட்டத்தை நடைமுறைப்படுத்த முடியுமோ அவ்வளவு சீக்கிரத்தில் நடைமுறைப்படுத்தி, அதன் மூலம் நகரம் மாநகரம் என்ற அந்தஸ்தை உயர்த்துவதற்கு, அதற்குரிய நடவடிக்கை சீக்கிரமாக எடுக்கப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

## திருமங்கலத்தை அடுத்துள்ள 'Paramount Textiles' நெசவு ஆலை

*வினா எண் 560. திரு. என். எஸ். வி. சித்தன: மாண்புமிகு ள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு டையளிப்பாரா—

(அ) திருமங்கலத்தை அடுத்துள்ள 'Paramount Textiles' ன்ற துணி நெசவு ஆலை எப்போதிலிருந்து செயல்படுகிறது?

(ஆ) அதற்கு திரளிப் பஞ்சாயத்து நாளது வரை வீட்டு ரி, (தொ)ழில் வரி வாங்காத காரணம் என்ன?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: (அ) 30-6-1981 முதல்.

(ஆ) வீட்டுவரி ஏற்கனவே 31-7-82ல் வசூலிக்கப்பட்டு விட்டது. தொழில்வரியை நிர்ணயிக்க, வருமானம் பற்றிய தகவல் கிடைப்பதற்கு சிறிது காலதாமதம் ஏற்பட்டதால், மூன்று அரையாண்டுகளுக்கும் சேர்த்து ரூ, 300/- ஆக 29-11-82 அன்று தொழில் வரியும் வசூலிக்கப்பட்டுவிட்டது.

திரு. என். எஸ். வி. சித்தன்: துணைத் தலைவரவர்களே, இந்த ஆலையானது செல்வமும் செல்வாக்கும் மிக்க ஒருவரால் நடத்தப்படுவதாகும். இந்த ஆலையிலே வரிகள் வசூலிக்கப்பட வில்லை என்று தெரிந்துதான் இந்த வினா எழுப்பப்பட்டது. இந்த ஆலையின் மதிப்புக்குத் தக்கவாறு வரி விதிக்கப்படவில்லை என்று கேள்விப்படுகிறேன். இவ்வளவு காலதாமதத்திற்கு காரணம் என்ன? இந்த வரி எப்போது நிர்ணயிக்கப்பட்டது? எப்போது இது ஊராட்சி ஒன்றியத்திற்குக் கிடைத்தது என்ற விவரங்களை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: துணைத் தலைவரவர்களே இந்த ஆலை செல்வமும் செல்வாக்கும் பெற்றவரால் நடத்தப் படுகிறதா இல்லையா என்ற குறிப்பு இல்லை ஆனால் அந்த தொகுதி சட்டமன்ற உறுப்பினராக இருக்கிற காரணத்தால் செல்வமும் செல்வாக்கும் யாரிடம் சேர்ந்திருக்கிறது என்று அவர்களுக்குத் தெரியும். இது 1981 ஆம் ஆண்டு 6–ம் மாதம் முதல் நடைபற்றுக்கொண்டிருக்கிற ஆலையாக இருக்கிறது. பல்வேறு நிலைகளில் கடிதப்போக்குவரத்து நடத்தி, அதற்கு பதில் சரியாகக் கிடைக்காததால் கொஞ்சம் காலதாமதம் ஏற்பட்டதே தவிர வேறல்ல. ஆனாலும் கூட இன்றைக்கு வருமானத்திற்கு ஏற்ப, அவர்கள் என்னென்ன கணக்குகளை வைத்திருக்கிறார்களோ அதன் அடிப்படையில் 11,533 ரூபாய் 80 காசு வீட்டு வரியாகப் போட்டிருக்கிறோம். நூலக வரியாக 576 ரூபாய் 70 காசு போட்டிருக்கிறோம். அந்த அடிப்படையிலே மொத்தம் 12,110 ரூபாய் வரியாக கட்டி யிருக்கிறார்கள். அதைப்போன்று மூன்று அரையாண்டுகளுக்கு 300 ரூபாய் தொழில் வரியாக கட்டியிருக்கிறார்கள்.

(முற்பகல் 9·40)

திரு. என் பழனிவேல்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வரி டிமிக்கி கொடுப்பவர்களைக்கண்டு பிடிக்க நான் ஒரு யோசனை சொல்ல விரும்புகிறேன். என்னுடைய தொகுதியிலே பழனி நகரிலே, பெரிய பெரிய கல்யாண கூடங்களில், இன்றைக்கு ஒரு நாளைக்கு ஆயிரம் ரூபாய், 1500 ரூபாய், 2 ஆயிரம் ரூபாய் என்று கட்டணங்கள் நன்கொடை - என்ற பெயரால் வசூலிக்கப்படுகிறது.



நகராட்சிகள் அவைகளுக்கெல்லாம் வரி விதிப்பதில்லை என்றும் தெரிகிறது. அவைகளை எல்லாம் கண்டு பிடித்து, அப்படி நாள் ஒன்றுக்கு ஆயிரம், 1500 வருமானம் வரக்கூடிய அந்த கல்யாண கூடங்களின் சொந்தக்காரர்களுக்கு, கணிசமான வரியைப் போட்டு, நகராட்சியின் வருமானத்தை அதிகரிக்க அரசு முயற்சி எடுக்குமா?

மாண்புமிகு திரு ப குழந்தைவேலு மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, திருமணக் கூடங்களைப் பொறுத்தவரையில் உண்மையான ரசீதுகளை அவர்கள் கொடுப்பதேயில்லை. ஆயிரம், இரண்டாயிரம் என்று வசூலித்தாலும், அந்த தொகை களை பல்வேறு நிலைகளில் போட்டு ரசீதுகள் கொடுப்பதன் மூலமாக கணக்குகளைக் காட்டிவிடுகிறார்கள். அதன் காரண மாகத்தான், மொத்தமாக எவ்வளவு பணம் அவர்கள் வசூலிக் கிறார்கள் என்கிற விவரம் அரசுக்கு வந்து சேருவதில்லை. சமீபத்திலே நானும் ஒரு திருமணத்தை நடத்தியவன் என்ற முறையில் சொல்ல வேண்டும் என்று சொன்னால், திருமணக் கூடங்களைப் பொறுத்தவரையில், அந்த வியாபார ஸ்தலமாக மாற்றிவிடக் கூடாது என்பதுதான் என்னுடைய தாழ்மையான கருத்து. ஆகவே. இப்படிப்பட்ட நிலைமைகள் எங்கே இருந்தாலும் அதைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் அடிக்கடி அரசாங்கத்திற்கு குறிப்பிட்டுக் கூறுவார்களேயானால், அரசு கண்டிப்பாக நடவடிக்கை எடுக்கும்.

### செங்கிப்பட்டி பகுதிகளுக்கு கட்டளை வாய்க்கால் திட்டத்தை விரிவுபடுத்த பெறப்பெற்ற கோரிக்கை

*வினா எண். 561— திரு. மா. சுப்பிரமணியன்: மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா —

(அ) தஞ்சாவூர் மாவட்டம்-திருவையாறு தொகுதியில் உள்ள செங்கிப்பட்டி பகுதிகளுக்கு கட்டளைக் கால்வாய் திட்டத்தை விரிவுபடுத்தவேண்டும் என்று அரசுக்கு கோரிக்கை வந்துள்ளதா?

(ஆ) அரசு அதன்மீது எடுத்த நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: (அ) ஆம்

(ஆ) காவிரி நீர் பங்கீட்டு பிரச்சினையில் இன்னும் தீர்வு காணாததால் இதுபோன்ற திட்டம் ஏதும் தற்போது பரிசீலனையில் இல்லை.

## கொத்தங்குளம் கால்வாயில் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ள புறம்போக்கு நிலம்

*வினா எண். 5*2— திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முகவை மாவட்டம் இராஜபாளையம் தாலுகா கொத்தங்குளம் கால்வாயில் சர்வே எண். 502/3ல் புறம்போக்கு நிலத்தில் 3 செண்ட் நிலத்தை அரசு அனுமதி இல்லாமல் ஜானகிராம் மில் உரிமையாளர்கள் ஆக்கிரமித்து உள்ளது அரசுக்கு தெரியுமா?

(ஆ) ஆம் எனில் ஆக்கிரமிப்பை அகற்ற அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

**மாண்புமிகு திரு கே இராஜாமுகமது:** (அ) மற்றும் (ஆ) கொத்தங்குளம் கிராமத்தில், பொதுப்பணித்துறைய சார்ந்த சர்வே எண். 502/3ல் உள்ள 14 செண்ட் நிலத்தை பண்டகசாலை கட்ட ஜானகிராம் ஆலை தொழிலாளர் கூட்டுறவு சங்கம் தங்களுக்கு மாற்றும்படி கோரியிருந்தது. அரசு ஆணை பெற்று நிலத்தை ஒப்படை செய்யுமுன் இக் கூட்டுறவு சங்கம் 3 செண்ட் நிலப்பரப்பில் கட்டிடத்தை கட்டியதாக தலைமைப் பொறியாளர் கூறியுள்ளார் மேற்படி நிலத்தை அவர்களுக்கு மாற்றுவதற்கு தலைமைப் பொறியாளர் (பாசனம்) அனுப்பியுள்ள செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தக் கொத்தங்குளம் கிராமத்தில் உள்ள அந்த நிலத்தை லீசுக்கு எடுத்தவர் சாதாரண ஏழை எளிய தொழிலாளி அல்ல. பெரிய கோடீஸ்வரர். தொழிலாளர்களின் பெயரில் லீசுக்கு எடுத்திருக்கிறார்கள். அந்தப் பகுதியில் உள்ள கால்வாயின் மூலமாகத்தான் பாசனத்திற்கு தண்ணீர் போக வேண்டியிருக்கிறது. அந்தக் கட்டிடச் சொந்தக்காரர், கட்டடத்தை கட்டியதோடு அல்லாமல், மேலே ஒரு ரெஸ்ட் ஹவுசயும் கட்டியிருக்கிற காரணத்தால், தண்ணீர் வருவது மிகவும் சிரமமாக இருக்கிறது. ஆகவே, அந்த லீசை எல்லாம் ரத்துசெய்து, அந்த ஆக்கிரமிப்பாளர்களை அகற்ற அரசு முன் வருமா?

**மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே. ராஜபாளையத்தில் உள்ள, ஜானகிராம் ஆலை தொழிலாளர் கூட்டுறவு சங்கத்தின் தலைவர் தான், கொத்தங்குளம் கிராமத்தில், பொதுப்பணித்துறைக்குச் சொந்தமான சர்வே எண். 502/3ல் உள்ள 14 செண்ட் புறம்போக்கு நிலத்தை பண்டக சாலை கட்ட வேண்டும் என்று அனுமதி கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். அதைப்பற்றி கொடுக்கலாம் என்ற அளவில அரசின் பரிசீலனை நடந்து கொண்டிருக்கும்போது, அங்கே கூட்டுறவுப் பண்டக சாலையின்





கட்டட கட்டி முடிக்கப்பட்டிருப்பதாகத் தகவல் வந்திருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவதுபோல், அந்த இடம் தனி முதலாளியினுடைய, தனிப்பட்ட சௌகரியத்திற்காக பயன்படுத்தப் பட்டிருக்குமேயானால், நிச்சயமாக அதை ரத்து செய்ய ஏற்பாடு செய்யலாம்.

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இப்போது அந்த நிலத்திற்கு எவ்வளவு ரூபாய்க்கு லீசுக்கு என்று கொடுக்கப்பட்டிருக்கிறது. அது ஆட்சேபகரமான புறம்போக்கு நிலம் என்று அதிகாரிகளுக்குத் தெரியாதா? அப்படி தெரிந்திருந்தும் ஏன் வேண்டும் என்றே லீசுக்கு கொடுத்தார்கள். அப்படிப்பட்ட சமூக விரோத அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது:** மாண்புமிகு பேரவைத் துணை தலைவர் அவர்களே, இன்னும் அந்த இடம் லீசுக்கு கொடுக்கப் படவில்லை. லீசுக்கு கொடுப்பதையே சமூக விரோத நடவடிக்கை என்று கருதிவிட முடியாது அவர்கள் லீசுக்கு வேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள். கொடுக்கலாமா வேண்டாமா என்ற அந்தப் பிரச்னை பரிசிலனையில் இருக்கும் போதே, அந்த 3 செண்ட் நிலப்பரப்பில், பண்டகசாலைக்கான கட்டிடம் ஒன்று கட்டி முடிக்கப்பட்டிருப்பதாகத் தான் தகவல் வந்திருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அங்கே கெஸ்ட் ஹவுஸ் எல்லாம் கட்டி இருப்பதாக தகவல்கள் சொல்லியிருக்கிறார்கள். அப்படி இருப்பதாகத் தெரிந்தால், அல்லது மாண்புமிகு உறுப்பினர் அவர்களையே அங்கே அழைத்துக் கொண்டு போய் பார்க்கலாம் அந்த பண்டக சாலைக்கு உண்டான கட்டடமாக இருந்தால், அதுவும் தொழிலாளர்கள் கூட்டுறவு பண்டக சாலையின் கட்டிடமாக இருந்தால், ஆட்சேபணை இல்லாமல் கொடுத்து விடலாம். அப்படி இல்லையென்றால் அதனை ரத்து செய்துவிடலாம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

## தமிழகத்தில் நிலத்தடி நீர்குறைந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ள பகுதிகள்.

*வினா எண் 56— திரு. எம். சின்னசாமி: மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் நிலத்தடி நீர் குறைந்துள்ளதாக (Dark Area) அறிவிக்கப்பட்ட பகுதிகள் யாவை?

(ஆ) இவற்றுள் நீர்வளம் உள்ள பகுதிகளுக்கு விதிவிலக்கு அளித்து தமிழ்நாடு மாநில குடிநீர் வழங்கல் வாரியம் ஆழ்குழாய்க் கிணறுகள் அமைத்து பாசன வசதி கொடுக்க வழிவகை செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது: (அ) தமிழ்நாட்டில் 133 ஊராட்சி ஒன்றியங்கள் கருமை நிறப் பகுதிகள் என அறிவிக்கப்பட்டுள்ளது. அவைகளில் மேற்காண்டு ஆய்வு செய்யாமல் மேலும் நில நீர் திட்டங்கள் செயல்படுத்த முடியாது.

(ஆ) தேசிய விவசாய மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியின் விதிகளின்படி கருமை நிறப்பகுதிகளில் நிலநீர்ப்பெருக்கம் செய்தல் கூடாது. இவ்வகையான கருமை நிறப்பகுதிகளில் நுண்ணிய நிலநீர் ஆய்வுகிராம வாரியாக செய்யப்பட்டு வருகிறது. எலக்ட்ரானிக் டிவைஸ் மூலம் செய்யப்பட்டு வருகிறது. அவ்வாறு செய்யப்பட்ட ஆய்வில் எங்கெங்கு நிலநீர் வளம் உள்ளதாக கணக்கிடப்பட்டுள்ளதோ அக்கிராமங்களில் மேலும் நில நீர் எடுக்க சான்றிதழ்கள் அளிக்கப்படும். மற்ற கருமை நிறப் பகுதிகளில் நுண்ணிய ஆய்வு முடிந்த பிறகு நிலநீர் வளம் இருந்தால் சான்றிதழ்கள் வழங்கப்படும்.

திரு. மி. வின்சென்ட். பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, டார்க் ஏரியாக்களில் கூட நிலத்தடி நீர் உள்ள இடங்களை நுண்ணிய கருவிகளால் கண்டுபிடிக்க முடியாதவைகளை நுண்ணிய அறிவுத் திறன் படைத்த கிராமத்து மனிதன் கண்டுபிடித்து விடுகிறான் என்பது உண்மையா? அது உண்மை என்றால் அந்த கிராமத்து எலக்ட்ரானிக் மனிதனின் சக்தியை முழுமையாகப் பயன்படுத்துவதற்கு அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது: துணைதலைவர் அவர்களே, இந்த எலக்ட்ரானிக் டிவைஸஸ் மூலமாக நாம் கண்டுபிடிக்கின்ற பகுதிகளில் கிட்டத்தட்ட 90 விழுக்காடு வெற்றிகரமாக நீர் வளத்தைக் கணக்கிட்டு விடுகிறோம். அதேபோல் சில இடங்களில் ஆங்காங்கே இருக்கக்கூடிய விவசாயிகள் ஏதோ அவர்களுக்கு உள்ள அனுபவத்தின் காரணமாகவோ அல்லது உடலில் இருக்கக்கூடிய மேக்னட் பவர் காரணமாகவோ சரியான இடங்களைத் துல்லியமாகவே சொல்லிவிடுகிறார்கள். சில நேரங்களில் மற்ற ஆய்வுகளை வெற்றிகண்டுவிடக்கூடிய வகையில் அவர்கள் தண்ணீர் வரக்கூடிய சரியான இடங்களைக் கணக்கிட்டுக் கொடுத்ததை நாம் அனுபவபூர்வமாகப் பார்த்திருக்கிறோம். எனவே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வது மாதிரி அவர்களுக்கு எலக்ட்ரானிக் மனிதன் என்ற பட்டம் கொடுக்க முடியாது. ஆனாலும் அவர்களுடைய அனுபவத்தைப் பயன்படுத்துகின்ற வகையில் அரசு சில திட்டங்களை மேற்கொள்ளலாம்.

திரு. சி. சிவப்பிரகாசம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சென்ற முறை பதிலளிக்கும்போது நிலத்தடி நீர் சேலம் மாவட்டத்தில் கல்வராயன் மலைப்பகுதியில் இருப்பதாக செயற்கை கோள்



மூலம் கண்டுபிடிக்கப்பட்டிருப்பதாகத் தெரிவித்தார்கள். அதே போன்று கொல்லிமலைப் பகுதியிலும் நிலத்தடி நீர் இருக்கின்றதா என்று ஆய்வு செய்து அங்குள்ள மலைவாழ் மக்களுக்குப் பயன்படுகின்ற வகையில் குழாய் கிணறு அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது: துணைத் தலைவர் அவர்களே, பொதுவாக மலைப்பகுதிகளில் கிடைக்கின்ற நிலத்தடி நீரை விவசாயத்திற்குப் பயன்படுத்துகின்ற அளவுக்கு வாய்ப்புகள் இருக்குமா என்பதை அவ்வளவு உறுதியாகச் சொல்ல முடியாது. அங்கே கிடைக்கக்கூடிய சீப்பேஜ் வாட்டரைத்தான் அதிகமாக பயன்படுத்துகிறோம். அது ஒரளவுக்குக் குடிநீருக்குப் பயன்படுகிறது. ஆனால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுகின்ற கொல்லிமலைப் பகுதி இந்த 133 ஊராட்சி ஒன்றியங்களில் அதாவது டார்க் ஏரியா என்று சொல்லப்படுபவைகளில் வருகின்றதா என்பதை முதலில் பார்க்கவேண்டும். ஏற்கெனவே செயற்கைக் கோள் மூலம் ஆய்வு நடத்திய பகுதிகளில் அந்த கொல்லிமலைப் பகுதிகளில் உள்ள நிலைமை என்ன என்பதைத் தெரிந்துகொண்டு அதற்குப் பிறகு வேண்டுமானால் மறு ஆய்வு நடத்தவேண்டிய அவசியம் இருந்தால் அதைச் செய்ய அரசு நிச்சயமாக நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சோ. அழகர்சாமி: துணைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் நிலத்தடி நீர் குறைந்துள்ள டார்க் ஏரியாக்கள் என்று அறிவிக்கப்பட்ட 133 ஒன்றியங்களில் திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்த ஊராட்சி ஒன்றியங்கள் எவை எவை இந்தமாதிரி நிலத்தடி நீர் சம்பந்தமான விவரங்களை எல்லாம் ஆங்காங்கே உள்ள ஊராட்சி ஒன்றியங்களுக்குக் கொடுத்து யார் போனாலும் அந்த விவரங்களைத் தெரிந்துக்கொள்ளக் கூடிய முறையில் ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது: துணைத் தலைவர் அவர்களே, மாவட்ட வாரியாக நம்மிடத்திலே விவரங்கள் இருக்கின்றன. தனியாக ஒவ்வொரு பகுதிகளிலும் அப்படிப்பட்ட இடங்கள் எவை எவை என்ற குறிப்புக்கள் இருக்கின்றன. திருநெல்வேலி மாவட்டத்தைப் பொறுத்தவரையில் சாத்தான்குளம், கடையநல்லூர், உடன்குடி போன்ற பகுதிகள் எல்லாம் அதிலே குறிப்பிடப்பட்டு இருக்கின்றன. 133 ஒன்றியங்களும் எவை எவை என்ற விவரங்கள் மொத்தமாக இருக்கின்றன. அனைத்து மாவட்டங்களைச் சேர்ந்த உறுப்பினர்களும் தெரிந்துகொள்ளக் கூடிய வகையில் நான் ஒரு அறிக்கையாகவே அச்சிட்டுக்கொடுத்து விடுகிறேன்.

விவசாயத்துறையின் சார்பாக அவர்கள் இயந்திரங்களை அனுப்பி அந்த இடங்களைக் கண்டுபிடித்து உதவி செய்வதற்கு திட்டம் தீட்டப்பட்டு அவர்கள் செயல்படுத்தி வருகிறார்கள். அதேபோன்று நிலத்தடிநீர் பிரிவினை இப்போது அணுகினால் அவர்களும் விவசாயிகளிடத்திலே குறைந்த வாடகையைப் பெற்றுக்கொண்டு அந்த இடங்களுக்குச் சென்று அங்கே நிலத் தடி நீர் இருக்கின்றதா இல்லையா என்பதை ஆய்வு செய்து கொடுக்கிறார்கள். மேலும் கறுப்புப் பகுதிகள் எவை எவை என்பதைப் பொறுத்தவரையில் அந்தந்த ஊராட்சி ஒன்றியங்களிலே வரைப்படங்களின் மூலம் ஊராட்சி ஒன்றியங்களின் அலுவலகங்களிலே வைக்கவேண்டும் என்று நாம் முடிவு செய்திருக்கிறோம். எனவே அவை ஊராட்சி ஒன்றியங்களிலே இருக்கக்கூடிய சூழ்நிலையை உருவாக்கிக் கொடுப்போம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. பாபு ஜனார்த்தனன்: துணைத் தலைவர் அவர்களே, செயற்கை கோள் மூலமாக மற்ற ஆராய்ச்சிகள் மூலமாக கண்டுப் பிடிக்கப்பட்டதில் செய்யாறு பகுதியில் நிறைய நிலத்தடி நீர் இருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். இப்போது கடுமையான வறட்சி நிலைமை இருக்கின்றது. ஆகவே அங்கெல்லாம் குழாய்க் கிணறுகளை அமைத்து அவற்றின் மூலம் பாசனம் கொடுக்கின்ற வகையில் குழாய்க் கிணறுகளை அமைக்க அரசு வலியுறுத்துமா?

(முற்பகல் 9-50)

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது. துணைத் தலைவர் அவர்களே, வடாற்காடு மாவட்டத்தைப் பொறுத்தவரையில் 15 ஒன்றியங்கள் க்ரே ஏரியா என்று சொல்லக்கூடிய வகையில் ஓரளவுக்கு நீர் வளம் இருக்கக்கூடிய தகுதி என்று குறிப்பிட்டிருக் கிறோம். எனவே இந்த 17 ஒன்றியங்களில் கூடுமானவரையில் அதிகமான நீர் வளம் இருப்பதாகக் கணக்கிடப்பட்டு இருக்கிற காரணத்தால் ஓரளவுக்கு அங்கே குழாய்க் கிணறுகள் கழகத்தின் பணிகளை துவங்கலாம். மற்ற பகுதிகளில் ஏதாவது ஒரு இடத்தில் நீர் வளம் இருக்கும். டார்க் ஏரியா என்பதற்காக அந்த ஒன்றியம் பூராவும் விவசாயத்திற்கு பயனற்ற இடம் என்று சொல்லிவிட முடியாது. மாண்புமிகு உறுப்பினர் வின்சென்ட் அவர்கள் கேட்டதை போல் சில விவசாயிகள் ஒரு குறிப்பிட்ட இடத்திலே சொல்கிறார்கள் ''இங்கே நீங்கள் உறுதி யாக குழாய் கிணறுகளை போடலாம் நிச்சயமாக தண்ணீர் வரும் என்று சொல்கிறார்கள். அப்படி ஒரு பரிசார்த்தமாக செய்து பார்த்ததில் தண்ணீர் வருகிறது. அப்படி இருக்கு மானால் அதற்கும் சான்றிதழ்கள் வழங்க அரசு நிச்சயமாக் நடவடிக்கை எடுக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.



திரு. ச. பாலகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, டார்க் ஏரியா என்று அறிவிக்கப்பட்ட பல பகுதிகளில் சிலயிடங்களில் நீர் வளம் மிகவும் அதிகமாக இருக்கின்ற பகுதிகள் இருக்கின்றன. அதுபோன்ற பகுதிகளில் குழாய்க்கிணறுகள் அமைத்துக் கொடுத்தால் அங்கே இருக்கின்ற சிறு விவசாயிகளுக்கு உதவிகரமாக இருக்கும். எனவே அந்த பகுதிகளில் மறு ஆய்வு செய்து குழாய்க் கிணறுகளை அமைத்து சிறு விவசாயிகளுக்கு உதவிட குழாய்க் கிணறுகள் கழகத்திற்கு அரசு ஆலோசனை வழங்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பெரியார் மாவட்டத்தை பொறுத்த வரையில் 13 ஒன்றியங்களை டார்க் ஏரியா என்று இப்போது அறிவிக்கப்பட்டு இருக்கிறது. மொடக்குறிச்சி, சென்னிமலை இந்த 2 பகுதிகளில் நீர் வளம் இருப்பதாக இருக்கிறது. எனவே அவர் எப்படி தெரிந்தே கேட்டாரோ தெரியவில்லை. அவருடைய தொகுதியிலே ஓரளவுக்கு வாய்ப்பு இருக்கிறது. சென்னிமலையிலும் வாய்ப்பு இருக்கிறது. என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. தி. சா. நல்லப்பன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கேட்க நினைத்ததையே மாண்புமிகு உறுப்பினர் திரு. பாலகிருஷ்ணன் அவர்கள் கேட்டுவிட்ட காரணத்தால் இதை நான் கேட்கவில்லை.

## தஞ்சை மாவட்டத்தில் முதியோர் உதவித் தொகைபெறும் நபர்கள்.

*வினா எண் 564—திரு. எஸ். இராசாராமன்: மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டத்தில் முதியோர் உதவித்தொகை பெறும் நபர்கள் எண்ணிக்கை எவ்வளவு?

(ஆ) உதவித்தொகை கோரி 1981-1982-ம் ஆண்டு வந்துள்ள விண்ணப்பங்கள் எத்தனை?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: (அ) தஞ்சை மாவட்டத்தில் 12, 891 ஆதரவற்ற முதியோர்களும், 5,329 ஆதரவற்ற விதவைகளும், 1,233 ஆதரவற்ற உடல் ஊனமுற்ற வர்களும், 4,411 ஆதரவற்ற விவசாயத் தொழிலாளர்களும் ஆக 23,864 நபர்கள் முதியோர் உதவித் தொகை பெற்று வருகின்றனர்.

(ஆ) தஞ்சாவூர் மாவட்டத்தில் 1981—82-ம் ஆண்டில் முதியோர் உதவித் தொகை கேட்டு 25,553 மனுக்கள் வந்துள்ளன.

திரு. எஸ். இராசாராமன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1981-82—ம் ஆண்டில் 25,553 மனுக்கள் முதியோர் உதவிப்பணம் கேட்டு வந்து இருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். அந்த விண்ணப்பங்களை எல்லாம் உடனடியாக ரெவின்யூ இன்ஸ்பெக்டர் விசாரித்து முதியோர் உதவித்தொகை அளிக்காத காரணத்தால் விண்ணப்பித்தவர்களில் சிலர் இறந்து விடுகிறார்கள் என்பது அரசுக்கு தெரியுமா? உடனடியாக உதவித் தொகை கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா என அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1981-82-ம் ஆண்டு தஞ்சாவூர் மாவட்டத்தில் முதியோர் உதவித்தொகை கேட்டு 25,553 மனுக்கள் வந்துள்ளது. இதில் 6,795 மனுக்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டு உதவித்தொகை வழங்கப்பட்டுள்ளது. 9,121 மனுக்கள் நிராகரிக்கப்பட்டுள்ளது. மீதம் உள்ள 9,637 மனுக்கள் பரிசீலனையில் இருக்கிறது. அப்படி இருக்கும்போது அந்த மனுக்கள் போட்டு இறந்து விட்டால் அந்த மனுக்களுக்கு பதில் வேறு நபர்களுக்கு தகுதிவாய்ந்தவர்களுக்குக் கொடுக்கின்ற வாய்ப்பை இந்த அரசு கையாண்டு வருகிறது என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த 9 ஆயிரம் மனுக்கள் போட்டு அவைகள் விசாரணையில் இருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்து இருக்கிறார்கள். இந்த 9 ஆயிரம் பேர்கள் பல மாதங்களாக காத்து இருக்கக்கூடிய ஒரு சூழ்நிலை இருக்கிறது. இதற்குப் பிரித்தியேக நிதியை அரசு ஒதுக்கி விண்ணப்பித்த எல்லோருக்கும் இந்த உதவித் தொகை வழங்குவதற்கு தீவிர நடவடிக்கையை இந்த அரசாங்கம் எடுத்துக்கொள்ளுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் அவர்களே, 9,637 மனுக்கள் பரிசீலனையில் இருக்கிறது. அதோடு மட்டும் அல்லாமல் எல்லோருக்கும் கொடுக்கவேண்டும் என்று மாவட்ட ஆட்சித் தலைவர்களை நாம் அரசு மூலமாக கேட்டு இருக்கிறோம், ஒவ்வொரு மாவட்டத்திலும் முதியோர் எவ்வளவு பேர் இருக்கிறார்கள். எவ்வளவு பேர் தகுதி வாய்ந்தவர்கள் இருக்கிறார்கள் எவ்வளவு பேர்களுக்குக் கொடுக்கலாம் என்று கணக்கு எடுக்கும்படி மாவட்ட ஆட்சித்தலைவர்களை கேட்டு இருக்கி





றோம். அந்த கணக்கீட்டை வைத்துக்கொண்டு, நிதிநிலையை வைத்துக்கொண்டு, நமக்கு எவ்வாறு நிதியை ஒதுக்குகிறார்களோ அந்த அடிப்படையில் தகுதி வாய்ந்த எல்லோருக்கும் முதியோர் உதவித்தொகை கொடுப்பதற்கான கருத்து இன்றைக்கு அரசின் பரிசீலனையில் இருந்துகொண்டு வருகிறது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. என். பழனிவேல்: துணைத் தலைவர் அவர்களே, இந்த முதியோர் உதவித் தொகைக்காக மனுச்செய்த மனுதாரர்கள். ஏற்கனவே வாங்கிக் கொண்டிருக்கிறவர்கள்—செத்தால்தான் கிடைக்கும் என்ற நிலை இருக்கிறது. நான் தமாஷாக இதைச் சொல்லவில்லை. தாலுகா ஆபீசிலே கேட்டால் ஏற்கனவே வாங்கிக்கொண்டிருக்கிறவர்கள் 10 பேர்கள் செத்தால்தான் புதிதாக விண்ணப்பித்தவர்களில் பத்துப் பேர்களை எடுத்து கொள்ளலாம் என்று சொல்கிறார்கள். இந்த அவமானகரமான நிலைமையை மாற்றுவதற்கும் முதியோர் அனைவருக்கும் கொடுக்க இனிமேலாவது அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திருமதி. கோமதி சீனிவாசன்: துணைத் தலைவர் அவர்களே, அந்த நிலையை மாற்றி இருக்கிற நிதிநிலைமையை வைத்துக்கொண்டு நான் முன்பே குறிப்பிட்டிருக்கிறேன்—மாவட்ட ஆட்சித் தலைவர்களிடம் கணக்கு எடுக்கச் சொல்லியிருக்கிறோம், அந்தக் கணக்கெடுப்பின் அடிப்படையைக் கொண்டு நிதி நிலையை அடிப்படையாகக் கொண்டு எல்லோருக்கும் கொடுக்கிற நிலையை அரசு பரிசீலித்துக் கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

### கிராமப்பகுதியில் குழந்தைகள் நல மையங்கள் மூலம் சத்துணவு பெறும் குழந்தைகளுக்கு சுகாதார அட்டைகள் வழங்கும் திட்டம்.

*வினா எண்.565—திரு. செ. செம்மலை: மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிராமப் பகுதியில் குழந்தைகள் நல மையங்கள் மூலம் சத்துணவு பெறும் இரண்டு வயது முதல் நான்கு வயது வரை உள்ள குழந்தைகளுக்கு சுகாதார அட்டைகள் வழங்கும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன

மாண்புமிகு திருமதி. கோமதி சீனிவாசன்: (அ) மற்றும் (ஆ): முதல் அமைச்சர் குழந்தைகள் சத்துணவுத்திட்டத்தின்கீழ் திறக்கப்பட்டு இயங்கிவரும் 22,361 மையங்களுக்கும், குழந்தை ஒன்றுக்கு ஒரு சுகாதார அட்டைவீதம், மொத்தம் 19,41,688 அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன.

திரு. செ. செம்மலை: துணைத் தலைவர் அவர்களே, வளரும் குழந்தைகள் சுகாதாரத்தோடு வளரவேண்டுமென்ற புரட்சித் தலைவர் அவர்களுடைய எண்ணத்திற்கேற்ப கிராமப்புறங்களிலே 19,41,688 சுகாதார அட்டைகள் வழங்கப்பட்டிருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இந்த சுகாதார அட்டைகள் வழங்கப்படுகிற திட்டம் நகர்ப்புறங்களிலுள்ள மையங்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டிருக்கிறதா அப்படியானால் மொத்தம் எத்தனை பேர்களுக்கு இந்த சுகாதார அட்டைகள் வழங்கப்பட்டு இருக்கின்றன என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திருமதி. கோமதி சீனிவாசன்: துணைத் தலைவர் அவர்களே, நகரப்புறங்களிலே 5 ஆயிரம் மையங்கள் இருக்கின்றன. இந்த அடிப்படையில் 3.24 லட்சம் குழந்தைகளுக்கு சுகாதார அட்டைகளைப் பெற்று அவர்களுடைய உடல் நலத்தைப் பாதுகாத்து வருகிறார்கள்.

திரு. செ. செம்மலை. துணைத் தலைவர் அவர்களே, இந்த மையங்களிலே எத்தனை நாட்களுக்கு ஒரு முறை மருத்துவ பரிசோதனை மருத்துவர்களால் நடத்தப்படுகிறது அந்தக் குழந்தைகளுக்கு எல்லாம் நோய் வராமலேயே தடுப்பதற்கான முறையிலே நோய்த் தடுப்பு ஊசிகள் போடுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறதா இல்லையென்றால் இனிமேலாவது அவ்வாறு செய்வதற்கு ஏற்பாடு செய்யப்படும் என்று அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திருமதி. கோமதி சீனிவாசன்: துணைத் தலைவர் அவர்களே, இந்த சுகாதார அட்டைகள் மூன்று மாதத்திற்கு ஒரு தடவை பரிசீலிக்கப்படுகின்றன. அந்த அடிப்படையில் குழந்தைகளினுடைய உடல்நலம், எடை, தடுப்பு ஊசிகள், போலியோ, டிரிபிளான்டிஜன் போன்ற வேக்ஸின்கள் அந்தக் குழந்தைகள் பெற்றிருக்கிறார்களா என்ற அடிப்படையில் அந்த சுகாதார அட்டையில் குறிப்பிட்டு மருத்துவர்கள் நடவடிக்கை எடுத்து வருகிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

### காலணி தைக்கும் தொழிலாளர்களுக்கு பணிக்கூடங்கள் அமைத்து கொடுக்கும் திட்டம்.

*குறுகிய கால வினா எண். 9—திரு. இரா. தாம்ரைக்கனி: மாண்புமிகு கதர் மற்றும் பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காலணி தைக்கும் தொழிலாளர்களுக்கு பணிக்கூடங்கள் அமைத்துக் கொடுக்கும் திட்டம் அரசு பரிசீலனையில் உள்ளதா?



(ஆ) ஆம் எனில் 1982 முதல் 1984 முடிய எத்தனை பணிக்கூடங்கள் கொடுக்க அரசு உத்தேசித்துள்ளது?

மாண்புமிகு திரு. எஸ். என் இராசேந்திரன்: (அ) அரசு சிறப்பு கூட்டுத் திட்டத்தின் கீழ் (Special Comp. nent Plan) காலணி தைக்கும் தொழிலாளர்களுக்கு மானியம் வழங்கியுள்ளது. தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் இத்திட்டத்தை செயல்படுத்தி வருகிறது.

(ஆ) 1982–83-ம் ஆண்டில் 500 பணிக்கூடங்கள் விநியோகம் செய்ய திட்டமிடப்பட்டு இதுகாறும் 444 பணிக்கூடங்கள் விநியோகம் செய்யப்பட்டுள்ளன. எஞ்சிய 56 பணிக்கூடங்கள் மார்ச் மாத இறுதிக்குள் விநியோகம் செய்யப்படும். 1983–84-க்கு இன்னும் ஒன்றும் திட்டம் தீட்டப்படவில்லை.

(முற்பகல் 10–00)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அவையின் அமைதியுடன் வினா–விடை நேரம் நீட்டிக்கப்படுகிறது.

திரு. இரா. தாம்ரைக்கனி: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு காலணி தைக்கும் தொழிலாளிக்குப் பணிக்கூடம் அமைப்பதற்கு ஒரு பணிக் கூடத்திற்கு எவ்வளவு மானியம் கொடுக்கப்படுகிறது? என்ன அடிப்படையில் அவர்களுக்குப் பணிக்கூடம் அமைத்துக் கொடுக்கப்படுகிறது?

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இந்த 500 தொழிலாளர்களுக்குத் திட்டத்தின் அடிப்படையில், சமூக நலத் துறையிலிருந்து ரூ. 35 இலட்சம் வழங்கியுள்ளது. அதன் அடிப்படையில், பணிக்கூடம் ஒவ்வொன்றிற்கும் ரூ. 5,000–மும், ரூ. 1,500 செலவில் தையல் இயந்திரமும், இதர கருவிகள். மூலப்பொருள்கள் வாங்க ரூ. 500–ம், ஆக மொத்தம் ரூ. 7,000 ஒவ்வொரு காலணி தொழிலாளிக்கும் வழங்கப்படுகிறது. தொழிலாளர்கள், அரசு நிர்ணயம் செய்யும் இடத்தில், மேற்படி பணிக்கூடத்தை வைத்து தொழில் நடத்துவார்கள். ரூ. 7,000-மும் மானியமாகவே கொடுக்கப்பட்டிருக்கிறது. இதுவரை கோவை, பெரியார், சேலம், உதகை, தென்னாற்காடு, தஞ்சாவூர், திருச்சி, புதுக்கோட்டை, செங்கல்பட்டு, சென்னை நகரம், வட ஆற்காடு, தர்மபுரி, மதுரை, இராமநாதபுரம், நெல்லை, கன்னியாகுமரி மாவட்டங்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. இன்னும் 56 பணிக்கூடங்கள்—மீதம் உள்ளவை—கோயம்புத்தூர், பெரியார், சேலம், உதகை, கடலூர், தஞ்சாவூர், சென்னை நகரம், தர்மபுரி ஆகிய மாவட்டங்களுக்குக் கொடுக்கப்பட இருக்கின்றன.

[1983 மார்ச் 26

திரு. இரா. தாமரைக்கனி: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஜனத்தொகை அதிகமுள்ள சென்னையில், தலைமைச் செயலகம் அருகிலேயும், எம். எல். ஏக்கள் ஹாஸ்டல் அருகிலேயும் இந்தக் காலணி தைக்கும் தொழிலாளிகளுக்குப் பணிக்கூடங்கள் அமைத்துக் கொடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதுவரை சென்னை நகரத்திற்கு 16 பணிக்கூடங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இன்னமும், சென்னை நகரத்திற்கு 34 பணிக் கூடங்கள் கொடுக்கப்பட இருக்கின்றன.

திரு. சோ. அழகர்சாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சொல்லும்போது, 500 தொழிற்கூடங்கள் கொடுக்கத் திட்டமிடப்பட்டு, 444 கொடுக்கப்பட்டதாகச் சொன்னார்கள். பல இடங்களிலே பல புகார்கள் வருகின்றன. நாங்கள் பல பேர்கள் மனு செய்தாலுங்கூட எப்படி எங்களுக்குக் கிடைக்காமல், சில பேருக்குக் கிடைத்து விட்டது என்று சொகிறார்கள். எந்த முறையில் வழங்கப்படுகிறது? மனு போட்ட அத்தனை பேரையும் வைத்து சீட்டு குலுக்கி எடுக்கப்படுகிறதா அல்லது அவர்களே ஏதாவது ஒரு முறையிலே தேர்வு செய்து அந்தத் திட்டத்தை நடத்துகிறார்களா என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புவதோடு, ரூ. 7,000 மானியம் வழங்குகின்ற நல்ல திட்டம்—அந்தத் தொழிலாளிகளுக்குக் கிடைக்கிற திட்டம். அதோடு, இந்தக் கேள்வி எப்படி அவசரப் பிரச்னையாக வந்தது குறுகிய காலக் கேள்வியாக இது எப்படி அனுமதிக்கப்பட்டது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு மாவட்டத்திற்கும் 25 பணிக்கூடங்கள் கொடுக்கப்பட்டு ஒவ்வொரு ஒன்றியத்திற்கும், அங்குள்ள ஒன்றியங்களை அனுசரித்து, பிரித்துக் கொடுக்கப்பட வேண்டுமென்ற அடிப்படையில் பிரித்துக் கொடுக்கப்படுகிறது. ஒவ்வொரு காலணி தொழிலாளியும், உண்மையிலே தெரு ஓரங்களில் வேலை செய்து கஷ்டப்பட்டு தைத்துக் கொண்டிருக்கிற, உண்மையிலே கஷ்டப்படுகிற அந்தக் காலணி தொழிலாளிகளுக்குக் கொடுக்க வேண்டுமென்ற அடிப்படையில் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதில் சட்டமன்ற உறுப்பினர்களும், ஆங்காங்குள்ள பெரியவர்களும் சொல்கின்ற, காட்டுகின்ற அடிப்படையிலும் இது கொடுக்கப்படுகிறது. இது நல்ல திட்டம் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். இப்படி அருமையான திட்டத்தை அரசு அறிமுகப்படுத்தியுள்ளது, மீண்டும் இந்த ஆண்டு வருமா என்ற அவசர நிலையில் மாண்புமிகு உறுப்பினர் கேட்கிறார் என்று நான் கருதுகிறேன்.



1983 மார்ச் 26]

திரு. சு. பாலன்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இந்தக் காலணி தைக்கும் தொழிலாளர்களுக்குக் கொடுக்கப்படுகிற......

திரு. மு. அம்பிகாபதி: பாய்ன்ட் ஆஃப் ஆர்டர், மணி 10.04... அவையில் இன்னும் கேள்வி நேரம்......

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: சபையில் என்ன நடக்கிறது என்பதைக் கவனித்துக் கொண்டிருக்க வேண்டும். வேறு எங்கோ கவனித்துக் கொண்டிருந்து விட்டு, திடீரென்று ஏதோ நினைத்துக் கொண்டு சொல்லக் கூடாது.

Thiru R. Umanath: That is a point of disorder.

திரு. சு. பாலன்: காலணி தைக்கும் தொழிலாளர்களுக்குச் சென்னையில் 16 பேர்களுக்குப் பணிக்கூடங்கள் கொடுக்கப்பட்டிருப்பதாகத் தெரிவித்தார்கள். அத்தகையோர்களுக்கு ஜாதி அடிப்படையில் கொடுக்கப்பட்டதா அல்லது காலணி தைக்கும் தொழில் தெரிந்தவர்களுக்குக் கொடுக்கப்பட்டதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன்; மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, காலணி தைப்பவர்களில் ஜாதி இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. சாலையோரங்களில் மிகக் கடினமான வாழ்க்கையைச் சந்தித்துக் கொண்டிருக்கின்ற அவர்களைத் தேர்ந்தெடுத்து காலணி தைக்கும் தொழிலாளர்களுக்குப் பணிக்கூடங்கள் கொடுப்பதற்கான அடிப்படையை இந்த அரசு பின்பற்றி வருகிறது. இதில் ஜாதி அடிப்படை இல்லை.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: பேரவைத் துணைத் தலைவரவர்களே, காலணி தைக்கின்ற தொழிலாளர்களுக்கு இப்படிப்பட்ட உதவிகளைச் செய்து அந்தத் தொழிலை ஊக்குவிக்கிறார்கள். ஆனால் அந்தக் காலணிகளைத் தைக்கின்ற தொழிலாளர்கள், அவர்கள் தயாரிக்கின்ற காலணிகள் சரியான முறையில் விற்பனையாகாத காரணத்தால் மிகவும் கஷ்டத்தில் இருக்கிறார்கள். ஆகவே, அரசாங்கத் தரப்பிலே பல்வேறு இலாக்காக்களுக்கும் இவர்கள் தயாரிக்கின்ற காலணிகளை வாங்கிக் கொடுத்து, இந்தத் தொழிலில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு உற்சாகத்தைத் தருவதற்கு அரசாங்கம் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, இதுவரையில் அந்தமாதிரி எண்ணம் வாரியத்தில் இல்லை. காரணம், இப்படிப்பட்ட தொழிலாளர்களை உற்சாகப்படுத்த வேண்டுமென்பதற்காகப் பல பணிக்கூடங்களை வாரியமே நடத்தி அந்தக் காலணிகளை நாம் காதி கிராஃப்ட் மூலமாக விற்பனை செய்து வருகிறோம். வி.ஐ.பி. என்ற பெயர் இடப்பெற்றிருக்கிறது. அதற்கு அமோக

வரவேற்பு இருக்கிறது. இப்பொழுது அவர்கள் தொழில் செய்வதற்கான உதவியைக் கொடுக்க வேண்டுமென்று செய்கிறோமே தவிர அவர்களுடைய தயாரிப்பை வாங்குவதற்கு இதுவரையிலே திட்டம் ஏதும் இல்லை.

திரு. இரா. கருப்பையா: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, இப்படிப்பட்ட காலணி தைக்கும் தொழிலாளர்களுக்காக பணிக்கூடங்கள் 500 விநியோகம் செய்ய திட்டமிடப்பட்டு, இது வரையில் 444 பணிக்கூடங்கள் கொடுக்கப்பட்டதாக அமைச்சரவர்கள் தெரிவித்தார்கள். இப்படிக் கொடுக்கப்பட்ட 444 பணிக்கூடங்களில் மாவட்டவாரியாக எத்தனை கொடுக்கப்பட்டுள்ளது? திருச்சி மாவட்டத்திற்கு எவ்வளவு கொடுக்கப்பட்டுள்ளது என்று அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. எஸ்.என்.இராசேந்திரன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, கோவை மாவட்டத்தில் இதுவரையில் 34 பணிக்கூடங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன; இன்னும் 4 பணிக்கூடங்கள் கொடுக்க உத்தேசம் இருக்கிறது. பெரியார் மாவட்டத்தில் இதுவரையில் 30 பணிக்கூடங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன; இன்னும் 3 பணிக்கூடங்கள் கொடுக்க வாரியம் உத்தேசித்திருக்கிறது. சேலம் மாவட்டத்தில் 28 பணிக்கூடங்கள் கொடுக்கப்பட்டிருககின்றன. தென்னார்க்காடு மாவட்டத்தில் 26 பணிக்கூடங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. தஞ்சாவூர் மாவட்டத்தில் 32 பணிக்கூடங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. திருச்சி மாவட்டத்தில் 35 பணிக்கூடங்களும், புதுகோட்டை மாவட்டத்தில் 25 பணிக்கூடங்களும், செங்கல்பட்டு மாவட்டத்தில் 25 பணிக்கூடங்களும் கொடுக்கப்பட்டிருக்கின்றன. சென்னை நகரத்தில் 16 பணிக்கூடங்கள் இதுவரையில் கொடுக்கப்பட்டிருக்கின்றன; இன்னும் 34 பணிக்கூடங்கள் கொடுக்கப்பட இருக்கின்றன. வடாற்காடு மாவட்டத்தில் 25 பணிக்கூடங்களும், தர்மபுரி மாவட்டத்தில் 23 பணிக்கூடங்களும், மதுரை மாவட்டத்தில் 30 பணிக்கூடங்களும், இராமநாதபுரம் மாவட்டத்தில் 20 பணிக்கூடங்களும், நெல்லை மாவட்டத்தில் 50 பணிக்கூடங்களும், கன்னியாகுமரி மாவட்டத்தில் 25 பணிக்கூடங்களும் இதுவரையில் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

திரு. எல். இளையபெருமாள்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் நல்லெண்ணத்தோடு அந்த ஏழைத் தொழிலாளர்களுக்கு உதவி செய்திருப்பதை நான் பாராட்டுகிறேன். ஆனால் அவர்கள் உற்பத்தி செய்யும் சீப்பு தயாரிப்புகளுக்கு மார்க்கெட் கிடைக்காமல் மிகவும் மோசமான நிலையில் இருக்கிறார்கள். விற்க முடியாத அவல நிலையில் அவர்கள் இருக்கிறார்கள். ஆகவே, அவர்கள் தயாரிக்கின்ற தயாரிப்புகளை அரசாங்கமே கொள்முதல் செய்தால் நல்லது. அப்பொழுதான் அவர்களின் தயாரிப்புகளை நல்ல முறையில் விற்க வசதியாக இருக்கும். வருங்காலத்திலேயாவது அவர்களுக்கு உண்மையிலே இலாபம் கிடைக்கின்ற அளவிற்கு மார்க்கெட்டிங் சொசைட்டியின் மூலமாக அரசாங்கமே கொள்முதல் செய்ய ஏற்பாடு செய்யுமா? வெளிநாடுகளில் கிராக்கி இருக்கின்றது. ஆகவே, அதற்கு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.





மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, இந்தத் திட்டத்தை நான கொண்டு வந்ததாக மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொல்கிறார்கள். இவ்வளவு அருமையான திட்டத்தை ஏழைகளின் பால் அன்பு கொண்டு தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் தான் கொண்டு வந்திருக்கிறார்கள். இந்தத் திட்டம், அவர்கள் சாலையோரங்களில் வெய்யிலில் தொழில் செய்கிறார்கள் என்பதால் அனுதாபத்தோடு அவர்களின் தொழிலுக்கு உதவி செய்ய வேண்டுமென்ற உணர்வோடு ஆரம்பிக்கப்பட்டது. அவர்களுடைய தயாரிப்புகளை வாங்குவதற்கு இதுவரையில் வாரியத்திடம் எந்தத் திட்டமும் இல்லை. இப்படிப்பட்ட தொழிலாளர்களை உற்சாகப்படுத்தும் வாயிலாக இப்படிப்பட்ட தொழிற்கூடங்களை வாரியத்தின் வாயிலாகப் பலயிடங்களிலே செய்து கொண்டிருக்கிறோம். மானியம் கொடுத்து உதவும் சூழ்நிலையை உருவாக்கிக் கொடுத்திருக்கிறோம். தயாரிப்புகளை வாங்கும் அளவிற்குத் திட்டம் எதுவும் இப்பொழுது வாரியத்தில் இல்லை. அதைத் தனியாக நாம் தயாரித்துக் கொண்டிருக்கிறோம். வாரியத்தின் வாயிலாக தனியாக இப்படிப்பட்ட தொழிலாளர்களுக்கு வாய்ப்பு கொடுத்து அவர்களுடைய தயாரிப்புகளை நாங்கள் வாங்கி விற்பனைக்கூடங்கள் வாயிலாக அவைகளை விற்றுக்கொண்டிருக்கிறோம். அதற்கு ஏகபோக வரவேற்பு இருக்கிறது என்று நான் ஏற்கனவே சொல்லி இருக்கிறேன் என்பதை மாண்புமிகு உறுப்பினருக்கு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்].

(முற்பகல் 10—10)

## தகவல் கோரல்

### தொழிலாளர்கள் பல மாவட்டங்களில் இருந்து சென்னைக்கு வர ஒப்பந்தம் செய்து கொள்ளப் பெற்ற பேந்துகளுக்கு அனுமதி

திரு. ரா. உமாநாத்: பாயிண்ட் ஆப் ஆர்டர் சார், மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே; ஒரு சீரியஸ் பாயிண்ட் ஆப் ஆர்டர். நான் சீரியசாக சொல்கிறபொழுது ஏதோ நுழைப்பதற்காக நான் சீரியசாக சொல்லவில்லை. உங்கள் பாது

காப்பிற்கும் இந்த அவைக்கும், ஒரு தேவையான, முக்கியமான விஷயம் ஒன்றை நான் எழுப்பப் போகிறேன். நாளைக்கு விடுமுறை. ஆகவே பிரயோஜனம் இல்லை. நாளை மறுநாள் ''இன்ப்ரக்சுவஸ்''—ஆகிவிடும். ஆகவே நான் எழுப்ப விரும்புகிறேன்.

இன்று தமிழகத்திலே எந்தப் பிரஜைக்கும் தங்களுடைய குறையைப் பொறுத்தவரைக்கும் இந்த அவைக்கு, அதன் மூலமாக பெட்டிஷன் சப்மிட் பண்ணுவதற்கு உரிமையுண்டு. இந்த அவைக்கும் அந்த பிரஜைகளுடைய பெட்டிஷனை அதன் மூலமாகப் பெறுவதற்கும் உரிமையுண்டு. அப்படி இருக்க நாளை மறுநாள் ஒரு பெட்டிஷன் இந்த அவைக்கு—ஏற்கனவே நோட்டீஸ் எல்லாம் போயிருக்கிறது — இந்த பெட்டிஷன் சமர்ப்பிட்பதாக இருக்கிறது. அதற்கு தொழிலாளர்கள் 28—3—83 அதாவது நாளை மறுநாள் இந்த பெட்டிஷனை சப்மிட் பண்ணுவதற்காகப் பேரணியாக வருகிறார்கள். அது சட்டப்படி, முறைப்படியானது. அதாவது ஸ்ட்ரைக்—தடை—அதனால் தடைச் சட்டத்தை எதிர்த்தும், இந்தத் தொழிலாளர் விரோத கொள்கையை எதிர்த்தும்; என்னுடைய பாயின்ட் ஆஃப் ஆர்டர் என்னவென்று சொன்னால், அதை சமர்ப்பிக்க வருவதற்குத் தயாராக இருக்கும் இந்தத் தொழிலாளர்களை (குறுக்கீடுகள்) நீங்கள் அலோ பண்ணினால்தான் நல்லது. 'லெட் அஸ் ஸ்மூத்திலி பினிஷ்'

அன்றைக்கு வரக்கூடிய அந்தத் தொழிலாளர்களை, வராமல் இருக்கக் கூடிய முறையில் பஸ்கள் கான்டிரேக்ட் கேரேஜஸ்களுக்கு ஆர்.டி.ஓ பர்மிட் கொடுக்க முடியாது என்று அவர்கள் மறுத்திருக்கிறார்கள். நாளை காலையிலே கன்னியாகுமரியில் இருந்து பஸ்கள் வரவேண்டும் — கவர்ன்மென்டு ஆர்.டி.ஓக்கு இந்த மாதிரி 28-3-83-அன்று 60 கிலோமீட்டருக்கு அப்பாற்பட்டு கொடுக்காதீர்கள் என்று சொல்லியிருக்கிறதாகத் தெரிகிறது. இதுDown right butchery of Democracy உண்மையிலேயே contempt of the House also ஆகவே நான் சொல்லவிரும்புவது என்னவென்றால்-கவர்ன்மென்டு ஸ்பெசிபிகாக ஒரு அஷ்யூரன்ஸ் கொடுக்கவேண்டும். அவர்கள் நாங்கள் அனுப்பவில்லை என்று சொன்னால் மட்டும் போதாது. அந்த பஸ்கள் முறைப்படி அனுமதிக்கப்படும் என்று ஸ்பெசிபிக் அஷ்யூரன்ஸ் கொடுத்தால் தான் பிரச்சினைக்கு தீர்வு காண முடியும். அதற்கு நீங்கள் உதவி செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அந்த மாதிரி பெட்டிஷன் இங்கே வந்துதான் கொடுக்கவேண்டுமென்ற அவசியமில்லை. யாரிடமாவது கொடுத்துக் கூட அனுப்பலாம் (கூச்சல்—குழப்பம்) நீங்கள் சொன்னதை நான் கேட்டேன். இப்பொழுது நான் சொல்வதை நீங்கள் கேளுங்கள். இவ்வளவு நேரம் நீங்கள் சொல்லும்பொழுது உங்கள் பேச்சைக் கேட்டேன். இடையிலே எழுந்தால்கூட குறுக்கீடு செய்யாமல் ஸ்மூத்தாக முடிப்போம் என்று சொன்னீர்கள். ஆகவே ஸ்மூத்தாகப் போவோம். சட்ட



சபை நடத்துகிறபொழுது பிரச்சினை வரக்கூடாது என்று லா அண்டு ஆர்டர் போட்டு, ஒரு 15 நாட்களுக்கு முன்னால் 144 போடுவார்கள். இப்படி ஊர்வலமாக வந்துதான் கொடுக்கவேண்டுமென்று கிடையாது. இதை பிரிவிலெஜ் கமிட்டியிலே ஏற்கனவே முடிவு எடுத்திருக்கிறோம்; எப்படியென்றால் பெட்டிஷனைக் கொடுப்பது என்றால், அதற்கு ஒரு வரைமுறை வைக்கவேண்டும். இது மாதிரி முன்மாதிரி இது வரை இல்லை. (கூச்சல்—குழப்பம்) (குறுக்கீடு)

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் உமாநாத் அவர்கள், பல பகுதிகளிலிருந்து கான்ட்ராக்ட் பஸ்கள் எடுத்துக் கொண்டு சென்னைக்கு வருகிறவர்களை தடுத்திருக்கிறார்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். அது செய்தியாக இப்போதுதான் எங்களுக்குத் தெரிகின்றது. ஆக அவர்களே சொன்னபடி, முறைப்படி அவர்களை அனுமதிக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். அந்த முறைப்படி பார்த்து, அந்த முறைப்படி இருக்குமேயானால், முறைப்படி அனுமதிப்பதிலே இந்த அரசுக்கு ஆட்சேபனை எதுவும் கிடையாது. என்ன நிலைமை என்று எனக்கு இப்போது தெரியாது. ஆகவே விசாரித்து, ஆராய்ந்து அவர்கள் சொன்னபடி முறைப்படி அனுமதிப்பது தான் முறை என்று சொன்னால், அந்த முறைப்படி அனுமதிப்பதற்கு அரசு தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ளும் என்பதை நான் சொல்கிறேன். நீங்கள் சொன்ன கருத்திலே ஆராயப்படும். ஆராய்ந்து முறைப்படி அனுமதிக்கப்படும் என்று நான் சொல்லிக் கொள்கிறேன்.

**திரு. ரா. உமாநாத்:** முறைப்படி கொடுத்திருந்தால் என்று சொல்லுகிறார்கள். நான் என்ன சொல்கிறேன் என்றால் தயவு செய்து ......(குறுக்கீடு).

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அப்படிக் கொடுத்து இருந்தால் அது வந்து விடப்போகிறது. (குறுக்கீடுகள்) எல்லோரும் உட்காருங்கள்

**திரு. ரா. உமாநாத்:** முறைப்படி கொடுக்கவில்லை என்றால் நான் விசாரிக்கிறேன் என்று சொல்கிறார்கள். ஆர்.டி.ஓ. கொடுத்தாகி விட்டது சில நாட்களுக்கு முன்னால். கொடுத்த பெர்மிட்டையே, We have cancelled it what does it mean? ஆகவே நான் சொல்வது......(குறுக்கீடு)

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு உறுப்பினர் உமாநாத் அவர்கள் இந்தச் செய்தியைச் சொல்லியிருக்கிறார்கள். ஏற்கெனவே இந்த பெர்மிட் கொடுத்தார்கள். ஆனால் அந்த பெர்மிட் முறைப்படி கொடுக்கப்பட்டது. அதை இப்போது தடுத்து நிறுத்தி இருக்கிறார்கள். (குறுக்கீடு) ரத்து பண்ணியிருக்கிறார்கள் என்ற செய்தியை சொல்லியிருக்கிறார்கள்.

அதை கவனித்து முறைப்படி நடப்பதற்கு ஏற்பாட்டை இந்த அரசு செய்யும் என்பதை நான் சொல்லிக்கொள்ள விரும்பு கிறேன். (குறுக்கீடு). பிறகு முறையில்லாமல் நாம் என்ன செய்ய முடியும்? எதுவாக இருந்தாலும் முறைப்படிதான் செய்ய முடியும். (குறுக்கீடு)— நீங்கள் ரத்து செய்தது முறையல்ல என்று சொல்லுகிறீர்கள்.

திரு. என். சங்கரய்யா: இந்த வரிசையிலே இருக்கக்கூடிய 11 கட்சிகளைச் சேர்ந்த தொழிற்சங்கங்கள் நடத்துகிற பேரணி என்பது அரசாங்கத்திற்குத் தெரியும். ஸ்பீக்கர் அவர்கள் இடத்திலே அந்தத் தொழிற்சங்கத்தலைவர்கள் வந்து பெட்டிசன் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யவேண்டும் என்று கேட்டிருக் கிறார்கள். பிரச்னை என்னவென்றால் இது லாரியோ, மற்றவை களிலோ வருவதற்கு அரசாங்கத்திலே தடையிருக்கிறது பஸ்களிலே வருவதற்கும் தடை விதித்தால் தொழிலாளர்கள் ஒரு பேரணியை நடத்துவதை அரசாங்கம் விரும்பவில்லை என்றுதான் அர்த்தம். அதனால்தான் அவை முன்னவர் அவர் களிடத்திலே கேட்கிறோம். அப்படிப்பட்ட ஒரு கொள்கை உங்களுக்கு இருக்கிறதா? அப்படி இல்லை என்றால் நீங்கள் அவ்வாறு இல்லை என்று சொல்லவேண்டும். இது நிறுத்தப்பட மாட்டாது. அவர்கள் பஸ்ஸிலே வருவதற்கும் அனுமதி கொடுக்கப்படும் என்று, அந்த வாக்குறுதியை நீங்கள் அளிக்க வேண்டும். (குறுக்கீடு)

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேரணி நடப்பதை, முறைப்படி நடப்பதை அமைதியாக நடப்பதை இந்த அரசு எதிர்க்கவில்லை. கான்ட்ராக்ட் பஸ் எடுப்பதற்கு சிலபல முறைகள் இருக்கின்றன. அந்த முறைகளின்படி எடுத்துக்கொண்டு வருவதிலே ஆட்சேபணை இல்லை. அப்படிக் கொடுத்திருந்து இப்போது தடுக்கப்பட்டு இருக்குமானால் அதை ரத்து செய்து கொண்டு வருவதற்கான முயற்சியை இந்த அரசு செய்யும். முறைப்படி என்று நான் சொல்லுகிறேன். முறையில்லாமல் எதுவும் நாம் செய்யமுடியாது. ஆகவே முறைப்படி செய்யும் என்று நான் சொல்கிறேன். (குறுக்கீடுகள்) இப்போது கொடுத்திருக்கிற செய்தியை வைத்து நாங்கள் விசாரிக்கவேண்டும் என்பதற்காகத்தான் இவ்வளவும் சொல்கிறேன். ரத்து செய்யப்பட்டது என்று சொல்கிறார்கள். ரத்து செய்யப்பட்டதா என்று கேட்க வேண்டும். (குறுக்கீடுகள்) முறைப்படி கான்டிராக்ட் பஸ்ஸிலே தொழிலாளர்கள் வருவதிலே ஒன்றும் ஆட்சேபணை கிடையாது. இதற்கு அனுமதி அளிப்பதற்கான முயற்சிகளை இந்த அரசு மேற்கொள்ளும் என்பதை நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன். ஆகவேதான் விசாரித்து அறிந்து அதற்கான நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று நான் திரும்பத்திரும்ப சொல்கிறேன்.



* திரு. க. அன்பழகன்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அரசாங்கத்தின் சார்பிலே முறைப்படி விசாரிக்து நடவடிக்கை எடுப்பது என்பதிலே எந்த மாறுபாடும் கிடையாது. ஆனால் முறைப்படி எடுக்கிற நடவடிக்கை காரணமாக நடைபெற இருக் கிற பேரணிக்கு வந்து சேரவேண்டிய ஊர்திகள், வராமல் இடை யிடையே தடுக்கப்பட்டு காலதாமதம் ஆகிவிட்டால், பேரணி நடத்துகிறவர்களுடைய முயற்சி இதனாலே ஊனப்படும். எனவே தவறாக எந்த அடிப்படையிலே ரத்து செய்யப்பட்டிருந்தாலும், அப்படி ரத்து செய்யப்பட்ட இடத்திலே எல்லாம் அந்த பஸ்களை அனுமதிக்கவேண்டும் என்று அரசு உத்தரவிடுமா (குறுக்கீடு) தவறாக ரத்து செய்யப்பட்டு இருக்குமானால், அது எப்படி என்றால் தடுக்கப்படும் என்று பொருள். எனவே தவறாக ரத்து செய்யப்பட்டிருந்தால், அனுமதி கொடுக்கப்பட, ஊர்திகளுக்கு இந்த அனுமதியை அரசு உடனடியாக வழங்கும்படியாக உத்தர விடும் என்று சொல்லிவிட்டால் இந்தப் பிரச்னை இதோடு தீர்ந்துவிடும்.

(முற்பகல் 10—20)

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தத் தந்தியில் All bus permits to Madras rejected என்று இருக்கிறது. ஆகவே தான் நான் முதலில் சொன்னேன். அனுமதி தரப்பட்டு, மாண்புமிகு எதிர்கட்சித் துணைத் தலைவர் சொன்ன மாதிரி, தவறாக ரத்து செய்யப்பட்டு இருக்குமானால் அது நீக்கப்பட்டு அனுமதிக்கப்படும் என்பதை நான் கூறிக்கொள்கிறேன்.

திரு. என். சங்கரய்யா: மாண்புமிகு முன்னவர் அவர்கள் நான் சொல்வதில் உண்மை இருக்கிறதா என்பதை விசாரித்து அவர் கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளோடு தொடர்பு கொண்டு ஒரு மணி நேரம் கழித்து இந்தச் சபையில் தகவல் தந்தால் நாங்கள் மிகவும் திருப்தி அடைவோம் என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: துணைத் தலைவர் அவர்களே, அப்படி தடுக்கப்பட்டு இருக்குமானால், அது, நீக்கப் பட்டு அனுமதி அளிக்கப்படும் என்று சொல்கிற என்னையும் நீங்கள் நம்பவேண்டும். முன்னவர் அவர்களையும் நீங்கள் நம்ப வேண்டும். அரசையும் நம்பவேண்டும். அதற்காக கால கெடு வைத்து, ஒரு மணி நேரத்தில் சொல்லவேண்டும், இரண்டு மணி நேரத்தில் சொல்லவேண்டும் என்பது முறையாகாது. உடனே கவனித்து ஆவன செய்யப்படும் என்பதை மட்டும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

(ஆ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிக்கைகள்

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே. என்னுடைய பாயின்ட் ஆப் ஆர்டர் என்னவென்றால் எதிர்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் நானும், மாண்புமிகு உறுப்பினர் திரு.பிரபாகரன் அவர்களும் எழுப்பிய பிரச்னை பற்றி குறிப்பிடுகிறபோது, இந்த அவையில் உள்ள உறுப்பினர்கள் வேறு ஓர் அவையில் உள்ள உறுப்பினர்கள் மீது உரிமை மீறல் பிரச்னை எழுப்ப முடியாது என்று சொல்லியதற்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் எந்தவிதமான பதிலும் சொல்லவில்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அந்தப் பிரச்னையைப் பற்றிக் குறிப்பிட்டதை நேற்றைக்கே மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் அவைக்குறிப்பிலிருந்து நீக்கிவிட்டார். ஆகவே நேற்று நடந்த விவகாரம் நேற்றோடு முடிந்து விட்டது.

திரு ஜே. சி. டி. பிரபாகரன்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வழக்கு தொடுத்து இருக்கிறார். இது பேரவையின் உரிமையை பாதிக்கும் செயல் என்று நான் உரிமைப்பிரச்னை கொடுத்து இருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர்கள் கொடுத்த சில உரிமைப் பிரச்னைகள் பேரவைத் தலைவரின் ஆய்வில் இருக்கின்றன. ஏற்கெனவே அவைக்குறிப்பில் இருந்து நீக்கப்பட்ட விவரங்களைப் பற்றி மீண்டும் அவையில் எழுப்பவேண்டாம்.

திரு அ. ரகுமான்கான்: மன்றத்தின் துணைத் தலைவர் அவர்களே, நான் ஒரு உரிமைப் பிரச்னை கொடுத்து இருக்கிறேன். அதை எடுத்துக் கொள்ளவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர்கள் கொடுத்த எல்லா உரிமைப் பிரச்னைகளும் ஆய்வில் இருக்கின்றன. ஆகவே, அது சம்பந்தமாக அறிவிப்பு கொடுத்த உறுப்பினர்கள் பாயின்ட் ஆப் ஆர்டர் என்ற முறையில் இங்கே எழுப்பத் தேவையில்லை (குறுக்கீடு)

திரு வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் தவறான முன்னுதாரணம் ஆகிவிடும் என்று சொன்னார்கள். அதற்கு பேரவைத் தலைவர் அவர்கள் எந்தவிதமான தீர்ப்பும் சொல்லவில்லை. (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அது பற்றிய குறிப்பு நேற்றுஅவைக் குறிப்பில் இருந்து நீக்கியாகிவிட்டது.



மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே. அவையில் இருக்கின்ற உறுப்பினர்கள் உரிமைப் பிரச்னை அறிவிப்பு கொடுத்திருந்தால் அது முறைப்படி அவைத் தலைவர் அவர்களால் ஆராய்ந்து. அவர்களால் அனுமதிக்கப்பட்ட பின்னாலேதான் அவையில் எழுப்ப முடியும். மாண்புமிகு அவைத்தலைவர் முடிவிக்குப் பிறகுதான் அதை இங்கே எழுப்ப முடியும் என்று நேற்று அவர்கள் குறிப்பிட்டு இருக்கிறார்கள். அதைப்பற்றிய விவரங்கள் அறிய வேண்டுமானால் அவைத்தலைவரின் அறையிலேதான் கேட்க வேண்டும். அது தான் முறை.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: துணைத் தலைவர் அவர்களே, இது தவறான முன்னுதாரணம் என்று சொன்னார்கள். இதே மன்றத்திலே நாடாளு மன்ற உறுப்பினர் சிவட்பா அவர்கள் பாராளுமன்றத்தில் பேசியதற்காக உரிமை பிரச்னை கொண்டு வரப்பட்டுள்ளது. மேலவையில் மாண்புமிகு வெங்கட்ராமன் அவர்கள் பேசியதற்கு உரிமைப்பிரச்னை எழுப்பப்பட்டு இருக்கிறது. ராஜ்யசபையிலே மாரிசாமி பேசியதற்கு அவர் மீது கிளப்பப்பட்டு இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: கிளப்ப முடியாது என்று ரூலிங் இல்லை. இது எக்ஸ்பஞ்ச் ஆகி இருக்கிறது.

திரு. என். எஸ் வி. சித்தன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சட்டமன்றப் பேரவை உறுப்பினர் என்ற முறையில் என்னுடைய கடமையை ஆற்ற முடியாதது பற்றி ஒரு ஒழுங்குப் பிரச்னையை எழுப்ப விரும்புகிறேன். ஆளுங்கட்சியைச் சேர்ந்த திரு. இராமலிங்கம் அவர்கள் மாவட்ட ஆட்சித்தலைவர் சட்டமன்றம் நடைபெற்றுக்கொண்டிருக்கும்போது வறட்சி நிவாரணக் குழுக் கூட்டத்தை கூட்டியதால் அதில் கலந்து கொள்ள முடியவில்லை என்று சொன்னபோது, மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் விடுமுறை நாட்களில் அல்லது ஞாயிற்றுக் கிழமைகளில் அந்தக் கூட்டத்தைக் கூட்டலாம் என்று சொன்னார்கள். அவர்கள் அந்த ஒழுங்குப் பிரச்சனைக்கு பின்னாலே சொன்னார்கள். மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் கூட இந்த வறட்சி நிவாரணக் குழுக் கூட்டத்தை கூட்டியிருக்கிறார், நீங்கள் போகவில்லையா என்று கேட்டார். எனக்கு இந்த நிமிடம் வரையில் மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து அழைப்பு எதுவும் வரவில்லை. அழைப்பு வராத காரணத்தாலே நான் கலந்து கொள்ள முடியவில்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இது எப்படி பாயின்ட் ஆப் ஆர்டரில் வரும்? இங்கே ப்ரொசீடிங்ஸ் பாதுவாக நடைபெறுகிறது. தனிப்பட்டவருக்கு கடிதம் வரவில்லை என்றால் இந்த அவை அந்தப் பிரச்சனையை கவனிக்க முடியாது.

[1983 மார்ச் 26

திரு. ரா. உமாநாத் : அவருடைய கடமையிலிருந்து தடுக்கப்பட்டிருக்கிறார் என்பதை உங்கள் கவனத்திற்குக் கொண்டுவருகிறார்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மாவட்ட ஆட்சித் தலைவர் அனுப்பிய கடிதம் வரவில்லை என்று சொல்கிறார்கள். அதை இங்கே கேட்டு நாம் என்ன செய்வது? எந்த அதிகாரிகளையும் சட்டமன்றத்தில் நாம் நேரடியாக் கேட்க முடியாது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அது தபால் ஆபீஸ் விவகாரம்.

திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, என்னுடைய மயிலாடுதுறை தொகுதி பற்றி கொடுத்துள்ள ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானம் பற்றி இரண்டு நாட்களுக்கு முன்னால் நான் கேட்டபோது மறுநாள் எடுத்துக் கொள்ளப்படும் என்று சொன்னார்கள். அதற்கு பிறகு......

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. கிட்டப்பா அவர்களுடைய இந்த கவன ஈர்ப்புத் தீர்மானம் கட்டாயம் 28-ந்தேதி திங்கட்கிழமை எடுத்துக் கொள்ளப்படும். அதற்கான பதிலை உரிய அமைச்சர் சொல்லாவிட்டாலும் நானே சொல்வேன் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே, பேரவைத் துணைத் தலைவரவர்கள் 28-ந்தேதி திங்கட்கிழமை நிகழ்ச்சி நிரலில் இந்த கவன ஈர்ப்புத் தீர்மானத்தை சேர்த்துக்கொள்ளலாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. என். கிட்டப்பா : துணைத் தலைவரவர்களே, முந்தாம் நாள் எடுத்துக்கொள்வதாகச் சொல்லி, நேற்று எடுத்துக் கொள்வதாக இறுதியாகச் சொன்னார்கள். இப்போது திங்கட்கிழமை எடுத்துக்கொள்ளப்படும் என்று சொல்கிறார்கள். அது எந்த ஆண்டு திங்கட்கிழமை என்று தெரியவில்லை......

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இன்னும் இரண்டு நாள் கழிந்து வருகிற திங்கட்கிழமை.

திரு. என் கிட்டப்பா : என்னைப் பேசவிடாததால் நான் வெளி நடப்புச் செய்கிறேன்.

(திரு. என். கிட்டப்பா வெளிநடப்புச் செய்தார்.)

திரு. ஜே. சி. டி. பிரபாகரன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, எனக்கும் மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. பி. பாலசுப்பிரமணியன் அவர்களுக்கும் ஒரு கடிதம் அனுப்பியிருக்கிறார்கள். அதிலே With reference to the above, I am directed by the Hon'ble Speaker to request you to furnish a copy of the affidavit filed in support of the petition and copy of the writ petition.



1983 மார்ச் 26]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அதை எல்லாம் அறையில் வந்து கேட்க வேண்டும்; இங்கே கேட்கக்கூடாது.

திரு. அ. செல்வராசன் : அவர் சொன்னதெல்லாம் அவைக் குறிப்பில் வருமா?

திரு. கே. சௌந்திரராசன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் திருச்சியிலே இருக்கிற அரசு மருத்துவமனை 31-ந்தேதி முதல் மூடப்பட்டிருப்பது குறித்து ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்து 4, 5 நாள்கள் ஆகின்றன........

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அந்த கவன ஈர்ப்புத் தீர்மானத்திற்குப் பதில் வந்தவுடன் எடுத்துக் கொள்ளப்படும்.

திரு. இரா. தாமரைக்கனி : துணைத் தலைவரவர்களே, 18-3-1983 அன்று தினகரன் பத்திரிக்கையில் ஒரு செய்தி வந்திருக்கிறது. அது சம்பந்தமாக ஒரு உரிமைப் பிரச்சினை கொடுத்திருந்தேன்...........

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : உரிமைப் பிரச்சனை எது சம்பந்தமாகக் கொடுத்திருந்தாலும் அவை எல்லாம் ஆய்வில் இருக்கின்றன.

[முற்பகல் 10.30]

திரு. எஸ். சிவராமன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் தமிழகத்தில் சத்துணவு திட்டத்தின் மூலமாக குழந்தைகளுக்கு உணவு வழங்கப்படுகிறது. அதிலே பொறுப்பாளராகவும், ஆசிரியர்களாகவும் நியமிக்கப்படும் ஊழியர்கள் எஸ். எஸ். எல். சி. தேர்ச்சி பெற்றவர்களாக இருக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறோம் ........ (மணியடிக்கப்பெற்றது)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இப்படி நோட்டீஸ் கொடுக்காமல் திடீர் திடீர் என்று எழுந்து கேட்டால், இங்கே பதில் சொல்ல முடியாது.

3. கவன ஈர்ப்புகள்

தஞ்சை மாவட்டம் குடவாசல் ஆதிதிராவிடர் மாணவர் இல்லம் சீரமைக்கப்படுதல்.

* திரு. இரெ. இராசமாணிக்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தஞ்சாவூர் மாவட்டம் குடவாசலில் உள்ள அரசு மாணவர் இல்லம் பழுது பட்டுள்ளதால் அதனை சீரமைத்து வசதிகள் செய்து தரவேண்டிய அவசியம் குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு ஆதிதிராவிடர் நல அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

தஞ்சை மாவட்டம் குடவாசலில் உள்ள ஆதி திராவிடர் மாணவர் இல்லம் வாடகைக் கட்டிடத்தில் இயங்கி வருகின்றது. இக்கட்டிடத்தில் ஒருபகுதி மச்சுத்தளமாகவும் (Terraced) ஒரு பகுதி ஓடு வேய்ந்ததாகவும் உள்ளது. இக்கட்டிடம் பழுதுபட்ட நிலையில் இல்லை. இருப்பினும் இவ்விடுதிக் கட்டடித்தில் உள்ள சிறிய பழுதுகளை உடனே சரிபார்க்கும்படி இவ்வாடகைக் கட்டிடத்தின் உரிமையாளர் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளார். மேலும், இவ்விடுதியில் குடிநீர் வசதி, கழிப்பிட வசதி ஆகியவற்றில் எவ்வித குறைகளும் இல்லை. எனவே தொற்று நோய்கள் பரவக்கூடிய சூழ்நிலைக்கு இடமில்லை. இதனிடையில் இவ்விடுதியினை இப்பொழுது இருக்கும் கட்டிடத்திலிருந்து மாற்றுவதற்கு தக்கதொரு வேறு வாடகைக் கட்டிடம் தேர்ந்தெடுப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இவ்விடுதிக்காக கட்டிடம் கட்டுவதற்கு நத்தம் புறம்போக்கிலிருந்து சர்வே எண் 24/16-பி இல் நிலம் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளது. தகுந்த நிதி ஒதுக்கப்பட்டவுடன் இவ்விடுதிக்கான புதிய கட்டிட வேலை ஆரம்பிக்கப்படும்.

திரு. இரெ. இராசமாணிக்கம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, குடவாசல் நகரத்திலே இந்த ஆதிதிராவிடர் மாணவர்களுக்கான விடுதி, வாடகை கட்டிடத்திலேதான் இயங்கி வருகிறது. சுமார் 15 தினங்களுக்கு முன்னால், அந்தக் கட்டிடத்தை நான் நேரிடையாக பார்வையிட்டேன். அந்தக் கட்டிடத்தில் இருக்கிற ஓடுகள் அதிகமாக சரிந்து, அந்த மாணவர்களுக்கு பாதுகாப்பு இல்லாத நிலைமை இருக்கிறது. ஆகவே, அரசு செலவிலேயே சொந்தக்கட்டிடம் கட்டி, அந்த மாணவர்கள் இல்லத்தை நடத்த, அரசு நடவடிக்கை எடுக்க முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : தலைவர் அவர்களே, எனக்கு கொடுக்கப்பட்டிருக்கிற குறிப்புகளின் அடிப்படையிலே நான பதிலை அளித்திருக்கிறேன். ஆனால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதை நேரிலே பார்த்து, அந்தக் கட்டிடம் பழுது பட்டிருப்பதாக ஒரு புதிய தகவலைத் தந்திருக்கிறார்கள். அந்த இல்லத்தைப் பொறுத்தவரையில், தகுதியான நிலம் ஏற்கெனவே இருக்கிற காரணத்தால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுக் கொண்ட அந்தக் கோரிக்கைக்கு ஏற்ப, எல்லாவிதமான வசதிகளும் பொருந்திய கட்டிடத்தை வருகிற ஆண்டிலே கட்ட அரசு நடவடிக்கை எடுக்கும்.



திரு. இரெ. இராசமாணிக்கம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வருகிற ஆண்டில் அந்த மாணவர் இல்லத்திற்கான கட்டிடம் கட்டப் பெறும் என மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். அதற்காக நன்றி. இருந்தாலும்கூட, அங்கேயுள்ள மாணவர்களின் நலம் கருதி, உடனடியாக பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்க—அவர்கள் கிணற்றிலேயிருந்துதான் தண்ணீர் எடுத்துச் சாப்பிடுகிறார்கள். ஆகவே அவர்களுக்கு பாதுகாக்கப்பட்ட குடிதண்ணீர் வசதியையும், நவீன கழிப்பிட வசதிகளையும் உடனடியாகச் செய்துக் கொடுக்க அரசு ஆவன செய்ய முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவா அவர்களே, மாணவர்கள் இல்லம் இருக்கக் கூடிய அந்த இடத்திலே அப்படிப்பட்ட பிரச்னைகள் இருப்பதாக மாண்புமிகு உறுப்பினர் தம் கவன ஈர்ப்பிலே கொடுத்திருக் கிறார்கள். அந்த அடிப்படையிலே பார்த்தபோது, தற்போது அத்தகைய பிரச்னைகள் இல்லை என்று தான் எனக்கு தகவல்கள் கிடைத்திருக்கின்றன. இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியிருக்கக்கூடிய அந்தத் தேவைகளைப் பொறுத்த வரையில், இருக்கக் கூடிய குறைபாடுகளை உணர்ந்து, உடனடியாக தகுதியான வேறு வசதியான இடத்தை வாடகைக்கு எடுப்பதற்காக நாம் தேர்ந்தெடுக்க வேண்டும் என்று மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அறிவுரை வழங்கப்பட்டிருக்கிறது அந்த அடிப்படையில் வேறு வாடகைக் கட்டிடம், உறுப்பினர் அவர்கள் சொன்ன அத்தனை வசதிகளும் சேர்ந்திருப்பதாக இருக்கக்கூடிய வகையில் தேர்ந்தெடுக்க அரசு நடவடிக்கை எடுத்திருக்கிறது.

4. இறுதித் துணை நிதி அறிக்கை, 1982--83—அளித்தல்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1982—83 ஆம் ஆண்டுக்குரிய இறுதித் துணை மதிப்பீடுகளை இம் மாமன்றத்தில் வைக்க முன்வந்துள்ளேன். இவற்றில் சேர்க்கப்பட்டுள்ள மொத்தம் ரூ. 540.46 கோடியில், ரூ. 207.17 கோடி வருவாய் கணக்கிலும், ரூ 333.29 கோடி மூலதன, கடன் கணக்குகளிலும் வருகின்றன. பல்வேறு கோரிக்கைகளில் சேர்க்கப்பட்டுள்ள தொகை பற்றிய விவரங்களும் கூடுதல் நிதி ஒதுக்கத்திற்கான காரணங்களும் இத்துடன் இணைந்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளன. முதல் துணை மானியக்கோரிக்கை வைக்கப்பட்ட பின்னர் அனுமதிக்கப்பட்ட செலவினங்களும் இப்போதுள்ள நிதி ஒதுக்கத்துக்கு மேற்பட்டுக் கூடுதலாக நிதி ஒதுக்கம் தேவைப்படுகிற செலவினங்களும் இந்த மதிப்பீடுகளில் உள்ளன. இந்த மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ள பல்வேறு இனங்களில் முக்கியமான சிலவற்றைக் கோடிட்டுக் காட்ட விழைகிறேன்.

அநுகூலமற்ற பருவ நிலைகள் காரணமாக, மக்களுக்கு ஏற்பட்ட துன்பத்தைப் போக்குவதற்கு அவசியமான நடவடிக்கை அனைத்தையும் இம்மாநில அரசு எடுத்து வருவதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவர். வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் குடிநீர் வழங்கலைப் பெருக்குவதன் அவசியத்தை உணர்ந்து, ஊராட்சி ஒன்றியங்களின் வறட்சிப் பாதிப்புப் பகுதிகளில் குடி தண்ணீர் வழங்குவதற்காக இவ்வரசு இதுவரையில் ரூ. 12.78 கோடி அனுமதித்துள்ளது. இப்போது வைக்கப் பட்டுள்ள துணை மதிப்பீடுகளில் இத்தொகை சேர்க்கப் பட்டுள்ளது. மேலும் வறட்சி பாதிப்பு பகுதிகளில் குடிதண்ணீர் வழங்குவதற்காக நகராட்சிகளுக்கு ஒரு பகுதி மானியமாகவும் ஒரு பகுதி கடனாகவும் ரூ. 277 இலட்சம் அனுமதிக்கப் பட்டுள்ளது. இத் தொகை இறுதித்துணை மதிப்பீட்டில் சேர்க்கப்பட்டுள்ளது. தஞ்சாவூர் மாவட்டத்தில் 1,000 வடிமுனைக் குழாய்க் கிணறுகளை அமைக்க அரசு, ரூ. 50 இலட்சம் அனுமதித்திருப்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவர். இறுதித் துணை மதிப்பீடுகளில் இத் தொகை சேர்க்கப்பட்டுள்ளது.

அடுத்த இரண்டு ஆண்டுகளில் இம்மாநிலத்தின் கிராமப் பகுதிகள் அனைத்திலும் பாதுகாக்கப்பட்ட குடி தண்ணீர் வழங்குவது என்ற இவ்வரசின் கொள்கை முடிவிற்கிணங்க வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் கிராமக் குடிதண்ணீர் வழங்கலுக்காக ஒதுக்கப்பட்டிருந்த ரூ 32 கோடி இவ்வாண்டில் ரூ. 44 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது. வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளுக்கு மேற்பட்டுள்ள தொகைக்கு இறுதித் துணை மதிப்பீடுகளில் வகை செய்யப்பட்டுள்ளது.

இம் மாநிலத்தின் வறட்சிப் பாதிப்புப் பகுதிகளில் சாலை செப்பனிடும் பணிகள் மேற்கொள்வதற்காக ரூ. 2.00 கோடியும் அப்பகுதிகளில் ஏரிகளைச் செப்பனிடவும் ஆழப் படுத்தவும் ரூ. 6 கோடியும் இவ்வரசு அனுமதித்துள்ளது. வறட்சிப் பகுதிகளில் வாழும் மக்களுக்கு இதனால் வேலை வாய்ப்புகள் ஏற்படுத்தப்படும். இறுதித் துணை மதிப்பீடுகளில் இத் தொகைகள் சேர்க்கப்பட்டுள்ளன.

முதலமைச்சரின் சத்துணவுத் திட்டம் முதியோர் உதவித் தொகை பெறுபவர்களுக்கு 15-1-1983 முதல் நீட்டிக்கப்பட்டுள்ளதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவர். இதற்கென, நடப்பாண்டில் ரூ. 90 இலட்சம் நிதிப் பொறுப்பு ஏற்படுமென எதிர்பார்த்து அத்தொகை இப்போது வைக்கப் பட்டுள்ள துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ளது. முதலமைச்சரின் சத்துணவுத் திட்டத்தின்கீழ் இயங்கி வருகிற உணவளிக்கும் நிலையங்களில் குடிதண்ணீர் வழங்குவதற்காக அனுமதிக்கப்பட்ட ரூ. 140 இலட்சமும் இறுதித் துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ளது.



கைத்தறி நெசவாளர் தொடக்கக் கூட்டுறவுச் சங்கங்களும் கோ-ஆப்டெக்ஸ் நிறுவனமும் விற்பனை செய்த கைத்தறித் துணிகளை முன்னிட்ட கழிவுத் தொகை வகையில் இவ்வரசு ரூ. 13.21 கோடி அனுமதித்துள்ளது. இத் தொகையில் வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் ஒதுக்கியுள்ளதைவிட கூடுதலான ரூ. 10.71 கோடி, இறுதித்துணை மதிப்பீடுகளில் சேர்க்கப் பட்டுள்ளது.

இவ்வாண்டில் தொடங்கப்பட்ட பாரதியார், பாரதிதாசன் பல்கலைக் கழகங்களுக்குக் கணிசமான அளவில் நிதி ஒதுக்கப் பட்டுள்ளது. இந்தப் பல்கலைக் கழகங்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ள ரூ. 2 கோடி மானியம் இறுதித் துணை மதிப்பீடுகளில் சேர்க்கப் பட்டுள்ளது.

கிராமப்பகுதிகளில் தன்னிறைவுத் திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்பட்ட பள்ளிக் கட்டிடங்களைக் கட்டி முடிப்பதற்காக இவ்வரசு மேற்கொண்டும் ரூ. 3 கோடி அனுமதித்துள்ளது. இறுதித் துணை மதிப்பீடுகளில் இத் தொகை சேர்க்கப்பட்டுள்ளது.

அவை முன் வைக்கப்பட்டுள்ள 1982-83 ஆம் ஆண்டுக்கான இறுதித் துணை மானியக் கோரிக்கையில் உள்ள சில முக்கியச் செலவினங்களை மட்டுமே எடுத்துக் கூறியுள்ளேன். இந்தக் கோரிக்கைகளில் அரசு கேட்டுள்ள தொகைகளை வழங்கி, திட்டங்கள் நிறைவேறுவதற்கும் இசைவளிக்குமாறு அவையை வேண்டி அமருகிறேன். வணக்கம்.

## 5. அறிவிப்புகள்

### (அ) வெட்டுத் தீர்மானங்கள் கொடுப்பது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 1982-83 ஆம் ஆண்டிற்கான செலவு குறித்த இறுதி துணை நிதிநிலை அறிக்கையில் கண்டுள்ள மானியக் கோரிக்கைகளின் மீது வெட்டுத் தீர்மானங்கள் கொடுக்க விரும்பும் உறுப்பினர்கள், அவைகளை பேரவையின் 205-வது விதிக்கிணங்க 28-3-1983 திங்கட்கிழமை காலை 11-00 மணிக்குள் செயலாளரிடம் சேர்ப்பிக்க வேண்டும்.

## 6. வரவு-செலவுத் திட்டம் 1983-84—வாக்கெடுப்பு (தொடர்ச்சி.)

### (அ) கோரிக்கை எண். 33—வீட்டுவசதி

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''மானியக் கோரிக்கை எண். 33-வீட்டுவசதி என்ற தலைப்பின் கீழ் ரூ. 16,31,47,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்.''

(முற்பகல் 10.40)

திரு. இரெ. இராசமாணிக்கம்: தலைவரவர்களே, கூட்டுறவு வீடு கட்டும் சங்கம் மூலமாக வழங்கப்படும் கடன் தொகையை விலைவாசி உயர்வைக் கருத்தில் கொண்டு ரூ. 10,000 மாக கடன் தொகை உயர்த்திக் கொடுக்க வேண்டியதன் இன்றியமையாமை குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மானியக் கோரிக்கை எண். 33-வீட்டு வசதி என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 16,34,47,000 இல் ரூ. 100 குறைக்க வேண்டும்"

திரு. இரா. அருணகிரி: தலைவரவர்களே, திருப்பத்தூரில் கடைநிலை ஊழியர்களுக்கு வீட்டுவசதி செய்து கொடுக்கும் திட்டம் குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மானியக் கோரிக்கை எண். 33—வீட்டுவசதி என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 16,34,47,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

திரு. கே. ஆர். சுந்தரம்: தலைவரவர்களே, தமிழ்நாட்டில் குறைந்த வருவாய் உள்ள பீடித் தொழிலாளர்களுக்கு வீட்டு வசதி வாரியம் மூலம் வீடுகள் கட்டிக் கொடுப்பது சம்பந்தமாக விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மானியக் கோரிக்கை எண். 33—வீட்டு வசதி என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 16,34,47,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்"

திரு. பொ. உத்திராபதி: தலைவரவர்களே, திருத்துறைப்பூண்டி நகரத்தில் பணியாற்றும் அரசு ஊழியர்களுக்கு வீடு கட்டிக் கொடுப்பது பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மானியக் கோரிக்கை எண். 33—வீட்டு வசதி என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 16 34,47,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

திரு. எஸ். என். இராமசாமி: தலைவரவர்களே, சாத்தான் குளம் தொகுதி சித்தன்குடி இருப்பு கிராமத்தில் 30 வீடுகள் தீப்பிடித்துக் கொண்டதால் அந்த கிராம மக்கள் 30 பேர்களுக்கு அரசே வீடுகட்டிக்கொடுப்பது சம்பந்தமாக விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மானியக் கோரிக்கை எண். 33—வீட்டு வசதி என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 16,34,47 000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்."



(ஆ) கோரிக்கை எண். 34—நகர்ப் பகுதி வளர்ச்சி

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: துணைத் தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"மானியக் கோரிக்கை எண் 34—நகர்ப்பகுதி வளர்ச்சி என்ற தலைப்பின் கீழ் ரூ. 27,47,99,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்."

திரு. பாபு ஜனார்த்தனன்: தலைவரவர்களே, நகர்ப்பகுதி வளர்ச்சிக்குப் போதுமான வசதி செய்வது குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மானியக் கோரிக்கை எண். 34—நகர்ப்பகுதி வளர்ச்சி என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 27,47,99,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

THIRU N. S. V. CHITHAN: Sir to discuss about the difficultie felt by the citizens in paying the water tax at the nationalised Bank after filling bank challans and the need to accept the payment at the office of the Madras Metropolitan Water Board or Co-operative Banks I move—

"That the allotment of Rs. 27, 47, 99, 000 under Demand No. 34 Urban Development be reduced by Rs. 100."

திரு. எம். செல்லமுத்து: தலைவரவர்களே, குடிநீர் வடிகால் வாரியத்திற்கு ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியம், நகராட்சி ஆகிய நிர்வாகத்துடன் இணைந்து செயல்பட ஒரு அலுவலரை நியமிக்கவும் தேவையான கருவிகளும் போக்குவரத்து வாகனங்களும், ஊழியர்களும் நியமிக்க பணம் ஒதுக்குவது குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மானியக் கோரிக்கை எண். 34—நகர்ப்பகுதி வளர்ச்சி என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 27,47,99,000 இல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

திரு. தி. கா. நல்லப்பன்: தலைவரவர்களே, பெருந்துறை நகரின் பல்வேறு பகுதிகளில் தேங்கி நிற்கும் கழிவு நீரை அப்புறப்படுத்துவது பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மானியக் கோரிக்கை எண். 34—நகர்ப்பகுதி வளர்ச்சி என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 27,47,99,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மானியக் கோரிக்கைகளும் வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப்பெறுகின்றன. மாண்புமிகு அமைச்சரவர்கள் முன்னுரையாக ஏதாவது கூறவிரும்பினால் கூறலாம்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மானியக் கோரிக்கைகள் எண். 33, 34 பற்றிய கொள்கை குறிப்புகள் * * அச்சிட்டு மாண்புமிகு உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டிருக்கின்றன அதை நான் படித்ததாக ஏற்று சபைக் குறிப்பேட்டில் ஏற்றிக்கொண்டு மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துக்களை வழங்குமாறு கேட்டுக் கொள்கிறேன். இறுதியாக என்னுடைய கருத்துக்களை வழங்குகிறேன் என்று கூறிக்கொள்கிறேன்.

**திரு. சு. பாலன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொண்டுவந்துள்ள வீட்டுவசதி, நகர்ப்பகுதி வளர்ச்சி ஆகியவற்றின் மானியக் கோரிக்கைகள் மீது பேசுவதற்கு வாய்ப்பு பெற்றமைக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர்-தலைமை)

இன்றையதினம் சென்னையைப் பொறுத்தவரையில் என்னுடைய தொகுதி பெரம்பூர் தொகுதிதான் வீட்டுவசதியை அடிப்படையாக கொண்டும், குடிசைப்பகுதிகளை அதிகமாகக் கொண்டும் ஒரு பெரும் பகுதியாக இருந்து கொண்டிருக்கிறது. இந் வீட்டு வசதிய னது காங்கிரஸ் ஆட்சி காலத்தில் அன்றைய தினம் ஏழை எளியவர்களுக்கும், பாட்டாளி மக்களுக்கும் குறைந்த வருவாய் உள்ளவர்களுக்கும் தொழிலாளர்களுக்கும் வீடுகளை கட்டிக்கொடுக்க வேண்டும் என்று ஒரு நல்ல எண்ணத்தோடு அன்றையதினம் கொண்டு வரப்பட்டது. அதே போல் அன்றையதினம் குடிசை பகுதிகளையும் வீட்டுவசதி அடிப்படையில் உருவாக்கப்பட்டது, அதன் பிறகு 1971-ம் ஆண்டு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி பொறுப்பில் இருந்த நேரத்தில் முதலமைச்சராக இருந்த டாக்டர் கலைஞர் அவர்கள் சென்னையில் ஏராளமான மக்கள் குடிசைப் பகுதியில் வாழ்கிறார்கள், அவர்கள் வாழ்கிற குடிசைப் பகுதிகள், எல்லாம் மழைக் காலத்திலே வெள்ளத்தாலும் வெயில் காலத்திலே தீப்பற்றி எரிகிற நிலையாலும் பாதிக்கப்படுகிற அந்த அவல நிலையைப் போக்க வேண்டுமென்பதற்காக அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே அன்றையதினம் சட்ட மன்ற உறுப்பினராக இருந்த மதிப்பிற்குரிய திரு அரங்கண்ணல் அவர்களுடைய தலைமையிலே குடிசை மாற்று வாரியத்தை அமைத்து அவர்களிடம் அந்தப் பொறுப்பைக் கொடுத்து ஏறக்குறைய

* * 129—141ம் பக்கங்களில் இணைப்பாக அச்சிடப் பெற்றுள்ளது.



20 கோடி ரூபாய் ஒதுக்கி அதன் மூலமாக குடிசைப் பகுதிகளிலே மாடி வீடுகளைக் கட்டுவதற்கு ஏற்பாடு செய்து ஏறக்குறைய 30 ஆயிரம் வீடுகளைக் கட்டினார்கள். அதன் பிறகு ஆட்சிப் பொறுப்பு மாறிய பிறகு இன்றையதினம் ஆளுங்கட்சியில் உள்ளவர்களுக்கு அவர்களுடைய உறுப்பினர்களுக்கு இந்த இலாகா அவர்களுடைய நல்ல எண்ணத்தைப் பெறுவதற்காக இன்றையதினம் வீட்டுவசதி வாரியத் தலைவரானாலும்சரி, குடிசை மாற்று வாரியத் தலைவரானாலும்சரி, அடிக்கடி சென்னை மாநகராட்சியின் மேயரை மாற்றுவதைப்போல் ஆண்டுக்கொரு முறை அந்தத் தலைவர்களை மாற்றி இன்றைக்கு அதன் காரணத்தினால் நடக்க வேண்டிய வேலைகள் நடக்காமல் தேங்கிக் கிடக்கிற நிலையைப் பார்க்கிறபோது எங்களைப் போன்றவர்கள் மிக வேதனையடைகிற நிலைதான் இருக்கிறது.

இங்கே இருக்கின்ற குறிப்புகளையெல்லாம் நான் சொல்லாம் என்றால் நேரம் அதிகமாகுமென்பதால் என்னுடைய தொகுதியைப்பற்றிய ஒரு சில பிரச்சினைகளை மட்டும் நான் அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டுவர கடமைப் பட்டிருக்கிறேன். 22வது வட்டம் என்ற ஒரு பகுதி இருக்கிறது. காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலே அந்த வட்டத்திலே தொழிலாளர்களுக்கு வீடுகள் கட்டப்பட்டன. அந்த வீடுகள் கட்டப்பட்டு பல ஆண்டுகள் ஆகிவிட்டன. ஆனால் இன்றையதினம் அந்த வீடுகள் உடைந்து பாழாகக் கூடிய நிலையிலே இருக்கின்றன. வீட்டுவசதி வாரியத்தால் பழுதுபார்க்கப்படாமல் இருக்கிறது. அங்கே வாழ்கின்ற தொழிலாளர்கள் எல்லாம் ஏறக்குறைய 25 ஆண்டுகளுக்கு மேலாக அங்கே வசித்துக்கொண்டிருக்கிறார்கள். அந்த வீடுகளை அவர்களுக்குச் சொந்தமாக்க வேண்டுமென்று கேட்டு எத்தனையோ முறைகள் அவர்கள் அமைச்சரிடம் மனுக் கொடுத்திருக்கிறார்கள். வெளிமாநிலங்களிலே எல்லாம் இப்படி தொழிலாளர்களுக்குக் கட்டிக் கொடுக்கப்பட்ட வீடுகள் அவர்களுக்கு சொந்தமாக்கப்பட வேண்டுமென்று கோரிக்கை வைக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டு அவர்களுக்கு அந்த வீடுகள் சொந்தமாக்கப்பட்டிருக்கிறது. ஆனால் சென்னையிலே மட்டும் அந்த சர்மா நகரத்திலே வாழுகின்ற அந்தத் தொழிலாளர்களுக்கு வீடுகளை சொந்தமாக்கித்தரவேண்டுமென்று கேட்டு அதற்கு மத்திய அரசு, மாநில அரசு விரும்பினால் அவர்களுக்கு அந்த வீடுகளைக் கொடுக்கலாம் என்று தாக்கீது அனுப்பியிருக்கிறார்கள். ஆனால் நம்முடைய அமைச்சர் அவர்களுக்கு மனம் இரங்கவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஏனென்றால் தொழிலாளர் தலைவராக இருந்து இன்றையதினம் அவர் தொழிலாளர் நலத்துறை அமைச்சராக வந்து இருக்கிறார். தொழிலாளர்கள் அவர்களை வந்து சந்தித்த நேரத்திலே அவர்கள் எல்லாம் நம்முடைய தலைவர் ஆயிற்றே, நிச்சயம் துணைசெய்வார்கள் என்று வந்த நேரத்திலே வந்தவர்களை நல்லமுறையில் அவர்கள் கேட்காமல் விரட்டியடித்தார்கள் என்ற மனவேதனையோடு அவர்கள் இன்றைக்குச் சொல்லிக்

கொண்டிருக்கிறார்கள். இங்கே நம்முடைய சிவகாமி அம்மையார் காலனி இருந்துவருகிறது. நகர்ப்புற வசதியானது அந்தக் குடிசைப் பகுதிகளுக்கு செய்யப்படவில்லை. ரோடு போடுதல், குடிநீர் கொடுத்தல், தெரு விளக்கு அமைத்தல், கழிவுநீர் வடிகால் அமைத்தல் போன்றவை உருவாக்கி கொடுக்கப்பட்டிருபதாக குறிப்பிலே சொல்லியிருக்கிறார்கள். அவைகளையெல்லாம் சென்னை நகரத்திலே நாங்கள் இலவசமாகச் செய்துகொடுக்கிறோம் என்று சொன்னார்கள். திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சி பொறுப்பிலே இருக்கிற நேரத்திலே குடிசை வாழ் மக்களுக்கு வீடுகள் கட்டிக்கொடுக்கப்பட்ட நேரத்திலே 10 ரூபாய் வாடகை என்ற அடிப்படையில் அவர்களுடைய நிலைமைகளுக்கேற்ப வசதி செய்யக்கூடிய நிலை உருவாக்கப் பட்டது. அப்போது குடிசைப்பகுதிகலுக்கெல்லாம் காரியங்களை

(முற்பகல் 10.50)

நகரசபை இலவசமாக செய்தது. ஆனால் இன்றையதினம் என்னுடைய தொகுதியில் பார்க்கிறபோது 27-வது வட்டத்தில் ஏராளமான குடிசைகள் இருந்து கொண்டிருக்கின்றன. அந்தப் பகுதியில் பெரியார் நகர், புதிய காமராஜர் நகர், கருணாநிதி சாலை, இந்திரா நகர், சத்தியமூர்த்தி நகர், கக்கன்ஜி நகர், கக்கன்ஜி காலனி, ஜீவா நகர், அண்ணா நகர், கருணாநிதி நகர் என்று பல நகர்கள் இருந்து கொண்டிருக்கின்றன. அங்கே எல்லாம் நகர்ப்புற வளர்ச்சிக் கழகத்தின் சார்பாக இன்றையதினம் பல வசதிகள் செய்யப்பட்டிருக்கின்றன. கொடுக்கப்பட்ட புத்தகத்தில் அவைகள் இலவசமாக செய்யப்படுகின்றன என்ற குறிப்பை படிக்கின்றவர்கள் புரிந்து கொள்ள முடியாமல் இருக்கிறது. இன்றையதினம் அப்படி செய்யப்படுகிறதா என்றால் நிச்சயமாக இல்லை. இன்றையதினம் சென்னையில் உள்ள வீட்டுச் சொந்தக் காரர்கள் எப்படி குடித்தனக்காரர்களிடத்தில் அதிகமான குடகூலியை பெறுவதற்கு லாபநோக்கோடு நடந்துகொள்கிறார் களோ, அந்த முறையில்தான் நம்முடைய குடிசை மாற்று வாரியமாக இருந்தாலும், வீட்டுவசதி வாரியமாக இருந்தாலும் அவைகள் செயல்படுகின்றன. இன்றையதினம் நகர்ப்புற வளர்ச்சியிலே சில வேலைகளை செய்துவிட்டு அவர்களிடத்தில் மாதம் 10 ரூபாய் வசூல் செய்கிறார்கள். அதுமட்டுமல்ல அவர்கள் வசிக்கும் இடங்களுக்கு 80 சதுர அடிக்கு— 1 சதுர அடிக்கு 55 ரூபாய் என்ற கணக்கில் ரூ. 4,800 கொடுக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். அதுமட்டுமல்ல அந்த 4,800 ரூபாய்க்கு 10 ஆண்டுகளில் வசூல் செய்து கொள்வதற்கு 1,500 ரூபாய் வட்டி வசூல் செய்கிறார்கள். அவ்வளவு பெரிய தொகையை குடிசையில் இருக்கிறவர்கள் கொடுக்கவேண்டிய கட்டாயத்திற்கு ஆளாகியிருக்கிறார்கள் என்பதை பார்க்கிறபோது இந்த அரசு குடிசையில் இருப்பவர்களை வாழ வைக்க நினைக்கிறார்களா? அல்லது அவர்களை மேலும் பிற்படுத்த எண்ணுகிறார்களா என்பதை அறிய விரும்புகிறேன். ஏற்கெனவே சொல்லப்பட்ட பல காரியங்கள் செய்திருகிறார்களா என்றால் நிச்சயமாக செய்ய வில்லை. ரோடுகள் சரியாக போடப்படுவதில்லை. அங்கே மழைக் காலங்களில் தண்ணீர் தேங்கி, அதன் காரணமாக கொசுக்கள் பெருகி மக்கள் அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.



இன்றையதினம் 80 சதுர அடிக்குள்ளாக இருப்பவர்களுக்கு மட்டும் பட்டா கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்த பட்டா பெற்றவர்கள் தான் இன்றையதினம் கிணறு எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். 80 சதுர அடிக்கு மேலேயுள்ளவர்களுக்கு இதுவரையில் பட்டா கொடுக்காமல் அவர்களை இன்னும் இழுத்தடித்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களை முன்னேற்று வதற்கு இன்றையதினம் எந்த விதமான நடவடிக்கையும் இல்லை. குறிப்பாக இதுபோன்ற வீடுகளில் குடியிருக்கின்ற தொழி லாளர்கள், அரசு அலுவலர்கள், தங்களுடைய வீடுகளை கட்டுவதற்கு கடன் பெறுவதில் மிகவும் கஷ்டப் பட்டுக் கொண்டிருக்கிறார்கள். தங்களுடைய வீடுகளுக்கு மின் இணைப்பு வேண்டுமென்று கேட்டால் மின் இணைப்பு கொடுக்க மறுக்கிறார்கள். இப்படிப்பட்ட காரியங்கள் இன்றையதினம் தாமதப்படுத்தப்படுகின்றன. 80 சதுர அடிக்கு மேலேயுள்ள வீட்டுச் சொந்தக்காரர்கள் வேதனைப் பட்டுக் கொண்டிருக்கிறார்கள், என்பதை அமைச்சர் அவர்களுக்கு தெரிவித்துகொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். எனவே 80 சதுர அடிக்கு அதிகமான நிலம் உள்ளவர்களுக்கு உடனடியாக பட்டா செய்து கொடுக்க வேண்டும். ஏற்கெனவே 80 சதுர அடிக்குள்ளாக இருப்பவர்களுக்கு எப்படி விலை நிர்ணயம் செய்து அந்த நிலத்தை பட்டா செய்து கொடுக்கப்பட்டதோ அதேபோன்று இவர்களுக்கும் செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

23-வது வட்டத்தில் காங்கிரஸ் ஆட்சிக்காலத்தில் வீட்டுவசதி என்ற பெயரால் பல குடிசைப்பகுதிகள் உருவாக்கப்பட்டன. கல்யாணபுரம் ஏ,பி,சி என்று மூன்று பகுதிகள் உருவாக்கப்பட்டன. அந்த மூன்று பகுதிகளிலும் அன்றையதினம் குடிசைகள் அமைக்கப் பட்டு தனியாக கழிப்பறை வசதிகள் செய்துதரப்பட்டன. இன்றையதினம் அவை பயன்படாத நிலையில் இருக்கின்றன. அவைகளை பயன்படுத்திக் கொள்வதற்கான வசதிகளை வீட்டு வசதி வாரியமாக இருந்தாலும் சரி, குடிசைமாற்று வாரியமாக இருந்தாலும் சரி, எந்த வாரியத்தைச் சேர்ந்த அதிகாரிகளும் செய்து கொடுக்க முன்வரவில்லை. அடிப்படை வசதியை ஏன் செய்யாமல் இருக்கிறார்கள் என்பதை கேட்க விரும்புகிறேன். ஆனால் அதே நேரத்தில் பொது கழிப்பிடங்களைக் கட்டிக் கொடுத்திருக்கிறார்களா என்றால் சில இடங்களில் கட்டிக் கொடுத்திருக்கிறார்கள். அவைகள் மக்கள் உபயோகப்படுத்துகிற நிலையில் இருக்கிறதா என்றால் நிச்சயமாக இல்லை. அங்கே தண்ணீர் இல்லை; சுத்தம் செய்வதற்கான ஆட்கள் இல்லை; இரவு நேரங்களில் தாய்மார்கள் வெளியே செல்வதற்கு எவ்வளவு வேதனையோடு, அவமானமாக செல்கிறார்கள் என்பதை பார்க்கிறபோது நமக்கெல்லாம் வேதனையாக இருக்கிறது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள். இன்றையதினம் இந்தத் தொகுதியில் மட்டும் தனியாக ஒரு குடிசைமாற்று வாரிய அதிகாரியை நியமித்து, இந்தக் குறைகளைப் போக்குவதற்கான வழிவகைகளைச் செய்ய வேண்டுமென்று நான் விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

44-வது வட்டம் என்ற ஒரு அமைப்பு இருக்கிறது. அந்த வட்டத்தில் 1967 ஆம் ஆண்டு, மறைந்த பேரறிஞர் அண்ணா ஆட்சிக் காலத்தில், சென்னையிலே உள்ள குடிசைப் பகுதிகள், சமூக விரோதிகளால் கொளுத்தப்பட்டன என்பது மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நிச்சயமாகத் தெரியும். அன்றையதினம் நம்முடைய மறைந்த பேரறிஞர் அண்ணா அவர்கள் அத்தகைய மக்களுக்கு உடனடியாக வீடுகளைக் கட்டித் தரவேண்டுமென்ற நல்லெண்ணத்தோடு தீ பிடிக்காத வீடுகளை அந்த பகுதிகளிலே ஏராளமாகக் கட்டிக்கொடுத்தார்கள். அப்படிக் கட்டப்பட்ட வீடுகள்தான் இன்றையதினம் 44-வது வட்டத்திலே ஏராளமாக இருக்கின்றன. அங்கே டாக்டர் அம்பேத்கார் குடியிருப்புப் பகுதி என்றும், எம். எஸ். முத்து நகர் என்றும், திரு. வி. க. புதுக்குடியிருப்பு என்றும், சாஸ்திரி நகர் என்றும், நேரு நகர் என்றும், பெயரிடப்பட்டு, தீ பிடிக்காத வீடுகள் அங்கெல்லாம் அன்றையதினம் கட்டிக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அன்றையதினம் நிவாரணம் தர வேண்டிய நிலையில், அது அவசரமாகச் செய்யப்பட்டது. ஆனால் இன்றையதினம் அத்தகைய வீடுகள் மக்கள் உபயோகப்படுத்துவதற்குப் பயன்படுமா என்று சந்தேகிக்கக்கூடிய நிலைமைகளை, அவற்றை மாற்றி மாடி வீடுகள் கட்டப்பட வேண்டுமென்று, அதிகாரிகளும் அதற்காகத் திட்டங்கள் தீட்டி, இதுவரையிலும் செய்ய முடியாத சூழ்நிலையிருக்கிறது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்தப் பகுதியைப் பலமுறை பார்த்திருக்கிறார்கள் என்று நான் நினைக்கிறேன். நம்முடைய குடிசை மாற்று வாரியத் தலைவர் அவர்களும் பார்த்திருக்கிறார்கள். இன்னும் சரியான முறையிலே புதுப்பிக்கப்படவில்லையென்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றுகூட, நமது ஆட்சியாளர்கள், அன்றையதினம் திராவிட முன்னேற்றக் கழகம் நிறைவேற்றிய அந்த மாடி வீடுகளைத்தான் நிறைவேற்றியிருக்கிறார்கள் என்று கருதுகிறேன்.. புதிய திட்டங்களைத் தீட்டி அந்த மாடி வீடுகளைக் கட்டியதாகத் தெரியவில்லை. அண்மையிலேகூட கேசவப்புரம் பகுதியிலே புதிதாக மாடி வீடுகள் திறந்திருக்கிறார்கள். அந்தத் திட்டம் கூட திராவிட முன்னேற்றக்கழக காலத்தில் உருவாக்கபட்ட திட்டம் என்பதை இந்த நேரத்திலே சொல்லிக்கொள்வதிலே பெருமைப்படுகிறேன். ஆகவே, திராவிட முன்னேற்றக் கழகம் அன்று தீட்டிய திட்டங்களை அடிப்படையாக வைத்துதான் பல இடங்களிலே குடிசைப்பகுதிகளை மாற்றி மாடிகளைக் கட்டி இருக்கிறார்கள். இதை ஏன் சொல்கிறேன் என்றால், என்னுடைய தொகுதி அப்படிப்பட்ட நிலையிலே இருக்கிறது என்று பல சந்தப்பங்களிலே, அமைச்சர் அவர்களிடத்திலே, இந்த சட்டமன்றத்திலேயே சொல்லியிருக்கிறேன். அவர்களும் உடனடியாகப் பார்ப்பதாகச் சொன்னார்கள், செய்வதாக வாக்குறுதி கொடுத்தார்கள். ஆனால், இதுவரையில் அங்கே முன்னேற்றம் காணவில்லை.



இன்றையதினம் அங்கே அம்பேத்கார் குடியிருப்பு விஸ்தரிப்புப் பகுதி இருக்கிறது. அந்தப் பகுதியை நவீனப்படுத்தும் முறையிலே இந்த நகர்ப்புற வளர்ச்சிக் கழகம் இன்றையதினம் அங்குள்ள மக்களுக்காக, ஒரு தனியாரிடத்திலே பெரும் தொகை வாங்கிக் கொண்டு, அங்கே சீர்திருத்தம் செய்து வருவதாகச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்., செய்து வருகிறார்கள். அங்கேயிருக்கிற நிலைமை என்ன? அது மத சார்புடைய ஒரு சங்கமாக இருக்கிறது. அவர்களிடத்திலே பணம் வாங்கிய காரணத்தாலே, அவர்கள் குடிசை வாழ் மக்களுக்குப் பல காரியங்களைச் செய்கிறார்கள். அதே நேரத்தில் அவர்கள் தங்கள் மதத்தில் சேர வேண்டுமென்று வற்புறுத்துகிறார்கள். இதற்கு இந்த அரசு உடந்தையாக இருக்கிறது என்ற குற்றச் சாட்டை நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். ஏற்கனவே, நானும் அங்கே இருக்கிற மக்களும் அமைச்சரிடத்திலும், அரசாங்க அதிகாரிகளிடத்திலும், தனிப்பட்டவர்களிடத்திலே பணம் பெறுவது எதிர் காலத்திலே எங்களை அந்த மதத்திலே சேர் என்று சொல்வதற்கு வழி வகுக்கிறார்கள். ஆகவே அத்தகைய அனுமதி கொடுக்க வேண்டாம் என்று சொல்லியும், இன்றையதினம் அனுமதி தந்து, அந்த மதசார்புடைய சங்கம் அந்த மக்களை வற்புறுத்துகிறது. எதிர் காலத்திலே அப்படி ஒரு மதமாற்றம் ஏற்படுமானால், இந்த அரசுதான் அதற்குத் தகுந்த பதிலைச் சொல்ல வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

(முற்பகல் 11–00)

45-வது வட்டத்தில் கொல்லாபுரி நகர் என்ற ஒரு இடம் இருக்கிறது. அங்கே காமராஜர் முதலமைச்சராக இருந்த காலத்தில் ஒரு அடிக்கல் நாட்டப்பட்டது. அப்படி அடிக்கல் நாட்டப்பட்டதற்கான அந்தக் கல் இன்றைக்கும் சாட்சியளித்துக் கொண்டிருக்கிறது. அந்த விழாவில் யார் யார் கலந்து கொண்டார்கள் என்ற விவரத்துடன் அந்தக் கல் அங்கே இருக்கிறது. ஆனால் அந்த இடத்தில் இதுவரையில் எந்தவிதமான முன்னேற்றம் ஏற்படவில்லை என்பதைப் பார்க்கின்ற பொழுது வேதனையாக இருக்கிறது. அந்தக் காலத்தில் குடிசைகள் எப்படி இருந்தனவோ அதேமாதிரிதான் இப்பொழுதும் இருந்து கொண்டிருக்கிறது. அங்கே கக்கூஸ் வசதி கிடையாது, குடி தண்ணீர் வசதி கிடையாது இன்னும் பல அடிப்படை வசதிகள் கிடையாது.

அங்கேயுள்ள குடிசைப் பகுதிகளில் சேர்கின்ற குப்பைகள் அகற்றப்படுகின்றனவா என்று கேட்டால் நிச்சயமாகக் குப்பைகள் அகற்றப்படுவதில்லை. இதுபற்றி மாநகராட்சியின் கவனத்திற்குக் கொண்டு வந்தால் அவர்கள் தங்களது பொறுப்பு இல்லை என்று சொல்கிறார்கள். வீட்டு வசதி வாரியத்தையோ அல்லது குடிசை மாற்று வாரியத்தையோ கேட்டால், எங்களுக்குச் சேர வேண்டிய பணத்தைக் கொடுத்தால் தினந்தோறும் குப்பைகளை எடுப்பதாகச் சொல்கிறார்கள். ஆனால் இவற்றைக் கூடச் செய்யாமல் இங்கேயுள்ள அதிகாரிகள் என்ன செய்து

கொண்டிருக்கிறார்கள் என்று தெரியவில்லை. ஏன் அவர்கள் இந்தச் செயலில் ஈடுபடவில்லை. திராவிட முன்னேற்றக் கழகக் காலத்தில் அந்த மக்களிடம் 10 ரூபாய் என்று வாங்கியது என்றால், இன்றைய தினம் அதிகமாக வாங்குகிறீர்கள். அப்படியிருக்கும் பொழுது இந்த வசதிகளை ஏன் நீங்கள் செய்து கொடுக்கக்கூடாது என்று கேட்க விரும்புகிறேன்.

சத்தியமூர்த்திநகர் என்ற ஒரு பெரிய குடியிருப்பு இருக்கிறது. அங்குள்ள மக்கள் குடிசை மாற்று வாரியத் தலைவரை வரவழைத்து நிலைமைகளைச் சொல்லியிருக்கிறார்கள். அவர்கள் பயன்படுத்துகின்ற கழிவு நீர்க்குழாய் உடைந்துபோய் சாக்கடைகளாக இருக்கின்றன. அவற்றைச் சுத்தம் செய்து தர வேண்டும் உடைந்த குழாய்களைப் புதுப்பித்துத் தர வேண்டுமென்று பலமுறை சொல்லியிருக்கிறார்கள். தலைவர் பார்த்தும் கூட இதுவரையில் அவைகள் செய்யப்படாமல் இருக்கிறது.

உதய சூரியன் நகரிலும் அவைகள் செப்பனிடப்படாமல் இருப்பதோடு, குடிதண்ணீர் வசதியும் செய்து கொடுக்கப் படாமல் இருக்கிறது.

குடிசைப் பகுதியில் இருப்பவர்களை அகற்ற வேண்டுமென்றால் அங்கிருப்பவர்களையெல்லாம் வியாசர்பாடிக்குத்தான் அநேகமாக அனுப்புகிறார்கள். ஆனால் அந்த இடத்திலே இருக்கின்ற அந்த மக்களுக்குச் சரியான விளக்கு வசதியோ, தண்ணீர் வசதியோ, சாக்கடை வசதியோ. கழிவு நீர் வசதியோ செய்து தரவில்லை.

இப்படியாகக் குடிசைப்பகுதிகள் ஏற்படுவதற்கான வழிவகைகளைச் செய்துவிட்டு, பிறகு அவைகளை ஏறெடுத்தும் பார்க்காமல் இருக்கிறார்கள், நான் அமைச்சரவர்களிடத்தில் கேட்டுக் கொள்கிறேன். சென்னையைப் பொறுத்தவரையில் இன்றைக்கு நீங்கள் குடிசைப்பகுதி மாற்று வாரியம், வீட்டு வசதி வாரியம் என்று வைத்துக் கொண்டு, ஏதோ வட்டிக்கடைக் காரர்களைப் போல பணம் சம்பாதிப்பதில் தான் கவனம் செலுத்திக்கொண்டிருக்கிறீர்கள். ஆரம்ப காலத்தில் வீட்டு வசதி வாரியம் ஏழை எளிய மக்களுக்கு வசதி செய்து கொடுக்க வேண்டுமென்ற எண்ணத்தில் இருந்தது. ஆனால் இன்றைய தினம் அந்த எண்ணம் மாறி வீட்டு வசதி வாரியமானது பணம் படைத்தவர்களுக்கும் அல்லது அமைச்சரிடத்தில் நல்ல அன்பு கொண்டவர்களுக்கும்தான் பல வீடுகளைத் தருகின்ற நிலைமை இருக்கிறது. அந்த நிலை மாற வேண்டும், எந்த எண்ணத்தோடு இந்த வீட்டு வசதி வாரியமும், குடிசைப்பகுதி மாற்று வாரியமும் ஏற்படுத்தப்பட்டனவோ அந்த எண்ணம் ஈடேறாமல், மக்களுக்குப் பயன்படாமல் அவைகள் இருக்கின்றன. அந்த நிலையை மாற்றி, ஏழை எளிய மக்களையும் குடிசையில் வாழ்கின்ற மக்களையும் அன்றாடம் கூலிக்குப் பாடுபடுகின்ற மக்களையும் நீங்கள் வாழ வைக்க வேண்டிய வழிவகையைக் கண்டு, அதை நிலை நாட்ட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.



இப்பொழுது இருக்கின்ற இந்த நிலைமை மாற வேண்டுமென்றால, ஆரம்பக் காலத்தில் எப்படிச் சுறுசுறுப்பாக அந்தக் குடிசைப்பகுதி மாற்று வாரியத்தில் வேலை நடந்ததோ அந்த மாதிரி வேலைகள் நடைபெற வேண்டும். அடிக்கடி தலைவரை மாற்றுவதை நிறுத்த வேண்டும். ஏனென்றால் தலைவராக வருகின்றவர்கள் சென்னையை சுற்றிப் பார்த்துப் பல வேலைகளைச் செய்ய வேண்டுமென்று நினைத்தாலும் கூட, அவர்களை மாற்றுவதன் காரணமாக எல்லாத் திட்டங்களும் மாறி விடுகின்றன என்பதை இந்த நேரத்தில் தெரிவித்து கொள்கிறேன்.

ரமணா நகர் என்ற ஒரு பகுதி இருக்கிறது. அங்கிருக்கின்றவர்கள் நீண்ட நெடுங்காலமாகச் சாக்கடைப் பிரச்னை இருக்கிறது என்றும், ரோடு போட வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு இந்த வசதிகளைச் செய்து கொடுக்காமல், அந்தக் கோரிக்கைகள் இன்றைக்குப் புறக்கணிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

குடிசைப் பகுதி மாற்று வாரியம் கடற்கரை எதிரிலே பெரிய மாடிக் கட்டிடத்தில் காட்சியளிக்கிறதே தவிர, குடிசைவாழ் மக்களுக்கு நல்ல வீடுகளை கட்டிக் கொடுக்காமல் இருக்கிறது. ஆனால் அதிகாரிகள் நல்ல காற்றை வாங்கிக் கொண்டு மாடிக் கட்டிடங்களில் இருந்து கொண்டிருக்கிறார்கள். அந்த நிலையில்லாமல், ஏழை எளியவர்களும் காற்று வசதியோடு, நல்ல சுகாதார வசதியோடு வாழ்வதற்கான வழிவகைகளை இந்த அரசு செய்ய வேண்டும். உடனடியாக அந்த மக்களுக்குக் கருணை காட்ட வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இந்தச் சந்தர்ப்பம் கொடுத்த தலைவரவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்து, விடைபெற்றுக் கொள்கிறேன். நன்றி வணக்கம்.

திரு எம்.எஸ். மாணிக்கம் : மாண்புமிகு மாற்றுத் தலைவரவர்களே, வீட்டுவசதி, நகர்ப்பகுதி வளர்ச்சி மானியக் கோரிக்கைகள் மீது பேசுவதற்கு எனக்கு வாய்ப்பளித்தமைக்கு நன்றி தெரிவித்துக் கொண்டு, இந்த 2 மானியங்களுக்காக ரூ. 41,82,46,000 செலவிடுவதற்கான கோரிக்கைகளை மாண்புமிகு அமைச்சரவர்கள் இங்கே கொண்டு வந்திருக்கிறார்கள். நகர்ப்புற வளர்ச்சிக்காகவும், வீட்டுவசதியை மேம்படுத்துவதற்காகவும், மாண்புமிகு புரட்சித் தலைவரவர்களும், மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சரவர்களும். இதில் தக்க கவனம் செலுத்தி, இதைச் சிறப்பான முறையில் செயல்படுத்துவதற்காக அவர்களுக்கு என்னுடைய பாராட்டுதலை தெரிவித்துக் கொள்கிறேன். இப்படிப்பட்ட திட்டங்கள் எல்லாம் எந்த வகையில் செயல்படுகிறது என்று சொன்னால் நம்முடைய நாடு ஏழ்மையான நாடாக வசதியிலே குறைந்தவர்களாக கல்வி அறிவிலே

நாம் குறைந்திருக்கிற காரணத்தாலே, அறியாமை இருக்கிற காரணத்தாலே நல்ல பல திட்டங்களை நிறைவேற்றுகிற போது நாம் கட்சி வித்தியாசங்களை மறந்து விட்டு நல்ல பல நோக்கத்திற்காக செயல்படுவதற்கு முடியாமல் இருக்கிற நிலைமை இருக்கிறது என்பதை நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

இங்கே சென்னை நகரத்தைப் பொறுத்த வரையில் எடுத்துக் கொண்டோமேயானால், குடிசைப்பகுதிகளை மேம்படுத்த அந்த நகர்ப்புறத்தினுடைய வளர்ச்சித் திட்டங்களை அதிகமாக வளர்க்க வேணடுமென்ற எண்ணம் இருந்தாலும், ஆட்சியிலே இருக்கிறவர்கள் அதை நடைமுறைப்படுத்த வேண்டுமென்று முயல்கின்றபோது. இதன் மூலமாக அரசியல் ஆதாயம் பெறலாம் என்ற அடிப்படையிலே எதிர்க்கட்சிகள் இங்கே நடைபெறக் கூடிய நல்ல திட்டங்களை எல்லாம் எதிர்க்கக்கூடிய நிலைமையிலே இருக்கிறார்கள். இங்கே சொல்லப்போனால். சாக்கடைகளெல்லாம் ஓட்டை விழுந்து தூர்க்கப்பட்டிருக்கின்றன. உடைக்கப்பட்டிருக்கின்றன. குடிதண்ணீர் பைப்புகள் எல்லாம் உடைக்கப்பட்டிருக்கின்றன என்று சொன்னார்கள். குடிசைப் பகுதியிலே இருக்கின்ற ஏழை எளியவர்களைப் பயன்படுத்திக் கொண்டு, அறியாமையிலே இருக்கின்றவர்களைப் பயன்படுத்திக் கொண்டு, அப்படிப்பட்ட இடங்களிலெல்லாம் கள்ளச்சாராயம் விற்பதற்கும், கள்ளச் சாராயத்தைப் பதுக்கி வைப்பதற்கும் சாக்கடைகளைக் கூட பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். அதன் மூலமாக அவர்கள் இப்படிப்பட்ட நல்ல திட்டங்களை நிறைவேற்றுவதற்கு அந்த சாக்கடைகளை, குழாய்களை உடைப்பதன் காரணமாக சென்னை மக்களுக்குப் பயன்படாமல் செய்து விடுகிறார்கள். ஒரு சிலர் வருமானம் பெறுவதற்கான இப்படிப்பட்ட நல்ல திட்டங்களை நிறைவேற்ற முடியாமல் போகிறது. அப்படிப்பட்ட நேரத்திலே நடவடிக்கை எடுப்பதற்கு அரசும், காவல் துறையும் சென்றால், அதை பாதுகாக்கக் கூடிய வகையிலே ஒரு குறிப்பிட்ட சிலர் அங்கே வருகிறார்கள். அதன் காரணமாக சென்னை மாநகரத்திற்காக நல்ல திட்டங்களை நிறைவேற்ற முடியாமல் போய் விடுகிறது. அது மட்டுமல்ல அப்படிப்பட்ட குடிசைகளிலே எப்படிப்பட்ட நிலைமை இருக்கிறது என்பதை இங்கே குடிசை மாற்று வாரியத்திலேயிருந்து சென்ற அதிகாரிகள் கூட சொன்னார்கள். அங்கே உள்ள ஏழை எளிய மக்கள், வசதி இல்லாதவர்கள், பக்கத்திலே ஏதாவது ஒரு தொழில் கிடைத்து, வருமானத்தை உருவாக்கிக் கொள்ளலாம் என்று வந்தால், அவர்களிடமிருந்து ரூ. 50, ரூ. 100 என்ற வாடகையைப் பெற்று கொண்டு வருகிறார்கள் சில சமூகவிரோதிகள் அங்கே இருக்கிற பெரியவர்கள், வசதி படைத்தவர்கள், ஆட்களை வைத்திருக்கக் கூடிய சமூக விரோதிகள், அப்படிப்பட்ட குடிசைகளை எல்லாம் கைப்பற்றிக் கொண்டு அங்கிருக்கக் கூடிய ஏழை எளிய, வசதி இல்லாதவர்களுக்கு வாடகைக்கு விடுகிறார்கள்.



அதுமட்டுமல்ல. அந்தப் பகுதியிலே சமூக விரோதிகள் ஒளிந்து கொள்வதற்கும், அங்கே காவல்துறை அதிகாரிகள் உள்ளே செல்வதற்குக் கூட முடியாமல், அங்கிருக்கும் சந்து பொந்துகளில் தவறுகள் நடைபெறுவதற்கு உதவியாக இப்படிப்பட்ட பகுதிகள் எல்லாம் வைத்திருக்கிறார்கள். அப்படிப்பட்ட பகுதிகளை அப்புறப்படுத்தி அதன் மூலம் மேம்படுத்த வேண்டுமென்றால், அதை நடைமுறைப்படுத்த முடியவில்லை என்று சொன்னார்கள், இங்கே 'சால்ட் கோட்டார்ஸ்' பகுதியிலே ஒரு குடிசை இருக்கிறது. அந்தப் பகுதியிலே 10 ஆண்டுகளுக்கு மேலாக ஆக்கிரமிப்பு செய்து வருகிறார்கள். அதற்குப் பக்கத்திலே ஒரு பர்லாங்குக்குள்ளே, 20 கிலோமீட்டருக்குள்ளே குடிசை மாற்று வாரியத்தின் மூலமாக அங்கே வீடுகளை கட்டி, அந்த வசதியான வீடுகளுக்கு அவர்களை எல்லாம் அழைத்துச் செல்ல வேண்டும், அங்கே அவர்களை குடியேறச் செய்ய வேண்டுமென்று சொன்னால், சமூகவிரோதிகள் 20, 30 பேர் சேர்ந்துகொண்டு, அங்கே ரயில்வே யார்டுகளிலிருந்து சாமான்களைத் திருடுவதற்காக அந்த இடம் பாதுகாப்பாக இருக்கிறது என்று சொல்லி, அந்த இடத்தை விட்டு நகர்வதற்கு மறுக்கிறார்கள். அதற்கு நாம் துணை போகிறோம். இப்படிப்பட்ட நிலைமையை மறந்து விட்டு, நாம் நகரத்தினுடைய அழகை உருவாக்குவதற்கும், இருக்கிற ஏழை எளியவர்களுக்கு, பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவி செய்யக்கூடிய வகையிலே அந்த குடிசை மாற்றுப் பணிகளை நாம் நடைமுறைப்படுத்துவதற்காக, நம்முடைய அரசியல் ஆதாயத்தை விட்டுவிட்டு, அந்த நல்ல திட்டங்களுக்கு, நாம் அத்தனை பேரும், அத்தனை கட்சிகளும் உதவி செய்தால் தான், அப்படிப்பட்ட நல்ல திட்டங்களை நிறைவேற்ற முடியும்.

நான் வெளிநாடுகளில் பார்த்தபொழுது, எவ்வளவு பெரிய கட்டிடங்களாக இருந்தாலும், எவ்வளவு பகுதியாக இருந்தாலும் அரசாங்கம் மக்களுக்காக சேவை செய்வதற்கு, அங்கே சாலை வசதிகள், சாக்கடை வசதிகள், குடிதண்ணீர் வசதிகள் ஆகியவைகளை உருவாக்குவதற்கு, அந்த நிலங்களையெல்லாம் எடுத்து அவர்களுக்கு நஷ்ட ஈட்டை வழங்கி, அதன் மூலமாக நகரை அழகுபடுத்தி, நகரத்தை சுத்தமாகவும், சுகாதாரமாகவும் வைப்பதற்கு நடவடிக்கைகளை எடுத்திருக்கிறார்கள்.

[முற்பகல் 11-10]

ஆனால் நாம் நம்முடைய ஆதாயத்திற்கு, சாக்கடைகளை குடிதண்ணீர்க் குழாய்களை உடைப்பது, ரோடுகளில் வழி மறிப்பது, குடிசைகளை அப்புறப்படுத்த தடுப்பது, போன்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறோம். இப்படிப்பட்ட நிலைமையை மறந்து விட்டு, மக்களுடைய நன்மைக்காக பாடுபட வேண்டுமென்ற நல்ல எண்ணத்திலே முதலிலே அத்தனை பேரும் ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுமட்டுமல்ல வீட்டுவசதித் துறையிலே இங்கே பல நல்ல காரியங்கள் செய்யப்படுகின்றன. வீட்டுவசதி வாரியத்தின் மூலமாக தமிழ்நாட்டிலே, நலிந்த பிரிவினருக்கு, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு, அரசு ஊழியர்களுக்கு எல்லாம் வீடுகள் கட்டிக் கொடுத்து வருகின்றன. இப்படிப்பட்ட திட்டங்களை இன்னும் அதிகமாக நிறைவேறுவதற்கு நம்மிடத்திலே நிதிவசதி இல்லாமல் போனால் கூட அந்த இருக்கின்ற நிதி வசதிகளை வைத்துக் கொண்டு, அப்படிப்பட்ட வீடுகளை எல்லாம் கட்டி வருகின்றன. சென்னை மாநகரத்தில் மட்டும் கட்டப்பட்டு வந்தது. இப்போது திருச்சி, மதுரை, கோயம்புத்தூர் போன்ற மாவட்ட தலைநகரங்களிலும், இப்படிப்பட்ட திட்டங்கள் வரிசைக் கிரமமாக நடைபெற்று வருகின்றன. ஆனாலும் கூட, அதற்கு இன்னும் அதிகமாசப் பணத்தை ஒதுக்கி அந்தத் திட்டங்களை விரைவிலே முடிக்க வேண்டும்.

இங்கே தஞ்சையிலே வீட்டுவசதி அலுவலகம் இருந்தது. வேலை குறைந்து விட்டது என்று சொல்லி திருச்சியுடன் அதைச் சேர்த்து விட்டார்கள். அதை மீண்டும் தஞ்சையிலே உருவாக்கி தஞ்சை மாவட்டத்திலே, வீட்டுவசதித் திட்டங்களை மீண்டும் முனைப்புடன் செயல்படுத்தி நடத்தித்தர வேண்டுமென்று, மாண்புமிகு அமைச்சரவர்களைக் கேட்டுக்கொண்டு, குடிசை மாற்று வாரியப் பணிகளை மாவட்டத் தலைநகருக்கும், சென்னையிலிருந்து மாற்றி அதை விரிவுபடுத்தியிருக்கிறார்கள். அதற்காக நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். அதுமட்டுமல்ல. ரெவின்யூ டிவிஷனல் ஹெட் குவார்ட்டர்ஸ்லும் வட்டத் தலைநகரங்களிலும் கூட இப்படிப்பட்ட வசதிகளை உருவாக்கித் தரவேண்டுமென்றும் எங்கேயும் குடிசைகள் இல்லை, எல்லோரும் அடுக்கு மாடிவீடுகளில் வாழ்கிறார்கள் சுகாதாரமான வீடுகளில் வாழ்கிறார்கள், வசதியான வீடுகளில் வாழ்கிறார்கள் என்ற நிலைமையை உருவாக்கித் தரவேண்டும். அதற்கு மாண்புமிகு அமைச்சரவர்களும், புரட்சித் தலைவர் அவர்களும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, இங்கே நகர்ப்புற வளர்ச்சி. திட்டங்களிலே நாகப்பட்டினத்திற்கும், மன்னார்குடிக்கும், சாக்கடை வசதிகளையும், நகர்ப்புற வசதிகளையும் உருவாக்குவதற்கான நடவடிக்கைகளை எடுக்கிறோம் என்று சொல்லி இருக்கிறார்கள். மன்னார்குடி நகரத்திற்கு அதற்கான பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. நாகப்பட்டினத்தில் இன்னும் வேலைகள் ஆரம்பிக்கப்படவில்லை. அங்கே பேருந்து நிலையம் பாதிக்கப்பட்டிருக்கிறது. சாக்கடை வசதி இல்லாமல் இருக்கிறது. அதனாலே நாகப்பட்டினத்தில் உள்ளவர்கள் யானைக்கால் வியாதியால் அதிகமாக பாதிக்கப்படுகிறார்கள். இப்படிப்பட்ட வியாதிகள் வரக்கூடிய நிலையில் இருக்கிறது நாகப்பட்டினம். அதை மாற்றி அங்கே சாக்கடை வசதிகளையும், கோடு வசதிகளையும் உருவாக்கி, அந்த நகர்ப்புற திட்டத்திலே நாகப்பட்டினத்தையும், மன்னார்குடியையும்



விரைவில் நிறைவேற்றி அதை முடித்துக் கொடுக்க வேண்டும். அதேபோல மயிலாடுதுறை, கும்பகோணம், தஞ்சாவூர் ஆகியவற்றிற்கும் விரைவிலே இந்தத் திட்டத்தின் கீழ் முடித்துத் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். பட்டுக்கோட்டையில் இந்தத் திட்டம் நிறைவேற்றப்படாமல் இருக்கிறது, அதையும் விரைவில் முடித்துக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இப்படிப்பட்ட திட்டங்கள் நிறைவேற்றப்படுவதன் மூலமாக ஏழை எளிய மககளுக்கு அங்கே வசதிகள் ஏற்படுவதோடு குடிசைகளிலே வாழ்கிறோம் என்ற நிலைமை இல்லாமல் நல்ல வீடுகளிலே வாழ்கிறோம் நல்ல பகுதிகளிலே வாழ்கிறோம், சுகாதாரமான இடத்திலே கட்டி இருக்கிறோம் என்கிற நிலைமையை உருவாக்கித் தரவேண்டும். அரசு ஊழியர்களுக்கு வாடகைக் குடியிருப்புத் திட்டத்திற்கு இப்போது நிலம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அங்கே அரசு ஏழை எளிய மக்களுக்குத் திட்டங்களை உருவாக்கித் தரவேண்டும்.

என்னுடைய தொகுதியிலே வேதாரணியத்தில் அரசு ஊழியர்களுக்கு வாடகைக் குடியிருப்புத் திட்டத்திற்காக இப்படி நிலம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அங்கே இந்த ஆண்டிலே அந்த வீட்டு வசதி வாரியத்தின் மூலமாக அரசு ஊழியர்களுக்கு குடியிருப்பு வசதிகளை உருவாக்கித் தர வேண்டும். அங்கே அதிகாரிகள் வருவதற்கே மறுக்கிறார்கள். அங்கே வருகிறவர்கள் தண்டனை பெற்றவர்களாக இருக்கிறார்களே. தவிர அங்கே வீடுகள் வசதிகளோடு உருவாக்கப்படவில்லை. வசதியான வீடுகளைக் கட்டிக் கொடுக்கவேண்டும்.

அதுபோல குடிதண்ணீர் வசதியை உருவாக்கித் தரவேண்டுமென்று கேட்டுக் கொண்டு இந்த வாய்ப்பினை வழங்கிய மாற்றுத் தலைவரவர்களுக்கு நன்றி தெரிவித்து, உரையினை முடிக்கிறேன்.

*திரு. எல். இளையபெருமாள் : மாண்புமிகு மாற்றுத் தலைவரவர்களே, இன்று வீட்டுவசதி, நகர்ப்புறப்பகுதி வளர்ச்சி ஆகிய மானியக் கோரிக்கைகளின் பேரில் இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி சார்பில், சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

இன்றைய இந்த குடிசை மாற்று மேம்பாட்டுத் திட்டமானது 1961—ஆம் ஆண்டு காங்கிரஸ் ஆட்சியில் இருந்தபோது ஆரம்பிக்கப்பட்டது. குடிசைத் திட்டங்கள் ஆண்டாண்டுகளாக வளர்ந்து வருவதிலே நான் மகிழ்ச்சியடைகிறேன். ஆனால் இந்தத் திட்டத்திலே 4 பிரிவுகளாக நம்முடைய பணிகள் நடக்கிறது. தமிழ்நாடு அரசு அலுவலர்கள் வாடகை வீட்டுவசதித் திட்டம், தமிழ்நாடு காவலர் வீட்டுவசதித் திட்டம், தொழிலாளர்கள் நல ஆணையர் மூலம் வீட்டு வசதித் திட்டம் தாழ்த்தப்பட்ட மக்கள் அல்லது நலிந்த மக்களுடைய வீட்டு வசதித் திட்டம்என்ற முறையிலே இந்தத் துறையிலே பணி செய்து வருகிறார்கள்.

இதில் குறிப்பாக முக்கியமாக சொல்ல வேண்டுமென்பது—எம், எம். டி. ஏ. வீடுகள் கட்டப்படும் திட்டத்திலே வீடுகள் கட்டப்பட்டது. அவைகளிலும் தொழில் வளர்ச்சியிலே இருக்கின்ற நலிந்த பிரிவினைச் சேர்ந்த தொழிலாளர்களுக்கு வீட்டுவசதியாக கொடுக்கப்பட்டு 'எய்டு' என்ற முறையிலே 50"×22" என்ற ஒரு பிளாட்டை கொடுத்து வீட்டு வசதி செய்துள்ளார்கள். அந்த வீட்டு வசதியிலே ரூ. 2500/- அதற்கு பணம் என்றால், வட்டி உட்பட சேர்த்து கிட்டத்தட்ட ரூ. 5000/—க்கு வருகிறது. அந்த வட்டி அதிகமாக இருக்கிறது. அதுமட்டுமல்ல இந்த வீடுகள் கட்டுவதிலே முதலிலே எம். எம். டி. ஏ. ஸ்கீம்—பிரகாரம் பல டெவலப்மெண்ட் பணிகளைச் செய்கிறோம் என்று சொல்லி, சாக்கடை திட்டத்தில் எடுத்து செய்து விடுகிறார்கள்.

வீடு கட்டுவதற்கு முன்பே சாக்கடைத் திட்டம் எடுத்துக் கொள்ளப்படுகிறது. நான்கு வீடுகளுக்கு ஒன்றாக சாக்கடை திட்டத்திற்கு இணைப்புக் கொடுக்கப்படுகிறது. அந்தச் சாக்கடைத் திட்டத்தைச் செய்கின்ற போது வீடு கட்டுகிறவர்கள் பிந்தி வந்து வீடு கட்டுகிறார்கள். ஆகவே சாக்கடைக்காக கொடுக்கப்பட்ட அந்தக் கழிவு நீர்ப் பகுதி பள்ளமானதாக இல்லாமல் மேடானதாகவும் சில இடங்களில் அமைந்து விடுகிறது. ஒன்றுக்கு ஒன்று தண்ணீர் செல்வதற்கு வசதி வாய்ப்பாக கழிவு நீர்ச் செல்வதற்கு, அதைப் பராமரிப்பதற்கு வழியில்லாமல் போய் விடுகிறது. பின்பகுதியிலே வீடு கட்டுகிறார்கள். அப்படி வீடு கட்டுகின்ற போது சாக்கடைத்திட்டத்திலே நான்கு வீடுகளுக்கு ஒன்றாக இணைப்புக் கொடுக்கின்ற திட்டம் இருப்பதால் வீட்டை விட சாக்கடைப் பகுதிகளாக இருக்கின்ற இடம் உயர்வாக வந்து விடுகிறதுஅல்லதுகாலம்கடந்து அவர்கள் வீடு கட்டுவதினாலே அதில் பழுது ஏற்பட்டு விடுகிறது இதனால் சாக்கடைத் திட்டத்தை நாம் நல்ல முறையிலே செய்ய வேண்டும் என்ற எண்ணம் இருந்தாலும், அனுபவ ரீதியாக இந்தச் சாக்கடை போகாமல் வீடு கட்டுகின்றவர்களுக்கு தொல்லை கொடுக்கின்றது. இதனால் அந்தப் பகுதியிலே சகாதாரக் கேடும் வருகிறது. அதை மீண்டும் செய்வதற்கு வசதியற்ற நிலைமை இருக்கிறது. ஆகவே எம்.எம்.டி.ஏ. காலனி மூலமாக நாம் செய்திருக்கின்றவற்றை மீண்டும் புனராலோசனை செய்ய வேண்டும். அப்படிச் செய்யத் தவறினால் அவர்களுக்கும் கேடு, நகரத்தில் இருக்கின்றவர்களுக்கும் சுகாதாரக கேடு விளைவிக்கக்கூடிய காரியத்தை நாம் பார்த்துக் கொண்டு இருக்கின்ற அவலநிலைமை ஏற்படும்.

அதேபோல் அண்ணா நகரில் இடம் கொடுத்தோம். இது நல்ல திட்டம். ஆனால் முதலில் கொடுக்கின்றபோது கிட்டத்தட்ட 6 ஆயிரம் ரூபாய்க்கு ஒரு பிளாட் என்றிருந்தது. பிறகு விலைவாசியின் காரணமாக, அல்லது அந்த இடத்தின்



மேம்பாடு காரணமாக விலை உயர்ந்தது. ஒரு சிலர் கோர்ட்டுக்குச் சென்றார்கள். ஸ்டே ஆர்டர் வாங்கினார்கள். ஆனால் கோர்ட்டுக்கு பலர் நல்ல எண்ணத்தாலே செல்லாத் காரணத்தால், அரசாங்கம் நல்லதுக்கு செய்தது. அரசாங்கத்திற்கு நாம் பணம் கட்ட வேண்டும் என்று அந்த நல்ல எண்ணத்தின் காரணமாக-அல்லது, பணவசதி இல்லாததினால் கோர்ட்டுக்குச் சென்று அங்கே நீதியை நிலைநாட்ட வேண்டும் என்றால், அதிகப் பணம் செலவு செய்ய வேண்டும் Justice is Costlier one என்று சொல்வது போல் அவர்கள் நல்ல எண்ணத்தினால் போகவில்லை. இப்போது கோர்ட் உத்தரவு எப்படி இருக்கிறது என்றால் 6 ஆயிரம் ரூபாயிலிருந்து இப்போது சுமார் 8220 வரையிலும் வசூல் செய்யலாம் என்ற நிலைமையில் கோர்ட் ஒரு உத்தரவு போட்டதால் யார் கோர்ட்டுக்குச் சென்றார்களோ அவர்களுக்கு வசதியாக அந்த உத்தரவு இருக்கிறது. யார் கோர்ட்டுக்குப் போகவில்லையோ, அரசாங்கத்தை நம்பி, அதிகாரிகளை நம்பி தங்களுடைய பொருளாதாரக் குறையால் கோர்ட்டை அணுகாமல் அவர்கள் நின்ற காரணத்தால் அவர்களுக்கு திட்டமிட்டபடி அதிகமாக வசூலிக்கிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆகவே ஒழுங்காக, சட்டத்தின்படி நடந்து கொண்டவர்கள் அதிகப் பணம் கட்ட வேண்டியிருக்கிறது. ஆனால் சட்டத்தை எதிர்த்து கோர்ட்டுக்குச் சென்றவர்களுக்கு வசதி வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது. ஆகவே அரசாங்கத்தின் சட்டத்திற்கு கட்டுப்பட்டு, நாம் உண்மையாக பணம் கட்ட வேண்டும், கோர்ட்டுக்குச் செல்லக் கூடாது என்று இருந்தவர்களுக்கு அதிகமாக வசூலிக்கின்ற நிலைமையிருக்கிறது. ஆகவே இது சரியாக இருக்காது என்று நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல் பூவிருந்தவல்லி, கார்டு அருகில் எம்.எம்.டி.ஏ. காலனி இடத்தை நான் சென்று பார்த்த நேரத்தில் இவ்வளவு நாளாகியும் இந்த ரோட்டிலே லைட் வசதி கிடையாது, அந்த ரோடுகள் சரியானபடி சீர்திருத்தம் செய்யப்படவில்லை, நான் சென்றுபார்த்த பிறகு உரிய அதிகாரிகளைப் பார்த்து அதை பற்றிச் சொல்லியிருக்கிறேன். இந்தக் காலனி கிட்டத்தட்ட 2½ ஆண்டுக் காலமாகியும், லைட் வசதிகள் செய்யப்படாமல், ஒரு சின்னவிசயத்தைக் கூட கவனிக்காமல் இருக்கிறார்கள். ஆகவே அரசாங்கம் இப்படி கேட்பாரற்று இருக்கின்ற இந்த நிலைமைய மாற்றி அங்கே வசதிகள் செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதற்கு அமைச்சர் அவர்கள் ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

(முற்பகல் 11-20)

அண்ணா நகர் பகுதியில் கடைகள் கட்டி வாடகைக்கு விடப்பட்ட நேரத்தில் நான் அமைச்சர் அவர்களிடத்தில் சொன்னேன், எம். எம். டி. ஏ. மீட்டிங்கில் சொன்னேன், அதிகாரிகளிடத்தில் சொன்னேன், அதிலே ஒரு கடையாவது தாழ்த்தப்பட்டவருக்கு கொடுங்கள் என்று சொன்னேன். அப்போது அமைச்சர் அவர்கள சொன்னார்கள், 4 கடைகளையும் அவர்களுக்கு கொடுத்து விடுவோம் என்றார். அப்போது நான் கேட்டேன், நான்குகடைகளையும் அவர்களுக்கே எப்படி கொடுக்க முடியும், அதிலே சட்டப் பிரச்னை வரலாம், ஆகவே, அந்த 4 கடைகளில் ஒன்றை ஒதுக்கித் தாருங்கள் என்று கேட்டேன் அப்படியிருந்தும் அந்த நான்கு கடைகளில் ஒரு கடை கூட தாழ்த்தப்பட்டவர் எவருக்கும் கொடுக்கப்படவில்லை. அவர்களால் மற்றவர்களோடு கம்பீட் செய்து எடுக்க முடியவில்லை. அமைச்சர் அவர்கள் நல்ல எண்ணத்தோடு சொல்லியிருந்தாலும் அங்கே ஒருவருக்குக்கூட கிடைக்கவில்லை என்பதைச் சொல்லிக்கொள்கிறேன். தாழ்த்தப்பட்ட மக்களுக்கோ, ஒடுக்கப்பட்ட மக்களுக்கோ, நலிந்த பிரிவினருக்கோ ஒன்றுகூட கிடைக்கவில்லை, 4 பேருக்கு கொடுத்து இருந்தால் சட்டம் பாய்ந்து இருக்கும். சட்டம் அவர்களுக்குப் பாதுகாப்பாக இருக்கும். ஆகவே நீங்கள் 10% என்பதை 18% என்று மாற்றினாலும், 18% என்பதை 28% என்று மாற்றினாலும் அதைக் கொடுக்கவேண்டியவர்கள் கொடுக்கவேண்டிய தகுதியான மக்களுக்கு கொடுக்க எண்ணம் இல்லாத நிலை இருக்குமானால், அது சேர வேண்டியவர்களுக்கு போய் சேராமல் இருக்கும் என்பதை நான் சொல்லிக்கொண்டு, அவர்களுக்கு என்று ஒதுக்கப்பட்ட அந்த விழுக்காடு அடிப்படையில் ஒதுக்கவேண்டிய இடங்களை ஒதுக்கித்தர வேண்டும் என்று வற்புறுத்திக் கேட்டுக் கொள்கிறேன்.

கோயம்பேடு என்ற இடத்தில் மொத்த விற்பனை அங்காடி 3200 கடைகள் கட்டுகிற நல்ல திட்டம் கொண்டு வரப்பட்டு இருக்கிறது. இதிலே முன்னாள் ராணுவத்தினர், உடல் ஊனமுற்றோர் ஆகியோருக்கு உதவி செய்வதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. எண்ணம் நல்ல எண்ணம்தான். இப்படி வருமன என்ற சந்தேகம் ஒருவருக்கும் வராமல் நடவடிக்கை எடுக்க வேண்டும். குறிப்பாக, தாழ்த்தப்பட்டவர்களுக்கு, ஒடுக்கப்பட்டவர்களுக்கு, மலைவாழ் மக்களுக்கு. நலிந்த பிரிவினருக்கு நல்ல முறையில் ஒதுக்கீடு தரவேண்டும். இந்தத் திட்டத்தை மதுரை கோயம்புத்தூர், திருச்சி, சேலம், திருநெல்வேலி போன்ற இடங்களுக்கும் விஸ்தரிக்கப்போகிறோம் என்று குறிப்பிலே சொல்லப்பட்டு இருக்கிறது. இப்படிக் கொண்டு வருவதிலே என்ன கஷ்டம் இருக்கிறது? அப்படி கொடுக்கப்படுகிறபோது ஏழை எளியவர்கள் என்று நினைத்துக் கொடுக்கிறோம். அதிலே ஒரு சிலர் பினாமி லேண்டாகச்செய்து பல காரியங்களைச் செய்துகொண்டு இருக்கிறார்கள், வசதி வாய்ப்புள்ளவர்கள் நேரடியாக கிரயம் என்று



வாங்கமுடியாத நேரத்தில் 5 ஆண்டுகள், 10 ஆண்டுகள் என்று எழுதி வாங்கிக்கொண்டு, பணத்தைப் பெற்றுக்கொண்டு இருக்கிறார்கள். இதற்கு பிரோக்கர்கள் உடந்தையாக இருக்கிற அவல நிலை உண்டாகியிருக்கிறது. இதனால் அதிகாரிகளுக்கும் தொல்லையேற்படுகிறது. இதை நேரடியாகக் கண்டுபிடிப்பதற்கு சட்டப்படியாக ஒரு வழி இல்லாததால் அவர்களுக்கு அவதி ஏற்படுகிறது. ப்ரோக்கர்களில் ஆளும்கட்சி எதிர்க்கட்சி என்று கிடையாது. சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொண்டு அவர்கள் எல்லாம் இந்தக் கேடான காரியங்களில் ஈடுபட்டுக்கொண்டு இருக்கிறார்கள். இதற்கு நான் ஒரு ஆலோசனை சொல்கிறேன். யாருக்கு அதிக சொத்து இருக்கிறதோ, யாருக்கு அதிக வருமானம் இருக்கிறதோ, யாருக்கு அதிக நிலம் இருக்கிறதோ அப்படிப்பட்டவர்கள் அதிலே இருக்கிறார்கள் என்பதைக் கண்டுபிடிக்கச் சொல்வது ஒன்று. அல்லது இன்றைய நிலையில் அந்த வீட்டிலே யார் இருந்தாலும் அவர்களைப் பற்றியெல்லாம் கணக்கு எடுத்து அவர்கள் தகுதி படைத்தவர்களா, பினாமிகளா என்று கணக்கிட்டு வைத்துக் கொண்டால், ஓராண்டுக்குப் பிறகு அல்லது 10 ஆண்டுக்குப் பிறகு நாம் மறுபடியும் கணக்கு எடுத்தால் உண்மை நிலைமை தெரியும்.

அதிலே சட்டவிரோதமாக யார் இருக்கிறார்கள் என்பதைக் கண்டுபிடித்து, தண்டிக்க ஒரு வாய்ப்பும் வசதியும் உண்டாகும். இந்த நிலைமைகளை இப்போதே செய்தால்தான் முடியும். சும்மா உட்கார்ந்து கொண்டு இருந்தால் பின்னால் இதைத் தடுக்க முடியாது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தில் குடிசை மாற்று வாரியத்தின் தலைவர்களை அடிக்கடி மாற்றிக்கொண்டு இருக்கிறீர்கள். மாண்புமிகு உறுப்பினர் எனக்கு முன்னாலே பேசியவர் கூடச் சொன்னார். வருஷாவருஷம் மாற்றிக்கொண்டு இருக்கிறீர்கள். கிட்டத்தட்ட 1800 குடிசைப்பகுதிகள் சென்னையில் இருக்கின்றன. இப்படி ஆண்டுக்காண்டு ஒரு தலைவரை மாற்றிக் கொண்டு இருந்தால், ஒவ்வொரு முறையிலும் வருகின்றவர் அந்த இடங்களைச் சுற்றிப்பார்க்கத்தான் முடியுமே தவிர சரியான முறையில் திட்டங்களை நிறைவேற்ற முடியாது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். இதனால் அரசாங்கம் எந்த நல்லெண்ணத்தில் இந்த வாரியத்தை அமைத்ததோ அந்த நல்லகாரியம் நடப்பது காலதாமதம் ஆகும், என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

குறிப்பாக என்னுடைய தொகுதியிலே சொல்கிறேன். கல்யாண மேஸ்திரி தோட்டம், அங்கே 1977-ல் போர்டு எழுதப்பட்டு, குடிசை மாற்றுவாரியம் வீடு கட்டுகிறது, இத்தனை வீடுகள் கட்டப்படும், இவ்வளவு ரூபாய் செலவு செய்யப்படும், என்று போர்டு எல்லாம் எழுதி வைத்திருந்தார்கள். இன்றைக்கு 1983 ஆம் ஆண்டு. 1977 லிருந்து 1983 ஆம் ஆண்டு வரையில்

அங்கே ஒன்றும் நடைபெறவில்லை. இப்போது அந்தப் பலகையும் காணப்படவில்லை, நான் தேர்ந்தெடுக்கப்படும்போது இருந்தது, இப்போது இல்லை. அந்தத் திட்டம் என்னவாயிற்று, ஒன்றும் தெரியவில்லை.

அதைப்போன்று சேத்துப்பட்டில் மீனாம்பாள், சிவராஜ் நகர் இருக்கிறது. அங்கே தொழிலாளர் நல அமைச்சரும் போய் பார்த்தார், ரெவின்யூ அமைச்சரும் போய் பார்த்தார்; முதலமைச்சரும் பார்த்தார். 1980 ஆகஸ்ட் 4-ந்தேதி தீ பற்றியது. அந்த நகரின் ஒரு பகுதி நம்முடைய அரசாங்கத்திற்குச் சொந்தம். ஒரு பகுதி இரயில்வேயிடமாக இருக்கிறது. அந்த மக்கள் அங்கே பட்டா கொடுக்க வேண்டுமென்று கேட்டார்கள். நானும் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டேன். அப்போது, 'பட்டிணத்தில் நிலத்தின் விலை மிகவும் அதிகம், அங்கே கொடுக்க முடியாது' என்று சொன்னார்கள்.

நகர் அடுத்தப் பக்கத்திலேதான் செக்ரெட்டேரியேட் காலனி இருக்கிறது. தலைவர் காமராஜ் காலத்தில் அவர்களுக்கு இடம் கொடுக்கப்பட்டது. அவர்கள் ஏறத்தாழ ஆயிரம் ரூபாய் சம்பளம் வாங்கக்கூடியவர்கள். அவர்களுக்கு எல்லாம் கொடுத்திருக்கிறார்கள். ஆயிரம் ரூபாய் சம்பளம் வாங்குவதால் அவர்களுக்குக் கொடுக்கக்கூடாது என்று நான் சொல்லவில்லை. பட்டணத்தில் ஆயிரம் ரூபாய் சம்பளம் வாங்குவது ஒன்றும் பெரிதல்ல. அதனால் அவர்களுக்கு கொடுத்தது தவறு என்று சொல்லவில்லை கொடுக்க வேண்டும். ஆயிரம் ரூபாய் சம்பளம் வாங்குகிறவர்களுக்கு இலவசமாக அப்போது அந்த இடத்தைக் கொடுத்தார்கள். பிருந்தாவன் தெரு என்று சேத்துப்பட்டில் இருக்கிறது. பில்டிங் கோவாப்பரேட்டிவ் சொசைட்டி அமைத்து, அரசாங்கம் அதன் மூலம் கடன் கொடுத்து, கிட்டத்தட்ட 64 வீடுகள் கட்டியிருக்கிறார்கள். நல்லமுறையில் இன்றைக்கு அங்கே இருக்கிறார்கள். அதற்கு அரசாங்கம் உதவி இருக்கிறது. அப்படி இருக்கும்போது அந்த மக்களுக்கும் ஏன் பட்டா கொடுக்கக் கூடாது என்பதுதான் என்னுடைய கேள்வி. அதே முறையை இந்த மக்களுக்கும் ஏன் பயன்படுத்தக்கூடாது? அதிலும் தீயால் பாதிக்கப்பட்ட இடம்.

நம்முடைய மாநில அரசுக்குச் சொந்தமான நிலத்தை மத்திய அரசுக்குக் கொடுத்து, 15 ஆண்டுகளுக்குமேல் அவர்கள் அதை பயன்படுத்திக் கொள்ளாமல் இருந்தால் அதை நாம் திரும்பப் பெறலாம் என்று ரெவின்யூ அமைச்சரவர்கள் சொன்னார்கள். அப்படியானால் அந்த நிலத்தை ஏன் அரசாங்கம் திரும்பப்பெறக் கூடாது? குடிசைமாற்று வாரியத் தலைவராக இருந்த சகோதரி சுலோச்சனா சம்பத் அவர்கள், வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் நான்—இந்த மூன்று பேரும் இருந்து இந்த நிலத்தைப் பற்றி ஆவன செய்வோம் என்று சொன்னோம். ஆனால் இன்று வரையில் ஒன்றும் நடக்கவில்லை, முதலமைச்சர் சொல்லியும்



வருவாய்த்துறை அமைச்சர் சொல்லியும், குடிசைமாற்று வாரியத் தலைவர் சொல்லியும் எதுவும் நடக்கவில்லை. இதற்கு என்ன தான் முடிவு? ஒன்றில் அவர்களுக்கு பட்டா கொடுக்கவேண்டும், அல்லது குடிசைமாற்று வாரியத்தின் மூலம் வீடுகட்டிக்கொடுத்து, பணம் வாங்குகிற ஏற்பாடு இருக்கிறதே அதைப்போன்று செய்ய வேண்டும். அல்லது அதற்குப் பக்கத்தில் இவர்களுக்கு இடம் கொடுப்பதாக சென்னை மாவட்ட ஆட்சித்தலைவர் சொன்னார். அதற்குப்பின் பக்கத்திலுள்ள செங்கற்பட்டு மாவட்ட எல்லையில் இருக்கிற இடத்தைக் கொடுப்பதாகச் சொன்னார். அதைடாவது செய்யவேண்டும். அந்த வேலையும் இன்றுவரையில் நடக்கவில்லை. இப்படிப்பட்ட ஒரு அவலநிலை இன்றைக்கு இருந்து கொண்டிருக்கிறது.

இதிலே மத்திய சர்க்கார், மாநில சர்க்கார் என்று கூறுவதற்கு இடமில்லை. மத்திய சர்க்காருக்கு கொடுத்த நிலத்தை அவர்கள் உபயோகப்படுத்திக் கொள்ளவில்லை என்றால் திரும்பப் பெற வழியிருக்கும்போது ஏன் வாளா இருக்க வேண்டும்? ஏழை எளிய மக்கள், சமுதாயத்தில் பின்தங்கிய மக்கள், அரிசன மக்கள் அங்கே நிறைய இருக்கிறார்கள். அவர்கள் எப்படியாவது நல்ல வழி பிறக்கும் என்று நம்பிக்கொண்டிருக்கிறார்கள். இதிலே மேலும் காலதாமதம் செய்யக் கூடாது. தலைவர் காமராஜ் அவர்கள் காலத்திலே நிலத்தை இலவசமாகக் கொடுத்திருக்கிறார்கள். நம்முடைய முதலமைச்சர்கூட சென்ற ஆண்டு பெரியமேட்டில் 80 கிரவுண்ட் நிலத்தை இலவசமாக முஸ்லீம் சகோதரர்கள், தமிழ்நாட்டிலிருந்து வரக்கூடியவர்கள் தங்குவதற்கு ஒரு பகுதி கட்டுவதற்கு, ஹஜ்ஜிக்குப் போகிறவர்கள் தங்குவதற்கு என்று கொடுத்திருக்கிறார்கள்.

நான் குறிப்பிடும் பகுதியில் அந்த மக்கள் 60 வருஷம், 80 வருஷம். 90 வருஷம் குடியிருக்கிறார்கள். அவர்கள் எல்லாம் வசதி படைத்தவர்கள் அல்ல. பாதிக்குமேல் ஆதிதிராவிட மக்கள், நலிந்த மக்கள், ஏழை எளிய மக்கள். அவர்களுக்கு அந்த இடத்தைக் கொடுக்க ஏன் அரசாங்கம் நடவடிக்கை எடுக்கக் கூடாது? சட்டம் தேவை என்றால் ஒரு சட்டத்தைக் கொண்டு வாருங்கள்.

இந்த அரசாங்கமும் சொல்கிறது, அமைச்சர்களும் சொல்கிறார்கள். "மத்திய சர்க்காருக்கு மனம் இல்லை, மனம் இருந்தால் மார்க்கம் உண்டு; மார்க்கம் இருந்தால் கிடைக்கும்" என்று. அதையேதான் நானும் சொல்கிறேன். உங்களுக்கு மனம் இல்லையா? இல்லாததற்கு காரணம் என்ன? அங்கே இருப்பவர்களில் பாதிக்கு மேல் ஏழை எளிய மக்கள், ஆதிதிராவிட மக்கள், பின்தங்கிய மக்கள். அவர்களுக்கு ஏன் செய்யக் கூடாது? எமர்ஜென்சியில் கவர்னர் ஆட்சி இருக்கும்போது ஆதிதிராவிட மக்கள் ஆதிஆந்திராமக்கள் குடியிருக்கிற இடத்தில், அவர்கள் எந்த அளவு டத்தில் இருக்கிறார்களோ அந்த இடம் பட்டா செய்து கொடுக்கப்பட வேண்டுமென்று உத்தரவு போட்டார்கள். சிலருக்கு இடம் கொடுத்தார்கள்.

(முற்பகல் 11-30)

ஆனால் ஆதிதிராவிட மக்கள் லட்சக்கணக்கில் வாழ்கிறார்கள். ஆகவே, முன்பே அவர்களுக்கு கொடுக்கப்பட்ட உத்தரவு பிரகாரம் அந்த இடங்கள் அவர்களுக்கு கொடுக்கபட்டாக வேண்டும். இன்னும் அப்படிக் கொடுக்கப்பெறாத ஆதிதிராவிட மக்களுக்கு பட்டா கொடுக்கின்ற வேலையை துரிதமாகச் செய்ய இந்த அரசு முன்வர வேண்டும் என்று இந்த சமயத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போலவே பூபதி நகர் என்கிற பெயரில் எக்மோர் ரெயில்வே ஸ்டேஷனுக்குப் பக்கத்தில் ஒரு இடம் இருக்கிறது. அங்கே மேம்பாலம் கட்டப்பேவதாகச் சொன்னார்கள. அதை பிறகு கைவிட்டு விட்டதாகத் தெரிகிறது. அப்படி அதைக் கைவிட்டு விட்டது உண்மையாக இருந்தால், 80 ஆண்டு அந்தப் பகுதியில வாழ்கிற தாழ்த்தப்பட்ட மக்களுக்கு அந்த இடங்களை பட்டா செய்து கொடுக்க வேண்டும. அப்படி இல்லையென்றால், அரசே அவைகளை எடுத்துக் கொண்டு, குடிசைமாற்று வாரியத்தின் மூலம் வீடுகட்டி, அவர்களுச்கு விட வேண்டும். இப்படிச் செய்தால், இரண்டுவித நன்மை. ஒன்று ஏழைகளுக்கு உதவி செய்ய முடியும் என்பது, இரண்டு அங்கே நிலவிவரும் சுகாதார கேட்டை ஒழிக்க ஒரு வாய்ப்பு ஏற்படும் என்பது. ஆகவே, அத்தகைய வாயப்பு கிடைப்பதை விட்டு விடக் கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல பெரியமெட்டு பகுதியிலே, முன்னாள் ஆற்காட்டு நவாப்புக்கு சொந்தமான இடம் என்று ஒரு இடத்தைச் சொல்கிறார்கள். அதைப்போலவே ஆயிரம் விளக்குப் பகுதியிலே கூட ஆற்காட்டு நவாப்புக்குச் சொந்தமான இடம் இருப்பதாகச் சொல்கிறார்கள். அங்கே முஸ்லீம் சமுதாயத்தைச் சேர்ந்த மக்கின்ஸ்தார்டன் என்பவர்கள் அந்த இடத்தில் 150 வருஷம் 200 வருஷங்கள் தொடர்ந்து பரம்பரையாக வாழ்ந்து வருகிறாாகள். ஆனால் ரெக்கார்டுகளில் அந்த இடம் ஆற்காட்டு நவாப்புக்குச் சொந்தம் என்று போடப்பட்டிருக்கிறது, அவருடைய வாரிசுகள் அங்கே இருக்கிறார்களோ, இல்லையோ, அவர்கள் எங்குள்ளாரோ என்பது எல்லாம் விவரம் தெரியவில்லை.

அந்தப் பகுதியிலே சமுதாய விரோதிகள் என்றுகூடச் சொல்லலாம், அல்லது தடி எடுத்தவன் தண்டல்காரன் என்று சொல்வார்களே அபபடிச் சொல்லலாம், அல்லது அரசியல் காரணங்களினால், யார் சாமர்த்தியசாலிகளாக, கெட்டிக்காரர்களாக, ஏமாற்றுக்காரர்களாக இருந்துகொண்டு பொய் சொல்லி சமுதாயத்தையும் மக்களையும் எமாற்றி, சொத்து சேர்த்து வருகிறார்களோ, அவர்கள் என்றுகூட அப்படியும் சொல்லலாம், எப்படிச் சொன்னாலும், சமுதாயத்திற்கு விரோத



மானவர்கள், அங்கேயுள்ளவர்களிடம் வாடகை என்ற பெயரால் மாதம் 10, 15 ரூபாய் ஒவ்வொரு இடத்திலும் வசூல் செய்கிறார்கள். இவைகளையெல்லாம் கவனித்து, உண்மையான நேரான வாரிசு அந்தப்பகுதிகளுக்கு இருந்தால், அவர்களுக்கு நஷ்ட ஈடு போன்றவற்றைக் கொடுத்தாவது அந்தப் பகுதிகளை அரசு எடுத்து, குடிசைமாற்று வாரியத்திற்கு உபயோகப்படுத்தி, ஏழை மக்களுக்கு அவைகளை வீடுகட்டி வாடகைக்கு விடலாம். அல்லது அவர்களுக்கே கூட கொடுத்துவிடலாம் இப்படிச் செய்வதினாலும் இரண்டுவித வாய்ப்புகள், ஒன்று, நான் முதலிலே சொன்னதையே திரும்பத் திரும்ப சொல்ல வேண்டியதாக இருக்கிறது. அந்தப் பகுதிகளில் நிலவிவரும் சுகாதாரக்கேட்டை ஒழிக்கின்ற வகையில் ஒரு வாய்ப்பு கிடைக்கிறது, மற்றொன்று அந்தப் பகுதியில் வளர்ந்து வரும் சமூக விரோதிகளை ஒழிக்க முடிகிறது. உதாரணத்தற்குச் சொல்ல வேண்டும் என்றால் அங்கே கள்ளச் சாராயம் காய்ச்சுபவர்கள், அல்லது வேறு விதமான தவறான தொழிலில் ஈடுபடக் கூடியவர்கள், தவறான வழியில் மக்களை நடத்திச் சென்று, ஒரு தவறான சமுதாயத்தை உருவாக்குவதற்கு காரணமாக இருப்பவர்கள் எல்லாம், அந்தப் பகுதியிலிருந்து ஒழிக்கப்படுவார்கள். அதற்கு ஒரு வாய்ப்பாக இதனைப் பயன்படுத்திக் கொள்ளலாம், அவர்கள் எந்தக் கட்சியைச் சார்ந்தவர்களாக இருந்தாலும், அரசாங்கம் அதற்காக கவலைப்படாமல், அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கவேண்டும். அதற்கு அனைத்துக் கட்சிகளும் ஒத்துழைக்கத் தயாராக இருக்கிறோம் என்பதையும் சொல்லிக் கொள்கிறேன்.

அடுத்து, நுங்கம்பாக்கம் பகுதியில் நமச்சிவாயபுரம் என்று ஒரு இடம். அங்கே 20 ஆண்டுகளுக்கு முன்னதாகவே, பெரும் தலைவர் காமராசர் அவர்கள் வாழ்ந்த காலத்தில், சாதாரண ஏழை எளிய மக்களுக்குப் பயன்பட வேண்டும் என்கிற காரணத்திற்காக அவர்களுக்கு உதவி செய்ய வேண்டும் என்கிற நோக்கோடு, அவர்களிடம் மாதம் 3 ரூபாய் 2ரூ. 1ரூ என்று வாங்கிக்கொண்டு, அவர்கள் அந்த இடங்களில் குடிசைப்போட்டுக் கொள்ளலாம் என்று அனுமதித்திருந்தார்கள். ஆனால் இப்போது என்ன செய்கிறார்கள் என்றால், அவர்கள் இரண்டாயிரத்திற்கு மேலாக பணம் கொடுக்க வேண்டும்.

20 வருஷமாக கொடுக்காததையும் சேர்த்து திரும்ப கொடுக்க வேண்டும், நீங்கள் முன்பிருந்தே கொடுத்திருக்க வேண்டும். ஆனால் விட்டு விட்டதால் சேர்த்துக்கொடுக்க வேண்டும் என்று சம்மன் கொடுத்திருக்கிறார்கள். ஒன்று, குடிசை மாற்றுவாரியம் அந்த இடத்தை எடுத்துக்கொண்டு, வீடுகட்டும் திட்டத்திலே சேர்த்து வீடுகளை கட்டி, அவர்களுக்கே வாடகைக்கு விடுங்கள் அல்லது, அந்த வீடுகளை அல்லது நிலத்தை அவர்களுக்கே பட்டா கொடுத்து விடுங்கள், இப்படிப் பட்ட நிலமைகள் எல்லாம் பல இடங்களில் இருக்கின்றன. அவைகளை அரசு கவனித்து தக்க நடவடிக்கை எடுக்கவேண்டும்.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அடையாறிலே வசிக்கிறார்கள். அந்தப் பகுதியிலே ராஜா முத்தையாபுரம் என்ற இடம் ஒன்று இருக்கிறது. அங்கே 90 ஆண்டுகளுக்கு மேலாக பரம்பரையாக மக்கள் வசித்து வருகிறார்கள். எல்லா சமுதாய மக்களும் வசிக்கிறார்கள். இந்துக்கள், முஸ்லீம்கள், கிறித்துவர்கள், தாழ்த்தப்பட்டவர்கள் என்று எல்லோரும் அங்கே வசித்துக் கொண்டிருக்கிறார்கள். அந்த இடத்திலேகூட இப்படிப்பட்ட அவல நிலைமை இருக்கிறது. இதற்கு முன்னாலே இருந்த வீட்டு வசதி வாரிய சேர்மேன் போய்விட்டார். இப்போது புதிய சேர்மேன் வந்திருக்கிறார். அவர்களிடத்திலும்கூட இந்தப் பிரச்னைகளை எடுத்துச் சொல்லியிருக்கிறேன். இவைகளையெல்லாம் அமைச்சர் அவர்கள் கவனித்து ஆவன செய்ய வேண்டும் என்று இந்தச் சமயத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போலவே அண்ணா நகரத்திலே இருக்கிற இடங்களை பலபேருக்கு அரசாங்கம் வீட்டு வசதி வாரியத்தின் சார்பில் ஒதுக்கியிருக்கிறது. அவர்களில் சிலர், கட்டமுடியாத வசதியற்ற நிலையில் உள்ளவர்கள், திரும்ப சரண்டர் செய்கிறார்கள். அப்படி சரண்டர் செய்யப்பட்ட இடங்களுக்கு, ஆதிதிராவிடர்களுக்கு முன் உரிமை அளித்து தரப்படுமா என்று கேள்வி நேரத்திலே நான் கேட்டபோதுகூட, எல்லாப்பிரிவினரிடமிருந்தும் சரண்டர்கள் வருகிறது என்றும்; அப்படி சரண்டர்கள் வந்தால், யார் யார்களிடத்திலிருந்து வருகிறதோ அவைகளை நியாயப்படி பகிர்ந்தளிக்கிறோம் என்றும் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள்.

இந்த சரண்டர்கள் செய்வதிலே இரண்டு பகுதிகள் இருக்கின்றன. ஒன்று தாழ்த்தப்பட்ட மக்களுக்கு ஒதுக்கப்பட்ட நிலங்களை அவர்கள் கட்டமுடியாமல் இருக்கும் பொருளாதார நிலையில் சரண்டர் செய்கிறார்கள்-அது ஒரு பகுதி. இன்னொன்று, ஜெனரல் கேடரில் எல்லாவித மக்களுக்கும் ஒதுக்கப்படுகிற நிலங்களில், அவர்களும் பணம் இல்லாத காரணத்தினாலோ அல்லது மற்ற கஷ்ட நஷ்டங்களின் விளைவாகவோ, கட்ட முடியாத நிலையில் சரண்டர் செய்கிறார்கள். இப்படி இரண்டு பகுதிகள் இருப்பதால். இப்படி சரண்டர் செய்யப்படும் நிலங்களை, அவைகளுக்குப் பின்னாலே சீனியாரிட்டி முறைப்படி யாருக்கு கொடுக்க வேண்டுமோ, அவர்களுக்கு கொடுப்பதா, அல்லது குலுக்கல் சீட்டு முறையில் மறுபடியும் அவைகளை போடுகிறீர்களா என்று அறிந்துக் கொள்ள விரும்புகிறேன்.

முதலிலே எல்லாவற்றிற்கும் சேர்த்து குலுக்கல் சீட்டு போடும் முறையை நான் ஆட்சேபிக்கவில்லை, ஏற்றுக் கொள்கிறேன். அப்படித்தான் செய்ய வேண்டும். ஆனால் பிறகு சரண்டர் செய்யப்படும் நிலங்களை, யார் யார் வரிசைக்கிரமமாக பதிவு செய்திருக்கிறார்களோ அவர்களில் அடுத்தபடி





வருபவர்களுக்கு கொடுப்பதற்கு அரசு நேரிடையாக இதில் இறங்கி அந்தக் காரியத்தைச் செய்யவேண்டும். ஏனென்றால் இரண்டாவது முறையும் திரும்பவும் அதைக் குலுக்கல் சீட்டில் போட்டால் பல முறைகேடுகள் நடக்க வாய்ப்பு இருக்கிறது. நான் தனிப்பட்ட யாரையும் குறை சொல்லவில்லை.

நாடு அந்த அளவுக்கு அரசியல்வாதிகளான நம்மால் ஆக்கப்பட்டு விட்டது. அதை நாம் ஒத்துக்கொண்டுதான் ஆக வேண்டும். எனவே இந்தக் குழப்பங்களுக்கு எல்லாம் காரணம் ஆளுங்கட்சியினர், எதிர்க்கட்சியினர் என்று சொல்லப்படுகின்ற குற்றச்சாட்டிலிருந்து நாம் தப்பித்துக்கொள்ள முடியாது. அப்படிக் குற்றம் நடக்காமல் இருக்க வேண்டும் என்றால் அரசாங்கம் நேரடியாக சில விஷயங்களை கவனிக்க வேண்டும்.

அடுத்து இந்த பினாமி முறையைக் கண்டுபிடிப்பதைப் பொறுத்த வரையில் அது றித்த நடவடிக்கையை இப்போதே ஆரம்பித்து யார் யார் குடி இருக்கிறார்கள், அவர்கள் அரசாங்கத்தின் அனுமதி பெற்றவர்களா இல்லையா, அப்படி உத்தரவு பெறாமல் இருந்தால் சட்டப்படி அவர்களுக்கு நோட்டீஸ் கொடுக்க வாய்ப்பிருந்தால் கொடுக்க வேண்டும். இல்லையென்றால் அதற்கு என்னென்னச் செய்யவேண்டுமோ அதைச் செய்ய வேண்டும்.

அடுத்து டாக்டர் சந்தோஷம் நகர், ராதாகிருஷ்ணன் நகர் போன்ற இடங்களில் குடிசை மாற்று வாரியத்தின் மூலமாக வீடுகளைக் கட்டிக் கொடுத்து. இருக்கிறார்கள்ஆனால் அங்கே தண்ணீர் வசதி,லைட் வசதி போன்றவை இல்லை.எனவே அப்படி வீடுகளைக் கட்டிக் கொடுத்தும் அந்த வசதிகளை செய்து கொடுக்காத காரணத்தால் நல்ல காரியத்தை முழுமையாகச் செய்யவில்லை, அவற்றை செய்ய மறந்து விட்டோம். அல்லது தவறி விட்டோம்.எனவே உடனடியாகச் செய்வதற்கு அரசாங்கம் முன்வர வேண்டும். அவர்கள் கொடுக்க வேண்டிய வாடகையை வேண்டுமானால் இன்னும் கொஞ்சம் உயர்த்தினாலும் பரவாயில்லை வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டும்.

அடுத்து வரதராஜபுரத்தின் அருகில் எழும்பூர் இரயில்வே ஸ்டேஷன் பக்கத்திலே வீடுகள் இருக்கக்கூடாது, நாங்கள் வேறு வீடுகள் கட்டித்தருகிறோம் என்றெல்லாம் சொன்னோம். ஆனால் அவர்களில் பாதிபேர்களுக்குத்தான் வீடுகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன, பாதி பேர்களுக்கு மேல் கொடுக்கப்படவில்லை. மேலும் வரதராஜபுரத்திலே இருந்த அந்த மக்கள் நாங்கள் ஒரு சொசைட்டி மூலமாக இருக்கும் அந்த இடங்களைக் கொடுக்கிறோம். எங்களால் வீடு கட்ட முடியாது சுகாதாரமாக எங்களால் வாழ முடியவில்லை. அரசாங்கம் அதை எடுத்துக் கொண்டு செய்தால் அதற்கு பணத்தைக் கட்ட நாங்கள் தயாராக இருக்கிறோம் என்று சொல்லியும் அது சரியாக செய்ய முடியாத நிலைமை இருக்கின்றது.

அடுத்து மணலியில் வீடு கட்டி கொடுக்கப்பட்டது மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு தெரியும். பள்ளமான இடங்களை மேடாக மாற்றி அவற்றிலே 1,000 மற்றும் 2,000 வீடுகளைக் கட்டுகிறோம் என்று கட்டிவிடுகிறார்கள். ஆனால் மேடாக்கப்பட்ட அந்தப்பகுதிகளில் அவை சரியாக பதமாக ஆகாத காரணத்தால் அவசர அவசரமாக வீடுகள் கட்டப்பட்டதன் காரணத்தால் அந்த வீடுகள் எல்லாம் கீறல் விழுந்து விடுகின்ற நிலைமை ஏற்பட்டிருக்கின்றது. எனவே பள்ளமான இடங்களை மேடாக ஆக்கி அதன்பின் குறைந்தபட்சம் ஓராண்டுகாலம் ஆனதற்குப் பிறகுதான் வீடுகள் கட்ட வேண்டும். அங்கே கட்டப்பட்ட வீடுகள் பற்றிய பிரச்சினைகளைச் சொன்னபோது கூட மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அது குறித்து மீண்டும் பரிசீலனை செய்வதாக உறுதி கொடுத்தார்கள். இனிமேல் அவ்வாறு கட்டுகின்ற போது குறைந்தபட்சம் ஓராண்டுகாலமாவது இடைவெளி இருக்க வேண்டும்.

அடுத்து ஆதி திராவிட மக்களுக்கு 90 சதவீதம் வீடுகளைக் கட்டிக்கொடுக்கிறோம் என்று சொல்கிறார்கள். இது குறித்து இளையபெருமாள் அவர்கள் தெரியாமல் சொல்கிறார்கள் என்று கூட சொன்னார்கள். ஆனால் ஆதி திராவிட மக்களுக்கு வீடு கட்ட மத்திய அரசு 5,000 ரூபாய் கொடுத்தது. நீங்கள் 3,000 ரூபாய் தான் கொடுத்தீர்கள். அதுபற்றி இங்கே அவையிலே எல்லா உறுப்பினர்களும் பேசியதற்குப் பிறகு 4 ஆயிரம் ரூபாய் கொடுக்கிறோம் என்று சொன்னீர்கள் ஆனால் இதுவரையில் 3,000 ரூபாய் தான் கொடுக்கப்படுகின்றதே தவிர 4 ஆயிரம் ரூபாய் கொடுக்கப் படவில்லை. ஆகவே 90 சதவீதம வீடுகளைக் கட்டுகிறோம் என்று சொல்வதால் மட்டும் பயன் இல்லை. 5,000 ரூபாய் கொடுக்கப்பட வேண்டும். (மணியடிக்கப் பெற்றது.)

திரு எஸ். டி. உகம்சந்த்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களால் கொண்டுவரப் பட்டிருக்கின்ற வீட்டு வசதி, மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சி ஆகிய மானியக் கோரிக்கைகளின்மீது பேசுவதற்கு வாய்ப்பளித் தமைக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

நகர்ப்புறங்களில் வீட்டுவசதியினை அமைக்கின்றபோது சுகாதார வசதி, குடிதண்ணீர் வசதி போன்றவற்றை எல்லாம் சரியாக கவனித்தபின் வீட்டுவசதியை வழங்க வேண்டும். இன்று சென்னை நகரம் மிக வேகமாக வளருகின்றது. வீட்டுவசதி வாரியம் குடிசை மாற்று வாரியம் ஆகியவற்றின் மூலமாக பல குடியிருப்புகளும் வீட்டு மனைகளும் கட்டிக் கொடுக்கப்படுகின்றன. இன்று வீட்டு வசதி வாரியத்தின் மூலம் பல வீடுகள் கட்டுவதற்கு மனைகள் ஒதுக்கப்பட்டிருந்



தாலும் கூட அவ்வாறு ஒதுக்கப்பட்டு 10 ஆண்டுகள் ஆனாலும் கூட வீடுகள் கட்டப்படாமல் இருக்கின்றன. அதற்கான காரணங்களை ஆராய வேண்டும்: இன்று விலைவாசிகள் எல்லாம் உயர்ந்து வருகின்ற நிலைமையில் வீடுகளைக் கட்ட சிரமப்படுகின்றவர்களுக்கு அரசு கடன் வழங்க தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். மேலும் வீட்டுவசதி வாரியத்தின் மூலம் வீடு கட்டும் பகுதிகளில் முதலில் குடிநீர் வசதி, மின்சார வசதி ரோடுகள் ஆகியவைகளை ஏற்படுத்தியதற்குப் பிறகுதான் வீடுகளைக் கட்ட ஆரம்பிக்க

(முற்பகல் 11–40)

வேண்டும். இந்த வாரியத்தில் பல்லாயிரம் தொழிலாளர்கள் கேஷுவல் லேபரர்களாகவே உள்ளனர். அவர்கள் பணிகளுக்கு பாதுகாப்பு அளிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இன்று சென்னையில் எம். எம். டீ. ஏ. சட்டவிதிகளுக்கு மாறாக பல கட்டிடங்கள் எழுப்பப்பட்டு வருகின்றன. அவைகளை தடுக்க அரசு இதுவரை என்ன நடவடிக்கை எடுத்துள்ளது என்று தெரியவில்லை. இதனால் சுகாதார வசதி மிகவும் பாதிக்கப்படுகின்றது. கழிவுநீர்கள் சீராக செல்ல முடியவில்லை. சென்னை புறநகர் பஸ் நிலைய எதிரில் என். எஸ். சி. போஸ் ரோடிலும் அண்ணாசாலையிலும் ஆயிரம் விளக்கு பகுதியில் ஆயிரம் விளக்கு கபே என்னும் ஓட்டலுக்கு பக்கத்தில் ஒரு பெரிய கட்டிடம் கட்டப்பட்டுள்ளதாக எனக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. இப்படி பல புகார்கள் உள்ளன. இவைகள் மீது அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இன்று சென்னை நகரில் பல நெருக்கள் பெருகி வருகின்றது. ஜார்ஜ் டவுன் பகுதியில் நடைபாதை கடைகள் என். எஸ். சி. போஸ் ரோட்டின் இருபுறங்களிலும் கடைகள் இருந்து கொண்டு போக்குவரத்து நெரிசலையும். சுகாதாரக் கடுதல்களும் அதிகமாகி வருகின்றன. இந்த நடைபாதை கடைகளை அறவே அப்புறப்படுத்தவோ அல்லது தினம் மாறி மாறி ஒரு பக்கத்தில்தான் இக்கடைகளை வைக்க வேண்டும் என்று அனுமதித்து போக்குவரத்தை ஒழுங்குபடுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். சென்னை புறநகர் பஸ் நிலையம் சரியான முறையில் பராமரிக்கப்படவில்லை.

சென்னையில் மாடுகள் இன்று அதிகமாக நடமாடுகின்றன. கறவை மாடுகள் சாலைகளில் கட்டப்பட்டு பால் கறக்கப் படுகின்றன. ஜார்ஜ் டவுன் பகுதியில் வீரப்பன் தெரு, சின்ன நாயக்கன் தெரு ஆகிய பகுதிகளில் கறவை மாடுகள் சாலைகளில் கட்டப்பட்டு சுகாதார கேடுகளை உண்டாக்குகிறார்கள். 2,500 பிள்ளைகள் அங்கே 3 பள்ளிகளில் படிக்கிறார்கள். அவர்கள் எல்லாம் இதனால் பாதிக்கப்படு கிறார்கள். இப்படி ஒரு சூழ்நிலை அங்கே ஏற்பட்டு இருக்கிறது. அதை தடுப்பதற்கு வேண்டிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல் இன்றைக்கு சென்னை நகரத்தில் இருக்கின்ற நெரிச்சலை குறைப்பதற்கு சென்னை நகரைச் சேர்ந்த இந்த ஜார்ஜ் டவுனிலே இருக்கின்ற பல வியாபாரங்களை வேறு சில இடங்களுக்கு மாற்றுவதற்கு அரசு நடவடிக்கை எடுத்து கொண்டு வருகிறது. அதற்கு என்னுடைய பாராட்டுதலையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன். சென்னை கோயம்பேடு பகுதியில் துணி மொத்த விற்பனை நிலையத்தையும். தானியங்கள், பழங்கள், பூக்கள் போன்ற மொத்த விற்பனை நிலையங்களையும் கட்டுவதற்கு அரசு துரித நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அந்த ஜார்ஜ் டவுன் பகுதியில் இன்றைக்கு நிறைய கடைகள் இருப்பதால் அந்தப் பகுதியிலிருந்து கழிவுநீர் செல்வதற்கு வசதி இல்லாமல் இருக்கிறது. ஆகவே அந்த பகுதியில் உள்ள கடைகள் மற்றப்பகுதிக்கு மாற்றப்பட்டால் அந்த பகுதி மிகவும் நல்ல முறையில் பராமரிக்கப்படும். அதற்கு துரித நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல் இன்றைக்கு வீட்டு வசதி வாரியத்தின் மூலமாக மதுராந்தகம் நகராட்சிப் பகுதியில் பல வீடுகளைக் கட்டிக்கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அரசு ஊழியர்களுக்கும் மற்றவர்களுக்கும் உடனடியாக வீடுகள் கட்டுவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுத்து உத்திரவு இட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

நகராட்சியில் வேலை செய்கின்ற அந்த நகரசுத்தி தொழிலாளர்களுக்கு இந்த வீட்டுவசதி வாரியத்தின் மூலமாக வீடுகளை கட்டுவதற்கு வேண்டிய உத்தரவுகளை போட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்

அதைப்போல் இன்றைக்கு கிராமிய கூட்டுறவு வீடு கட்டும் சங்கங்களில் தற்பொழுது வீடுகள் கட்டித் தருவதில் தேக்க நிலைமை உள்ளது. பலர் முதல் தவணை, இரண்டாம் தவணை கடன்களைப் பெற்று அடுத்த தவணை கடன் கிடைக்காமல் பல மாதங்களாக வீடுகளை கட்ட முடியாமல் தெருவிலே காத்துக் கொண்டு இருக்கக்கூடிய நிலைமை உள்ளது. மதுராந்தகம் நகரத்தில் உள்ள கூட்டுறவு கிராமிய வீடு கட்டும் சங்கத்தில் இந்த நிலைமை அதிகமாக உள்ளது. போதிய கடன் கிடைக்காததால் கடன் கேட்டவர்களுக்கு கடன் தொகை வழங்க முடியவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது. இதனால் பல மக்கள் குடிசைகளில் இருந்து கொண்டு மிகவும் கஷ்டப்படுகிறார்கள். இதற்கு காரணம் என்ன என்று கேட்டால் போதிய நிதி வசதி இல்லை என்று சொல்கிறார்கள். அது மட்டும் அல்லாமல் அரசு கொடுக்கும் நிதிகளை இச்சங்கம் ஏற்கனவே உள்ள அவுட்ஸ்டேண்டிங்களுக்கு கொடுத்து விடுகிறார்கள். புதிதாக யாருக்கும் கடன் கொடுக்கவில்லை. ஏற்கனவே கடன்





கேட்டவர்களுக்கு தான் கொடுக்கிற நிலைமை இருக்கிறது. இதை அரசு ஆராய்ந்து தக்க நிதிவசதிகளை செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். மாவட்ட அளவில் நடைபெறுகின்ற அந்த வீட்டு வசதி குழுவில் நான் ஏறத்தாழ எல்லாக் குழு கூட்டங்களிலும் கலந்து கொண்டிருக்கிறேன். எல்லா கூட்டங்களிலும் தெரிவிக்கப்பட்ட ஒரே காரணம் நிதிநிலைமை வரவில்லை, அதனால் தான் பணம்கொடுப்பதற்கு சிரமம் ஏற்படுகின்றது என்று சொல்கிறார்கள். இதை போக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் 1978-7-9ம் ஆண்டில் மதுராந்தகம் தாலுக்காவில் செங்கற்பட்டு மாவட்டத்திலும் ஜனதா வீடுகளை கட்டுவதற்கு அரசு ஏற்பாடு செய்து இருந்தது. அவர்களுக்கு எல்லாம் சுமார் 112 வீடுகள் கட்டிக்கொடுக்கப்பட்டன. மற்ற வீடுகள் கட்டி முடியவில்லை. அவர்களுக்கு மேலும் பல வீடுகளை கட்டி முடிப்பதற்கான நடவடிக்கைகள் இன்றைக்கு எடுக்கப்பட்டிருந்தாலும் அவைகள் கட்டி முடிக்கப்படாமல் இருக்கின்றன.

மாவட்ட அளவிலே நடைபெறுகின்ற வீட்டு வசதி கூட்டங்களுக்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் வருவது இல்லை என்று ஒவ்வொரு கூட்டத்திலேயும் நாங்கள் தீர்மானத்தை நிறைவேற்றியிருக்கிறோம். அவர்கள் கண்டிப்பாக அடுத்த கூட்டத்திற்கு வரவேண்டுமென்று தீர்மானத்தை நாங்கள் நிறைவேற்றி அவர்களுக்கு அனுப்பியிருந்தும் அவர்கள் வரவில்லை. எனவே அதன் மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு கிராமங்களிலே வீடுகளைக் கட்டுவதற்கு 4 ஆயிரம் ரூபாயில் வீடுகளைக் கட்டவேண்டுமென்று அரசு உத்தரவு போட்டு இருக்கிறது. அந்த நிலைமையை மாற்றுவதற்கும் அவர்களுக்கு கடன் வசதிகளை உயர்த்தி ரூ. 7,500 முதல் 10 ஆயிரம் வரையில் கொடுப்பதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கிராமங்களிலே வீடுகளைக் கட்டவேண்டுமென்றால் பட்டாக்கள் இருந்தால்தான் வீடுகளைக் கட்டுவதற்கு அனுமதிக்கப்படுகிறது. அந்த நிலையை மாற்றி நத்தம் புறம்போக்கு நிலத்திலே வீடு கட்ட வேண்டுமென்றாலும் சரி, பல ஆண்டுக்காலமாக அவர்கள் அங்கே தான் இருக்கிறார்கள் என்று தாசில்லார் சர்டிபிகேட் கொடுத்தால் போதும் அதை வைத்துக் கொண்டு கடன் வசதிகளை கொடுக்கலாம் என்ற முறையிலே உத்திரவிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

முந்தைய ஆட்சிக்காலத்திலே ஆதிதிராவிடர்களுக்கு பல குடியிருப்புகள் கட்டியிருக்கிறார்கள். அவையெல்லாம் இன்றைக்கு மிகவும் பழுதடைந்திருக்கின்றன. மக்கள் சரியான வகையில் வாழ்வதற்கு ஏற்ற சுகாதார வசதிகள் இல்லாமல் இருக்கிறார்கள். என்னுடைய மதுராந்தக தாலுக்காவிலே இதுபோன்று 2 ஆயிரம் வீடுகள் இருக்கின்றன. அந்த குடியிருப்புகளில் வாழ்கிறவர்கள் எல்லாம் வேறு இடத்திற்கு அடைக்கலம் புகுந்திருக்கிறார்கள். அந்த வீடுகளை சரிசெய்து மக்கள் குடியேறுவதற்கு ஏற்ற முறையில் மாற்றி அமைத்து அந்த வீடுகளை நல்ல முறையிலே பயன்படுத்த உரிய உத்திரவை அரசு பிறப்பிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். வீட்டு வசதி வாரியம் மூலமாக பல பகுதிகளில் வீடுகள் கட்டப்பட்டிருந்தாலும் அந்த வீடுகளில் எல்லாம் சரியான முறையிலே சுகாதார வசதிகள் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். குடிசை மாற்று வாரியத்தின் மூலமாக பல வீடுகள் கட்டியிருந்தாலும் பலர் பினாமியாக அந்த வீடுகளில் இருக்கிறார்கள் என்று ஒரு புகார் இருக்கிறது அந்த நிலைமையை மாற்றியமைக்க தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு இந்த மானியக் கோரிக்கைகளை வரவேற்று, என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

திரு பி. முகமது இஸ்மாயில்மாற்றுத் தலைவர் அவர்களே, வீட்டு வசதி நகர்புற தொடர்பான மானியங்களில் என்னுடைய கருத்துக்களை அவைமுன் வைப்பதற்கு இந்த சந்தர்ப்பத்தை நான் பயன்படுத்துகிறேன். நகர்பகுதிகளிலேயும் கிராமப் பகுதிகளிலேயும் வீட்டு வசதிக்கான ஆக்கப்பூர்வமான பல திட்டங்களை அரசாங்கம் நிறைவேற்றி வருகிறது இதிலே சில குறைபாடுகள் எங்கள் கவனத்திற்கு வந்ததை உங்கள் கவனத்திற்கு கொண்டு வருகிறேன். கூட்டுறவு வீட்டு வசதி சங்கங்கள் அமைத்து அதன் வாயிலாக நகர்ப்புறங்களிலும் கிராமப்புறங்களிலும் வீட்டு வசதிகளை செய்வதற்கான நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டிருக்கிறது. இதை அமலாக்குகிறபோது நகர்ப்பகுதிகளிலே வீடு கட்டுவதற்கான கடன்களை நீங்கள் வழங்குகிற போது அந்த தவணைகள் எல்லாம் ஒழுங்காக திரும்பி வந்து கொண்டிருக்கின்றன. அதனாலே அந்தச் சங்கங்களுக்கு லாபம் கிடைக்கிறது. ஆனால் கிராமப் பகுதிகளிலே உள்ள வீட்டு வசதி சங்கங்களின் மூலமாக நீங்கள் வீடு கட்டுவதற்காக கடன்களை வழங்குகிறபோது அந்த தவணைகள் சரியான முறையில் திரும்ப வருவதில்லை. எனவே அந்த சங்கங்கள் நட்டத்தை சந்திக்கும் நிலை இருக்கிறது. கடன்களைப் பெற்றவர்கள் திருப்பித் தர முடியாமல் போவதால் அந்த சங்கங்களில் முடக்கம் ஏற்படுகிறது. நட்டம் ஏற்படுகிறது, அதன் விளைவாக நகர்ப்புறங்களிலே கடன் வாங்கியவர்கள்





ஒழுங்காகத் தவணைகளைச் செலுத்தியவர்கள் அந்த லாபத்திலே பயன் அடையக் கூடிய நிலைமை இல்லை. இந்தக் குறையைப் போக்குவதற்காக கிராமப் புறங்களிலே வீட்டுவசதி சங்கங்கள் என்றும் நகர்ப்புறங்களிலே வீட்டுவசதி சங்கங்கள் என்றும் தனித்தனியாக சங்கங்கள் அமைப்பதை அரசு பரிசீலிப்பது நல்லது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இல்லையென்றால் கிராமப் பகுதிகளிலே கடன் பெற்றவர்கள் கட்ட முடியாத போது பேட் டெப்ட்ஸ் ஏற்பட்டு சில நேரங்களிலே அவை தள்ளுபடி செய்யக்கூடிய நிலைமையும் ஏற்படுகிறது. இப்படிக் கிராமப்புறங்களிலே இருக்கக்கூடியவர்கள் செய்கின்ற தவறு காரணமாக நகரப் புறங்களிலே உள்ளவர்கள் தங்கள் கடன்களை திருப்பிச் செலுத்தக்கூடியவர்களுக்கு ஏற்படக்கூடிய நட்டத்தை தவிர்க்க தனித்தனியாககூட்டுறவு வீட்டு வசதி சங்கங்களை ஏற்படுத்துவது நல்லது என்பதை அரசாங்கத்தின் கவனத்திற்கு கொண்டு வருகிறேன். சென்னையைப் பொறுத்த வரையில சாஸ்திரி

(முற்பகல் 11.50)

நகர் போன்ற சில குடியிருப்புகளில் அரசாங்க துறைகளில் வேலை பார்க்கின்றவர்கள் பல்லாண்டுக் காலமாக வாடகைக்கு குடியிருந்து வருகிறார்கள். அவர்கள் வேலையிலிருந்து ஓய்வு பெறுகிறபோது அந்த வீடுகளை காலிசெய்துவிட்டு வரவேண்டிய நிலைமைகள் இருக்கின்றன. நான் அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்வதெல்லாம் நீண்டகாலமாக அந்த குடியிருப்புகளில் வாடகைக்காக குடியிருந்து விட்டு அரசுத் துறைகளிலிருந்து ஓய்வு பெறுகின்றபோது தெருவிற்கு தள்ளப்படுகின்ற நிலைமை இருக்கிறது. ஆகவே அப்படிக் குடியிருந்தவர்களுக்கு நிரந்தரமாக குடியிருப்பதற்கு வசதி செய்கிற முறையில் அரசாங்கம் பரிசீலனை செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நகரைப் பொறுத்த வரையில் குடிசைகள் பல இடங்களில் புதியதாக திடீர் திடீரென்று தோன்றி வருகின்ற நிலைமையை நாம் பார்க்கிறோம் பல தோழர்கள் நகரப்பகுதிகளில் அரசாங்கத்திற்கு சொந்தமான இடங்களில் சிறிய குடிசையை அமைத்து அதை பிறகு வேறு நபருக்கு வாடகைக்கு விடுகிற நிலை தொடர்ந்து இருந்து வருகிறது. ஒரு இடத்திலே குடிசையை வாடகைக்கு விட்டுவிட்டு பிறகு வேறு இடத்தைத் தேர்ந்தெடுத்து அங்கே குடிசைப் போடுகிறார்கள். அதையே தொழிலாக வைத்து அவர்கள் நடத்துகிறார்கள். இந்த ராக்கெட்டை முறியடிப்பதற்கான நடவடிக்கையை அரசாங்கம் எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

சில கூட்டுறவுச் சங்கங்களில்தேர்தல் மூலமாக தேர்ந்தெடுக்கப்பட்ட குழுவின் மூலமாக அதனுடைய பணிகள் சீராக ஆற்ற முடியாதநிலையில்அதிகாரிகள்செயல்பட்டிக்கொண்டிருக்கிறார்கள்

இதுபோன்ற குறைகள் எங்களுடைய கவனத்திற்கு வந்து கொண்டிருக்கின்றன. குறிப்பாக திண்டுக்கல் நகரில் நடைபெற்றுக் கொண்டிருக்கிற ஒரு கூட்டுறவு வீட்டு வசதி சங்கம் புதியதாக சில தோழர்களை தேர்வு செய்து திறமையாக செயல்பட்டுக்கொண்டு வருகிறது. சில ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகள், தீர்மானங்களைக்கூட அந்தக் குழு மேற்கொண்டுள்ளது, ஆனால் அவைகள் நிறைவேற்றப்படாமல், அதை தடுக்கிற நிலையில் அரசு அதிகாரிகள், குறிப்பாக துணைப் பதிவாளர் செயல்பட்டுக் கொண்டு வருவதாக குற்றச்சாட்டு வந்து கொண்டிருக்கிறது. அதன் தொடர்பாக சில குற்றச்சாட்டுகள் அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கும் வந்திருக்கும் என்று நினைக்கிறேன், அங்கே அவர்கள் கட்டியிருக்கிற ஒரு கட்டிடத்தை அதிகமான லாபம் ஈட்டவேண்டுமென்ற நோக்கத்தோடு அதிக வாடகை யார் தருகிறார்களோ அதை பார்த்து வாடகைக்கு விடுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. டெண்டர் கூட கால்ஃபார் செய்திருக்கிறார்கள். மத்திய அரசு நிறுவனமாகிய தந்தி இலாக்கா அதற்கு 1400 ரூபாய் வாடகை தருவதாக ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். அதை விடுவதற்கு துணைப் பதிவாளர் தடையாக இருப்பதாக குற்றம் சாட்டப்படுகிறது. இந்த விஷயத்திலே அரசாங்கத்தின் கவனம் செல்லவேண்டுமென்று நான் இந்த சந்தர்ப்பத்திலே உங்களைக் கேட்டுக் கொள்கிறேன். மிகத் திறமையாக செயல்படுகின்ற சங்கங்கள் கூட அரசு அதிகாரிகளின் தவறான போக்குகளின் காரணமாக அதன் செயல்முறைகள் தடைபட்டு விடுமோ என்ற அச்சம் எங்களுக்கு ஏற்படுகிறது அதிலே இந்த குறிப்பிட்ட சங்கத்தைப் பற்றி வந்திருக்கிற குற்றச்சாட்டு துணைப்பதிவாளர் வேண்டுமென்றே சில முட்டுக் கட்டுகளை ஏற்படுத்தி அந்த சங்கம் சரியாக செயல்படவில்லை என்ற குற்றச்சாட்டை சுமத்தி அதை கலைப்பதற்கான முயற்சிகளை மேற்கொண்டு வருகிறாரோ என்ற சந்தேகத்தை ஏற்படுத்துகிறது. எனவே அதை அரசாங்கம் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். குடிநீர் பொறுத்த வரையில் அரசாங்கம் மிக ஆர்வத்தோடு செயல்பட்டு வருகிறது என்பதற்கு, என்னுடைய பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்கிறேன் அதே நேரத்தில் பல இடங்களில் நீங்கள் தோண்டுகிற குழாய் கிணறுகள் பயனற்றதாக இருக்கின்றன என்பதை உங்களுடைய கவனத்திற்கு கொண்டு வருகிறேன். குறிப்பாக எங்கள் மாவட்டத்தில் பல பம்ப்கள் சயலற்று இருக்கின்றன. ஆயிரக் கணக்கான ரூபாய்கள் செலவிடப்பட்டு அந்த பம்புகள் போடப்படுகின்றன. (குறுக்கீடு) ஆகவே இந்த கூட்டுறவுச் சங்கங்கள் திறமையாக செயல்படுவதற்கான நடவடிக்கைகளில் அரசு அதிகாரிகள் குறுக்கிடாமல் கவனமாக பார்த்து கொள்ள வேண்டுமென்று கேட்டு சந்தர்ப்பம் அளித்ததற்கு நன்றி கூறி அமர்கிறேன்.





திரு கு. ரமணி: மதிப்பிற்குரிய மாற்றுத் தலைவர் அவர்களே, இந்த மானியங்கள் மீது மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் சில முக்கியமான விஷயங்களை உங்கள் முன்னால் வைக்க விரும்புகிறேன். அமைச்சர் அவர்கள் நமக்கு கொடுத்திருக்கிற இந்த அறிக்கையிலே சொல்லப்பட்டிருக்கிற முக்கியமான விஷயம், பொருளாதாரத்தில் நலிவுற்றோரின் செலவு செய்யும் சக்தியை மனதில் கொண்டு எல்லா பிரிவினருக்கும் வீட்டு வசதியைச் செய்து கொடுப்பதுதான் இத் துறையின் அடிப்படையான கொள்கையாகும் என்பது. இந்த கொள்கை மிகவும் வரவேற்கத்தக்க கொள்கை. இதற்காக ஏழை எளிய மக்களை முக்கியமாக கருத்திலே கொண்டு, இப்படிப்பட்ட வீட்டு வசதித் திட்டங்கள் நடைபெறுகின்றன என்பது இதனுடைய பொருள். அந்த முறையிலே, காரியங்கள் நடக்க வேண்டுமென்பதைத்தான் நாங்களும் விரும்புகிறோம். ஆனால் அரசினுடைய இந்தக் கண்ணோட்டத்தையே முறியடிக்கக்கூடிய பல்வேறு நடவடிக்கைகள் இன்றைக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் பலர் அதைப்பற்றி பல விவரங்களை கொடுத்திருக்கிறார்கள். அவைகள் முற்றிலும் உண்மையான விவரங்களாக இருக்கின்றன. எங்களுக்கும் அனுபவம் அதுதான் வீடு கட்டுவதற்காக, 1980-81, 1981-82 ஆகிய இந்தக் காலத்தில் கட்டி முடிக்கப்பட்டிருக்கிற வீடுகள் 82,716 என்று கணக்குக் கொடுத்திருக்கிறார்கள். ஆனால், 1983-84க்கு வரும்போது அதனுடைய எண்ணிக்கைகள் மிகவும் குறைவாக வருகிறது. இந்த எண்ணிக்கை இவ்வளவு குறைந்துபோக என்ன காரணம், 82,716 வீடுகளிலிருந்து, 20,000 வீடுகள் தான் 1983-84-ல் என்று சொல்கிறீர்களே, அதற்கு என்ன காரணம் வீட்டுத்தேவைகள் குறைந்து விட்டது என்று அரசு கருதுகிறதா? அல்லது, பண நெருக்கடியினாலே இதைக் குறைத்து விடலாம் என்று நினைக்கிறார்களா என்று தெரியவில்லை.

அதை அமைச்சர் அவர்கள் விளக்குவார்கள் என்று நினைக்கிறேன். எங்களுடைய கோரிக்கைகள் என்னவென்றால் நீங்கள் ஏற்கனவே சொல்லியிருக்கும்படியான அந்த கருத்துக்கு ஏற்ப இந்த அடிப்படைக் கொள்கைக்கு ஏற்ப ஏழை எளியவர்களுக்கும் தொழிலிலே குறைந்த வருமானம் பெறுபவர்களுக்கும் அதிகப்படியான வீடு கட்டி கொடுப்பதற்கு வேண்டிய முழு முயற்சியையும் அதிகப்படியான செலவு செய்தாலும், செய்ய வேண்டுமென்பது என்னுடைய கோரிக்கை.

அதே மாதிரி, நிலத்தைக் கையகப்படுத்தி, அதைச் சரி செய்து மேம்படுத்தி அவர்களுக்கு கொடுக்கப்பட்டது. அதற்கு இந்த 1983-84 லே போட்டிருக்கக் கூடிய திட்டம் 200 ஹெக்டேருக்குத் தானிருக்கிறது. இதிலே பார்த்தோம் என்றால், சென்னை நகரைச்சுற்றியிருக்கிற நான்கு ஐந்து பிரிவுகளுக்கு அதிலே இடங்கள் வந்திருக்கின்றன [illegible] னால்

திண்டுக்கல்லிலே 40 ஹெக்டேரும், கோவை புதூரிலே 15 ஹெக்டேரும், இவ்வளவுதான் அதில் இடம் பெறுகிறது. அப்படியானால், மதுரை மாநகராட்சி, அதே மாதிரி, திருச்சிராப்பள்ளி, சேலம், இது போன்ற பெரிய பெரிய நகராட்சிகள் மாநகராட்சிகளிலும் அதனை சுற்றியிருக்கும்படியான பெல்ட் ஏரியாக்கள் என்று சொல்லக் கூடிய இடங்களிலே, நிலத்தின் விலை பயங்கரமான அளவுக்கு ஏறுகிறது. அந்த நிலங்கள் முழுவதையும் அரசு இப்பொழுதிருந்து முன்கூட்டியே தனிப் பார்வையை செலுத்தி, கையகப்படுத்தி, அந்த நிலங்களை மேம்பாடு செய்து சாதாரண ஏழை, எளிய மக்களுக்கு வருமானம் குறைந்தவர்களுக்கு, அதைச் சரி செய்து கொடுப்பது என்பது முக்கியமான நடவடிக்கையாக இருக்கவேண்டும். மேலே சொன்ன கருத்தின் அடிப்படையிலே அப்படி வந்தால் தான் சரியாக இருக்கும். நகரப்புறங்களிலே பெரிய சூதாட்டம் இன்றைக்கு நடக்கிறது. பணம் படைத்த, கள்ளப் பணக்காரர்கள், தங்களது கறுப்புப் பணம் முழுவதையும் முதலீடு செய்து, பல மாடிக் கட்டிடங்கள் கட்டுகின்றனர். பல மாடி கட்டிடங்கள் வருகின்றன என்றால் சும்மா வரவில்லை. இந்த முறையிலேதான் வருகிறது. அதைத் தடுப்பதற்கு முனைந்து செயல்பட வேண்டுமென்பது எங்களுடைய கோரிக்கை.

1982--83லே ரூ. 70 இலட்சம் பணம் என்று சொன்னால் 1983-84லே, ரூ. 200 இலட்சம் என்று கொடுத்திருக்கிறார்கள். பணம் அதிகம் அல்லவா என்று கேட்கலாம். ஆனால் பணத்தினுடைய மதிப்பு எவ்வளவு கீழே போயிருக்கிறது? நிலம் எப்படிக் கிடைக்கும் என்பதுதான்முக்கியம் இந்தப் பணத்திற்குப் போன வருஷம் கிடைத்த நிலம் என்ன? இந்த வருஷம் எவ்வளவு நிலம் கிடைக்கும் என்பதுதான் பிரச்னை? ஆகவே, தொகையினுடைய மதிப்பு என்பதை மட்டும் பார்த்தால், இந்த நிலத்தினுடைய அளவு என்பது அநேகமாகத் தெரியாமல் போகும். ஆகவே, அப்படியில்லாமல் அதிகப்படியான நிலத்தைக் கையகப்படுத்த வேண்டுமென்பது என்னுடைய கோரிக்கை.

அதே மாதிரி மற்ற பல மாநகரங்களிலே, இன்றைக்கு இது தேவைப்படுகிறது. மத்திய தர குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் அரசாங்க ஊழியர்கள், ஆகியோருக்கெல்லாம், இப்படிப்பட்ட மேம்பாடு செய்த இடங்களைக் கொடுத்து, அவர்களுக்கு விடு கட்ட வசதி செய்து கொடுப்பது மிகமிக அவசியம். தொழிலாளர்களுக்கு கூட அது தேவையாக இருக்கும் அந்த மாதிரி கொடுக்க வேண்டியது அவசியம்.

அடுத்தது, தொழிற்சாலை தொழிலாளிகளைச் சம்பந்தப்பட்ட வரையில், இப்பொழுது கடுமையான பார்வைக்கு அரசு போயிருக்கிறது என்பது எங்களுக்கு கிடைத்திருக்கிற பல தகவல்கள். உதாரணமாக, ரூ.350-க்கு மேலே வருமானம்



இருக்கும் தொழிலாளர்களுக்கு உதவி செய்து கட்டிக் கொடுத்திருக்கக் கூடிய வீடுகளுக்கெல்லாம் ரூ. 15 வாடகை இருந்தது. இப்பொழுது அவர்களுக்கு மிக அதிகப்படியான வாடகையை உயர்த்தி, அவர்களிடத்திலே உயர்ந்த வாடகையை வசூலிக்கும்படியான உத்தரவை, லேபர் கமிஷனர் ஆலோசனைபடி போட்டு, அதை அமுல்படுத்த முயற்சி எடுக்கிறார்கள். அப்படிப்பட்ட நிலைமை வருவது சரியல்ல. சுருக்கமாகச் சொன்னால் திருப்பூர் நகரத்திலேயிருந்து ரிப்போர்ட் வந்திருக்கிறது. அமைச்சர் அவர்களுக்கு அந்த ரிப்போர்ட் வந்திருக்கும் என்று கருதுகிறேன். ஆனால் நிதி உதவி அளிக்கப்பட்டு, தொழிலாளர்களுக்காகக் கொடுக்கப்பட்ட அந்த வீடுகளிலே, அந்தத் தொழிலாளர்களுடைய ஆணையாளர் உத்தரவு பிரகாரம் ரூ. 230 வாடகை ஒரு பிரிவுக்கும், 174 ரூபாய் ஒரு பிரிவுக்கும், 128 ரூபாய் ஒரு பிரிவுக்கும் என்று வாடகை நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. காரணம் அவர்களுக்கு 500 ரூபாய்க்கு மேல் வருமானம் வருகிறது என்று சொல்லப்படுகிறது. இந்தக் காலத்தில் 500 ரூபாய் என்பது 50 ரூபாய்க்கு கீழான வருமானம். இதைக் கணக்கில் கொள்ள வேண்டும். இல்லையென்றால் ஏற்கனவே சொல்லப்பட்ட கருத்து மீறப்பட்டது மாதிரிதான் ஆகும். இந்தப் போக்கு சரியாகாது. 15 ரூபாய் வாடகை கொடுத்து 15 வருஷங்களாக அங்கே குடியிருந்தவர்களுடைய ரிப்போர்ட் வந்திருக்கிறது. அதையெல்லாம் அரசு பரிசீலிக்க வேண்டும். அவர்களது வாடகையை உயர்த்தக் கூடாது.

(நண்பகல் 12-00)

தனியார் பகுதிகளுக்கு கடன் கொடுப்பது சம்பந்தமாக பார்த்தால் 1981–82 ஆம் ஆண்டில் 1,200—த்துச் சொச்சமாக இருந்தது. 1982-83 ஆம் ஆண்டில் 114 ஆக ஆகி, 1983–84 ஆம் ஆண்டில் 96 ஆகக் குறைந்திருக்கிறது. வசதி படைத்த தனியார்கள் வியாபாரம் செய்யக் கூடிய விதத்திலே வீடு கட்டுவதற்கு அரசாங்கம் உதவி செய்ய வேண்டுமென்று நாங்கள் சொல்லவில்லை. ஆனால் சாதாரண ஒரு குடும்பத்தைச் சேர்ந்தவர்கள், 1000 ரூபாயோ 1,500 ரூபாயோ அல்லது 500 ரூபாயோ சம்பாதிக்கின்ற அப்படி பட்டவர்கள் சிறுவீடுகளைக் கட்டிக் கொள்வதற்கு வேண்டிய கடன் தொகைகளைக் குறைக்கக் கூடாது என்று கேட்டுக் கொள்கிறேன். அப்படிப்பட்ட அதிகமானவர்களுக்குக் கடன் தொகைகளைக் கொடுக்க வேண்டும். அதனால் தனியார்களுக்கும் வீடு கிடைக்கும். வீடு கட்டும் தொழிலாளர்களுக்கும் வேலை கிடைக்கும். இன்றைக்கு அப்படி இல்லாமல் மிகப் பெரும் கஷ்டம் இருக்கிறது.

அடுத்து அமைச்சரவர்களிடத்தில் முக்கியமாகச் சொல்ல வேண்டிய ஒரு விஷயம். கோவை மாநகரத்தில் பல காலனிகளை அரசாங்கம் கட்டியிருக்கிறது. குறிப்பாக பேரூர் செல்லப்

வழியில் செல்வபுரம் என்ற ஒரு காலனி இருக்கிறது. கிட்டதட்ட 4,000 வீடுகள் அங்கே இருக்கின்றன. அங்கே 1,000 வீடுகள் பினாமி வீடுகளாக வைக்கப்பட்டிருக்கின்றன. இங்கே கூட அது சம்பந்தமாக ஒரு கேள்வி கேட்கபட்ட நேரத்தில் மாண்புமிகு அமைச்சரவர்கள் மிகவும் நல்ல முறையில் பதில் கூறியிருக்கிறார்கள். அந்தப் பதில் வரவேற்கத்தக்க பதில். ஒரு விவரத்தைச் சொல்ல விரும்புகிறேன். அங்கே உள்ள அதிகாரிகள் இதை சமாளிக்க முடியாமற் திணறிக் கொண்டிருக்கின்ற நிலைமை இருக்கிறது. அதைப்பற்றிச் சொல்லித்தான் தீர வேண்டியிருக்கிறது.

அந்த வீடுகளை யாருக்கு முதலில் ஒதுக்கி கொடுத்தார்களோ ஃபர்ஸ்ட் அலாட்டி என்ற அவர்களுக்கு ஏதோ பணத் தக் கொடுத்தோ அல்லது மிரட்டியோ வெளியேற்றி விடுகிறார்கள். அப்படி வெளியேற்றப்பட்டவர்களின் வீடுகளின் கணக்கை என்னால் சொல்ல முடியும். எத்தனையோ சொல்லலாம், ஆனால் அவைகளெல்லாம் சொல்வதற்கு எனக்கு நேரம் இல்லை. உதாரணத்திற்குச் சொல்கிறேன். எக்ஸ் 31 என்ற வீட்டில் உள்ள ஆளை வெளியேற்றி விட்டு 2 ,000 ரூபாய்க்கு விற்கப்பட்டிருக்கிறது. எக்ஸ் 21 என்ற வீடும் அதே மாதிரி அதே நபர்தான் அந்த வீட்டின் சொந்தக்காரராக இருக்கிறார். எக்ஸ் 399 என்ற வீடு 4,000 ரூபாய்க்கு விற்கப்பட்டிருக்கிறது. எக்ஸ் 32 நம்பர் உள்ள வீடு 14,500 ரூபாய்க்கு விற்கப்பட்டிருக்கிறது. எக்ஸ் எக்ஸ் வீடு ரூபாய் 8,000-க்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. பி 3 என்ற வீடு 15,000 ரூபாய்க்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. ஒய் 30 என்ற வீடு 9,000 ரூபாய்க்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. ஒய் 81 என்ற வீடு 14,000 ரூபாய்க்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. ஏ வீடு 1 ,000 ரூபாய்க்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. இதை யார் கொடுத்தார்கள்? அரசாங்கத்தின் சொத்தைச் சொந்த சொத்தாக ஆக்கிக் கொண்டு ஒரு ரௌடிக் கூட்டம், அதற்கு உதவியாக இரண்டு போலீஸ் ஸ்டேஷன்களைச் சேர்ந்த சில அதிகாரிகள் ஒன்று பேரூர் போலீஸ் ஸ்டேஷன், மற்றொன்று கோவை மநகரத்தில் இருக்கின்ற நம்பர் B-1 போலீஸ் ஸ்டேஷன் அவைகளில் உள்ள சில அதிகாரிகள் ஆளுங்கட்சியினுடைய பெயரை சொல்லி இரண்டு மன்றங்கள். அதில் இருப்பது பல ரௌடிகள், பல தண்டனைக்கு உள்ளானவர்கள், ப்பாடிப்பட்டவர்கள் அவர்களும் இருந்து இந்தவீட்டு வியாபாரம் நடந்திருக் றது சொந்தசொத்து போல் இப்படிக் கொடுந்திருக்கிறார்கள். இம்மாதிரி கொடுத்தற்கான பத்திரங்களையும் எழுதி மாற்றுதல் ஆகியிருக்கிறது. இது முழுவதும் பத்திரங்கள் என்னுடையகையிலே இருக்கின்றன. வேண்டுமானால் அமைச்சரவர்களிடத்தில் கொடுப்பதற்கும் நான் தயாராக இருக்கிறேன். இப்படிச் செய்வதற்கு எந்த விதமான உரிமையும் கிடையாது. இது அப்பட்டமான ஒரு சட்ட மீறல். இப்படிப்பட்ட விஷயங்களைச் செய்து செய்து அது எங்கே போயிருக்கிற ! என்று சொன்னால் எஸ்-6 நம்பர் வீட்டிலே குடியிருந்த ஒரு பெண், அவளைப் பெண் கொலை





செய்யப்பட்டாளா அல்லது தானாகவே செத்தாளா என்ற சந்தேகம் இன்றைக்கு வந்திருக்கிறது. அவள் குடியிருந்த எண் 6-ஆம் நம்பர் வீட்டை—அவள் நவம்பர் மாதம் 18-ஆம் தேதி இறந்து விடுகிறாள். 20-ஆம் தேதியன்றைக்கு ஒரு மன்றத்தைச் சேர்ந்தவர்கள் பூட்டிவிடுகிறார்கள். இப்பொழுது அந்த வீடு ஒரு பார்பர் கையில் போய் சேர்ந்திருக்கிறது. அந்தப் பார்பர் இந்தப் பெண்ணை மிரட்டி 8,000 ரூபாய்க்கு அந்தப் பெண்ணிடத்திலே கையெழுத்து வாங்கியிருப்பதாகச் சொல்கிறார்கள். இப்படிப்பட்ட பயங்கரமான நிலைமை இருக்கிறது. ஆகவே, இப்படி ரௌடித்தனத்தையும், கொள்ளையடிக்கும் கூட்டத்தையும் நாம் அனுமதித்தல் அரசாங்கச் சொத்துக்களை அவர்கள் தங்கள் சொந்தச் சொத்துக்களாகப் பாவித்து வியாபாரம் செய்யவும் கொலை செய்து வீடுகளை பிடுங்கும் அளவிற்குப் போகலாம். இந்த விஷயம் முழுவதையும் அந்த ஜில்லா கலெக்டர் அவர்களிடத்திலேயும் போலீஸ் சூப்பரின்டென்டென்ட் அவர்களிடத்திலேயும் நாங்கள் தெரிவித்தோம்.

இப்படி நடந்திருக்கிறது. இது கொலையா சாவா என்பதை பற்றி விசாரிக்க வேண்டும் என்று எனக்கு கிடைத்த தகவல் களை கொடுத்திருக்கிறேன். இதிலே ஈடுபட்ட ஆட்களினுடைய பெயர்கள் அத்தனையும் கொடுத்ததற்குப் பிறகு, எனக்கு டெலிபோனிலே மிரட்டல் வந்தது. ஜனவரி மாதம் 6-ஆம் தேதி நான் சென்னையிலே இருக்கும்போது என்னுடைய வீட்டிலே இருக்கின்ற பெண்களைக் கூப்பிட்டு அவன் எங்கே போய்விட்டான், அவனை உசாராக இருக்கச்சொல், இந்த வீட்டு வசதி வாரியத்திலெ அவன் தலையிடுகிறான்' அளவுக்கு மிஞ்சி அவனுடைய அட்ரசே இல்லாமல் பண்ணிவிடுவோம் என்று சொல்லியிருக்கிறார்கள். இந்த விஷயத்தை நம்முடைய அவையில் எங்களது கட்சித் தலைவர் சங்கரய்யா அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள் எங்களுடைய உபதலைவர் உமாநாத் அவர்கள் இந்த விஷயத்தைப் பற்றி போலீஸ் டைரக்டர் ஜெனரல் அவர்களுக்குத் தெரிவித்தார்கள். நானும் அந்த ஆட்கள் யார் என்று எனக்குக் கிடைத்த தகவல்களை கொடுந்து இருக்கிறேன். ஆனால் இன்றைய தேதி வரையிலும் விசாரணை செய்து அந்த ஆட்களைப் பிடிக்கவில்லை. அதே மாதிரி அந்தப் பெண் கொலையா சாவா என்ற கேள்வியை வைத்து ஜில்லாக் கலெக்டர் அவர்களுக்கு விசாரணை செய்யும்படி கடிதம் கொடுத்திருக்கிறேன். ஆனால் இன்னும் ஆட்களைப் பிடிக்கவில்லை. இது நம்முடைய அமைச்சர் அவர்கள் செய்கின்ற வேலையா என்று நான் அப்படி மெக்கானிக்கலாக, கம்பார்ட்மெண்டலைஸ் பண்ணி சொல்வதற்காகச் சொல்லவில்லை. இந்த வீட்டு வசதி வாரியத்தினுடைய நிர்வாகத்தை ரவுடிகளும், சூதாட்டக்காரர்களும் பிடுங்கிக் கொண்டு போய் இன்றைக்கு சர்க்கார் கையிலே அந்தச் சொத்து இல்லை என்ற நிலை வந்திருக்கிறது. இதற்கு முற்றுப் புள்ளி வைக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

சட்டமன்ற உறுப்பினருக்கே இப்படி மிரட்டல் வருகிறது என்றால், நாளைக்குஇது மற்றவர்களுக்கும் வரலாம். அப்படிப்பட்ட நிலையிருக்கிறது. ஆகவே இப்படிப்பட்ட மிக சீரியசான பிரச்னையாக இருக்கிறது. ஆகவே அமைச்சர் அவர்கள் சம்பந்தப்பட்ட இலாகாவினரைத் தொடர்பு கொண்டு என்ன நடந்தது என்பதைப் பற்றித் தெரிந்து கொண்டு இதற்கு தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேமாதிரி, அங்கே இருக்கிற நிர்வாகப் பொறியாளர் என்ற அதிகாரிக்கும் இதைப்பற்றிய விவரங்களை எல்லாம் கொடுத்து இருக்கிறேன். இங்கே சொன்ன அந்த நம்பர்கள் முழுவதையும் நான் ரிப்போர்ட்டாக அவருக்குக் கொடுத்திருக்கிறேன். அவர்கள் நல்ல அதிகாரி எனக்குத் தெரிந்த வரையிலும். அவர்கள் என்ன சொல்கிறார்கள் என்றால், முதலிலே யாருக்கு அந்த வீட்டை நாம் கொடுத்தோமோ அவர்கள் அதை விற்றுவிடுகிறார்கள், இதற்கு நான் என்ன செய்யட்டும் என்று சொல்கிறார்கள். அவர்கள் மிகவும் திணறிக் கொண்டிருக்கிறார்கள். அதற்கு வீட்டு வசதி வாரியத்திலே ஏதாவது விதியிருக்கிறதா? பர்ஸ்ட் அலாட்டி அந்த வீட்டை யாருக்கு வேண்டுமானாலும் கொடுக்கலாம், கொடுத்ததற்குப் பிறகு அதைத் திருப்பி வாங்க முடியாது என்று சொல்வதற்கு உரிமை கிடையாது என்று ஏதாவது இருக்கிறதா? நான் அந்த அதிகாரியிடத்திலே சொன்னேன். பிறகு அமைச்சரிடம் சட்டமன்றத்திலே சொன்ன அந்த விவரத்தையும்அந்த அதிகாரியிடம் சொன்னேன். இந்த விவரத்தைக் கேட்டதும் அவர்கள்நடுங்குகிறார்கள். காரணம் அவரிடம் வேறுவிதத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. கோயம்புத்தூர் நிர்வாகப் பொறியாளர் காரியாலயத்திலே வேலை செய்கிற ஒரு குரூப் இருக்கிறது. அந்த குரூப் தான் இந்த வாடகையை வசூல்செய்வது, வெளியேற்றுவதற்கு நோட்டிஸ் கொடுப்பது ஆகிய காரியங்களைச்செய்கிறது.அவர்கள் என்ன செய்கிறார்கள் என்றால் ஒருவரிடம் சில ஆயிரம் அதற்கு மேல் பணத்தை வாங்கிக் கொண்டுகாண்ட்ராக்ட் பண்ணி,குடியிருக்கிற ஒருஆளைவெளியேற்றவேண்டும்என்றுசொன்னால்,ஆபிசிற்கு உள்ளே வந்து அந்தகுரூப்புடன்தொடர்பு கொண்டுநீங்கள ஆக்கிரமிப்பாளர், ஆகவே வெளியேறுங்கள் என்று நோட்டிஸ் கொடுத்து கொண்டிருக்கிறார்கள். ஆயிரம், வீடுகளில் குடியிருப்பவர்களை ஆக்கிரமிப்பாளர்கள் என்று பெயர்களை வைத்துக் கொண்டிருக்கிறார்கள். வெளியேறு என்று கொடுக்கின்ற அந்த நோட்டிஸ் பற்றி அந்த அதிகாரிக்கே தெரியாது. அங்கேயிருக்கின்ற நிர்வாகப் பொறியாளருக்குத் தெரியாது. அப்படிக் கொடுக்கப்பட்ட அந்த நோட்டிஸ்களுடைய காப்பிகளைக் கொண்டுபோய் நான் காட்டினேன். அவருடைய பெயர் அதிலே எழுதப்பட்டிருக்கிறது. சி. டி. ஜெயச்சந்திரன் என்று கையாலே எழுதியிருக்கிறது அவருடைய பெயரால் நோட்டிஸ் போகிறது. காலி பண்ணுவதற்கு மறுத்தால் ரவுடிகளை வைத்து மிரட்டுவது. இப்படிப்பட்ட காரியங்களைச் செய்கிறார்கள். நீங்கள் இதை அனுமதிக்கலாமா என்று கேட்டால் அவர்கள் சொல்கிறார்கள்.



நான் இதிலே அதிகம் தலையிட வேண்டாம் என்று என்னுடைய காரியாலயத்திலே இருப்பவர்கள் எனக்குச் சொல்லி இருக்கிறார்கள் என்று சொல்கிறார்கள். அப்படியானால் என்ன அர்த்தம்? எனவே நம்முடைய அமைச்சர் அவர்கள் இதிலே ஒரு சரியான கொள்கை முடிவை செய்து அந்த வீடுகளை யார் ஆக்கிரமிப்பு செய்திருந்தாலும் அவரிடம் இருந்து எடுத்து, ஏழைகளின் கையிலே அந்த வீடுகளை ஒப்படைக்க வேண்டும். ஆக்கிரமிப்பாளரின் கையிலே இருக்கக்கூடாது. ஆக்கிரமிப்பாளர்கள் யார் என்றால், பண வசதி உள்ளவர்கள், வேறு வீடு உள்ளவர்கள், நிலம் வைத்திருப்பவர்கள், கடைகளை கட்டி வாடகைக்குக் கொடுத்திருப்பவர்கள், ஆயிரக்கணக்கிலே பணத்தைப் போட்டு பிசினஸ் பண்ணுகிறவர்கள், இப்படிபட்டவர்கள் தான் இருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்களுக்கு நிச்சயமாக இந்த வீடுகள் கொடுக்கக்கூடாது. அதை மாற்றுவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். அந்த முறையிலே இந்த எண் ஆறாம் நம்பர் வீட்டிலே இருக்கிற அந்தப் பெண் இறந்து போய்விட்டாள், அவருக்கு யாரும் சொந்தக்காரர்கள் கிடையாது. ஒரு பார்பர் அங்கே கடையை வைத்திருப்பவர் 2,3 வருஷமாக நிர்பந்தம் செய்து, அந்த வீட்டைப் பிடுங்கியிருக்கிறார்கள். அந்த ஆளுக்கும் இந்த ஹவுசிங் போர்ட் காலனிக்கும் சம்பந்தம் கிடையாது. நான் அந்த அதிகாரியிடம் சொன்னேன். நீங்கள் போய் அந்த வீட்டைப் பூட்டுங்கள், உங்கள் டிபார்ட்மென்ட்தான் வீட்டுக்குச் சொந்தக்காரர்கள். இதற்கு ஆள் இல்லை, அந்த அம்மாவுக்கு புருஷன் கிடையாது, சொந்தக்காரர்கள் யாரும் கிடையாது, ஆகவே நீங்கள் போய் பூட்டுங்கள் என்று சொன்னேன். ஆனால் அவர்கள் அதைச் செய்யவில்லை. அப்படி அவர்கள் போனபோது அங்கே இருக்கக்கூடிய ஒரு மன்றத்தைச் சேர்ந்தவர்கள் அவர்களை விரட்டிவிட்டார்கள். இப்படி நடந்திருக்கிறது. அதனால் தான் சொல்கிறேன். இதற்கு ஒரு முடிவு கட்டவேண்டும். இதற்கு என்னுடைய யோசனை என்னவென்றால், அப்படிப்பட்ட ஆட்கள் யார் யார் எல்லாம் இருக்கிறார்கள் என்பதைப் பற்றி ஒரு கணக்கு எடுக்க வேண்டும். அப்படி எடுத்தால் அதிலே வேறு வீடு உள்ளவர்கள் ஆயிரக்கணக்கிலே சம்பாதிப்பவர்கள், பெரும் வியாபாரிகள் இருந்தால் நீங்கள் எல்லாம் ஏழை எளியவர்கள் அல்ல, நீங்கள் பர்ஸ்ட் அலாட்டி கிடையாது, எனவே அரசாங்கத்தின் கொள்கைப்படி நீங்கள் ஏழைகள் அல்ல, உங்களுக்கு வீடு கொடுக்க முடியாது என்று சொல்லி, அந்த ஆக்கிரமிப்பாளர்களை வெளியேற்றவேண்டும் என்று நான் இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

(பிற்பகல் 12–10)

இன்னும் 3 வீடு, 4 வீடு என்று வைத்து இருப்பவர்கள், உள்வாடகைக்கு விட்டு இருக்கிறார்கள். அந்த வீடுகளையும் எடுக்க வேண்டும். அந்த வீடுகளை முறையாக அந்த இலாகா குடிசையில் வாழ்கிற மக்களுக்கு, ஏழைகளாக இன்னும் குடிசைகளில் வாழ்ந்து கொண்டு இருக்கிற மக்களுக்கு 5 ரூ. 10 ரூ.என்று

தினக்கூலி பெற்றுக்கொண்டு இருக்கிற ஏழை மக்களுக்கு அந்த வீடுகளை ஒதுக்க வேண்டும். இப்படிப்பட்ட நடவடிக்கை எடுத்தால் அரசியல் கட்சி வேற்றுமை இல்லாமல் நாங்கள் ஒத்துழைக்கத் தயார். ஆளும் கட்சிப் பெயர்களை உபயோகிக்கிறார்கள். அந்த அனுமதிக்கக்கூடாது. நம்முடைய மாண்புமிகு கல்வி அமைச்சர் அரங்கநாயகம் அவர்கள் தொகுதி அது. அமைச்சரின் பெயரைக் கூட அந்த நபர்கள் உபயோகிப்பார்கள். அந்த அனுமதிக்கக் கூடாது. அதை முழுவதுமாக எதிர்த்து நிற்பதற்கு நங்கள் எத்தனை பேரும் தயாராக இருக்கிறோம். எங்களை அவர்கள் டெலிபோன் மூலம் மிரட்டலாம். உண்மையாகவே நேராகவே கொலை செய்ய வரட்டும். அதை எதிர்த்து நிற்க நாங்கள் தயார். வேறு வழி கிடையாது. ஆகவே, இப்படிப்பட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அதே மாதிரி அமைச்சர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். நானே அவருடன் கடிதப்போக்குவரத்து நடத்தினேன். ஈரோடிலே வீடு கட்டுவதற்காக நிலம் கையகப்படுத்தப் பட்டது. அந்த ஏற்பாட்டில் 27 வருஷங்களாக எல். பி. ப. பாசனம் பெற்றுக்கொண்டு இருக்கும் 10–20 ஏக்கர் நஞ்சை பூமி இருந்தது அங்கே முன்பு இருந்த எக்சிகியூடிவ் இன்ஜினியர் நோட்டீஸ் கொடுத்தார். உடனடியாக அங்கே இருக்கும் விவசாயிகள் அமைச்சர் அவர்களிடத்திலே நேரடியாக விண்ணப்பம் கொடுத்தார்கள். என்னிடம் கொடுத்ததை நானும் அவருக்கு சமர்ப்பித்தேன் இப்போது இரண்டு வருஷத்திற்குப் பிறகு அமைச்சர் அவர்களிடத்தில் இருந்து பதில் வந்து இருக்கிறது. அந்த நிலம் வீட்டுவசதி வாரியத்துற்கு எடுக்கப்படவேண்டியது தான் என்று. இதிலே என்ன வேடிக்கை என்றால், அதே இடத்தைச் சேர்ந்த அடுத்து இருக்கும் 11 ஏக்சர் பூமியை கையகப் படுத்த நோட்டீஸ் கொடுக்கப்பட்டது. அதுவும் எடுக்கப்பட்டது. ஆனால் அதை திருப்பிக் கொடுத்து விட்டார்கள். அவர்கள் பள்ளிக்கூடம் கட்டுகிறேன் என்று சொன்னதால் திருப்பிக் கொடுத்து விட்டார்கள், ஆனால் அவர்கள் அதிலே பள்ளிக் கூடம் கட்டவில்லை. கல்யாண மண்டபம் கட்டியிருக்கிறார்கள். ஒரு நாளைக்கு 1,300-1,5 0 ரூ, வாடகை வாங்கிக் கொண்டு இருக்கிறார்கள். ஆகவே, அப்படிப்பட்ட தவறான தகவல் அந்த இன்ஜீனியரால் கொடுக்கப்பட்டு இங்கே பதில் கொடுக்கப்பட்டு இருக்கிறது. உண்மையில் என்ன நிலைமை என்றால், அந்த இடத்தை விட்டுக்கொடுத்தற்காக அந்த இன்ஜீனியருக்கு அந்த நிலச் சொந்தக்காரர் 2 ஏக்கரா 18 சென்ட் நிலத்தை அவருடைய குடும்பத்தார் பெயரில் எழுதிக் கொடுத்து இருக்கிறார். இந்த விவரங்கள் பூராவையும் நான் வீட்டு வசதி வாரியத் தலைவருக்கு அனுப்பினேன். அனுப்பி பல மாதம் நடந்த பின்னால், கூட அதைப் பற்றி பதில் வரவில்லை. முறையாக நடவடிக்கை எடுக்கட்டும் என்று அனுப்பினேன். எனக்கு அப்புறம் ஒரு கடிதம் வந்தது. வீட்டு வசதி



வாரியத்திலிருந்து, இந்த விவரங்களை வைத்து விசாரிக்க எங்களுக்கு ஒரு தனி செல் இருக்கிறது. அதிலே வைத்து விசாரணை செய்கிறோம் என்று பதில் வந்தது. என்னிடமே மேற்கொண்டு தகவல் இருந்தால் கொடுங்கள் என்று கேட்கிறார்கள். கொஞ்சம் ஏமாந்தால், என்னையே பெட்டியில் ஏற்றி விசாரிப்பார்கள் போல் இருக்கிறது. அவ்வளவு தடித்தனமான முறையில் அவர்கள் இருக்கிறார்கள் என்று அர்த்தம். நான் உடனடியாக வாரியத் தலைவருக்கு ஒரு கடிதம் எழுதி, எனக்கு வந்த கடிதத்திற்கு மறுபடியும் விவரங்களுடன் பதில் எழுதினேன். அப்படி பதில் அனுப்புகிறபோது எனக்கு ஒரு சந்தேகம் வந்தது. இந்த பதிலை நாம் தபாலில் அனுப்பி வைத்தால் நாளைக்கு வரவில்லை என்று சொன்னால் என்ன செய்வது என்று சொல்லி சென்னையில் உள்ள எங்கள் காரியாலய செயலாளருக்கு அதை அனுப்பி. அவர் நேரடியாக ஒரு ஆளை வாரியத்திற்கு அனுப்பி, அதைக் கொடுத்து கையெழுத்து வாங்கி வந்து இருக்கிறார். அப்படியிருந்தும் 15 நாள் கழித்து எனக்கு மறுபடி ஒரு கடிதம் வருகிறது. விரைவில் பதில் அனுப்புங்கள் என்று. அப்படியானால் அந்த வாரியத்தின் ஆபீஸ் எப்படி நடைபெறுகிறது என்பதைச் சிந்தித்துப் பாருங்கள். சகலத்திலும் குறை சொல்வதாக கருதக்கூடாது. இது படுமோசமான நிலைமை.

நல்ல காரியங்களைச் செய்யவேண்டும் என்பதற்காக அந்த வாரியம் ஏற்படுத்தப்பட்டது, ஏழை எளிய மக்களுக்கு வீடு கட்டிக் கொடுக்க வேண்டும் என்ற உயர்ந்த லட்சியத்தின் அடிப்படையில் அது அமைக்கப்பட்டது. அந்த இடத்தில் இப்படி இருந்தால் எப்படி?

இந்த காரியங்களை செய்த இன்ஜினியர் இப்போது அங்கே இல்லை. இந்த விவரங்களைப் பூராவும் வைத்து அந்த விவசாயிகள் உயர்நீதி மன்றத்தில் கேஸ் போட்டார்கள். அந்த நிலத்தைக் கையகப்படுத்தக்கூடாது என்று உயர்நீதிமன்றம் தீர்ப்பு கொடுத்து இருப்பதாக தெரிகிறது. ஆனால் அமைச்சர் தருகிற தகவல் கட்டாயம் அதை எடுக்க வேண்டும் என்பதாகும். ஏன் இப்படிப்பட்ட முரண்பாடு? இதை கவனிக்க வேண்டும். சில அதிகாரிகள்—எல்லா அதிகாரிகளையும் நான் சொல்லவில்லை, நேர்மையான அதிகாரிகள் இருக்கிறார்கள், அவர்களை மற்றவர்கள் கூட்டமாக நின்று கொண்டு மிரட்டுகிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் மாணிக்கம் சொன்னது போல்—இப்படிச் செய்கிறார்கள் இதை நாம் அனுமதிக்கக் கூடாது. இதிலே கட்சி வித்தியாசம் இல்லாமல் அரசியல் வித்தியாசம் இல்லாமல், திரண்டு எழுந்து தடுத்தாக வேண்டும். இதிலே சர்க்கார் சொத்து கொள்ளையடிக்கப்படுகிறது. இப்படிப்பட்ட அதிகாரிகளின்மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஆகவே, இந்த மாதிரி இருக்கக்கூடிய முறைகேடுகளை களைய நாம் எதிர்த்து நிற்கும் நிர்வாகம் முன்வர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்த நிலையில் என்ஜீனியர் அவர்கள் வாங்கிய 2 ஏக்கர் 19 செண்ட் நிலத்தை முழுமையாக கைப்பற்ற வேண்டுமென்று வலியுறுத்தி, வாரியத் தலைவருக்குக் கொடுத்திருக்கிறோம். அமைச்சரவர்கள் வேண்டுமானால் வாரியத் தலைவரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். இதன் மீது தக்க நடவடிக்கை தேவை.

நகர்ப்புற வளர்ச்சி என்று சொல்லும் பல இடங்களில் சிறு சிறு நகரங்கள் இருக்கின்றன. அங்கேயும் வீடுகளைக் கட்டிக் கொடுக்க வேண்டும். கட்டப்படும் வீடுகளின் எண்ணிக்கை அதிகமாக இல்லாவிட்டாலும் ஏழைகளுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட வேண்டும்.

மேலும், கட்டப்பட்டு கொடுக்கக்கூடிய வீடுகளில் இருக்கிற கழிப்பிடங்கள் போதாது. அது நிறைந்து வடிந்து, வெளியே நாசமாக்குகிறது. நாற்றமடிக்கிறது. அதை சரி செய்ய வேண்டும். குழாய்கள், விளக்குகள் எல்லாம் போடுகிறார்கள். அதை அபிவிருத்தி செய்யவேண்டும். குழாயிலே தண்ணீர் சரியாக வருவதில்லை. தண்ணீர் கிடைக்க வேண்டுமென்றால் ரௌடிக் கும்பலுக்கு பணம் கொடுக்க வேண்டும். இதை ஒழிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாநகர்களில், நகரங்களில் இருக்கிற வீடுகளை பராமரிக்கு பொறுப்பை அந்தந்த நகராட்சி நிர்வாகத்திற்குக் கொடுங்கள் அந்த நகராட்சி செலவை ஈடுகட்ட வீட்டுவசதி வாரியம் மானியம் கொடுக்கலாம். அதுதான் கரெக்டாக இருக்கும்.

அறிஞர் அண்ணா ஹட்கோ காலனி இருக்கிறது. அங்கே வீடுகளுக்கு சரியாகச் சுகாதார வசதியில்லை மற்ற எந்த விதமான வசதியும் இல்லை. அதை எல்லாம் அபிவிருத்தி செய்ய வேண்டும்

கோவை ஒச்மின் நகரில் குடிசைகளை அமைச்சரவர்கள் நேரிலே வந்து பார்த்தார்கள். அவர்கள் பார்த்த பிறகு இப்போது தண்ணீர் டாங்கும், விளக்கும் வந்திருக்கிறது. தெருக்கள் சுத்தமாக இல்லை; சேறு படிந்திருக்கிறது. அமைச்சரவர்கள் நேரிலே வந்து பார்த்து 'ஆன் தி ஸ்பாட்' உத்தரவு போட்டும் சரியாக வேலை நடக்கவில்லை. அந்தப் பணிகளை எல்லாம் பூர்த்தி செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போன்று புளியங்குளம் பகுதியில் அமைச்சரவர்கள் வந்து பார்த்தார்கள். வேண்டிய வசதிகளைச் செய்வதாகச் சொன்னார்கள். அங்கே இன்றைக்கும் விளக்கு வரவில்லை என்கிறார்கள். வேறு வசதியும் இல்லை அவர்களுக்கு. பக்கத்திலே வேறு இடம் கொடுத்தால் அவர்கள் வெளியே போய்விட தயாராக இருக்கிறார்கள்.



அடுத்தபடியாக பத்திரிகை நிருபர்களுக்கு வீடு கொடுத்திருக்கிறோம். அவர்கள் என்ன கேட்கிறார்கள் என்றால் அந்த வீடுகளை அவர்களுக்கு சொந்தமாகக் கொடுத்தால் பரவாயில்லை. இல்லை என்றால் பத்திரிகை நிருபர்களுக்கு என்று ஒரு காலனியைக் கட்டி, அதை சொந்தமாக்க வேண்டுமென்று கேட்கிறார்கள். அது நியாயமான கோரிக்கை; அதைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போன்று ஆசிரியர்களுக்கு காலனி இல்லை. அதையும் ஏற்படுத்த வேண்டும். செல்வபுரம் வீட்டு ஊழல்களுக்கு சரியான முறையில் விசாரணை நடத்த வேண்டும். செல்வபுரத்தில் நடந்த பெண் கொலை பற்றி விசாரிக்க வேண்டுமென்று கேட்டு முடித்துக்கொள்கிறேன்.

திரு. தி. கா. நல்லப்பன்: மாண்புமிகு மாற்றுத் தலைவரவர்களே, கோரிக்கை எண் 33 வீட்டு வசதி வாரியம், கோரிக்கை எண் 34 நகர்ப்புற வளர்ச்சி ஆகிய இந்த இரு மானியக் கோரிக்கைகள் மீதும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக சில கருத்துக்களைச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

இதுவரை தொழிலாளர் நலனோடு சேர்ந்திருந்த இந்த வீட்டுவசதி வாரியத்தை இப்போது தனியாகப் பிரித்திருக்கிறார்கள். தொழிலாளர் நலனோடு தனியாகப் பிரித்திருப்பதை நான் வரவேற்கிறேன். நாடு சுதந்திரம் பெற்று 36 ஆண்டுகள் முடிந்ததும் இந்தியாவில் இருக்கக்கூடிய பல்வேறு மாநிலங்களிலும் சரி, தமிழ்நாட்டிலும் சரி. எலிகள், நண்டுகள் போன்ற ஜந்துக்கள் வாழ கூட தனியாக ஒரு இடம் இருக்கிறது. ஆனால் ஆறு அறிவு படைத்த மனிதர்களில் இலட்சக் கணக்கானோர் சாக்கடை ஓரத்திலும், பாதையோரத்திலும், மரத்தடியிலும் வாழுகின்ற ஒரு பரிதாபகரமான சூழ்நிலை இந்த நாட்டில் இருக்கிறது என்பதை சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன்.

சென்னை, கோவை, மதுரை போன்ற பெரிய நகரங்களிலும் ஏனைய நகராட்சிகளிலும் இந்தத் திட்டம் செயல்பட்டு வருகிறது. ஆனால் பல்வேறு வட்டத் தலைநகரங்களில் இந்தத் திட்டம் செயல்படுவதற்கு எந்தவிதமான அமைப்பும் இன்னும் அமைக்கப்படவில்லை. அதன் காரணமாக, பெரும் நகரங்களில் கூட்டுறவுச் சங்கங்கள் இருக்கிற காரணத்தால், 20 மைல், 30 மைல், 40 மைல் தொலைவில் இருந்து வந்து, அங்கே சம்பந்தப்பட்ட அதிகாரிகளை அவர்கள் பார்த்துச் செல்கிற காரணத்தால் பொருளாதார செலவு அதிகமாக ஆகக்கூடிய ஒரு சூழ்நிலை இருக்கிறது.

(பிற்பகல் 12–20)

மேலும் கிராமங்களாக இருந்தாலும் சரி, நகரங்களாக இருந்தாலும் சரி, பெருகி வரக்கூடிய சூழ்நிலை இருக்கிற காரணத்தால், அந்தச் சங்கங்களை குறிப்பாக ஒவ்வொரு ஒன்றியத்திலும் ஒரு சங்கம் அமைக்கப்பட வேண்டிய ஒரு சூழ்நிலையை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏற்படுத்த வேண்டும் என்று நான் இந்தச் சமயத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

தற்போது வீடுகள் கட்டுவதற்காக—கிராமப்புறங்களில் கட்டுவதற்கு 3 ஆயிரம் ரூபாய் ஒதுக்கியிருக்கிறீர்கள் அந்த 3,00 ரூபாய் என்பது சிமெண்ட். செங்கல் இரும்பு, சுண்ணாம்பு போன்ற பொருள்களின் விலைகள் அதிகமாக ஏறியிருக்கின்ற காரணத்தால், ஒரு சாதாரண வீட்டைக் கட்டக்கூட உபயோகிக்க முடியாத ஒரு சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, ஒதுக்கியிருக்கிற அந்த ரூபாயை, அந்தத் தொகையை 3,00லிருந்து 6 ஆயிரமாக ஆக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்வதோடு, கிராமப்புறங்களில் அரிசனங்களுக்கு வீடு கட்ட வேண்டும் என்றால்—ஏற்கனவே மாண்புமிகு உறுப்பினர் இளையபெருமாள் அவர்கள் குறிப்பிட்டதைப்போல—ஆயிரம் ரூபாயை அவர்களுக்கு மானியமாகக் கொடுத்து, ஏனைய 2 ஆயிரம் ரூபாயை கடனாகக் கொடுக்கிறார்கள்.

ஆயிரம் மானியம் போக இப்படி வாங்கக்கூடிய அந்த 2 ஆயிரம் ரூபாயில் அவர்கள் வீடு கட்டுவது என்பது தற்போதுள்ள விலைவாசி சூழ்நிலையில் சாதாரணமானதாக இல்லை. இன்ன பிற வகுப்பினருக்கு எப்படி பொருள்களை—அதாவது வீடு கட்டுவதற்கு தேவையான மூலப் பொருள்கள்—விலை அதிகமாக விற்கிறதோ அதேபோலத்தான் இவர்களுக்கும் விற்கக்கூடிய ஒரு சூழ்நிலை இருக்கிற காரணத்தால் அவர்களுக்கு, 2 ஆயிரம் ரூபாயை மானியமாகவும் மற்றும் 4 ஆயிரம் ரூபாயைக் கடனாகவும் கொடுக்கவேண்டும் என்று இந்தச் சமயத்திலே குறிப்பிட்டுக் கூறிக்கொள்கிறேன்.

கிராமப் புறங்களானாலும் சரி, நகரப்புறங்களானாலும் சரி, பாதை ஓரங்களில் சுமை தூக்கிக் கொண்டு வாழ்க்கையினை நடத்திச் செல்கிறவர்கள் வசிக்கிறார்கள். அவர்கள் இந்த இனத்தைச் சேர்ந்தவர்கள் இந்த ஜாதியைச் சேர்ந்தவர்கள் என்ற வித்தியாசம் இல்லாமல் வாழ்க்கை நடத்திக் கொண்டிருக்கிற அந்த சுமை தூக்கும் தொழிலாளர்களுக்கு அரசு பரிவோடு வீடு கட்டிக் கொடுத்து உதவுவதற்கு—ஆதித் திராவிட நலத் துறையின் கீழாவது வீடுகட்டிக் கொடுப்பதற்கு—உண்டான ஏற்பாடுகளைச் செய்யவேண்டும் என்று இந்தச் சமயத்திலே



சுட்டிக் காட்ட ஆசைப்படுவதோடு; நலிந்த பிரிவினர், விவசாயத் தொழிலாளர்கள். அரசு தரப்பிலே இருக்கக்கூடிய கடைநிலை ஊழியர்கள், இன்னும் வருமானம் கீழே இருக்கக்கூடியவர்களுக்கு, ஆதித்திராவிட மக்களுக்கு வீடு கட்டிக் கொள்வதற்கு மானியமாக கொடுக்கிறோம்.

அதே சமயத்தில் ஏனையோர்களுக்கு வீடு கட்ட கடன் கொடுக்கிறோம். இந்த நலிந்த பிரிவினர்களுக்கு வீடு கட்டுவதற்கு வட்டியில்லாமல் கடன் கொடுப்பதற்கு ஆவன செய்ய வேண்டும் என்று நான் இந்த சமயத்திலே தெரிவித்துக் கொள்வதோடு, கிராமப் புறங்களிலே இருக்கக்கூடிய சொசைட்டிகளுக்கு ஒரு சலுகை வேண்டும். அதாவது நகர்ப்புறங்களிலே இருக்கக்கூடிய அந்த வீடு கட்டும் சொசைட்டிகளுக்கு, எல்.ஐ.சி. மூலமாகவோ, அல்லது தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளின் மூலமாகவோ அவர்கள் கடன் பெற்றால், பெற்றிருக்கக்கூடிய அந்தக் கடனிலே இருந்து அவர்களுக்கு மாதா மாதம் வருமானம்—அதாவது மாத வருமானம் வரக்கூடிய ஒரு சூழ்நிலை இருப்பதன் காரணமாக, அவர்கள் விரைவாகக் கடனை திருப்பிக் கொடுக்க முடிகிறது. ஆனால் கிராமங்களிலே இருக்கக் கூடிய சங்கங்களில்—ஏற்கெனவே அங்கே வாழக்கூடிய மக்களுக்கு வருமானம் குறைவாக இருக்கிற சூழ்நிலை இருப்பதன் காரணமாக, அவர்கள் வாங்கக் கூடிய கடனை திருப்பிக் கட்ட முடியாத நிலையில் காலதாமதம் ஏற்படுவதால், இதனை பரிசீலனை செய்து, எல்.ஐ.சி. கடன் வாங்குகிற போது அதிகமாக வட்டி ஏற்றுகிற சூழ்நிலை இருப்பதால்—அதாவது வாங்குகிற அந்த எல்.ஐ.சி. கடன் மதிப்பீட்டிலே இருந்து 12 சதவீதம் வட்டிக்காக வாங்கி மேலும் சிலபல விவரங்களை இணைத்து, அது அவர்களுடைய கைக்குப் போகிற போது 14 சதவீதம் வட்டியாக ஆகிவிடுகிறது. ஏதோ 2 ஆயிரம் ரூபாயிலிருந்து 4 ஆயிரம் ரூபாய் வரையில் வாங்கக்கூடியவர்கள், அவர்கள் வாங்குகிற கடனைப் போல இன்னொரு அரை பங்கு அதிகமாக திருப்பிக் கட்ட வேண்டிய சூழ்நிலை, வட்டி அதிகமாவதன் காரணமாக இருப்பதால், அந்த வட்டியை குறைப்பதற்கு ஏற்பாடு செய்யவேண்டும் என்று நான் இந்தச் சமயத்திலே கேட்டுக் கொள்கிறேன். மேலும் அவர்களுக்கு வீடுகட்டுவதற்காக கொடுக்கப்பட்ட கடன் தவணை 20 வருடமாக இருந்தது; இப்போது படிப்படியாக குறைக்கப்பட்டு இன்றைய தினம் 0 அல்லது 15 வருடமாக கொண்டுவந்து நிறுத்தப் பட்டிருக்கிறது.

அப்படிக் கொடுக்கப்பட்ட அந்த தவணைகளைப் பொறுத்த வரையில் முன் போலவே அதிகமாக நீட்டித்துத் தரவேண்டும். வேறு பல நாடுகளில் வீடு கட்டுவதற்காகக் கொடுக்கக்கூடிய அந்தக் கடன்களைப் பொறுத்தவரையில் 30 வருடங்கள், 40 வருடங்கள், 50 வருடங்கள் என்ற வகையில் கூட திருப்பிக் கட்டப்படுகின்றது. எனவே நம்மைப் பொறுத்த

வரையில் அந்த 20 ஆண்டு என்ற வகையிலாவது அந்தக் கடனைத் திருப்பிக் கொடுப்பதற்கு காலம் கொடுப்பதற்குரிய வகையில் முறைப்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து 6-வது ஐந்தாண்டுத் திட்டம். ஐந்தாண்டுத் திட்டம் என்கின்ற போது 5 ஆண்டுகள். அந்த 5 ஆண்டுகளுக்கும் சேர்த்து நாம் 40 ஆயிரம் வீடுகள் கட்டுவதாக குறிப்பிட்டிருக்கிறோம். இந்த 40 ஆயிரம் வீடுகளையும் 5 ஆண்டுகளுக்கு என்று பிரித்தால் அதுவும் 378 ஒன்றியங்களுக்கு என்ற வகையில் நகரத்திற்கல்லாமல் பிரித்தால் சற்றேறக் குறைய 100 அல்லது 110 வீடுகள் தான் வரும். வளர்ந்து வருகின்ற ஜனத்தொகைக்கு 5 ஆண்டுகளுக்கு பின் அது ஈடாகுமா என்பதை நாம் யோசிக்கவேண்டும். இதை அதிகப்படுத்தி 5 ஆண்டுகளுக்கு 40 ஆயிரம் வீடுகள் என்பதை மாற்றி ஒரு லட்சம் வீடுகளாவது கட்டவேண்டும்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, 5 ஆண்டுகளுக்கு 2 இலட்சம் வீடுகள் கட்டுவதாக இருந்தோம். எனவே 40 ஆயிரம் வீடுகள் ஒரு ஆண்டுக்கு என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. தி. கா. நல்லப்பன்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னதற்காக மகிழ்ச்சி. நான் வருடம் ஒன்றுக்கு ஒரு இலட்சம் வீடுகள் என்று சொல்வதற்கு மறந்து அதைச் சொல்லிவிட்டேன் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். மாநகராட்சி, நகராட்சி, பேருராட்சி ஆகிய அனைத்து நகரங்களிலும் நகரத்தைச் சுத்தமாக வைத்திருப்பவர்கள் நகராட்சி ஊழியர்கள். இந்தத் தொழிலாளர்கள் குறைந்த வருமானத்தோடு அவர்கள் வாழ்க்கையோடு போராடிக் கொண்டிருக்கின்ற நிலைமை இருக்கின்றது. எனவே இவர்களைப் பொறுத்தவரையில் கண்டிப்பாக, நாம் ஆதி திராவிடர்களுக்கு என்று கட்டுகின்ற வீடுகளில் 18 சதவீதத்தை ஒதுக்கவேண்டும். எப்படி ஆதி திராவிடர்களுக்குரிய சலுகைகளைப் பொறுத்தவரையில் 18 சதவீதம் என்று ஒதுக்குகிறோமோ அதுபோன்று இவர்களுக்கு இந்த வீடுகளைக் கொடுப்பதைப் பொறுத்த வரையிலும் 18 சதவீதம் என்று ஒதுக்க வேண்டும். அப்படி நகராட்சி ஊழியர்களுக்கு என்று ஒதுக்கி அவர்களுக்கு கண்டிப்பாக வீடுகளைத் தருவதற்கான ஏற்பாடுகளைச் செய்யவேண்டும் என்று நான் இந்த சமயத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து கிராம கூட்டுறவு வங்கிகளுக்கு ஒரு வருடத்திற்கு குறைந்தபட்சம் 10 கோடி ரூபாய் நிதி ஒதுக்கவேண்டும். வீடு கட்ட தகுதி உள்ள அனைவருக்கும் வீடு கட்டுவதற்கான நிதியினை அவர்கள் கேட்கின்ற நேரத்தில் கொடுப்பதற்குரிய



நிலைமை இருக்கவேண்டும். இன்றைய தினம் இருக்கக்கூடிய கிராமமானாலும் சரி, நகரமானாலும் சரி, அனைத்திற்கும் சேர்ந்து மாநில அளவிலே ஒரே சங்கமாக தலைமைச் சங்கம் இருந்துக்கொண்டிருக்கின்றது. இதை இரண்டாகப் பிரித்து நகரத்திற்கு ஒன்றும், கிராமங்களுக்கு ஒன்றும் என்ற வகையில் ஏற்படுத்தவேண்டும். அவ்வாறு ஏற்படுத்தி தனித்தனியாகக் கொடுக்கப்படுகின்ற விண்ணப்பங்களுக்கு உடனுக்குடன் அவர்களுக்கு பதில் கொடுப்பதற்கும் பணம் கொடுப்பதற்கும் ஏற்பாடு செய்யவேண்டும். அந்த வகையில் தற்போது இருக்கின்ற வேலைப் பளுவினைக் குறைக்கின்ற வகையில் இரண்டாகப் பிரிப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். ஜனதா அரசு ஆட்சிப் பொறுப்பிலே இருக்கும்போது இந்த வீடு கட்டும் திட்டத்திற்காகக் குறைந்த வட்டியில் அதாவது 4 சதவீதம் என்று ஒதுக்கியிருந்தார்கள். நான்கு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு வட்டியும் குறைவாக இருந்தது. ஆனால் இன்றைய தினம் வட்டி அதிகமாக இருக்கின்ற நிலைமையில் இதைத் திரும்பவும் பரிசீலிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். காவல் துறையினைப் பொறுத்த வரையில் 83–84 ஆம் ஆண்டுகளுக்கு 767 வீடுகள் கட்டப் படுவதாக இந்த அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறோம்.

(பிற்பகல் 12-30)

இந்த 767 வீடுகள் என்பது குறைவு தான். இருந்தாலும் கட்டப்படுகின்ற அந்த வீடுகளை காவல் துறையில் கீழ்நிலையில் இருக்கக்கூடிய காவலர்களுக்குக் கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கழிவு நீர் அகற்றுவதை பொறுத்தவரையில் என்னுடைய தொகுதியில் ஊத்துக்குளி, பெருந்துறை போன்ற இடங்களில் ஏற்கனவே ஊத்துக்குளியில் கழிவு நீர் சென்று கொண்டு இருந்ததை தடுத்து அடைத்து விட்டார்கள். அதை நீக்க வேண்டும் என்றும், அதைப் பழைய நிலைக்கு கொண்டுவரவேண்டும் என்றும் 2 வருடங்களாக பெரும் போராட்டம் நடத்தியும் இன்னும் அது அதே நிலையில்தான் இருக்கிறது. அதேபோல் பெருந்துறையில் இம்மாதிரியாக பல்வேறு இடங்களில் கழிவு நீர் தேங்கி நகரத்தை அசுத்தம் செய்யக்கூடியதாக இருக்கிறது. இது மட்டும் அல்லாமல் சென்னையாக இருந்தாலும் வாணியம்பாடியாக இருந்தாலும் கிராமப்பகுதியாக இருந்தாலும் பல்வேறு தோல் பதனிடும் தொழிற்சாலைகள் இருக்கக்கூடிய இடங்களில் அந்தக் கழிவு நீர் சாக்கடையாக மாறி குடிநீருக்கு ஆபத்து வரக்கூடிய ஒரு சூழ்நிலை இருக்கிறது. ஆகவே அந்தக் கழிவு நீரை முறையாக நகரத்திற்கு அப்பால் செலுத்தக்கூடிய ஒரு சூழநிலையை உருவாக்கி அந்தக் கழிவு நீரை அப்புறப்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப் பெற்றது)

***திரு. இரெ. இராசமாணிக்கம் :** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இன்றைய தினம் மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களால் இந்த அவையில் வைக்கப் பட்டுள்ள தமிழ்நாட்டில் வீட்டு வசதி என்ற மானியக் கோரிக்கையின் மீது ஒருசில கருத்துக்களை திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாகவும் இங்கே என் பெயராலும், சட்டமன்ற உறுப்பினர்களாலும் கொடுக்கப்பட்டுள்ள வெட்டுத்தீர்மானத்தை ஆதரித்தும் ஒருசிலக் வார்த்தைகளைத் தெரிவிக்கக் கடமைப் பட்டுள்ளேன்.

இன்றைய தினம அவையில் மாண்புமிகு அமைச்சர் அவர்களால் வைக்கப்பட்டு இருக்கிற இந்த அறிக்கையில் கிராம கூட்டுறவு வீட்டு வசதி சங்கம் 1980—81-ம் ஆண்டிலும் 1981—82 ஆம் ஆண்டிலும் 82 ஆயிரத்து 716 வீடுகள் கட்டியுள்ளது என்று குறிப்பிட்டுள்ளார்கள். வீடு கட்டுவது யார்? அதிலே எவ்வளவு கடன் கொடுக்கப்படுகிறது? எவ்வளவு மானியமாக தரப் படுகிறது என்ற விவரம் அந்த அறிக்கையில் இல்லை. அந்த அறிக்கையில் இந்த விவரங்களை எல்லாம் தந்து இருப்பார் களானால் அது சம்பந்தமாக எங்கள் கருத்துக்களை தெரிவிப் பதற்கு அது ஒரு வாய்ப்பாக இருக்கும் என்பதை நான் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டுள்ளேன்.

இந்த அறிக்கையில் கொடுக்கப்பட்டிருக்கிற அந்த வீடு கட்டுகிற திட்டத்தின் உண்மை நிலை என்ன என்று பார்க்கிற போது எனக்கு முன்னால் பேசியவர்கள் சொன்னார்களே அது போல இந்தத் திட்டத்தின் மூலமாக கிராமப்பகுதிகளில் வீடுகள் கட்டுவதற்கு கூட்டுறவு சங்கங்கள் மூலமாக 5 ஆயிரம் ரூபாய் கடன் வழங்கப்பட்டது. அந்த 5 ஆயிரம் கடன் வழங்கப் பட்டும் கூட அந்தத் தொகை வீடு கட்டுவதற்குப் போதுமான தாக இல்லை. இன்னு உயர்த்திக் கொடுக்க வேண்டும் என்று பல்வேறு பகுதிகளில் இருந்து அரசாங்கத்திற்கு கோரிக்கைகள் வந்தன. ஆனால் என்ன காரணத்தாலோ சென்ற ஆண்டு அந்தத் தொகை 5 ஆயிரத்திலிருந்து திடீர் என்று 3 ஆயிரமாகக் குறைக்கப்பட்டது. அதற்குப் பிறகு இந்தச் சட்டப் பேரவையில் எல்லா உறுப்பினர்களும் சேர்ந்து நீங்கள் 3 ஆயிரமாக குறைத்தது நியாயம் அல்ல. அந்தத் தொகை போதுமானது அல்ல. அந்தத் தொகையை அதிகப்படுத்தித் தர வேண்டும் என்று இந்த அவையில் கேட்டோம் செங்கல் விலை உயர்ந்து விட்டது, கொத்துக்கூலி உயர்ந்துவிட்டது, சிமெண்டு விலை உயர்ந்து விட்டது, கம்பியின் விலை உயர்ந்து விட்டது. இப்படி எல்லாப் பண்டங்களின் விலைகளும் உயர்ந்து இருக்கிற போது 3 ஆயிரம் ரூபாயில் வீடு கட்ட முடியாது. அதை உயர்த்திக் கொடுக்கவேண்டும் என்று கேட்டபோது அமைச்சர் அவர்கள் இந்தத் தொகை 4 ஆயிரமாக உயர்த்தி கொடுக்கப் படும் என்று இந்த அவையில் சொன்னார்கள். ஆனால் இந்த உயர்த்தப்பட்ட தொகை இதுவரையில் வழங்கப்பட்டதா என்று





சொன்னால் வழங்கப்படவில்லை. அதிகாரிகளைக் கேட்டால் எங்களுக்கு அது சம்பந்தமாக எந்த விதமான உத்தரவும், அனுமதியும் இல்லை என்று சொல்கிறார்கள். ஒரு வார காலத் தற்கு முன்னால்கூட என்னுடைய ஊரில் 2 பேருக்குக் கடன் வழங்கியிருக்கிறார்கள். அதிலே 3 ஆயிரம் கடன் தொகை என்று சொல்லிவிட்டு முன்பணமாக 750 ரூபாயை முதல் தவணை யாக வழங்கியிருக்கிறார்கள். இப்படி அவையில் அமைச்சர் அவர்கள் 4 ஆயிரம் கடன் தரப்படும் என்று அறிவித்தும்கூட இது வரையில் 1 ஆண்டு காலம் ஆகியும் அந்த 4 ஆயிரம் ரூபாய் வழங்கப்படவில்லை. 3 ஆயிரம் ரூபாய் தான் வழங்கப் படுகிறது. இது முறைதானா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சிந்தித்துப் பார்க்கவேண்டும், என்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ள கடமைப்பட்டுள்ளேன்.

அதோடு கிராமப் பகுதிகளில் அவர்களுடைய புள்ளி விவரப்படி 82,716 வீடுகள் கட்டப்பட்டுள்ளன என்று குறிப்பிடப் பட்டுள்ளதே அதாவது உண்மையா என்று எண்ணிப் பார்த் தால் கடன் வழங்கப்பட்ட பெரும் பகுதி வீடுகள் கட்டி முடிக்கப்படாமல் குட்டிச் சுவராக நிற்பதை என்னுடைய பகுதிக்கு அமைச்சர் அவர்கள் வந்தால் நான் அழைத்துச் சென்று காட்டுவதற்குத் தயாராக இருக்கிறேன். பெரும் பகுதி வீடுகள் இன்றைய தினம் கட்டி முடிக்கப்படவில்லை, கடன் தொகைகள் வழங்கப்பட்டிருக்கின்றன, மேல் கூரை போடாமல் குட்டிச்சுவராக குடியிருப்பதற்கு வசதியில்லாமல் கிராமப் பகுதி களிலே நின்று கொண்டிருக்கின்றன. அந்த வீடுகளை உடனடி யாகக் கணக்கு எடுத்து அவைகளைக் கட்டி முடிப்பதற்கு தேவையான தொகையை மீண்டும் வழங்கி அந்த வீடுகளைக் கட்டி முடிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு இன்றைய தினம் வழங்கப்படுகிற தொகை 3 ஆயிரமாக இருந்தாலும், 4 ஆயிரமாக இருந்தாலும் ஏறியிருக்கிற விலைவாசி உயர்வு அடிப்படையில் வீடுகளைக் கட்டி முடிக்க முடியவில்லை. நாம் கொடுப்பது கடன் என்ற அடிப் படையில் 10 ஆயிரம் ரூபாய் என்று உயர்த்தி அதிலே பாதித் தொகையை மானியமாக கொடுத்து ஏழை எளியவர்களுக்கு வீடுகட்டிக் கொடுக்க அனுமதிக்க வேண்டுமென்று அமைச்சர் அவர்களை நான் கேட்டுக்கொள்கிறேன். அமைச்சர் அவர்களே, கடன் வாங்கியவர்கள் திருப்பிக் கட்ட முடியாமல் இருக்கிறது பல பகுதிகளில். அவர்கள் மிகவும் கஷ்டப் படுகிறார்கள். அப்படிக் கட்ட முடியாமல் இருக்கக்கூடிய கடன் வாங்கியவர்கள் கொடுக்க வேண்டிய தவணைத் தொகையைத் தள்ளுபடி செய்யவேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

இதை நான் எதற்காகச் சொல்கிறேன் என்றால் அமைச்சர் அவர்களே, நீங்களே என்னுடைய தொகுதியிலே பெருஞ்சேரி என்ற ஊரிலே என்னையும் வைத்துக்கொண்டே சொன்னீர்கள். வீடு கட்ட மனு கொடுத்த அவர்கள் கடன் தானா என்று கேட்டபோது, வாங்குகிறபோது கடனாக வாங்கிக்கொள்ளுங்கள், திருப்பிக் கொடுக்கிறபோது கோரிக்கையை வையுங்கள், நாங்கள் தள்ளுபடி செய்கிறோம் என்று என்னை வைத்துக்கொண்டு பெருஞ்சேரி என்ற ஊரிலே அறிவித்தீர்கள். சொல்கிறபோது அப்போது ஒன்றைச் சொன்னார்கள். எங்களுடைய புரட்சித் தலைவர் இருக்கிறாரே, தமிழகத்தின் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொடுத்துப் பழக்கப்பட்டவரே தவிர வாங்கிப் பழக்கப்பட்டவர் அல்ல என்று நீங்களே சொல்லியிருக்கிறீர்கள். நீங்கள் சொன்னபடி, வீடு கட்டக் கடன் வாங்கியவர்கள் கட்ட முடியாது என்ற கோரிக்கையை வைக்கிறபோது தள்ளுபடி செய்து கொடுங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கடன் வாங்கி வீடுகளைக் கட்டுவதற்கு கிராமப் பகுதிகளிலே சிமிண்ட் மூட்டை கிடைப்பதில்லை சிமிண்ட் மூட்டை கிடைப்பதற்கு ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். பல பகுதிகளிலே வீடு கட்டுவதற்கு மனு அனுப்பி அந்த மனுவை பரிசீலனைச் செய்ததற்குப் பின்னால் பங்குத் தொகையை வசூலித்து இருக்கிறார்கள். பங்குத் தொகையை வசூலித்த பிறகு பல மாதங்களாக கடன் வழங்கப்படவில்லை. அப்படிக் கூட்டுறவு சங்கங்களிலே பங்குத் தொகை வசூலிக்கப்பட்டவர்களுக்கு உடனடியாக கடன் வழங்க ஆவனசெய்ய வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களை இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். காரணம் அவர்கள் கொடுக்க வேண்டிய சான்றுகளைக் கொடுப்பதற்காக கையிலிருந்த காசையெல்லாம் செலவழித்து விட்டு பங்குத் தொகையையும் கொடுத்து விடுகிறார்கள், கையிலிருந்த காசையும், 200 ரூபாய் வரையில் செலவழித்துவிட்ட பின்னாலே பல மாதங்கள் ஆகியும் அவர்களுக்குக் கடன் கொடுக்கப்படவில்லை என்றால் அது நியாயமல்ல. ஆகவே பங்குத் தொகை வசூலித்தவுடனே அவர்களுக்குக் கடன் கொடுக்க ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நேதியூர் விஷ்ணுபுரம் ஆகிய இடங்களில் பங்குத்தொகை வசூலிக்கப்பட்டு பல மாதங்கள் ஆகியும் கடன்கள் கிடைக்கவில்லை என்று மனு மூலம் தெரிவித்திருக்கிறார்கள். ஆகவே அந்தக் கோரிக்கைகளை உடனடியாகப் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியிலே இருக்கிற குத்தாலம் ஒரு பெரிய நகரம். அங்கே பல அலுவலகங்கள் இருக்கின்றன. அங்கே பணியாற்றக்கூடிய பணியாளர்களுக்கு குடியிருப்பதற்குக் வீடுகள் இல்லை. எனவே அந்தப் பகுதியிலே வீட்டு வசதி வாரியத்தின்



மூலமாக வீடுகளைப் கட்டிக்ககாடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதேபோல் குடவாசல் வட்டத்தினுடைய தலைமையிடமாக இருக்கின்ற குடவாசல் ஒரு பெரிய நகரமாக இருக்கிறது. அங்கே பல்வேறு அலுவலகங்கள் இருக்கின்றன. அந்த அலுவலகங்களிலே பணியாற்றக்கூடிய பணியாளர்களுக்கு குடியிருப்புகள் கிடைப்பதில்லை. எனவே குடவாசல் நகரத்திலேயும் வீட்டு வசதி வாரியத்தின் மூலமாக வீடுகளைக் கட்டிக் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 12-40)

அதோடு திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியிலே இருந்தபோது நலிந்த பிரிவினருக்காக, ஏழைகளுக்கு, குறிப்பாக ஆதிதிராவிடர்களுக்கு 40 ஆயிரம் வீடுகள் இனாமாகக் கட்டிக் கொடுத்தோம். அந்தத் திட்டம் இன்றைய தினம் கைவிடப்பட்டிருக்கிறது. அந்தத் திட்டத்தையும் அமல்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஆதிதிராவிடர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுப்பதற்காக அமைக்கப்பட்ட வீட்டு வசதி வாரியம் இருக்கிறது. ஆனால் அந்தக் காரியத்திலே அது ஈடுபடவில்லை. ஏதோ காரியங்களை செய்துகொண்டிருக்கின்றது. ஏழைகளுக்கு, நலிந்த பிரிவினர்களுக்கு, ஆதிதிராவிட மக்களுக்கு வீடு கட்டிக் கொடுப்பதற்காக அந்த வாரியத்தைப் பயன்படுத்தி அதன் மூலமாக இனாமாக திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியிலே கட்டிக்கொடுத்ததைப்போல கட்டிக்கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நாங்கள் அன்றைய தினம் அந்த வீடுகளைக் கட்டிக் கொடுக்கிறபோது இப்போது ஆளும் தரப்பிலே இருப்பவர்கள், மிகவும் சின்ன வீடாக கட்டிக் கொடுக்கிறார்கள்; நாங்கள் ஆட்சிக்கு வந்தால் பெரிய வீடாக கட்டிக் கொடுப்போம் என்று சொன்னார்கள். அதை செயல்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைய தினம் மயிலாடுதுறையில் மூங்கில் தோட்டம் என்ற இடத்தில் வீட்டு வசதி வாரியத்தின் மூலமாக வீடுகள் கட்டி 1977-ல் அரசு அலுவலர்களுக்கு கொடுக்கப்பட்டது. இதுவரையில் அந்தப் பகுதியில் அந்த வாரியத்தின் மூலமாக கட்டப்பட்டிருக்கிற வீடுகளில் குடிதண்ணீர் வசதி, மின்விளக்குகள் வசதி முறையாகச் செய்யப்படவில்லை. செய்யாதது மட்டுமல்ல, வீட்டு வசதி வாரியத்தின் மூலமாக மயிலாடுதுறை நகராட்சிக்கு செலுத்தப்படவேண்டிய சொத்து வரி செலுத்தப்படவில்லை. அப்படி செலுத்தினால் அந்த வீடுகளில் குடியிருக்கக்கூடிய அலுவலர்களுடைய சொத்துக்களை ஜப்தி செய்வோம் என்று நகராட்சியிலே இருந்து ஒரு நோட்டீஸ் கொடுத்திருக்கிறார்கள். வீட்டு வசதி வாரியத்தின் மூலமாக செலுத்தப்படவேண்டிய அந்த வரியை செலுத்தாததால் 6-3-83 அன்று அந்த வீடுகளில் குடியிருக்கின்றவர்களுக்கு உங்களுடைய சொத்துக்களை ஜப்தி செய்வோம் என்று நகராட்சி ஆணையரால் நோட்டீஸ் கொடுக்கப்

பட்டிருப்பது முறைதானா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பார்க்கவேண்டும். ஒரு வாரியம் நகராட்சிக்கு வரியை செலுத்தாததினால் அங்கே குடியிருப்பவர்களுக்கு சொத்தை ஜப்தி செய்வோம் என்று நோட்டீஸ் அனுப்பக்கூடிய அளவிற்கு அந்த வாரியத்தில் இருக்கிறவர்கள் அலட்சியம் காட்டுவது முறைதானா என்பதை சிந்தித்து பார்த்து உடனடியாக அந்த மயிலாடுதுறை நகராட்சிக்கு வரியை வாரியம் செலுத்துவதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டும். அதனால் தங்கியிருக்கின்ற அலுவலர்களின் சொத்தை ஜப்தி செய்யாமல் இருப்பதற்கு வழிகாணவேண்டும், எனக்கு பின்னாலே பலபேர் பேச இருக்கிறார்கள். ஆகவே நான் சொன்ன கருத்துக்களில் அமைச்சர் அவர்கள் கவனம் செலுத்தவேண்டுமென்று கேட்டு வாய்ப்பு அளித்ததற்கு நன்றி கூறி முடித்துக் கொள்கிறேன்.

டாக்டர் கே. சௌரிராஜன்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, வீட்டு வசதி, நகர்ப்புற வளர்ச்சி மானியக் கோரிக்கைகள் மீது பேசுவதற்கு வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி.

சுதந்திரம் அடைந்து 35 ஆண்டுகள் ஆனதற்குப் பிறகு அக்ரிகல்சுரல் ரெவலூஷன், கிரீன் ரெவலூஷன் என்று உணவு பொறுத்தவரையில் தன்னிறைவு கண்டு, உடுக்க உடை என்பதில் தன்னிறைவு கண்டு, இருப்பதற்கு அக்காமடேஷன் என்ற வகையில் நாம் எந்த அளவிற்கு முன்னேறி இருக்கிறோம் என்று பார்த்தால் உள்ளபடியே நாம் ஒவ்வொருவரும் மிக வருத்தத்துடன் இருக்கவேண்டிய நிலைமை தான் இன்றைக்கு இருக்கிறது. அதிலும் குறிப்பாக நகர்ப்புறங்களில் வானத்தையே கூரையாக கொண்டு, பூமியை அதாவது பிளாட்பாரத்தை தன்னுடைய இருப்பிடமாகக் கொண்டு ஏழை மக்கள் வாழ்கிறபோது, இந்த அறிக்கையில் நீங்கள் வெளியிட்டிருப்பதைப் பார்க்கிறபோது, It is high time that we should try to evolve a policy. That is only a statement of facts. ஒவ்வொரு வருடமும் பாலிசி நோட் கொடுப்பார்கள். இந்தத் தடவை கொடுத்திருப்பது ஸ்டேட்மென்ட் ஆப் பாக்ட்ஸ். இதுவரையில் செய்திருப்பது என்ன என்பதைப்பற்றி ஒரு அறிக்கை வெளியிடப்பட்டிருக்கிறது. ஒரு திட்டத்தை உருவாக்கி அதன் மூலமாக ஒரு இலக்கினை அடைய வேண்டுமென்று ஒரு பிளானிங், பாலிசி இருக்கிறதா என்றால் நான் உள்ளபடியே வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்கிறேன. எந்த அளவிற்கு சிந்திக்க வேண்டுமோ அந்த அளவிற்கு சிந்திக்கவில்லை. பேரறிஞர் அண்ணா அவர்கள் காலத்தில் கூட அனைவருக்கும் வீடு கட்டி கொடுப்பது என்பது ஓரளவிற்கு சாத்தியப்படாது என்பதை உணர்ந்து ஒரு புரட்சிகரமான திட்டத்தை அறிவித்தார்கள். தீ பிடிக்காத வீடுகள் என்று சொல்லி வீடுகள் தீ விபத்திற்கு உள்ளாகாமல் இருப்பதற்கு உரிய வழிவகைகளை சிந்தித்துப் பார்த்தார்கள். அதைபோல மூதறிஞர் இராஜாஜி அவர்கள் இருந்தபோது இருக்கிற கட்டிடங்களில் மேலும் மேலும் அவர்களுக்கு—பேசிக் சானிட்டரி நீட்ஸ் கொடுக்கமுடியுமா



(டாக்டர் கே. சௌரிராஜன்).

என்பதை சிந்தித்துப் பார்த்து தான் அதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கருதினார்கள், ஆனால், மாண்புமிகு புரட்சித் தலைவர் ஆட்சியிலே கூட, 1977-லே அப்படிப்பட்ட ஒரு கருத்தை உருவாக்கி, அதன் மூலமாக, There is a tremendous amount of performance done in 1977. We introduced a scheme of Accelerated Slum improvement Scheme in Madras City. This scheme was started in 1977. The Accelerated Slum improvement Scheme envisages the provision of basic amenities like providing public conveniences, drinking water supply, street lights and access way to public convenience units. Upto 1982, 46,000 families were benefited under this scheme. என்று Statisties கொடுத்திருக்கிறார்கள். உண்மையைப் பற்றி நான் இப்பொழுது சந்தேகிக்கத் தயாராக இல்லை. ஆனால், இந்த Accelerated Slum improvement Scheme. எந்த அளவிற்கு சென்னை நகரத்தைப் பொறுத்தவரை ஒரு புரட்சி கரமான திட்டத்தை உருவாக்கியிருக்கிறது என்பதை எடுத்துப் பார்க்கும் நேரத்தில், whether the Slum Clearance Board has discharged their duties properly என்று கேட்டால் அதற்கு உள்ளபடியே சரியான பதிலே கிடையாது. ஏன், இதைச் சொல்கிறேன் என்றால், இங்கே இன்னொரு கணக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. சென்னை நகரத்திலே எல்லோருக்கும் தெரியும், கிட்டத்தட்ட 10 இலட்சம் பேர்கள் இன்று குடிசைகளிலே வாழ்கிறார்கள். அதிலும் குறிப்பாக, ஏழை, எளியவர்கள், தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர்கள், 10 இலட்சம் பேர்கள் இன்று வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அவைகளிலே 1982-ஆம் ஆண்டு முடிய நாம் கட்டியிருக்கிற டெனமெண்ட்ஸ் எவ்வளவு என்று கேட்டால், கிட்டத்தட்ட, 40,770 டெனமென்ட்ஸ் கட்டியிருக்கிறோம். அது எந்தக் காலத்திலே ஆரம்பம் என்ற கணக்கில்லை. ஆனால், 1982 முடிய 40,770 டெனமென்ட்ஸ் என்று சொன்னாலும், ஒரு டெனமென்டிலே 4 பேர்கள் வசிக்கலாம். அப்படிக் கணக்கெடுத்துக் கொண்டால் கூட tenements கட்டியதன் மூலமாக 2 இலட்சம் பேர்கள் 40,000 குடும்பங்கள் have been benefitted by this Slum Clearance Board. 1982-83-ல் 2,200 டெனமன்ட்ஸ் கட்டப் போகிறோம் என்று குறிப்பு கொடுத்திருக்கிறார்கள். இந்த 40 700 டெனமன்ட்ஸ் கட்டியதன் தொகை ரூ. 4,086.67 இலட்சம். ஆனால், 1982–83–லே, 2,200 கட்டுவதற்காக ஆகக் கூடிய தொகை ரூ. 420 இலட்சம். இந்தக் கணக்கை எடுத்துப் பார்க்கக்கூடிய நேரத்தில், இதுவரையில், ஒரு டெனமென்ட் கட்டியதற்கு ஆகிய செலவு ரூ. 10,000 ஆனால், 1982–83-ல் 2,200 மாத்திரம் கட்டுவதற்கு

ஆகக்கூடிய செலவு ரூ 20,000. doubling the cost இந்த அளவிக்கு நாம் போவோமானால், வருங்காலத்திலே, the escalation cost is going more. அப்படியிருக்கும் நேரத்தில் இந்த சென்னை நகரைப் பொறுத்தமட்டில் Slum Clarance Board இருக்கும் வரையில், ஸ்லம் இருந்து கொண்டே இருக்கும். இன்னும் 50 ஆண்டுகள் ஆனாலும் கூட நம் இலக்கை அடைந்து விடுவோமா என்று சொன்னால், The Madras city will continue to be a city of slums even after 2200 A.D. அந்த அளவுக்கு, 2,000 டெனமென்ட்ஸ்தான் நம்மால் கட்ட முடியும் என்று சொன்னால், இப்பொழுது சென்னை நகரத்திலே உள்ள குடிசைகளை மாத்திரம் குடியேற்ற முடியும். அவர்களை டெனமென்ட்ஸ்லே குடியேற்ற முடியும் என்று சொன்னால்‘ அதற்கு குறைந்தபட்சம் 50 ஆண்டுகளாவது ஆகும் என்று சொல்லி, இந்தத் திட்டத்தினால் இப்பொழுது எந்தப் பயனும் இல்லை· ஆனால் அதே நேரத்தில் Acce'erated Slum Improvement Scheme in Madras city—ன் கீழ் 46,000 வீடுகளுக்கு அடிப்படை சுகாதார வசதிகளை நாம் வெகு சீக்கிரமாக கொடுக்க முடியுமா என்று சொன்னால்e this policy must be changed. More steps must be made on slume improvement rather than slum clearance என்பதை உங்கள், கவனத்திற்கு இந்த நேரத்திலே நான் கொண்டுவர ஆசைப் படுகிறேன்.

அடுத்தபடியாக இன்னொரு இடத்திலே சொல்கிறார்கள்.

The Land Acquistion and Development Scheme aims at large scale acquisition of land in advance with a view to preventing specul-e tion and to peging down land prices so as to make land availabl for housing at reasonable cost. யார் வாங்குவதற்கு? ரீசனபிள் காஸ்ட்லே அரசாங்கம்வாங்குவதற்கு? Because these people have started acquiring lands within the Madras city இருக்கக்கூடிய நிலம், நகர்ப் புறங்களிலெல்லாம் குறைந்து போய், பிரைவேட் கன்ஸ்ட்ரக்ஷன் தனியார்கள் கட்டுகின்ற நிலத்தினுடைய மதிப்பு ஏராளமாக உயர்ந்து விட்டது என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். சரி, இப்படி இவ்வளவு நிலத்தை நாம் ஆர்ஜிதம் செய்திருக்கிறோமே. அவை களில் எல்லாம் கட்டிடம் கட்டியிருக்கிறோமா என்றால் கட்டிடம் கட்டவில்லை. The Tamil Nadu State Housing Board அதனுடைய நிதிநிலைமையையும் style of functinig பார்க்கிற நேரத்தில் I am ashamed to say that it is not Tamil Nadu States Housing Board it is Tamil Nadu State Housing Company because they have entered



the field of construction as a competitor. i. e. the private people are already constructing houses P.A. Builders and other private builders are there. Likewise, the Tamil Nadu State Housing Board can be renamed as Tamil Nadu State Housing Company because the Government is a competitor with the private people because the Government has got more facilities. Now the problem for other private constrnction agencies has become more acute and the cost of the land gone up.

136017

(பிற்பகல் 12.50)

இதைத்தான் நாம் மறுபடியும் சிந்தித்துப் பார்க்க வேண்டும் ஆனாலும், இந்த நிலைமைகளை நாம் எப்படி மாற்றமுடியும் என்று சிந்தித்துப்பார்த்தால்; நாம் வீடுகளைக் கட்டி அதை தவணை முறைக்கு வாடகைக்கு விட்டு. பிறகு அந்த வீடுகளை சொந்தமாக்குவதற்கான ஏற்பாடுகளைச் செய்வதை விட, என்னைப் பொறுத்த வரையில் ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்திலே கூட. நான் எடுத்துச் சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன். சைதாப்பேட்டையிலே தாடண்டர் நகர் 60 ஆண்டுகளுக்கு முன்னால் கட்டப்பட்டது; செக்கரட்டேரியட்டைச் சுற்றியுள்ள வாலாஜாரோட்டில் உள்ள வீடுகள் யாருக்காகக் கட்டப்பட்டன.

It is purely intended for the Government servants only for rental purposes. (The temporary Speaker sounded the gong) I am sorry Sir. I am just talking on a policy. The Hon'ble Minister has also Prepared to lend his ears. Pleases give me five more minutes because I am also concernd with the city. You arg always alloting time to me at the last minute and I am always the last speaker. ஆகவே ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்திலே, அரசாங்கத்தினுடைய அரசு ஊழியர்களுக்குக் கட்டிடத்தைக் கட்டி அங்கிருந்து கோட்டைக்கு வருவதற்கான வசதி இருக்கிறதா என்றெல்லாம் ஆராய்ந்து பார்த்துவிட்டு, அரசு ஊழியர்களுக்கு வீட்டு வசதி சலுகையைச் செய்து கொடுத்திருந்தாகள். அதைப்போல, its ad of the State Housing Bcard entering into a trade with the public, it could have confined itself only to accommodate the Government servants and that too only for rental purpose alone. So much of problems could have been solved by the State.

இன்றைக்கு அரசு ஊழியர்கள், அதுவும் நம்முடைய ஸ்டேட் கவர்ன்மென்ட் சர்வீஸ் ஊழியர்களின் நிலைமையைப் பார்த்தால் அவர்கள் எங்கெங்கேயிருந்தோ குடியிருந்து வருகிறார்கள். நீங்கள் கொடுக்கின்ற 20 பர்சென்ட் ஹவுஸ் ரெண்ட் அலவன்ஸை வைத்துக் கொண்டு நடுத்தர வர்க்கத்தினர் குடியிருக்க இடமில்லாமல் தவிக்கின்ற நிலைமைகளைப் பார்க்கும் பொழுது உள்ளபடியே அரசாங்கம் இதைப்பற்றிச் சிந்திக்க வேண்டுமென்று சொல்வதற்குக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தனி மனிதன் வீடு கட்டிக் கொள்வதற்கு ஆசைப்படுவது இயல்பு. The sense of possession is always there for every T.milian அதுவும் தமிழர்களிடத்தில் இன்னும் அந்த ஆசை அதிகமாக இருக்கும். Co-ope: tive movement must have been given more accell:ation ,rth rthan actually the Housing Boar. trying to construce houses and sell in it to the common man. இப்பொழுது பார்த்தீர்கள் என்றால் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் பத்திரிகையிலே விளம் பரம் கொடுக்கிறது. 80 வீடுகள் எச். ஐ. ஜி. அல்லது எல். ஐ. ஜி. என்று விளம்பரங்கள் கொடுக்கப்படுகின்றன. Applications are invited. ஆனால் அவர்களுக்கு வருகின்ற மனுக்கள் எத்தனை தெரியுமா? 80,000 மனுக்கள். 80 வீடுகளுக்கு 80,000 அப்ளிகேஷன்ஸ் வருகின்றன, ஒரு வீட்டிற்கு மனுவிற்கு 50 ருபாய் என்று வைத்து, அதை வியாபாரம் போலச் செய்து கொண்டிருக்கின்ற நிலமை இருக்கிறது. 80 பேர்களுக்கு வீடு கட்டியிருக்கும் போது 80,000 மனுக்கள் வருக்கின்றன என்ற நிலைமையில் நாம் இன்னொன்றைக்கூடச் செய்யலாம். லாட்டரி டிக்கட்டை பிரின்ட் செய்துவிடலாம். புத்தகமாகவும் மொத்தமாகவும் அடிப்பதை விட இவ்வாறு செய்யலாம். much of stationery can be saved. The applicants will be re- lieved from the botheration of getting the Nativity Certificate, income certificate, etc. and it will make the process simple ஏதோவொரு நம்பரைக் கொடுததுவிடுங்கள். குலுக்கல் முறையில் யாருக்கு விழுகிறதோ அவர்கள் எடுத்துக் கொண்ட பிறகு, தகுதி படைத்தவர்கள் என்று தெரிந்தபிறகு அவர்கள் பயன்படுத்தலாம். அதைவிட்டு, ஏராளமான புத்தகங்களை அச்சடித்து, 50 ருபாய் என்று பெனால்டி மாதிரி. for having the desire to own a house என்று செய்வது நியாயம் இல்லை.

கடைசியாக ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். பத்திரிகை யாளர்களுக்கு வீடுகள் கட்டித்தர வேண்டுமென்ற கோரிகை மாண்புமிகு உறுப்பினர் திரு. ரமணி அவர்கள் கூடச் சொன்னார்கள்.



They form part and parcel of the society and that too they shape the public opinion அவர்களுடைய நிலைமைகளைப் பொறுத்த வரையில். அதிலும் தமிழ் பத்திரிகையாளர்களின் நிலைமையைப் பொறுத்த வரையில் பலேக்கர் அவார்டை பல பத்திரிகைகள் அமல் நடத்தவில்லை, அப்படியிருக்கும்பொழுது இன்ஸ்டால் மெண்டில் வீட்டைவாங்கிக் கொள்ளுங்கள் என்றால் என்ன செய்வார்கள். நான் அநேக பத்திரிகையாளர்களைப் பார்த்திருக் கிறேன். வீட்டு வாடகையையே கட்டுவதற்கு அவதிப் பட்டுக்கொண்டிருக்கிறார்கள் அவர்களிடம்போய் own your house on instalment basis instalment basis இல் வாங்கிக் கொள்ளுங்கள்என்றால் எப்படி அவர்களால் முடியும். Even though, they may form a very small percentage of population till they must be given due respect because they are responsible for, shaping the public opinion and therefore more houses should be allotted on rental basis. I understand about 50 houses have been allotted so far. But 300 applicants are waiting. I would request the Hon,ble Minister to consider the suggestion and see that more and more of the working Journalists who are at the lowest ebb of the society – I should say – they are the down – trodden – I should say. தாழ்த்தப்பட்டவர்கள் தாழ்த்தப்பட்டவர்கள் என்றால். சாப்பாட்டுக்கே லாட்டரி அடிப்பவர்கள் தமிழ்ப் பத்திரிகை ரிப்போர்ட்டர்கள் என்ற நிலைமை இருக்கிறது என்று சொல்லிக் கொள்கிறேன்– the Hon'ble Minister also must consider, my suggestion favourably, one again I thanke you for giving me this opportunity.

திரு. சி. சிவப்பிரகாசம்: மாண்புமிகு மாற்றுத் தலைவ ரவர்களே, இன்று தொழிலாளர் நலத்துறை அமைச்சரவர் களால் கொண்டுவரப்பட்டுள்ள வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி மானியக் கோரிக்கை மீது பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். வீட்டுவசதி ஒவ்வொரு மனிதருக்கும் மிகவும் முக்கியம் வாய்ந்ததாகும்.

குடிசை மாற்று வாரியம், குடிசையிலுள்ளவர்களை அப்புறப்படுத்தி, மாடி வீடுகள் கட்டிக்கொடுக்க நினைக்கும் போது, ஒரு சிலர், தன் சுயநலத்திற்க க வீடு கட்டுவதைத் தடைப்படுத்துவதற்கு, கோர்ட்டுக்குச் சென்று தடைப்படுத்துகிறார்கள். அதனால் அரசினுடைய திட்டங்கள் நிறைவேற்றப் படமுடியவில்லை. இந்தத் திட்டத்தை நிறைவேற்ற கோர்ட்டுக்கு செல்லாமல் இருக்க, அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

காங்கிரஸ் ஆட்சி காலத்திலே, தி.மு.க. ஆட்சி காலத்திலே வீட்டு மனைப் பட்டா வழங்கியதில்லை. நம்முடைய புரட்சித் தலைவர் ஆட்சியில் தான் பல இடங்களில் பல ஆயிரம் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன.

குடிசையில் வாழ்பவர்களுக்கும், குடிசைகளை மாற்றி, எரியாத வீடுகளாகக் கட்டுவதற்கு, மாண்புமிகு புரட்சித் தலைவர் அரசு தான் அவர்களுடைய வருமான அடிப்படையில் நீண்டகால கடனாகக் கொடுத்து, எரியாத வீடுகளைக் கட்டுவதற்கு உதவுகின்றது. குடிசை மாற்று வாரியம் நல்ல பணிகளைச் செய்திருக்கிறது என்பதை மற்ற மாநிலங்கள் எல்லாம் பாராட்டுகின்ற வகையில் செயல்பட்டு வருகிறது.

ஒவ்வொரு குடிசைப் பகுதியிலும், மாடிவீடு கட்டுகிறபோது, சுகாதார வசதியோடு, சுகாதார நிலையம், டி.வி., குழந்தைகள் காப்பகம், பூங்கா, சிறு தொழில்கள், விளையாட்டு இடம், இத்தனை வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டு இன்று குடிசை மாற்று வாரியம் புரட்சித் தலைவர் ஆட்சியில் சிறப்பாக செயல்பட்டுவருகிறது.

வீட்டுமனை ஒதுக்கீடு, வீடு கட்ட நிதியுதவி வழங்குதல், பொருளாதாரத்தில் நலிந்தோருக்கு கூட்டுறவு சங்கங்கள் மூலம் கடன் உதவி வழங்குதல் போன்ற பல திட்டங்களைச் செயலாற்றி வருகிறது. இந்தக் கடன் தொகையை அதிகப்படுத்த வேண்டுகிறேன். இப்போது அரசு வழங்கிய வீட்டு மனைப் பட்டாக்களுக்கு மட்டும் வீட்டுவசதி நிதி வழங்கப்படுகிறது. நலிந்த பிரிவினர் வேறு பட்டா நிலங்களை விலைக்கு வாங்கி வீடு கட்ட நினைத்தால், தற்போதுள்ள நிலை தடங்கலாக உள்ளது. ஆகவே இந்த நிலைமையை மாற்றி எல்லோருக்கும் வீடு கட்டிக்கொள்ள உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுகிறேன்.





இந்தப் பிரச்சினை அதிக அளவில் இருக்கும் மலைவாழ் மக்கள் பகுதியான கொல்லி மலையிலுள்ள சர்க்கரைப்பட்டி, பெருமாப் பட்டி, திண்டுப்பட்டி, எல்லைக்கிராய்ப்பட்டி போன்ற இடங்களில் வரிசைக் கிரமமான முறையில் அமைக்க ஏற்பாடு செய்து, நாமக்கல் கிராமிய வீட்டுவசதி சங்கத்திற்கு விண்ணப்பித்துள்ளனர். இந்தக் கோரிக்கையை நிறைவேற்றித் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வீட்டுவசதியிலே அரசு தீவிர நடவடிக்கை எடுத்துள்ளதை வரவேற்கிறேன். அலுவலகப் பணியாளர்கள், காவல்துறையினர், உயர்ந்தவருவாய் உள்ளவர்கள் ஆகியோருக்கும் வீட்டு வசதி திட்டம் சிறப்பாக செயல்பட்டு வருவதைப் பாராட்டுகிறேன்.

உயர்தர, நடுத்தர அடுத்த தர வீடுகளை ஒதுக்கி வருகின்றது. இந்தத் திட்டம் சிறப்பாக செயல்பட்டுவருகிறது. இதிலே ஒரு சிலர் தவறான ஜாதிச் சான்றிதழ் பெற்று, ஆதிதிராவிடர், பழங்குடி மக்களுக்காக ஒதுக்கப்படும் வீடுகளை பெற்றுவிடுவதாகத் தெரிகிறது. ஆகவே ஜாதிச் சான்றிதழை நன்கு பரிசீலித்து அவர்களுக்கு வீடுகளை ஒதுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

'பப்ளிக் கோட்டா'வில் பல பேர்களுக்கு வீட்டுவசதி வாரியத்தின் மூலமாக வீடுகள் ஒதுக்கப்படுகின்றன. அவர்கள் சொந்தத்தில் வீடு கட்டிக் கொண்டால், வீடு காலி செய்யப்பட்டது வாரியத்திற்கு அறிவிக்க வேண்டுமென்று அரசு தெரிவித்துள்ளது. தொடர்ந்து பல பேர் 'பப்ளிக் கோட்டா'வில் வீடு கேட்டு விண்ணப்பித்துள்ளார்கள். வீட்டுவசதி வாரியத்தில் பப்ளிக் கோட்டாவில் ஒதுக்கீடு செய்யும் வீடுகள் புதிதாக மேலும் அதிகப்படியாகக் கட்ட ஒதுக்கீடு செய்யப்படாத நிலையிருக்கிறது. அதனாலே குறிப்பிடப்பட்ட 'பப்ளிக் கோட்டா'வில் ஒதுக்கீடு பெற்றவர்கள் வீடுகளைக் கட்டிக் கொண்டு, மேற்படி வீடுகளை அதிக வாடகைக்கு விட்டு பொதுமக்களுக்கு இடைஞ்சல் செய்கிறார்கள். ஆகவே இது சம்பந்தமாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

(பிற்பகல் 1-00)

அடுத்து அரசுப் பணியாளர்களுக்காக அளிக்கப்படும் அக்காமடேஷன் கண்ட்ரோல் வீடுகளில் பலவற்றிற்கு வாடகைக் குறைவாக இருப்பதை ஆட்சேபித்து வீட்டுச்சொந்தக்காரர்கள், கோர்ட்டுக்குச் சென்று அங்கே குடியிருப்பவர்களை வெளியேற்றுகிறார்கள். அரசாங்கம் நிர்ணயம் செய்த வாடகையை ரூ. 400-க்கு மேல் என்று கோர்ட்டிலே மதிப்பு செய்துவிட்டால் மேற்படி வீட்டையும் காலி செய்யவேண்டும். மேலும் எந்தத்

தேதியிலிருந்து அந்த வீடு ஒதுக்கப்பெற்றதோ அந்தத் தேதியிலிருந்து அதிகப்படியான வாடகை வசூலிக்க வேண்டுமெனவும், உத்தரவிடப்படுகிறது. இதனால் குறைந்த சம்பளம் பெறும் பல அரசு அலுவலர்கள் பல துன்பங்களுக்கு உட்பட்டு வருகிறார்கள். கோர்ட் உத்தரவு போட்ட தேதியிலிருந்து தான் அந்த வாடகையை வசூலிக்க அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அக்காமடேஷன் கன்ட்ரோலில் வரும் வீடுகளை வாடகை ரூ. 400 என்பதிலிருந்து மாற்றி அதிகப்படியான வாடகை பெறும் வீடுகளை இதிலே சேர்க்க வேண்டும். தற்போதைய சூழ்நிலையில் வாடகை அதிகம் உள்ள வீடுகளையும் இதில் சேர்த்து அரசு அலுவலர்களின் குறையைப் போக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து வீட்டு வசதி வாரியத்தால் நகர்ப்புறங்களில் வீடுகள் கட்டிக் கொடுக்க நிலங்கள் தேர்ந்தெடுக்கும்போது, பல சிக்கல்கள் ஏற்படுகின்றன. அதைக் களைந்து காலப்போக்கிலே அந்தச் சிக்கல்கள் ஏற்படாமல் நகர்ப்புறங்கள் வளர்ச்சி அடைய அரசு தக்க நடவடிக்கை எடுத்து, பல நகரங்களில் வீடு வசதிகளைச் செய்து கொடுத்து முன்னேற்றம் அடையச் செய்ய வேண்டும் என்று கேட்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

திரு. ஜே. எஸ் இராசு : மாண்புமிகு தற்காலிகத் தலைவர் அவர்களே அவையின் முன் வைக்கப்பட்டிருக்கின்ற வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை இயவற்றுக்கான மானியங்களின்மீது திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் என்னுடைய கருத்துக்களையும், தரப்பட்டிருக்கின்ற வெட்டுத் தீர்மானங்களை ஆதரித்தும் என்னுடைய கருத்துக்களைத் தெரிவிக்க விழைகிறேன்.

வீட்டுக்கு ஒருவருக்கு வேலை தரப்படும் என்ற லட்சியத்தை அறிவித்து இருக்கின்ற நம்முடைய தமிழக அரசு அத்துடன் குடும்பத்திற்கு ஒரு வீடு என்ற லட்சியத்தை இதயத்திலே ஏற்றுக்கொண்டு அதற்கு ஏற்ற வகையிலே தன்னுடைய பணியினை இனிமேல் செய்தால் நிச்சயமாக வரவேற்பதற்கு வாய்ப்பாக இருக்கும் என்பதை நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நம்முடைய வீட்டு வசதிப் பற்றாக்குறை ஏழை எளியவர்களுக்கு நடுத்தர மக்களுக்கு வீட்டு மனை, வீட்டு வசதி ஆகியவை இல்லை என்ற பிரச்னை நீண்டகாலமாக இருந்து வருகிறது. அதனுடைய முக்கியத்துவத்தைப் பற்றி நான் ஒரு குறிப்பினைத் தரவிரும்புகிறேன். நம்முடைய நாட்டிலே மட்டுமல்ல உலகத்திலே பல பாகங்களில் வீட்டு வசதிக்காக மக்கள் முனைந்து போராடுகிறார்கள் என்பதற்கு அடையாளமாக நான் ஒரு வரலாற்றுச் சம்பவத்தை நினைவுப்படுத்த விரும்புகிறேன். அப்போலோ பதினொன்றில் பயணம் செய்த வீரர்கள், ரோம்



நகரத்திற்கு வந்தார்கள், ஒரு வரவேற்பைப் பெற்றுக் கொள்வதற்காக. அங்கே அவர்களை வரவேற்கக் காத்திருந்த மக்கள் விண்வெளி வீரர்களைப் பார்த்து எங்களுக்கு வீடுகள் வேண்டும் என்று முழங்கினார்கள். வீட்டுமனைக் கிடைக்குமா என்று கேட்டனர். இந்த நில உலகத்திலே கிடைக்காது போல இருக்கிறது, ஆகவே நீங்கள் போய் வந்த நிலா உலகத்திலேயாவது எங்களுக்கு வீடு கிடைக்குமா, அதற்கு ஏற்பாடு செய்வீர்களா என்று கேட்டதாக அந்தக் காலத்திலே பத்திரிகையிலே ஒரு செய்தி வந்தது. ஏன் இதைக் குறிப்பிடுகிறேன் என்றால், வீட்டு வசதி எவ்வளவு முக்கியத்துவமாக கருதப்படுகிறது என்பதற்காகத்தான். அதோடு மட்டுமல்லாமல் நம்முடைய இந்தியத் திருநாட்டில், தமிழகத்தில் நமக்காக பாடுபட்ட மிகப் பெரிய தலைவர்கள் எல்லாம் இந்த வீட்டு வசதி செய்துதரப்பட வேண்டும் என்பதை மிக ஆழமாக கவனித்து வந்திருக்கிறார்கள். ஒரு முறை சென்னைக்கு வந்த முன்னாள் பிரதமர் பண்டித நேரு அவர்கள், சாலைகளின் இருமருங்கிலும் உள்ள குடிசைகளை பார்த்து, மிக வேதனைப்பட்டார்கள். பிறகு அவர்கள் ஒரு பொதுக் கூட்டத்திலே பேசும்போது, குடிசைகளை நாம் பெற்றிருப்பது மிகவும் கேவலமானது, அவற்றை மேலே வளர விடுவது நம்முடைய தவறு, அனைவருக்கும் வீட்டு வசதி செய்து தரப்படவேண்டும் என்று மிக வேதனையோடு குறிப்பிட்டார்கள். அந்த உணர்விலே சற்றும் குறையாத நம்முடைய பேரறிஞர் அண்ணா அவர்கள் குடிசை வாழ்வோர் நலன் பற்றியும் வீடு அற்றவர்களுக்கு வீட்டு மனை தரவேண்டும், வீடு கட்டித்தர வேண்டும் என்பதைப் பற்றியும் மிகுந்த அக்கறையோடு பணியாற்றினார்கள் என்பதை, அண்ணா அவர்கள் எதிர்க்கட்சி வரிசையிலே இருந்த அந்தக் காலத்திலே எப்படி நடந்து கொண்டார்கள் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நிச்சயமாக உணர்வார்கள். அண்ணா அவர்கள் பல நேரங்களிலே குறிப்பிட்டிருக்கிறார்கள்.

அண்ணாவின் கருத்துக்களை நான் இங்கே எடுத்துத் தெரிவிக்கக் கடமைப்பட்டு இருக்கிறேன். அண்ணா சொன்னார் — ''நான் குடிசைகளை மாற்றவேண்டும், வீடு கட்டித்தரவேண்டும் என்று சொல்லும் போது — அங்கே வாழும் மக்களின் நலனை மட்டுமல்ல — நமது நாட்டின் நலனுக்காக அங்கே வாழ்கிற மக்களின் ஆற்றல் நாட்டு வளர்ச்சிக்குப் பயன்பட வேண்டும் என்ற நோக்கத்தாலும் தான் சொல்கிறேன், நமது தாயகத்தின் பொருளாதார வளர்ச்சிக்கும் சமூக சீரமைப்புக்கும், குடிசைப் பகுதியில் வாழும் மக்களின் மனித சக்தி முழுவதும் பயன்படுத்தப்பட வேண்டும். முதலாளித்துவ வாதிகள் — தொழிற்சாலைகளில் இயந்திரங்கள் தங்களது மூலதனத்தைச் செலவிட விரும்புகிறார்கள். ஆனால் யாரும் மனித சக்தியின் மீது 'மூலதனத்தை செலவிட தயாராக இல்லை. மனித ஆற்றலின் மீது மூலதனத்தை செலவிடத் தயங்குவது மனிதப் பண்பாட்டை மதிக்க மறுப்பதாகும்'' என்று அண்ணா அவர்கள் சொன்னார்கள்.

இந்த அடிப்படையை நான் சொல்வதற்குக் காரணம், இங்கே ஒதுக்கப்பட்டு இருக்கும் நிதி நிச்சயமாக நேரு அவர்கள் சொன்ன, அண்ணா அவர்கள் சொன்ன கொள்கைகளை சீக்கிரமாக நிறைவேற்றுவதற்குப் போதாது என்பதால்தான் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே, இதற்கு கூடுதலாக நிதி ஒதுக்கவேண்டும், ஒதுக்கப்பட்டுள்ள நிதி போதாது என்பதை என்னுடைய துவக்கத்திலேயே தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

வீட்டு வசதி செய்வதற்கு என்று நாம் சில அமைப்புகளை உருவாக்கி வைத்து இருக்கிறோம். தமிழ்நாடு கூட்டுறவு வீட்டு வசதி சங்கம் சென்னையில் உள்ள வேப்பேரியில் உள்ளது. இது 1959 ஆம் ஆண்டு துவங்கப்பட்டது. இந்த அமைப்பின் நிர்வாகத்திலே எத்தனை வேகக்குறைவு, எத்தனை தவறுகள் நடைபெறுவதற்கு வாய்ப்புகள் இருக்கின்றன என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அந்த தலைமைச் சங்கத்தில் உதவிச் செயலாளர்கள்—அசிஸ்டென்ட் செக்ரடரிஸ்—8 பேர் இருக்கிறார்கள். மேனேஜர்ஸ்— மேனேஜர்கள் 6 பேர் இருக்கிறார்கள். சூப்பிரன்டென்ட்ஸ்— கண்காணிப்பாளர்கள் 12 பேர் இருக்கிறார்கள் எல்லோருக்கும் மேலாக எஸ். ஓ. இருக்கிறார். அங்கே தற்போது தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் குழு இல்லை. சிறப்பு அதிகாரிதான் தலைமைப் பொறுப்பில் இருக்கிறார். ஆகவே, இத்தகைய மேல்மட்ட அதிகாரிகள் இருந்தாலும் கூட, அங்கே வேலை செய்கிற அளவிற்கு, இத்தனை மேல்மட்ட அதிகாரிகள் வேலை வாங்குகிற அளவிற்கு கீழே பணி செய்ய குமாஸ்தாக்கள் இல்லை, போதுமான எழுத்தர்கள் இல்லை. கிராமப்புறத்தில் சொல்வார்கள்— வயலில் பாதி கிணறு என்று— அதைப்போல சூப்பர்வைசரி ஸ்டாப்— மேற்பார்வை செய்யும் அதிகாரிகள் தான் அதிகமாக இருக்கிறார்களே தவிர களப் பணியாளர்கள் என்று சொல்லக் கூடியகுமாஸ்தாக்கள் அல்லது எழுத்தர்கள் குறைவாக இருப்பதால், அந்தச் சங்கத்திற்கு வரும் லட்சக்கணக்கான விண்ணப்பங்களைப் பரிசீலிக்க, முடிவு எடுக்க, பணம் பட்டுவாடா செய்ய, பல கிராமப்புற சங்கங்களுக்கு அனுமதிக்கப்படுகிற பணத்தை அனுப்புவதற்கு போதிய எழுத்தர்கள் அங்கே இல்லை என்பதை நான் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன். அண்மைக் காலத்தில் எந்தவிதமான அப்பாயின்மென்ட்ஸ் செய்யப்படவில்லை. ஏதோ சிலரைப் போட்டார்கள். அது போதாது. ஆகவே, உடனடியாக 100 எழுத்தர்களாவது அங்கே நியமிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

பிரதம சங்கங்களில் இருந்தும், மற்ற சங்கங்களில் இருந்தும் தலைமைச் சங்கத்திற்கு விண்ணப்பங்களை அனுப்புகிறோம். நான் ஒரு நகர வீட்டு வசதி சங்கத்தின் தலைவனாக ஏறத்தாழ 10—12 ஆண்டு காலமாக இருந்து வருகிறேன். எனவே, எனக்கு அங்கேயுள்ள ப்ராக்டிகல் டிபிகல்டீஸ் என்ன என்பது ஓரளவிற்குத் தெரியும், அங்கே வருகின்ற விண்ணப்பங்களை பரிசீலித்து,



போர்ட்டிலே வைத்து முடிவு செய்து, சாங்ஷன் செய்து, பணம் பட்டுவாடா செய்வதற்காக சென்னைக்கு அனுப்புகிறோம். மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரிந்திருக்கக்கூடும். சென்னைக்கு அனுப்புகிற அந்த விண்ணப்பங்களுக்கான பண பட்டுவாடா வருஷத்திற்கு ஒரு முறை அல்லது இரண்டு முறை தான் செய்யப்படுகிறது. ஆயிரக்கணக்கான பணம் பட்டுவாடா செய்யவேண்டியிருந்தும், அதிகமான எழுத்தர்கள் இல்லாத காரணத்தால், கீழே பணிசெய்யக்கூடியவர்கள் இல்லாத காரணத்தால், அல்லது அங்கே இருக்கின்ற எழுத்தர்களும் சரியாக வேலை செய்யாததால், உடனுக்குடன் அந்த மனுக்களை பரிசீலிக்கப்படாததால், பல சங்கடங்கள் ஏற்படுகின்றன. எல்.ஐ.சி. மற்றும் ஹட்கோ போன்ற நிறுவனங்களில் இருந்து அந்தச் சங்கத்திற்குப் பணம் வந்தவுடன், ஒவ்வொரு சங்கத்தின் தலைவருக்கும் தகவல் அனுப்பி, அவர்கள் அங்கே கும்பல் கும்பலாக தினமும் வந்து, அந்தத் தலைமைச் சங்கத்திற்கு அவர்களால் அனுப்பப்பட்ட விண்ணப்பங்களை, அவர்களே தேடி எடுத்து,— நானே தேடியிருக்கிறேன்— அந்த அதிகாரி களிடத்தில் கொடுக்கவேண்டிய நிலை இருக்கிறது. அதற்குப் பிறகு தான் அதிகாரிகளும் அந்த மனு சரியாக இருக்கிறதா இல்லையா என்பதைப் பார்க்கிறார்கள். அப்படிச் சரியில்லை என்று இருந்தால் அப்போதுதான் திருப்புகிறார்கள். விண்ணப்பங்கள் வந்தவுடனேயே அவைகள் சரியாக இருக்கின்றனவா இல்லையா என்பதை அவ்வப்போது பரிசீலித்து, சரியாக இல்லை என்று சொன்னால், அவற்றை அப்போதே திருப்பி அனுப்பியிருந்தால், அவர்களும் அதைச் சரிசெய்து, பணம் வருகின்ற நேரத்தில் அந்த தாமதம் இல்லாமல் பணத்தைப் பெற்றுக் கொள்ள முடியும். இப்படி வருஷத்திற்கு ஒரு முறை அல்லது இரண்டு முறை பணம் வருகின்றபோது அந்த விண்ணப்பங்களைப் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்வதை விட, அவ்வப்போது அவற்றைப் பரிசீலிப்பது நலமாக இருக்கும். ஆகவே, இனி மேல் வருகின்ற விண்ணப்பங்களை, அவ்வப்போது பரிசீலனை செய்து, தவறு இருந்தால், திருப்பி அனுப்பி, அதைச் சரிசெய்யச் சொல்லி, மறுபடியும் திருப்பி தலைமைச் சங்கத்திற்கு அனுப்புவதற்கு வாய்ப்புகளை உருவாக்கித் தரவேண்டும். இதனால் கடன் வாங்குவதற்கு காலதாமதம் ஏதும் ஏற்படாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(பிற்பகல் 1-10)

அடுத்து வட்டிப் பிரச்சனை. ஏழை மக்கள், தாழ்த்தப்பட்ட மக்கள், வசதி இல்லாதவர்கள் கடன் வாங்குகிறார்கள். அந்தக் கடனுக்கு இப்போது 14.5 சதவீதம் வட்டி வாங்குகிறார்கள். வட்டியைப் பொறுத்தமட்டில் இதிலே ஏதாவது ஒரு சிக்கன நடவடிக்கை எடுத்து, வட்டியைக் குறைத்தால் வசதியாக இருக்கும்.

இரண்டாவதாக, தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர் குழு தற்போது இல்லை. அதனால் நிர்வாகச் சீர்கேடு இருக்கிறது. நான் இதைச் சொன்னால் மற்றவர்களைப்போல அமைச்சரவர்கள் என்னிடம் ஆதாரம் இருக்கிறதா என்று கேட்கமாட்டார்கள் என்று கருதுகிறேன். காரணம், ஆதாரத்தோடு சொல்லக்கூடிய விஷயங்கள் உண்டு, ஆதாரம் இல்லாமல் அமைச்சரே உணர்ந்து பார்த்து தெரிந்துகொள்ளக்கூடிய விஷயமும் உண்டு. சிலவற்றை உணர்ந்துதான் பார்க்க வேண்டும்; ஆதாரம் இருக்க முடியாது. அந்த வகையிலே அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

இப்போது தலைமை அலுவலகத்தில் எஸ்.ஓ. போன்றவர்கள், மேல்மட்டத்தில் இருக்கிறவர்கள் ஒவ்வொரு சங்கத்திற்கும் போய் நல்ல முறையில் ஆய்வு செய்யாமல், விசிட் செய்ததாகச் சொல்லி திரும்பி வந்து விடுகிறார்கள். இன்ஸ்பெக்ட் செய்வதற்கும் விசிட் செய்வதற்கும் நிறைய வித்தியாசம் உண்டு. அது மட்டுமல்லாமல் அந்த ஆய்வுக்கு எவ்வளவு காலம் எடுத்துக் கொள்ள வேண்டுமோ அந்த அளவுக்கு காலம் எடுத்துக்கொண்டு அதற்கு பயணப்படி, மற்ற படிகள் எல்லாம் பெற்றுக் கொள்கிறார்கள். ஆகவே, விசிட் செய்வதற்கும் இன்ஸ்பெக்ட் செய்வதற்கும் உள்ள வித்தியாசத்தை உணர்ந்து குறைபாடுகளை நிவர்த்தி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது.)

மாண்புமிகு அமைச்சரவர்கள் அவசர வேலை காரணமாக வீட்டுக்குப் போக வேண்டுமென்று சொல்கிறார்கள். இந்த நேரத்தில் வீட்டுவசதி பற்றிய பிரச்சனை என்பதால் இரண்டு, மூன்று விஷயங்களைச் சொல்லி முடித்துவிடுகிறேன்.

நிர்வாக போர்டு இருந்தபோது (நிர்வாகக் குழு) என்ன செலவானதோ அதைவிட தற்போது அதிகமாகச் செலவாகிறது. தனி அதிகாரிகள் சம்பளம், கார் செலவு உட்பட அதிகமாகச் செலவாகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கிராமப்புற சங்கங்களுக்கு சிமென்ட் விநியோகிக்கிறீர்கள், அதைப் போன்று நகர்ப்புற சங்கங்களுக்கு நீங்களே சிமென்ட் விநியோகம் செய்தால் வீடுகட்ட வசதியாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தப்படியாக கிராமப்புற வீட்டுவசதி சங்கங்களுக்கு கடந்த ஓராண்டு காலமாக யாரும் புதிய உறுப்பினர்கள் சேர்க்கப்படவில்லை. புதிய உறுப்பினர்களைச் சேர்க்கக்கூடாது என்று அரசாங்கம் தடை விதித்திருக்கிறது. ஆனால் புள்ளி விவரம் இருக்கிறது ஏராளமானவர்கள் பயனடைகிறார்கள், வீடு கட்டுகிறார்கள் என்று புள்ளிவிவரம் இருக்கிறது. இருக்கின்ற



நிலைமை ஓராண்டு காலமாக உறுப்பினர்கள் சேரமுடியவில்லை. அதற்கு என்ன காரணம்? காரணத்தை ஆராய்ந்து விரும்புகிற எல்லோரையும் உறுப்பினர்களாகச் சேர்த்துக்கொள்ள ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, நண்பர் இராசமாணிக்கம் அவர்கள் ஒரு நல்ல கருத்தைச் சொன்னார்கள். ஒருவருக்கு நீங்கள் பணம் கொடுக்கிறீர்கள். அந்தப் பணத்தை வைத்து வீடு கட்டப் பட்டதா என்பதை பார்க்க வேண்டும். வீடு கட்டியதாக எண்ணிக்கை வந்துவிடுகிறது? ஆனால் கட்டப்பட்டதா? இது பற்றி நாங்கள் பல வெட்டுத் தீர்மானங்கள் கொடுத்திருக்கிறோம். நான் கொடுத்திருக்கிறேன், திரு. இராசமாணிக்கம் கொடுத் திருக்கிறார், மற்றும் பல உறுப்பினர்கள் கொடுத்திருக்கிறார்கள். நீங்கள் கொடுத்திருக்கிற புள்ளிவிவரங்களிலே கூட வீடு கட்டப் பட்டதாக வந்திருக்கும். சில இடங்களில் கட்டப்படவில்லை என்று புகார்கள் வந்திருக்கின்றன. ஆகையால் நீங்கள் ஒரு குழு போட்டு, இன்ஸ்பெக்ட் செய்யுங்கள். அப்போதுதான் உண்மை என்ன என்பதை தெரிந்துகொள்ள முடியும்.

அடுத்து ஒரு லீகல் பாயின்ட். இப்போது நத்தம் புறம் போக்கில் பல ஆண்டுகளாக குடியிருக்கிறார்கள். அது அரசாங்க நிலம். அது அவர்களுக்கு நியாயமாக சொந்த நிலம் அல்ல. சொந்தம் அல்லாத அந்த நிலத்திற்கு அரசாங்கம் அளித்த உத்தரவின் பேரில் கர்ணம் கொடுக்கிற சர்டிபிகேட்டை வைத்து பணம் கொடுக்கிறார்கள். ஆனால் அவர்கள் அந்த நிலத்திற்கு சொந்தக்காரர்கள் அல்ல. ஓனர்ஷிப் சர்டிபிகேட்டை வைத்து மட்டும் எப்படி கடன் தரமுடியும்? அது மத்திய சட்டத்திற்கு எதிரானது அல்லவா? அதனால் நீங்கள் கடன் கொடுத்த வீடுகளுக்கு ரெவின்யூ இலாகா மூலம் பட்டா கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தாழ்த்தப்பட்ட மக்களுக்கு சப்சிடி கொடுக்கிறீர்கள், பாராட்ட வேண்டியதுதான். ஆனால் இந்த சப்சிடி கூட அந்த ஏழை மக்களுக்கு உள்ளபடியே போய் சேருகிறதா? முழுமையாகப் போய் சேரவில்லை. 1,000 ரூபாய்க்கு 500 தான் போகிறது, 750 தான் போகிறது. இதை விசாரித்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து குடிசை மாற்று வாரியம் — இந்த வாரியத்தில் ஆண்டுக்கு ஒரு தலைவரை மாற்றுகிறார்கள் ஐரோப்பா கண்டத்திலே சொல்வார்கள் — 'சேல் ஆப் ஆபிசர்ஸ்' என்று — அந்த மாதிரி தோன்றுகிறது, நான் சொல்வது என்ன அர்த்தம் என்று அமைச்சர் அவர்களுக்குத் தெரியும் என்று நினைக்கிறேன்.

[திரு. ஜே. எஸ். இராசு] [1983 மார்ச் 26

திரு. அரங்கண்ணல் அவர்கள் 3, 4 ஆண்டுகள் அந்த வாரியத்தில் இருந்தார். அதனால் அவர் நிலைமைகளை புரிந்துக் கொண்டு, சிறப்பாகச் செயல்பட்டு வந்தார். ஆனால் இப்போது வருடத்திற்கு ஒருவரை மாற்றுகிறீர்கள். நல்லவேலை மாதத்திற்கு ஒருவரை மாற்றாமல் இருக்கிறீர்களே அதுவே, போதும். இருந்தாலும் அந்த வாரியத்தின் தலைவரை, தொடர்ந்து 2, 3 ஆண்டுகளுக்காவது பணிபுரியும்படி நியமிக்க வேண்டும் என்று என்னுடைய கருத்தை வலியுறுத்த விரும்புகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

அடுத்தபடியாக, பொதுவான முறையில் ஒரு கருத்தைக்கூறி — குறை என்றும் சொல்லலாம் — அது மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய துறையாதலால், கவனித்து ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

தொழிற்தகராறு சட்டத்தின் கீழ், வீட்டு வசதி வாரியப் பணியாளர்களுக்கு 8.33 பெர்சென்ட் போனஸ் கொடுக்கப்பட வேண்டும். அவர்கள் முதலிலே கேட்டார்கள், தரவில்லை. கோர்ட்டுக்குப் போனார்கள், காலம் ஓடியதே தவிர கிடைக்கவில்லை.. கடைசியில் கோட்டிலே உத்தரவு வழங்கினார்கள்.... (மணியடிக்கப்பெற்றது)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நேரம் 1·15 ஆகிவிட்டது. அமைச்சர் அவர்கள் பதில் அளிக்க வேண்டும். அறிவிப்பு ஒன்று இருக்கிறது....(குறுக்கீடு). சீக்கிரம் முடித்துக் கொள்ளுங்கள்.

திரு. ஜே. எஸ். இராசு: சொல்லிக் கொண்டிருக்கிற பாயின்டை சொல்லிவிட்டு முடித்துவிடுகிறேன். மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அரசாங்கத்தாலே வெளியிடப்பட்ட அரசு ஆணையின் பிரகாரம் 8.33 சதவீதம் போனஸ் ஹவுசிங் போர்டிலே வேலை செய்யக்கூடியவர்களுக்கு தருவதாக ஒப்புக்கொண்டு, அதை நடைமுறைப்படுத்தாததினால், அவர்கள் நீதிமன்றம் சென்றார்கள். நீதிமன்றம் ஆணையிட்டதற்குப் பிறகும்கூட, அதை அரசோ, மாண்புமிகு அமைச்சரோ மதிக்காமல் மீண்டும் அந்த நீதிமன்றத்தினுடைய ஆணையை எதிர்த்து கோர்ட்டுக்கு சென்றிருக்கிறார்கள். அரசு சார்பாக வாரியம் தான் சென்றிருப்பதாக தகவல் வந்திருக்கிறது.

அவர்களே ஏற்றுக் கொண்டு, அரசாங்கமே ஒப்புக்கொண்ட பிரச்னையில் போனஸ் தருவதில் ஏன் தயக்கம் காட்டுகிறார்கள். தொழிலாளர் நலப் பிரச்னை. தொழிலாளர் நல அமைச்சரின் சப்ஜெக்ட் தொழிலாளர் சங்கத் தலைவராக இருந்தவர் மாண்புமிகு அமைச்சர் அவர்கள். அதன் காரணமாக பெருமைபடக்கூடியவர். அவருடைய தலைமையின் கீழ் இருக்கும் ஹவுசிங் போர்டு ஊழியர்களுக்கு இப்படிப் பண்ணலாமா?



1983 மார்ச் 26] [திரு. ஜே. எஸ். இராசு]

முன்பு ஒருமுறை ஹவுசிலேயே மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் கமிட் பண்ணியிருக்கிறார்கள்— தருவதாக. ரகுமான்கான் அவர்கள் கேட்ட கேள்விக்கு பதிலளிக்கும்போது அப்படிச் சொன்னார்கள். ஆனால் தரவில்லையே..(மணியடிக்கப் பெற்றது.)

இன்னும் ஒரே ஒரு பாயின்ட் சொல்லி முடித்துக் கொள்கிறேன். தயவுசெய்து அனுமதிக்க வேண்டும்.

காவல் துறையினரால் ஹவுசிங் போர்டு ஊழியர்கள் காரணம் இன்றி தாக்கப்பட்டனர். 3–9–82லே தாக்கப்பட்டார்கள் என்று கருதுகிறேன். தாக்கியது தவறு என்று கண்ணீர் மல்க அவர்களே ஒப்புக் கொண்டார்கள் என்று இங்கே சொல்லியிருக்கிறார்கள். இந்த சம்பவம் நடந்து சில நாட்கள் ஆகிவிட்டது. ஆனால் இன்றும் அவர்களுக்கு தர வேண்டிய அந்த 4 நாட்கள் சம்பளம் கொடுக்கப்படவில்லை. அந்த சம்பவத்தில் சம்பந்தப்பட்ட வீட்டு வசதி வாரிய ஊழியர்களுக்கு தரவில்லை, ஆனால் குடிசை மாற்று வாரிய ஊழியர்களுக்கு தந்திருக்கிறார்கள். இவைகள் எல்லாம் சாதாரண விஷயங்கள். இதுபோன்ற விஷயங்களிலாவது ஊழியர்களுக்கு, அவர்களுக்கு உரிய முறையில் உரிமை தந்து (மணியடிக்கப் பெற்றது) அவர்களுக்கு தேவையானவற்றைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

## 5. அறிவிப்புகள் (தொடர்ச்சி)

### (ஆ) பேரவை அலுவல்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. இன்று கூடிய அலுவல் ஆய்வுக் குழுவில் எடுக்கப்பட்ட முடிவுகளுக்கிணங்க பேரவையின் அலுவல்கள் கீழ்க்கண்டவாறு மாற்றி அமைக்கப்பட்டுள்ளன என்பதைப் பேரவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

| | |
|---|---|
| 28-3-1983 (திங்கள் கிழமை) | மானியக் கோரிக்கை எண். 12 —தமிழ் நாடு 1959 ஆம் ஆண்டு இந்து சமய அறக்கட்டளைகள் சட்ட நிர்வாகம். |
| | 25—சின்கோனா |
| | 45—காட்டு வளத் துறை |
| | 42—செய்தி, சுற்றுலா, திரைப்படத் தொழில் நுட்பவியல். |
| | 55—காட்டு வளம் குறித்த மூலதனச் செலவு, |

| | |
|---|---|
| 29-3-1983 (செவ்வாய்க் கிழமை) | பேரவையின் 77-வது விதியின் கீழ் மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். உமாநாத் அவர்கள் கொடுத்துள்ள தீர்மானத்தின் மீது விவாதம். |
| 30-3-1983 (புதன் கிழமை) | 3 மோட்டார் வண்டிகள் குறித்த சட்டங்கள்—நிர்வாகம். |
| | 40—சாலைப் போக்குவரத்துப் பணிகளும் கப்பல் போக்குவரத்தும். |
| | 54—சாலைப் போக்குவரத்துப் பணிகள், கப்பல் போக்குவரத்து குறித்த மூலதனச் செலவு. |
| 31–3–1983 (வியாழக் கிழமை) | 31—பழங்குடியினர், ஆதித்ராவிடர் முதலியோர் நலன். |
| | 44—எழுதுபொருள் அச்சுத்துறை. |
| 1–4–1983 (வெள்ளிக்கிழமை) | தூய வெள்ளிக்கிழமை விடுமுறை. |
| 2-4-1983 (சனிக் கிழமை) | பேரவை கூட்டம் இல்லை. |
| 3-4-1983 (ஞாயிற்றுக்கிழமை) | விடுமுறை |
| 4-4-1983 (திங்கள் கிழமை) | 13—நீதி நிர்வாகம். 14—சிறைச்சாலைகள். |
| | 2[illegible]—கூட்டுறவு. |
| 5-[illegible]-198[illegible] (செவ்வாய்கிழமை) | 27—கதர்த்தொழில். 37—பொதுப்பணிகள், கட்டிடங்கள். |
| | 38—பொதுப் பணிகள், பணியாளரமைப்பும் கருவிகளும், தளவாடமும். |
| | 52—பொதுப் பணிகள் — கட்டிடங்கள் குறித்த மூலதனச் செலவு. |
| 6-4-1983 (புதன்கிழமை) | காலை : 22—கால்நடை. 30—சமூக நலம். |
| | மாலை : 29—தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும். |
| 7-4-1983 (வியாழக்கிழமை) | 1[illegible]—காவல் துறை. |



| | |
|---|---|
| 8-4-1983 (வெள்ளிக்கிழமை) | 16—தீயணைப்புப் பணிகள். |
| 9-4-1983 (சனிக்கிழமை) | காலை 10-0 மணி முதல் 11-00 மணி வரை. |
| | 25-1-1983 அன்று பேரவை முன் வைக்கப் பெற்ற மாண்புமிகு நீதிபதி திரு. கே. எஸ். இராமமூர்த்தி விசாரணைக் கமிஷன் அறிக்கை மீது அரசு எடுத்த நடவடிக்கை குறித்து விவாதிக்க, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஆண்டித்தேவர் அவர்கள் கொடுத்துள்ள தீர்மானத்தின் மீது விவாதம். |
| | பகல் 11-00 மணி முதல். |
| | 32—பின்தங்கிய வகுப்பினர் முதலியோர் நலன். |
| 10-4-1983 (ஞாயிற்றுக்கிழமை) | விடுமுறை. |
| 11-4-1983 (திங்கள் கிழமை) | 9 மாநில ஆட்சித்தலைவர், அமைச்சர்கள் தலைமையிடப் பணியாளர்கள். 11—மாவட்ட நிர்வாகம். |
| 12-4-1983 (செவ்வாய்கிழமை) | 2—மாநில ஆயத் தீர்வைத் துறை. 4—பொது விற்பனை வரியும், ஏனைய வரிகளும், தீர்வைகளும்—நிர்வாகம். |
| 13-4-1983 (புதன்கிழமை) | 24—தொழில்கள். 50—தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு. |
| 14-4-1983 (வியாழக்கிழமை) | தமிழ் வருடப்பிறப்பு விடுமுறை. தெலுங்கு வருடப்பிறப்பு. |
| 15-4-1983 (வெள்ளிக்கிழமை) | (1) 7—மாநிலச் சட்ட மன்றம். 8—தேர்தல்கள். |
| | விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப் பெறாத மற்ற மானியக் கோரிக்கைகள் விவாதமின்றி வாக்கெடுப்பிற்கு விடப் படும். |
| (2) | நிதி ஒதுக்க சட்ட முன்வடிவு—அறிமுகம் செய்தல். |

[1983 மார்ச் 26

| | |
|---|---|
| 16-4-1983 (சனிக்கிழமை) | நிதி ஒதுக்கச் சட்ட முன் வடிவு—ஆய்வு செய்தலும் நிறைவேற்றலும். |
| | மற்ற அரசினர் சட்ட முன் வடிவுகள். |
| 17-4-1983 (ஞாயிற்றுக்கிழமை) | விடுமுறை. |

தேவையிருப்பின் பேரவை 18-4-1983 திங்கட்கிழமை யன்றும் கூடும்.

(பிற்பகல் 1-20)

7. அறிக்கை அளித்தல்.

வறட்சி துயர்தணிப்புப் பணிகளில் ஒன்றாக விவசாயத் தொழிலாளர்களுக்கு புத்தாடை வழங்குதல்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் சார்பாக இந்த அவைக்கு ஒரு அறிவிப்பை செய்ய நான் விரும்புகிறேன்.

நிலமற்ற விவசாயத் தொழிலாளர்களுடைய துயர் தணிப்புப் பணிகளில் ஒன்றாகக் கொண்டு ஆணுக்கு ஒரு ஜனதா வேட்டியும், துண்டும் பெண்ணுக்கு ஒரு சேலையும் சித்திரை முதல் நாளாகிய 14-ஆம் தேதியான ஏப்ரல் முதல் நாள் முதல் கணக்கெடுத்து அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் மூலம் இலவசமாக வழங்குவது என்று ஒரு திட்டத்தை மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்துள்ளார்கள். (மேசையைத் தட்டு ஒலி) அறிஞர் அண்ணா அவர்களுடைய கொள்கைக்கேற்ப கைத்தறி நெசவாளர்களுக்கு வறட்சிக் காலத்தில் தொடர்ந்து பணிகள் கொடுத்து உதவவும் தேங்கிக் கிடக்கும் கைத்தறித் துணிகளைக் குறைக்கவும் நிலமற்ற ஏழை விவசாயத் தொழிலாளர்களுக்கு அதே சமயத்தில் உதவுகிற வகையிலும் இந்தத் திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது.

6. வரவு செலவுத் திட்டம், 1983-84, வாக்கெடுப்பு—(தொடர்ச்சி)

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த இரண்டு மானியக் கோரிக்கைகளின் மீதும் 11 உறுப்பினர்கள் அரிய பெரிய கருத்துக்களை எடுத்துச் சொன்னார்கள்.



1983 மார்ச் 26] [திரு. எஸ். இராகவானந்தம்]

சென்னையிலே வாழக்கூடிய மாண்புமிகு உறுப்பினர்கள் குடிசை மாற்று வாரியத்தைப் பற்றி விளக்கமாக எடுத்துச் சொல்லி குடிசையிலே வாழக்கூடியவர்களுக்கு பதிலாக வேறு ஆட்கள் குடியிருக்கிறார்கள். அவர்களை*வெளியேற்ற வேண்டும் என்று வலியுறுத்தினார்கள். அது மட்டுமல்லாமல், குடிசை மாற்று வாரியத்தின் மூலம் வீடு கொடுத்தும் அதிலே போய் குடியிருக்காமல் வெளியே குடியிருக்கிறார்கள், பினாமியாக அதிகம் பேர் இருக்கிறார்கள், இவற்றை எல்லாம் அரசு கவனித்து உரியவர்களுக்கு வீடு கொடுக்க வேண்டும் என்று சொன்னார்கள். இந்த அரசு அதை கவனிக்கும். அங்கே வாழக்கூடிய மக்களுக்கு வசதி செய்து தரவேண்டும் என்பதை எடுத்துக் கூறி இருக்கிறார்கள். வசதிகள் செய்து கொண்டு வருகிறோம். அவர்களிடத்திலே இருந்து வாங்கக் கூடிய லைசன்ஸ்ஃபீ—அது வாடகை அல்ல, வாடகை என்றால் 120 ரூபாய் 130 ரூபாய் வாங்க வேண்டும்—வாங்கப்படுகின்ற லைசன்ஸ்ஃபீ அந்த கட்டிடங்களின் மெயின்டனன்ஸ் செலவுக்கே போகின்றது என்பதைத் தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன். எனவே இந்தப் பிரச்சினைகளை எல்லாம் தீர்ப்பதற்கும் ஆளுக்கு ஒரு வீடு என்று சொன்னார்களே, அப்படி இல்லை என்றாலும் குடிசையிலே இருக்கக்கூடிய, குடிசை மாற்று வாரியத்தால் கட்டப்பட்ட வீடுகளில் குடியிருக்கக்கூடிய அத்தனை பேர்களுக்கும் அந்த வீடுகளைச் சொந்தமாக்கி விடுவது என்று புரட்சித்தலைவர் அவர்கள் முடிவெடுத்து அறிவித்தார்கள் என்று ஏற்கெனவே சொன்னேன், இப்போதும் சொல்கிறேன். அந்தந்த வீடுகளை Of course, bona fide occupants அவரவர்களுக்குச் சொந்தமாக்கிக் கொடுக்கப்படும். இன்ஸ்டால்மென்ட் பேஸிஸ்-லே தவணைகளை எவ்வாறு வசூல் செய்வது என்பதைப் பற்றி அமைச்சரவை முடிவு செய்ய இருக்கின்றது. அவ்வாறு முடிவு செய்த உடனே அது அமலாக்கப்படும் என்பது புரட்சித் தலைவரின் ஆட்சியின் மாபெரும் சாதனைகளில் ஒன்று. குடிசை மாற்று வாரிய வீடுகளில் குடியிருக்கும் யாருமே நமக்கு இந்த வீடு சொந்தமாகும் என்று எண்ணி இருக்க மாட்டார்கள். பணத்தைக் கொடுத்துக் கொண்டே இருக்க வேண்டியதுதான், என்றைக்காவது ஒரு நாள் வெளியே போகச் சொல்வார்கள், வாடகை மாதிரிதான் கொடுத்துக் கொண்டிருக்கிறோம் என்று எண்ணிக் கொண்டிருந்திருப்பார்கள். அந்த நிலைமையை மாற்றி அந்தந்த வீடுகளுக்கு அவரவர்களையே சொந்தக்காரர்களாக ஆக்க அரசு திட்டமிட்டு இருக்கின்றது என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து சர்மா நகர் போன்ற இடங்களில் வசிக்கக்கூடிய தொழிலாளர்களுக்கு அவர்கள் இருக்கக்கூடிய வீட்டையும் மற்ற இடங்களில் இருக்கக்கூடிய வீட்டையும் அவரவர்களுக்கு சொந்தமாக்கித் தர வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. பாலன் போன்றவர்களும் மற்றவர்களும் பேசினார்கள், அவர்களுக்கு ஒன்றை நான் தெரிவித்துக் கொள்கிறேன். அப்படிக்

கொடுத்துவிட வேண்டும் என்று மத்திய அரசினிடத்திலிருந்து தாக்கீது வந்தது உண்மை. ஆனால் அந்த வீடுகளைப் பொறுத்த வரையில் தொழிற்சாலைக்குப பக்கத்தில் வாடகை வீடு கட்டிக் கொடுக்கப்பட்டிருக்கின்றது அந்த வீடுகளில் குடியிருப்பவர்கள ரிட்டையர் ஆனால் அல்லது இறந்துவிட்டால் அந்த வீடுகளைக் காலி செய்து புதிதாக வீடு இல்லாமல் வெளியே தவித்துக் கொண்டிருக்கக்கூடியவர்களுக்கு, அதிக வாடகை கொடுத்து தவித்துக் கொண்டிருக்கக்கூடியவர்களுக்கு கொடுக்கலாம் என்ற எண்ணத்தில், அதாவது புதிதாக யாருக்கும் வீடு கொடுக்க முடியாத வாய்ப்பு ஏற்பட்டுவிடும், எனவே அவ்வாறு சொந்த மாக ஆக்குவது முறையாக இருக்காது என்று அரசு மத்திய அரசுக்குக் கடிதம் எழுதியது. ஆனாலும் அதற்கு பின்னால் இப்போது பாக்கும்போது எல்லா தொழிற்சங்க தலைவர்களும், அரசியல்வாதிகளும் அந்த வீடுகளை அங்கே குடியிருப்பவர் களுக்கே கொடுத்து விட வேண்டும் என்று ஒரு வலுவான கோரிக்கைகளை வைத்து இருக்கிறார்கள். அது மட்டும் அல்லாமல் ரிட்டையர் ஆனவர்கள் அந்த வீட்டை விட்டு போகாமல் அந்த வீட்டிலேயே குடியிருந்து கொண்டு நாங்கள் இங்கேயேதான் இருப்போம் என்று சொல்கிறார்கள். அவர்களை வெளியேற்ற வேண்டும் என்றால் அது ஒரு லா-அண்டு ஆர்டர் ப்ராபளம் ஆகும். வெளியேற்றுங்கள் நாங்கள் உதவி செய்கிறோம் என்று நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. பாலன் போன்ற வர்கள் உதவி செய்தால் அது நன்றாக இருக்கும். அதற்கு மாறாக அவரே வைத்து இருக்கக்கூடிய கோரிக்கை அங்கே இருப்பவர்களுக்கு சொந்தமாக விட வேண்டும். ரிட்டையர் ஆகி 1 ஆண்டு 2 ஆண்டு ஆகியும் அந்த வீட்டில் குடியிருந்து கொண்டு இருக்கிறார்கள். It is after all a rented one. வாடகை வீடு. ஆனால் வரக்கூடிய கோரிக்கை எப்படி இருக்கிறது என்றால் அவர்களுக்கு சொந்தமாக விடவேண்டும் என்று சொல்கிற நேரத்தில், இந்த அரசு நான் எப்போதுமே சொல்லிக் கொண்டு இருக்கிறேன மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர் களுடைய அரசு It is receptive to public representation. மக்கள் சொல்லக்கூடிய குறைகளை கவனிக்கும், அதை பரிசீலனை செய்யும். ஒருமுறை வேண்டாம் என்று சொன்னால் கூட மீண்டும் மீண்டும் கேட்கிறார்களே இதில் என்ன பிரச்சனை இருக்கிறது என்று மறுபரிசீலனை பண்ணக்கூடிய ஒரு சிறந்த அம்சம் தான் புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சியில் இருக்கிறது. அதற்கு அடிப்படையாக இந்த பிரச்சனையை இந்த அரசு மறு பரிசீலனை செய்யும் எனபதை இந்த நேரததில் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. இளையபெருமாள் அவர்கள் ஒரு குறிப்பிட்ட இடத்தை சொல்லி அந்த இடத்தை அங்கே குடியிருக்கக்கூடிய மக்களுக்கு சொந்தமாக விடவேண்டும் என்று சொன்னார்கள். முதலமைச்சர் அவர்களிடமும் சொன்னதாக சொன்னார்கள். நான் அப்போதே சொன்னேன், சென்னையில்





இருக்கக்கூடிய நிலத்தை குடிசை போட்டு இருக்கக்கூடிய அவர் களுடைய நிலத்தை அவர்களுக்கு சொந்தமாக விட வேண்டும் என்று ஒரு ஸ்கீம் இருக்கிறது. அதை நான் பின்னால் சொல்லும் போது சொல்கிறேன். எவ்வளவு பேர் பலன் அடைந்து இருக்கி றார்கள் என்பதை சொல்கிறேன். குடிசைப் போட்டுக் கொண்டு கஷ்டப்பட்டுக்கொண்டு இருப்பவர்களுக்கு அபிவிருத்தி செய்து, அபிவிருத்தி செய்த மனையை அவர்களுக்கு சொந்தமாக்கக்கூடிய நிலமை புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சியில் ஏற்பட்டு இருக் கிறது என்பதை நான் பின்னால் சொல்கிறேன். ஆனால் நீங்கள் சொன்னது ஒரு குறிப்பிட்ட இடத்தை அது ரயில்வேக்கு சொந்தமான இடத்தை நீங்கள் பட்டா கொடுத்துவிட வேண்டும் என்று சொல்கிறீர்கள். நீங்கள் சொல்கிற பட்டா என்னவென்று சொன்னால் பணம் வாங்காமல் இனாமாக கொடுத்து விட வேண்டுமென்று சொல்கிறீர்கள். அது சென்னையில் சாத்தியம் அல்ல. நீங்கள் சொல்லக்கூடிய இடம் குறிப்பாக சாத்தியம் அல்ல. சாதாரணமாக ஒரு கிரௌண்டு ரூ. 40 ஆயிரம் என்று குடிசை மாற்று வாரியத்திலே 60க்கு 40 அதாவது 2400 சதுர அடி 40 ஆயிரம் ரூபாய் என்று வீட்டு வசதி மூலமாக நாங்கள் தருகி றோம். ஆனால் ஏலம் போட்டால் $1\frac{1}{4}$ லட்சத்திலிருந்து $1\frac{1}{2}$ லட்சம் போகிறது. இடத்திற்கு ஏற்றாற்போல் 2 லட்சத்திற்கு கூட போவதற்கு வாய்ப்பு இருக்கிறது. அந்த அளவுக்கு ஏறி யிருக்கிற நேரத்தில், (குறுக்கீடு)

திரு எல். இளையபெருமாள் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல் கின்றபோது மிக இரக்கத்தோடு கவனிப்பதாக சொன்னார்கள். ஆனால் ஏலம் விட்டால் 1 லட்சம் ஏன் 3 லட்சம் கூட போகும் இன்று இருக்கும் நிலமை அது அதைப்பற்றி நான் சொல்ல வில்லை. அவர்கள் அந்த இடத்தில் கடந்த 80, 90 ஆண்டுகளாக இருந்து கொண்டு இருக்கிறார்கள் என்பது ஒன்று. மற்றொன்று இந்த அரசு வந்த பிறகு கூட சில ஏழை நலிந்த மக்களுக்கு, சில சங்கங்களுக்கு பணம் இல்லாமல் இலவசமாக கொடுக்கப்பட்டி ருக்கிறது. மத ரீதியாகவும், தொழிலாளர்கள் ரீதியாகவும் கொடுக்கப்பட்டு இருக்கிறது. மாண்புமிகு மக்கள் தலைவர் காமராஜ் ஆட்சியில் அதே இடத்தில் 20 அடிக்கு பக்கத்தில் உள்ள இடத்தை பிருந்தாவனம் என்ற பகுதியை இலவசமாக கொடுத்து கூட்டுறவு வீட்டு சங்கம் கொடுத்து உதவி கொடுத்து இருக்கிறார்கள் அதை நீங்கள் கவனித்து செய்ய வேண்டும். இல்லாவிட்டால் வீடாவது கட்டி கொடுக்க வேண்டும் என்றும் இந்த இரண்டில் ஒன்று கூட நடக்கவில்லை என்பது தான் என்னுடைய எண்ணம் அவர்கள் இந்த அரசு வருவதற்கு முன்பே கட்டிக்கொண்டு இருந்தவர்கள். அவர்களுக்கு கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பெரியவர் காமராஜர் அவர்கள் ஆண்ட காலத்தில் ஒரு கிரௌண்டு நிலம் என்ன? சென்னையில் மக்கள் எத்தனை பேர் குடியிருந்தார்கள். இவைகளை எல்லாம்

பார்க்க வேண்டும். இப்போது மக்கள் தொகை எவ்வளவு உயர்ந்து இருக்கிறது டிமாண்டு எவ்வளவு உயர்ந்து இருக்கிறது என்பதை எல்லாம் மனதில் கொண்டு இந்த பிரச்சனையை அணுக வேண்டும். எனவே அப்படி ஒரு திட்டம் இருக்கிறது. ஏழை எளியவர்கள் குடிசை போட்டுக் கொண்டு இருப்பவர்களுக்கு நிலம் சொந்தமாக்கும் திட்டம் இருக்கிறது. ஆனால் இங்கே குடிசை மாற்று வாரிய வீடு தருகிறோம் என்று சொன்னோம். என்னுடைய ஞாபகம் சரியாக இருக்குமானால் திருமங்கலத்திற்கு அவர்கள் போகிறார்களா என்று கேட்டோம். If my memory is correct ஆனால் போக மாட்டேன். இந்த இடத்தை எங்களுக்கு சொந்தமாக்கிக் கொடுக்க வேண்டும் என்று சொல்லிவிட்ட காரணத்தால் அது கிடைக்காமல் போய்விட்டது. எனவே அந்த கோரிக்கையை மீண்டும் மீண்டும் வைக்காமல் அது யாருடைய நிலம் என்று பார்த்து குடிசை மாற்று வாரியத்திலே வீடு கட்டி கொடுக்க வேண்டும் என்று கேட்பார்களானால் அது பரிசீலனை செய்யலாம்.

(பிற்பகல் 1–30)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவையின் அனுமதி யுடன் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தனியார் இடங்களிலே குடிசைகளைப் போட்டிருக்கிறார்கள். அங்கே வீடு கட்டிக் கொடுக்க வேண்டுமென்றால் 10 ஏக்கர் ஒருவருக்குச் சொந்த மென்றால் அங்கே 5 ஆயிரம் வீடுகள் இருக்கின்றன என்று வைத்துக் கொள்வோம், அந்த நிலச் சொந்தக்காரருக்கு ஒரு காசு கூட கொடுப்பதில்லை, ஆனால் அந்த நிலத்தை எடுத்து இந்த ஏழைகளுக்கு வீடு கட்டிக் கொடுக்கலாம் என்று அவர்களைப் போய்க் கேட்டால் ஒரு கிரவுண்ட் 1 லட்ச ரூபாய் என்கிறார்கள். ஆனால் அந்த நிலத்தை 5 ஆயிரத்திற்குத் தந்து விடுகிறேன், 6 ஆயிரத்திற்குத் தருகிறேன் என்ற அளவுக்கு அவர்கள் முன் வருவார்களானால் அந்த நிலத்தை எடுத்துக்கொண்டு ஏழை களுக்கு வீடு கட்டிக் கொடுத்து விடலாம். ஆனால் இன்றைய தினம் What are you getting? இன்றைய தினம் அந்த நிலத்தி லிருந்து ஒன்றுமே கிடைக்கவில்லை, நீங்கள் நிலத்திற்குச் சொந்தக்காரர் என்று சொல்லிக் கொண்டு வீட்டிலே இருக்கி றீர்கள். இங்கே குடிசை போட்டுக் கொண்டு ஏழைகள் குடி யிருக்கிறார்கள். அந்த இடத்திலே இருப்பவர்களுக்கு நன்மை செய்ய நம்மால் முடியவில்லை, We are unable to enter into a private land அது மற்றவர்களுக்குச் சொந்தம் என்ற காரணத்தி னாலே ஒன்றும் செய்ய முடியாமல் அவர்கள் தவிக்கிறார்கள். இதைப்பற்றி தீவிரமாக யோசனை செய்ய வேண்டியிருக்கிறது.



இங்கே பேசிய எல்லோரும் கிராமப்புற கூட்டுறவு வீட்டு வசதி சங்கங்கள் மூலமாக ஏழை எளியவர்களுக்கு நாங்கள் கொடுக்கக்கூடிய கடனைப் பற்றி மானியத்தைப் பற்றிச் சொன் னார்கள். நான் ஒரு 5, 6 தினங்களுக்கு முன்னால் கூட இதைப் பற்றி இங்கே ஒரு கேள்வி வருகிறபோது 26 ஆம் தேதி வரை காத்திருங்கள் என்று சொன்னேன். ஒன்றை ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டும். கிராமப்புற வீட்டுவசதி சங்கத்தின் மூலம் பலன் பெறக்கூடியவர்கள் அல்லது யாருக்கு வீடுகட்டிக் கொடுப்பதற்காக கடனும் மானியமும் தரப்படுகிறதோ They are people belonging to economically Weaker Sections. பொருளாதார ரீதியில் ஏழ்மையான நிலையில் இருக்கக்கூடிய மக்களுக்கு தான் இந்த வீடு. ஏனென்றால் 15 ஆயிரம் கொடுங்கள், 20 ஆயிரம் கொடுங்கள், ஏன் 10 ஆயிரம் கொடுக்கக்கூடாது என்றெல்லாம் மாண்புமிகு உறுப்பினர்கள் கேட்கும் போது உங்களுடைய நண்பர்கள் யாராவது கூட கடன் கேட்டு வருவார்களானால் அவர்களுக்கு ரீபேயிங் கெப்பாசிட்டி என்ன இருக்கிறது என்று பார்த்துக் கொடுங்கள், தொழிற்சாலையில் ஒருவர் 500 ரூபாய் வாங்குகிறார் என்றால் 10 ஆயிரம் கடன் கொடு என்று சொன்னால் தயவு செய்து கொடுத்து விடாதீர்கள், திருப்பி வராது. A roof above their head என்ன என்று பாருங்கள். அவர் 2 ஆயிரம் கொடுங்கள் என்று சொன்னால் அதைக் கொடுத்தீர்களானால் திருப்பிக் கொடுப்பதற்கு வாய்ப்பு இருக்கிறது. அதை யோசித்துப் பார்க்க வேண்டும். இது எக்னாமிக்கலி வீக்கர் செக்ஷனுக்கு ஏழை எளியவர்களுக்கு 201 சதுர அடியில் ஒரு வீடு இருக்க வேண்டுமென்ற ஆசையிலே புரட்சித் தலைவர் ஆட்சியில் 5 ஆண்டுக் காலத்திலே 2 லட்சம் வீடுகள் கட்ட வேண்டுமென்று முடிவு எடுத்து ஆண்டுக்கு 40 ஆயிரம் வீடுகள் என்று கட்டிக் கொடுத்துக் கொண்டு வருகி றோம். அந்தத் தொகை 6 ஆயிரமாக உயர்த்தப்படுகிறது, புரட்சித் தலைவர் அவர்கள் ஆணையிட்டிருக்கிறார்கள் (மேசையைத் தட்டும் ஒலி) அது உயர்த்தப்படுகிறது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன். இது நியாய மானது. திரு. இளையபெருமாள் அவர்கள் கூட தலையை ஆட்டி விட்டார்கள். திரு. அழகர்சாமி அவர்கள் கூட ஹியர் ஹியர் என்று சொல்லி விட்டார்கள். (குறுக்கீடு) மெத்த மகிழ்ச்சி. எனவே 6 அயிரமாக அது உயர்த்தப்படுகிறது. ஆதிதிராவிட மக்களுக்குக் கொடுக்கக்கூடிய மானியம் ஆயிரம் ரூபாய், அது மானியமாகக் கொடுக்கப்படும், ஆதிதிராவிட மக்களோடு இணைந்து வாழ்கிறேன், வீடு கட்டிக் கொள்கிறேன் என்று சொல்லக்கூடிய ஆதிதிராவிடர் அல்லாதவர்களுக்கும் ஒரு ஆயிரம் ரூபாய் மானியம் உண்டு. இது அன்னியில் அந்த ஆதிதிராவிட மக்களுக்குக் கொடுக்கக்கூடிய பணம் இருக்கிறதே கடன் அதற்கு வட்டி கிடையாது. வட்டி கிடையாது என்று சொன்னால் அந்தப் பணத்தை அரசே ஏற்றுக் கொள்கிறது. ஆதிதிராவிடர் களுக்கு மானியம் தருகிறது, அந்த மானியம் தருவது மட்டு

மல்லாமல் அவர்களுக்கு கடன் தருகிறது, அந்தக் கடனுக்கு வட்டியில்லை. அந்த வட்டியை அரசே ஏற்றுக் கொள்கிறது என்று சொல்கிறபோது எவ்வளவு பெரிய தொகையை அந்தமக்களுக்குச் செலவு செய்கிறது என்பதை உணர வேண்டும் On top of every thing எல்லாவற்றிற்கும் மேலாக கட்டப்பட்ட வீடுகள் 1,31,999.

திரு. சோ. அழகர்சாமி : துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 3 ஆயிரத்தை 6 ஆயிரமாக உயர்த்தி இருப்பதற்காக மகிழ்ச்சியடை கிறேன். இப்போது கட்டப்படுகிற, அரைகுறையாக இருக்கக்கூடிய, ஒரு பாதி கட்டியும் ஒரு பாதி கட்டப்படாமலும் இருக்கிற வீடுகளுக்கும் இது கொடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: இது ஏப்ரல் முதல் தேதியிலிருந்துதான் அமலுக்கு வருகிறது. ஆகவே அப்படி இல்லை. இப்போது கட்டியிருக்கிற வீடுகள் ஒரு லட்சத்து 31 ஆயிரத்து 999. அந்த— வீடுகளிலே நீங்கள் கூர்மையாக கவனிக்கவேண்டும்— 1 லட்சத்து 3 ஆயிரத்து 832 வீடுகள் ஆதிதிராவிட மக்களுக்கு. ஒரு லட்சத்து 31 ஆயிரத்து 999 வீடுகளிலே ஆதி திராவிட மக்களுக்கு கொடுத்திருப்பது ஒரு லட்சத்து 3 ஆயிரத்து 832. யாரும் தயவுசெய்து அரசியல் பேசுகிறேன் என்று நினைக்க வேண்டாம். இந்த நாடு சுதந்திரம் பெற்று 34 ஆண்டுகளிலே, நாங்கள் ஆட்சிக்கு வந்து 5 ஆண்டுகள் ஆகின்றன. அந்த ஐந்தை கழித்துவிடுங்கள். 29 ஆண்டுகளில் ஆதிதிராவிட மக்களுக்கு ஒரு லட்சத்து 3 ஆயிரத்து 832 வீடுகள் கட்டிக் காடுக்கப்பட்டிருக்கிறதா என்பதை அருள்கூர்ந்து கவனிக்கவேண்டும். புள்ளிவிவரம் தவறாக இருந்தால் என்னை அருள்கூர்ந்து திருத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அது இப்போதுதான். இன்னும் கட்டப்போகிறோம். ஒவ்வொரு ஆண்டிற்கும் 40 ஆயிரம் வீடுகள் கட்டுகிறபோது அதனுடைய எண்ணிக்கை உயரப் போகிறது. எனவே ஆதிதிராவிட மக்களுக்கு இந்த ஆட்சி எவ்வளவு நன்மைகளைச் செய்திருக்கிறது என்பதை அருள்கூர்ந்து கவனிக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அவர்களுக்கு சிமெண்ட் கிடைப்பதற்கு கிராம வீட்டு வசதி சங்கங்கள் சிமெண்ட் விற்பனையாளராக நியமித்து உறுப்பினர்களுக்கு அரசு நிர்ணயித்த விலையில் சிமெண்ட் வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கிறது என்பதைச் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். அதைப்போலத்தான் இதற்காக 9 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதற்கு மேலே தேவையானாலும் ஹட்கோவிலிருந்து பணம் வாங்கி 40 ஆயிரம் வீடுகள் கட்டுவதற்கு ஏற்பாடு செய்யப்படும். சில நேரங்களில் மாண்புமிகு அழகர்சாமி அவர்கள் சொன்னதைப் போல கட்டாமலிருக்கிறது என்று சொல்கிறார்கள். அவர்களுக்கு ஏற்கெனவே கிடைத்து விடக்கூடிய அளவில் நடவடிக்கைகள் இருக்கின்றன. ஆகவே யாரும் பாதியில் நிறுத்த வேண்டிய நிலை வராது. ஒவ்வொரு ஸ்டேஜ் என்று இருக்கிறது. கடன் வழங்கிய உடனே 30 சதவீதம், ப்ளோர் லெவல் வந்தவுடன் 40 சதவீதம், ரூப் லெவல் வந்த



பிறகு 30 சதவீதம்; ஆகவே 30, 40, 30 என்று தருகிறோம் அந்த முறையிலே அவர்கள் வாங்கலாம். இப்போது எல்லோருக்கும் கிடைக்கக்கூடிய முறையில் ஏற்பாடு ஆகியிருக்கிறது என்று சொல்லிக் கொள்கிறேன்.

அதைப்போல நகர்ப்புற சங்கங்களுக்கு 10 கோடி ரூபாய் தருவதாக அனுமதிக்கப்பட்டு அதில் 5 கோடி ரூபாய் இப்போது கொடுக்கப்பட்டிருக்கிறது. இன்னும் மீதி உள்ள 5 கோடி ரூபாய் விரைவில் கொடுக்கப்பட்டுவிடும். எனவே அவர்கள் பணம் வரவில்லை, பணம் வரவில்லை என்று தவித்துக்கொண்டு இருந்த நிலை மாறிவிடும் என்பதை இந்த நேரத்தில் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். அதைப்போல அவர்களுக்கு கிடைக்கக் கூடிய கடனும் ரூ. 45 ஆயிரத்திலிருந்து ரூ. 50 ஆயிரமாக உயர்த்தப்பட்டிருக்கிறது அதைப்போல உச்சவரம்பு ரூ. 50 ஆயிரமாயிருந்தது 60 ஆயிரமாக உயர்த்தப்பட்டிருக்கிறது. இதுவரையில் ஒரு ஆண்டிற்கு 24 ஆயிரம் ரூபாயாக உச்சவரம்பு வருமானம் உள்ளவர்களுக்குத்தான் நகர்ப்புற வீட்டுவசதி சங்கத்தில் கடன் வாங்கக்கூடிய வசதி இருந்தது. ஆனால் இப்போது 36 ஆயிரம் ரூபாயாக உயர்த்தி இருக்கிறோம் என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

திரு. இரெ. இராசமாணிக்கம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கட்டப்பட்டிருக்கிற வீடுகளின் விவரம் பற்றி சொல்லி இருக்கிறார்கள். பாதி வீடுகள் முழுத்தொகை வழங்கிய பிறகும்—3 ஆயிரம் வழங்கியாகி விட்டது—பாதி வீடாக கட்டி முடிக்கப்படாமல் அப்படியே இருக்கின்றன. அதற்கு என்ன வழி?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : அதற்கு சொந்த வழிதான் பார்த்துக் கொள்ளவேண்டும். ஏனென்றால் புதியதாக கொடுக்கக் கூடியது 6 ஆயிரம் ரூபாய். ஒரு கஷ்டம் வருகிறது என்றால் பத்து ரூபாய் கடன் வாங்கிவிட்டு, கடைக்குப் போய் சாமான் வாங்கும்போது 15 ரூபாய்க்கு வாங்கிவிட்டு ஐந்து ரூபாய்க்கு என்ன செய்வது என்று கடைத்தெருவிலே இருந்தால் அதற்கு என்ன செய்வது. இருப்பது பத்து ரூபாய்; அதற்குள்ளே செலவு செய்யவேண்டுமென்று சிக்கனமாகச் செய்யவேண்டும். நமக்கு கொடுத்திருக்கிறது இவ்வளவு ரூபாய் என்றால் அதற்குள்ளே வாழ கற்றுக் கொள்ளவேண்டும். அதுதான் வாழ்க்கையின் வெற்றிக்கு ரகசியம் வருமானத்தை கணக்கிலே வைத்து செலவு செய்யவேண்டும். ஆகவே அதற்கு உதவி செய்வதற்கு முடியாத நிலையில் இந்த அரசாங்கம் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆதிதிராவிட மக்களைப் பொறுத்தவரையில் மேலும் நாங்கள் செய்திருக்கிற சலுகை, வீட்டு வசதி வாரியம் மூலமாக கட்டக் கூடிய வீடுகளுக்கு முதல் தவணையாக 25 சதவீதம் மற்றவர்கள்

கட்ட வேண்டும். அதற்கு அப்பால் மாத தவணைகள் என்று இருந்தது. அதை ஆதிதிராவிட மக்களுக்கு பத்து சதவீதமாகக் குறைத்திருக்கிறோம் 25 சதவீதம் அல்ல; அவர்கள் 10 சதவீதம் கட்டினால் போதும்.

அதைப்போல வீடு ஒதுக்கப்படுவதில் நான் ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன். இதற்கு முன்னால் 10 சதவீதம் என்று இருந்தது. ஆதிதிராவிட மக்களுக்கு மக்கள் தொகை அடிப்படையில் 18 சதவீதமாக உயர்த்தியிருக்கிறோம் என்பதை இந்த நேரத்தில் சொல்லிக் கொள்கிறேன். ஆகவே இரண்டு சலுகைகளை அவர்களுக்கு வீடு கொடுப்பதில் கொடுத்திருக்கிறோம்.

பத்திரிகை நிருபர்களைப் பற்றி பேசினீர்கள். நானும் சொல்லியிருக்கிறேன். பத்திரிகை நிருபர்களுக்கு 3 சதவீதம் இருக்கிறது. 'ஒன் யுவர் ஹவுஸ் ஸ்கீம்'; சென்னையில் வாடகையில் இருந்தால் வாடகையை உயர்த்திக்கொண்டே போய் ஒரு நாளைக்கு வெளியே போ என்று சொல்லி விடுவார்கள். எனவே பத்திரிகை நிருபர்களுக்கு இருப்பதை சாவதானமாக, நிதானமாக உட்கார்ந்து யோசனை செய்து பாருங்கள். அவர்களுக்கு 3 சதவீதம் Hire Purchase Scheme—ல் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அந்த 3 சதவீதம் அவர்கள் அனுபவித்துக் கொள்வார்களானால் எல்லா பத்திரிக்கை நிருபர்களுக்கும் வீடு கிடைக்கக்கூடிய நிலைமை இருக்கிறது. அப்படி இல்லையென்றால், புள்ளிவிவரத்தோடு என்னோடு யாராவது உட்கார்வர்களானால் புள்ளிவிவரத்தை நான் வாங்கி முதல்வருடன் உட்கார்ந்து பேசி, அவருடைய அனுமதி பெற்று, இதை அதிகரிக்கவோ, வேறு ஏதாவது செய்வதற்கோ முயற்சி எடுத்துக் கொள்வேன் என்பதை இந்த நேரத்திலே சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

(பிற்பகல் 1-40)

அவர்களிடம் இப்பொழுது வாங்கக்கூடிய வாடகையே 15 சதவீதம் தான் என்பதை இந்த நேரத்திலே நான் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். நீங்கள் எவ்வளவு அக்கறையோடு அவர்களுடைய வாழ்க்கை நலம் பெறவேண்டுமென்று கருதுகிறீர்களோ, அதைவிட அதிகமாக இல்லையென்றாலும், அந்த அளவுக்கு புரட்சித் தலைவர் அரசு பத்திரிகை நிருபர்கள்பால் அன்பு காட்டுகிறது. அதை ஒட்டித்தான் திருச்சியிலே 4 வீடாக இருந்ததை, எங்களுக்கு 2 வீடு அதிகமாகத் தர வேண்டுமென்று அவர்கள் கேட்டார்கள். 2 வீடு அதிகமாக ஒதுக்கப்பட்டிருக்கிறது. சென்னையிலே 50, கோயம்புத்தூரில் 7, மதுரையில் 7, சேலத்தில் 4, திருச்சியில் 4 ஆக இருந்தது 6, உதகமண்டலத்தில் 3; மேலும் பல இடங்களிலிருந்து எங்களுக்குத் தர வேண்டுமென்று விண்ணப்பங்கள் வந்திருக்கின்றன. அந்த விண்ணப்பங்களை இந்த அரசு பரிசீலனை செய்யும் என்பதை இந்த நேரத்திலே நான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.



அதேபோல, அரசு ஊழியர்களுக்கு அளிப்பட்ட சில சலுகைகளைச் செய்திருக்கிறோம். அதில் ஒன்றை நான் முக்கியம் என்று சொல்லிக் கொள்கிறேன். அரசு ஊழியர்களுக்கு வீடு கட்ட முன் பணம் வழங்குவதற்கு நிதி நிலை அறிக்கையில் ஒதுக்கப்படும் தொகை கடந்த ஒவ்வொரு ஆண்டிலும் உயர்ந்து கொண்டிருக்கிறது. 1977-78—ல் ரூ. 35 இலட்சம், 1978-82-ல், ரூ. 600 இலட்சம்: 1982-83—ல் ரூ. 700 இலட்சம்; 1983-84-ல் ரூ. 10 கோடி. எனவே, அந்த அரசு ஊழியர்களுக்கு நான் இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன், உங்களுடைய நலனை புரட்சித் தலைவர் எப்பொழுதும் மனதிலே வைத்திருக்கிறார். கேளுங்கள், முறையாகக் கேளுங்கள், கேட்கும் வகையிலே கேளுங்கள், அதை டெமாக்ரடிக் மெத்தர்டை பின்பற்றி நீங்கள் கேட்பீர்களானால், அது கொடுக்க வேண்டிய முறையிலே கொடுக்கப்படும் என்பதைச் சொல்லிக்கொள்கிறேன்.

இந்தத் திட்டங்கள் அன்னியில் இன்னொரு திட்டம் இருக்கிறது. Accommodating the urban poor, நகரத்திலே இருக்கக்கூடிய மக்கள் வெளியே போய் குடியிருப்பதற்கு நகரத்தை ஒட்டிய மற்ற இடங்களில் sites and service என்று சொல்லி, அவர்களைக் குடியேற்றவும் திட்டங்கள் இருக்கின்றன. அந்தத் திட்டத்தைப் பற்றியும் நான் விரிவாகச் சொல்கிறேன். உலக வங்கியின் மூலமாக, மக்களுக்கு பல வசதிகளைச் செய்து கொடுத்து, தண்ணீர், கழிவறை, நடைபாதைகள், இன்டஸ்ட்ரியல் ஷெட்ஸ், இவையெல்லாம் செய்து கொடுத்து, இவைகள் அனைத்திற்கும் மேலாக, அந்த நிலத்தையே சொந்தமாக்க ஏற்பாடு செய்து, 20 சதுர மீட்டர்—யாரோ ஒரு மாண்புமிகு உறுப்பினர் பேசும்பொழுது 20 சதுர அடி என்று சொன்னார்கள்—20 சதுர அடி அல்ல; 20 சதுர மீட்டரிலிருந்து 80 சதுர மீட்டருக்கு அவர்களிடம் பணம் வாங்கி, அதை அவர்களுக்கே சொந்தமாக்க நாங்கள் திட்டமிட்டு அந்தப் பணியைச் செய்து கொண்டிருக்கிறோம். அந்தப் பணியைப் பொறுத்தவரையிலே இந்த ஆட்சி இதுவரையில், 24,862 பேருக்கு நிலத்தைக் கொடுத்திருக்கிறது. 4.83 கோடி செலவு செய்திருக்கிறது. இதற்கு மேலாகவும், இதிலே இதுவரையில் பட்டா கொடுத்தது 10,55? பேர்களுக்கு. இதற்கு மேல் இன்னும் அவர்களுக்கு பட்டா கொடுப்பதற்காக திட்டங்கள் வகுக்கப்பட்டிருக்கின்றன. Home Improvement Loan என்று சொல்லி அவர்கள் வீடு கட்டுவதற்கு ரூ. 201—250 வரையில், உள்ளவர்களுக்கு ரூ. 1500—ம், ரூ. 251-லிருந்து 300 வரையில் ரூ. 2,500—ம் ரூ. 301 லிருந்து 600 வரையில் ரூ 3,500—ம், கடனாகக் கொடுக்கப்படுகிறது. ரூ. 200க்கு குறைவாக வருமானம் உள்ளவர்களுக்கு ரூ. 600 மானியமாகத் தரப்படுகிறது, வீட்டை அபிவிருத்தி செய்வதற்கு. இந்த நிலையில் நிலப் பட்டா கொடுக்கக்கூடியது புரட்சித் தலைவர் ஆட்சியிலேதான் என்பதை இந்த நேரத்திலே சொல்லிக்கொள்கிறேன். நான் urban poor—க்குச் சொன்னேன். urban poor-க்காக, 150—லிருந்து 200 வரை வருமானம் உள்ளவர்களுக்கு 40 சதுர மீட்டரும், 201—300

உள்ளவர்களுக்கும், 301–350 வரை வருமானம் உள்ளவர்களுக்கும் 46.5 சதுர மீட்டர்களும் ப்ளோர் யூனிட் என்று சொல்வது, கழிவறை, குளியலறை வைத்து, அதற்காக ரூ. 500 மதிப்புள்ள சாமான்கள் கொடுக்கப்படுகிறது வீடு கட்டிக்கொள்ள.

அதற்கடுத்து, இன்னொரு மாடல். கழிவறையும், குளியலறையும், அதற்கு முன்னால் இரண்டு பக்கம் சுவரும் மேலே முட்டுச் சுவர், இது ஒன்று.

மூன்றாவதாக, கட்டிய வீடு. இவைகள் தரப்படுகின்றன, இவற்றை தருவதில், அரும்பாக்கம், வில்லிவாக்கம், கொடுங்கையூர் இங்கே மட்டும 12,549 பேர்களுக்கு இது வரையிலே கொடுத்திருக்கிறோம். முகப்பையூர், நெற்குன்றத்தில் 15, 0) பேர்களுக்குக் கொடுக்கப் போகிறோம் என்பதை நான் இந்த நேரத்தில் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். This is for accommodating the urban poor, apart from the Slum Clearance Scheme. ஸ்லம் கிளீயரன்ஸ் ஸ்கீம் அன்னியில், நகர்ப்புறத்தில் இருக்கக்கூடிய மக்களை, ஏழைகளை அங்கே கொண்டு போய்க் குடியேற்றியிருக்கிறோம். எவ்வளவு பேர்களைக் குடியேற்றியிருக்கிறோம் என்பதற்கான கணக்கை நான் இப்பொழுது சொன்னேன்.

இதுவன்னியில், குடிசைப் பகுதி மாற்று வாரியத்தினுடைய நடவடிக்கைகள் இனி தமிழகமெங்கும் பரவலாக வரப்போகிறது. அதற்கு புரட்சித் தலைவரவர்கள் ஆணையிட்டு விட்டார்கள். இதுவரையில் குடிசைப்பகுதி மாற்று வாரியத்தின் வேலைகள் நகரத்தில் மட்டும்தான் பார்க்கப்பட்டது. வீட்டு வசதி வாரியம் தான் சேலம், திருச்சி, கோயம்புத்தூர், மதுரை ஆகிய நகரங்களில் குடிசைப் பகுதி மாற்று வாரிய வேலைகளைப் பார்த்துக் கொண்டிருந்தது. அதற்கு மாறாக, குடிசைப் பகுதி மாற்று வாரியம் இனி தமிழகமெங்கும் பார்க்கும் என்று சொல்லியிருக்கிறார்கள்.

எல்லாவற்றிற்கும் மேலாக, சைட்ஸ் அண்ட் சர்வீஸ் ஸ்கீம் என்று சொன்னேனே, இதையே மற்ற இடங்களிலும், தாலூகா போன்ற இடங்களிலும் கொண்டு வரலாம். அதை வீட்டு வசதி வாரியம் இப்பொழுது பார்ப்பதற்காக 300 இலட்சம் ரூபாய்களை ஒதுக்கியிருக்கிறார்கள் புரட்சித் தலைவரவர்கள் என்பதைச் சொல்லிக்கொள்கிறேன். ஆகவே, இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன் படுத்தி கொண்டு எந்தெந்த தாலூக்காக்களில் எப்படி வேண்டும் என்பவர்கள் ஆங்காங்கே கலெக்டரை, வீட்டு வசதி வாரியத் தலைவரை அணுகுவீர்களேயானால் உங்களுக்கு சைட்ஸ் அன்ட் சர்வீஸ் ஸ்கீமில் இங்கே கொடுப்பதைப்போல, எகனாமிகலி வீக்கர் செக்ஷன், புவர் பீப்பிளுக்கு அதிகமாகக் கொடுக்க அங்கேயும் இதுமாதிரி கக்கூசும், குளியலறையும், கக்கூசும் குளியலறையும் மூன்று சுவரும், பிறகு ஒரு வீடும் என்று இப்படிக் கட்டிக் கொடுப்பதற்கும் ஏழை எளியவர்களுக்கு கட்டிடமாகவே கட்டிக் கொடுப்பதற்கும் ஏற்பாடு செய்யப்படுகிறது.



இதையொட்டித்தான் ஆயக்காடு பகுதியில் 1.248 குடியிருப்புகள் கட்ட ஏற்பாடாகியிருக்கிறது. அதேபோல மதுரை வைகை நதியோரத்தில் வசிக்கும் குடிசை வாழ் மக்கள் குடியிருப்புகள் பொருட்டு, அவர்களுக்காக 5,000 தன்னிறைவுத் திட்ட மனைகளை ஹட்கோ உதவியுடன் கட்டுவதாக இருக்கிறோம் என்பதைச் சொல்லிக் கொள்கிறேன்.

அதே நேரத்தில் ஒரு இலட்சம் பாபுலேஷனுக்குக் குறைவாக இருக்கக்கூடிய ஸ்மால் அண்ட் மீடியம் டவுன்ஸை அபிவிருத்தி செய்ய வேண்டுமென்பதற்காக, 28 ஊர்கள் இதுவரையில் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்றன. பேருந்து நிலையங்கள் அமைத்தல், சந்தைகளை அபிவிருத்தி செய்தல், மண்டிகள் கிடங்குகள் கடைகள் கட்டுதல், தன்னிறைவு வீட்டுமனைகள் திட்டம் இவைகளையெல்லாம் செய்வதற்காக 28 நகரங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்றன. உதகமண்டலம், கரூர், தர்மபுரி புதுக்கோட்டை, திருச்செங்கோடு, பழனி, கோபிசெட்டிப் பாளையம், மன்னார்குடி, மேட்டுப்பாளையம். செங்கல்பட்டு, குன்னூர், தாராபுரம், உசிலம்பட்டி, திருவண்ணாமலை, ஆத்தூர், நாமக்கல், கோவில்பட்டி, இராணிப்பேட்டை, காம்ப்ளக்ஸ், பொள்ளாச்சி. தேனி அல்லி நகரம், ஹோசூர், நாகப்பட்டினம், காரைக்குடி, கள்ளக்குறிச்சி, பண்ருட்டி, ஆரணி, அரக்கோணம் அண்ட் சிவகங்கா. இது இப்படி என்றால் 40 பர்சென்ட் சென்ட்ரல் கவர்ன்மெண்ட், 40 பர்சென்ட் ஸ்டேட் கவர்ன்மெண்ட்; 20 பர்சென்ட் லோகல் பாடீஸ். அவர்கள் அந்தப் பணத்தைப்போட்டு, நான் சொன்ன அபிவிருத்தித் திட்டங்களையெல்லாம் செய்வதற்கு 28 நகரங்கள் தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கின்றன. அவைகளுக்குப் பணமும் கொடுக்கப்பட்டு வருகிறது என்பதை நான் சொல்லி இத்துடன் என்னுடைய உரையை முடித்துக் கொண்டு, வெட்டுப் பிரேரணைகளையெல்லாம் பின் வாங்கிக்கொண்டு, மானியங்களை நிறைவேற்றிக் கொடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன், நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது இப்பொழுது வாக்கெடுப்பு.

**கோரிக்கை எண் 33 -- வீட்டு வசதி.**

திருவாளர்கள் பொ. உத்திராபதி, எஸ். என். இராமசாமி ஆகியவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால் அவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப் பெற்றனவாகக் கருதப்பெற்றன.

திருவாளர்கள் இரா. இராசமாணிக்கம், இரா. அருணகிரி. கே ஆர் சுந்தரம் ஆகியவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள், பேரவையின் அனுமதியுடன், திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றன.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி—

"மானியக் கோரிக்கை எண் 33—வீட்டு வசதி என்ற தலைப்பின்கீழ் ரூ. 16,34,47,000–க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்."

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

கோரிக்கை எண் 34 —நகர்ப்பகுதி வளர்ச்சி.

திருவாளர்கள் பாபு ஜனார்த்தனன், என். எஸ். வி. சித்தன் ஆகியவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால் அவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றனவாகக் கருதப்பெற்றன.

திருவாளர்கள் எம். செல்லமுத்து, தி. கா. நல்லப்பன் ஆகியவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள், பேரவையின் அனுமதியுடன், திரும்பப் பெற்றுக்கொள்ளப் பெற்றன.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி—

"மானியக் கோரிக்கை எண் 34—நகர்ப்பகுதி வளர்ச்சி என்ற தலைப்பின் கீழ் ரூ. 27,47,99,000–க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்."

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, 28-3-1983 காலை 9 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1–50 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

8. பேரவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

(அ) சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

எதுவுமில்லை.

(ஆ) அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

119. கோரிக்கை எண்கள் 33 மற்றும் 34—தமிழ்நாட்டில் வீட்டு வசதி, மற்றும் நகர்ப்புற வளர்ச்சி குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு, 1983–84. (தமிழ், ஆங்கிலம்)



இணைப்பு.

(50 ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க).

தமிழ்நாட்டில் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி 1983-84 கொள்கை விளக்கக் குறிப்பு மானியக் கோரிக்கை எண்கள் 33 மற்றும் 34.

உணவு உடைக்குப் பிறகு வீட்டுவசதி மக்களின் முக்கிய அடிப்படைத் தேவையாக உள்ளது. அவ்வாறிருப்பினும், நீண்ட காலமாக வீட்டுவசதித் துறையில் முதலீடு செய்வதென்பது உற்பத்தித்திறனில்லாதது என்ற தவறான எண்ணப் போக்கை பொருளாதார திட்டவல்லுநர்கள் கொண்டிருந்தனர். எல்லா குடிமக்களுக்கும் அடிப்படை வசதியான வீட்டு வசதியை அளிக்காதவரை மக்கள் சக்தியையும், மக்கள் வளத்தையும் வலுப்படுத்த இயலாது. வீட்டு வசதிப் பணிகள் தீவிரப்படுத்தப் பட்டாலொழிய, கட்டிடத் தொழிலினைச் சார்ந்த ஆக்கப் பொருள்கள் தயாரித்தல் மற்றும் இதரப் பணிகள் வளர்ச்சி அடையாமல் பொருளாதார வளர்ச்சியிலும் ஒரு தேக்க நிலை ஏற்படும். மூன்றாவதாக, நகர மற்றும் கிராமப்புறங்களில் உள்ள தொழில் துறையில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களும், பொருளாதாரத்தில் நலிந்த பிரிவினரும் தங்களது மிகக் குறைவான வருவாய் மூலம் வீடுகளைக் கட்ட இயலாது. எனவே, மாநிலத் திட்டம் இதனைக் கருத்தில் கொண்டு சமுதாய வளர்ச்சித் திட்டங்களில் மிக முக்கியமான இச்சமூக நல முதலீட்டில் ஏற்படும் பற்றாக்குறையை நிரப்ப வேண்டும். பொருளாதாரத்தில் நலிவுற்றோரின் செலவு செய்யும் சக்தியை மனதில் கொண்டு எல்லாப் பிரிவினருக்கும் வீட்டு வசதியினைச் செய்துகொடுப்பது தான் இத்துறையின் அடிப்படைக் கொள்கையாகும். பலவகைப் பட்ட வீட்டு வசதி நிறுவனங்களின் பணிகள் கீழே கொடுக்கப் பட்டுள்ளன.

புதிய இருபது அம்சத் திட்டத்தின் கீழ் சாதனைகள்:

2. கிராமப்புற மக்களுக்கு வீட்டு மனையும் வீடு கட்ட நிதி வசதியும், பொருளாதாரத்தில் நலிவுற்றோருக்கு வீட்டு வசதியும், குடிசைப் பகுதியின் சுற்றுப்புறத்தை மேம்படுத்துவதையும் கட்டாயத் தேவை என்பதை வலியுறுத்தும் புதிய இருபது அம்சத் திட்டத்தின் கீழ் நமது சாதனைகள், இலக்குகளை மிஞ்சக்கூடிய அளவுக்கு அமைந்துள்ளன.

| இனம். | 1982-83-க்கான இலக்குகள். | பிப்ரவரி 1983 வரையிலுள்ள சாதனைகள் |
|---|---|---|
| 1. வீட்டுமனை ஒதுக்கீடு | 80,000 | 1,27,882 |
| 2. வீடு கட்ட நிதியுதவி வழங்குதல். | 40,000 | 31,791 |

| | | |
|---|---|---|
| 3. வசதிபெற வேண்டிய குடிசை வாழ்மக்கள் | 2,15,000 | 1,86,760 |
| 4. பொருளாதாரத்தில் நலிவுற்றோருக்கு வீட்டு வசதி வழங்குதல. | 15,200 | 13,285 |

இராமப்புற வீட்டுவசதி:

3. மாநிலம் முழுவதும், கிராம கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்களின் மூலமாக கிராமப்புற வீட்டுவசதித் திட்டம் செயல்படுத்தப் படுகிறது. ஆறாவது ஐந்தாண்டு திட்டக் காலத்தில் 2,00,000 வீடுகள் கட்டுவதாகத் திட்டமிடப்பட்டது. 1980–81 மற்றும் 1981–82ஆம் ஆண்டுகளில் தமிழ்நாடுகூட்டுறவு வீட்டுவசதி சங்கம் ரூ. 3199.78 லட்சம் நிதி வழங்கி 82,716 வீடுகள் கட்டியுள்ளது. இதில் 67,864 வீடுகள் ஆதித் திராவிடர்களாலும், 14,852 வீடுகள் மற்றவர்களாலும் கட்டப்பட்டுள்ளன. 1-4-1982 முதல் 28-2-1983 வரையில் ரூ. 895.59 இலட்சத்தை இச்சங்கம் வழங்கியுள்ளது. இந்தக்கால அளவில் 31,791 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. இதில் 26,662 வீடுகள் ஆதி திராவிடர்களாலும், 5,129 வீடுகள் மற்றவர்களாலும் கட்டப்பட்டுள்ளன.

நகர்ப்புற கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கங்கள்:

4. நகர்ப்புற கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கங்களுக்கு தமிழ்நாடு கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கம் நிதியுதவி அளிக்கிறது. இதற்கு வேண்டிய நிதியை இந்திய ஆயுள் காப்புறுதிக் கழகத்திடமிருந்து இச்சங்கம் பெறுகிறது. இச்சங்கம் தொடங்கப்பட்ட நாள் முதல் 30-6- 982 வரையில் பிரதமச் சங்கங்கள் அங்கத்தினர்களுக்கு கடன் வழங்கியதன் மூலம் 42,046 வீடுகள் கட்டப்பட்டுள்ளன. 30-6-1982 வரையில் தமிழ்ந டு கூட்டுறவு வீட்டு வசதி சங்கம் பிரதம சங்கங்களுக்கு ரூ. 88.04 கோடி கடன் வழங்கியுள்ளது. இச்சங்கம் 1-7-1982 முதல் 31-1-1983 வரையில் பிரதம சங்கங்களுக்கு ரூ. 4.83 கோடி கடன் வழங்கியுள்ளது. 1983 ஆம் ஆண்டு ஜூன் மாதத்தோடு முடிவடைகின்ற கூட்டுறவு ஆண்டு 1982–83-ல், 8,000 வீடுகள் கட்டுவதாக திட்டமிடப்பட்டுள்ளது. நகர்ப்புற வீட்டு வசதி திட்டத்தை செயல்படுத்த 1983 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் இந்திய ஆயுள் காப்புறுதிக் கழகம் ரூ. 10 கோடி கடன் உதவி அளிக்க சம்மதித்து முதல் தவணையாக ரூ. 5 கோடியினை தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதிச் சங்கத்துக்கு வழங்கியுள்ளது.

தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் மூலமாக சமூக வீட்டு வசதித் திட்டங்கள்.

5. பல்வேறுபட்ட வீட்டுவசதித் திட்டங்களை தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் உயர் வருவாய்த் தொகுதியினர் முதல் பொருளாதாரத்தில் நலிந்த பிரிவினர் வரை உள்ள பலதரப்



பட்ட மக்களுக்காக நிறைவேற்றி வருகிறது. 1983–84 ல், 20,000 வீடுகள் கட்டிமுடிப்பதற்காக வீட்டுவசதி வாரியம் தனது திட்டங்களை நிறைவேற்ற ஆகும் செலவு மதிப்பீட்டை 1983–84 ஆம் ஆண்டுக்கு ரூ. 4,000 லட்சத்துக்கு உயர்த்தியுள்ளது. அதன் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:—

| | | |
|---|---|---|
| 1. பொருளாதாரத்தில் நலிந்த பிரிவினர் | 5,872 | வீடுகள் |
| 2. குடிசைமாற்றுத் திட்டம் .. | 4,732 | ,, |
| 3. தொழிற்சாலைத் தொழிலாளர் வீட்டு வசதித் திட்டம் | 120 | ,, |
| 4. குறைந்த வருவாய்த் தொகுதியினர் | 2,520 | ,, |
| 5. நடுத்தர வருவாய்த் தொகுதியினர் மற்றும் உயர்வருவாய்த் தொகுதியினர் | 4,672 | ,, |
| 6. அரசு அலுவலர்களுக்கான வாடகை வீட்டு வசதித் திட்டம் | 1,317 | ,, |
| 7. காவலர் வீட்டு வசதித் திட்டம் .. | 767 | ,, |
| மொத்தம்.. | 20,000 | |

நிலம் கையகப்படுத்துதல் மற்றும் வீட்டுமனை மேம்பாட்டுத் திட்டம்.

6. நிலத்தின் விலைகளில் ஊக வாணிகத்தைத் தடுக்கும் பொருட்டும், நிலத்தின் விலையைக் குறைக்கும் பொருட்டும், வீடு கட்டுவதற்கு நியாயமான விலையில் நிலம் கிடைக்கச் செய்யும் பொருட்டும், பெருமளவில் வளர்ந்துவரும் நகரங்களில் நெரிசலை தவிர்க்கும் பொருட்டும் நிலங்களைப் பெருமளவில் முன்னதாகக் கையகப்படுத்துவது இத்திட்டத்தின் நோக்கமாகும். ஒரு ஹெக்டேர் நிலம் மேம்படுத்த ரூ. 1 இலட்சம் என்ற வீதத்தில் 1983–84 ஆம் ஆண்டில் ஏறக்குறைய 200 ஹெக்டேர் நிலம் வீட்டுவசதி வாரியத்தால் மேம்படுத்தப்பட உத்தேசிக்கப் பட்டுள்ளது. நிலம் மேம்பாட்டுத் திட்டத்தின் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:—

| | | |
|---|---|---|
| 1. திருவான்மியூர் .. .. | 8.76 | ஹெக்டேர் |
| 2. ராமாபுரம் .. .. | 44.50 | ,, |
| 3. நெற்குன்றம் .. .. | 50.05 | ,, |
| 4. பெசன்ட்நகர் விஸ்தரிப்பு .. | 18.20 | ,, |
| 5. தாம்பரம் .. .. | 23.49 | ,, |
| 6. திண்டுக்கல் .. .. | 40.00 | ,, |
| 7. கோவைப்புதூர், கோயம்புத்தூர் .. | 15.00 | ,, |
| மொத்தம்.. | 200.00 | |

7. 1982–83 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்டுள்ள ரூ. 70 இலட்சத்துக்கு மாறாக, 1983–84 ஆம் ஆண்டின் வரவு-செலவுத் திட்டத்தில் ரூ. 200 லட்சமாக உயர்த்தி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தொழிற்சாலைத் தொழிலாளர்களுக்கு வீட்டு வசதித் திட்டம்.

8. இத் திட்டத்தின்கீழ் வீட்டு வசதி வாரியம் மாத வருமானம் ரூ 350-க்கும் குறைவாக உள்ள தொழிற்சாலைத் தொழிலாளர்களுக்குக் குடியிருப்புகளைக் கட்டி, வாடகை அடிப்படையில் ஒதுக்கீடு செய்கிறது. இத்திட்டத்தின்கீழ் 1982 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் வரை வீட்டுவசதி வாரியம் 2,974 குடியிருப்புகளைக் கட்டியுள்ளது. 1983–84 ஆம் ஆண்டில் ரூ. 30 லட்சம் செலவில் 120 குடியிருப்புகளைக் கட்ட வாரியம் திட்டமிட்டுள்ளது.

தமிழ்நாடு அரசு அலுவலர்களுக்கான வாடகை வீட்டு வசதித் திட்டம்.

9. இத்திட்டம், மாவட்டம் மற்றும் வட்டத் தலைமையகங்களில் பணிபுரியும் அரசு ஊழியர்களுக்குச் சலுகை வாடகை அடிப்படையில் வீட்டு வசதி வழங்குவதற்கு உருவாக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தை அரசு சார்பில் வீட்டுவசதி வாரியம் செயல்படுத்துகிறது மேலும், கட்டிய வீடுகளைப் பேணிப் பாதுகாக்கவும் செய்கிறது. இத் திட்டத்தின்கீழ் கட்டப்படும் வீடுகள் அரசுக்குச் சொந்தமாகும். 1982 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் வரை வீட்டு வசதி வாரியம் 12,892 வீடுகளைக் கட்டியுள்ளது. இத்திட்டத்திற்காக 1983–84 ஆம் ஆண்டின் வரவு-செலவுத் திட்டத்தில் ரூ. 600 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஏற்கனவே கட்டப்பட்டு வரும் வீடுகளைத் தவிர 1983-84 ஆம் ஆண்டில் மேலும் 1,317 வீடுகள் கட்டி முடிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

காவலர் வீட்டு வசதித் திட்டம்.

15. காவலர் வீட்டு வசதித் திட்டத்தின் நோக்கம், காவலர் துறை சார்நிலைப் பணியாளர்களின் 80 சதவீதத்தினருக்குக் குடியிருப்பு வசதிகள் செய்து தரப்படவேண்டும் என்பதாகும். இத்திட்டத்தை அரசு சார்பாக நிறைவேற்றும் நிறுவனங்களில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியமும் ஒன்றாகும். இத்திட்டத்தின் கீழ் 31-12-1982 வரையில் 2,214 வீடுகளை வாரியம் கட்டியுள்ளது. 1983-84 ஆம் ஆண்டில் 767 வீடுகளைக் கட்டுவதற்கு வாரியம் உத்தேசித்துள்ளது காவலர் துறையினருக்குக் குடியிருப்புகள் கட்டுவதற்காக 1983–84 ஆம் ஆண்டின் வரவு–செலவுத் திட்டத்தில் ரூ. 100 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



தொழிலாளர் துறை ஆணையர் மூலமாக நிறைவேற்றப்படும் தொழிலாளர் வீட்டு வசதி திட்டங்கள்

தொழிலாளர் மலிவு வீட்டு வசதித் திட்டம் (தனியார் துறை).

11. இத்திட்டத்தின் ஆரம்ப காலத்திலிருந்து 1981—82 வரை, 18 தொழில் நிறுவனங்கள் அரசிடம் நிதியுதவி பெற்று 1,206 வீடுகள் கட்டியுள்ளன. இதற்கென கடனாக ரூ. 32.75 லட்சமும் ஆதரவுத் தொகையாக ரூ. 14.08 லட்சமும் தனியார் துறைக்கு வழங்கப்பட்டுள்ளது. 1982-83 ஆம் ஆண்டில் 116 வீடுகள் கட்டப்பட்டுள்ளன. 31-12-1982 வரை ரூ. 0.38 லட்சம் ஆதரவுத் தொகையாக வழங்கப்பட்டுள்ளது 1982—83 ஆம் ஆண்டில் தொழில் நிறுவனங்களுக்கு வழங்கப்படும் நிதியுதவி ரூ. 6.41 லட்சமாக இருக்கும்.

12. 1983-84 ஆம் ஆண்டின் வரவு செலவுத்–திட்டத்தில் கடனாக ரூ. 2.50 லட்சமும், ஆதரவுத் தொகையாக ரூ. 2.50 லட்சமும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் 1983-84 ஆம் ஆண்டில் 96 வீடுகள் கட்டுவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

தோட்டத் தொழிலாளர்களுக்காக மலிவு வீட்டுவசதித் திட்டம்.

13. இத்திட்டத்தின் ஆரம்ப காலத்திலிருந்து 1981—82 வரை 31 தோட்ட அதிபர்கள் அரசிடம் நிதியுதவி பெற்று 828 வீடுகளைக் கட்டியுள்ளார்கள். இதற்கென கடனாக ரூ. 12.55 லட்சமும், ஆதரவுத் தொகையாக ரூ. 8.28 லட்சமும் தோட்ட அதிபர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. 1982-83 ஆம் ஆண்டில் 31-12-1982 வரை ரூ. 0.60 லட்சம் கடனாகவும், ரூ. 0.36 லட்சம் ஆதரவுத் தொகையாகவும் வழங்கப்பட்டுள்ளது. இந்நிதி ஆண்டில் தோட்ட அதிபர்களுக்கு வழங்கப்படும் நிதியுதவி ரூ. 6.24 லட்சமாக இருக்கும். 1982-33 ஆம் ஆண்டில் 230 வீடுகள் கட்டுவதற்கான 5 புதிய திட்டங்களுக்கு அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது. இந்த 5 திட்டங்களுக்கும் வழங்கப்படும் நிதியுதவி ரூ. 8.05 லட்சம் ஆகும்.

14. 1983-84 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில், கடனாக ரூ. 5.13 லட்சமும், ஆதரவுத் தொகையாக ரூ. 4.00 லட்சமும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. இத்திட்டத்தின் கீழ் 1983-84 ஆம் ஆண்டில் 256 வீடுகள் கட்டுவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

அரசு அலுவலர்களுக்கு வீடு கட்டுவதற்காக முன்பணம் வழங்கல்:

15. அரசு அலுவலர்களுக்கு வீடுகட்டவும், வீட்டு மனைகள் வாங்கி அதில் வீடு கட்டவும், முன்னரே கட்டப்பட்ட வீடுகள் வாங்கவும், தங்களுக்குச் சொந்தமான வீடுகளில் உள்ள இடவசதியை விரிவாக்கவும் முன்பணம் வழங்கப்படுகிறது. வீட்டு

மனைகள் வாங்கி அதில் வீடு கட்டவும், தங்களுக்கு சொந்தமான வீட்டு மனைகளில் வீடு கட்டவும், முன்னரே கட்டப்பட்ட வீடுகள் வாங்கவும்; கடனைத் திருப்பித் தரும் தகுதியின் அடிப்படையில் வழங்கப்படும் முன் பணம் ரூ. 1.50 லட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது. தங்களுக்குச் சொந்தமான வீடுகளில் உள்ள இடவசதியை விரிவாக்க வழங்கப்பட்ட முன் பணம் ரூ. 25.000த்திலிருந்து ரூ. 50,000த்திற்கு உயர்த்தப்பட்டுள்ளது. இப்பொழுது வீடுகளுக்கு நிலையான மேம்பாடுகள் செய்வதற்கும் முன் பணம் வழங்கப்படுகிறது.

16. இந்தத் திட்டத்திற்கு, 1982—83 ஆம் ஆண்டு ரூ. 700 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 31-1-1983 வரை, 1,209 பல்வகைப்பட்ட அரசு அலுவலர்களுக்கு வீடு கட்ட முன் பணம் வழங்கப்பட்டுள்ளது. 1983-84 ஆம் ஆண்டின் வரவு-செலவுத் திட்ட ஒதுக்கீடு ரூ. 1,000 லட்சத்துக்கு உயர்த்தப்பட்டுள்ளது.

குடிசைப் பகுதி மேம்பாடு மற்றும் அகற்றுதல்—வெளியூர்களின் குடியிருப்புகள் கட்டும் திட்டம்.

17. 1961 ஆம் ஆண்டு முதல் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் குடிசைப் பகுதி மாற்றும் மற்றும் மேம்பாட்டுத் திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. மாவட்டத் தலைநகர்களான கோயம்புத்தூர், மதுரை, திருச்சிராப்பள்ளி, சேலம், தஞ்சாவூர் மற்றும் திருநெல்வேலி ஆகிய இடங்களில் 1982 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் வரையில் 8,228 குடியிருப்புகள் கட்டப்பட்டுள்ளன.

18. இத்திட்டத்தின் கீழ் அதிகமாக வீட்டு வசதிகள் வழங்கப்படவேண்டும் என்ற கொள்கையில் மாநிலம் முழுவதும் எங்கெங்கு வீட்டு வசதி தேவையுள்ளதோ அங்கெல்லாம் இத்திட்டத்தின் இயக்கத்தை அரசு விரிவாக்கியுள்ளது. இத்திட்டத்தின்கீழ், 1982 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் வரையில் 640 குடியிருப்புகள் ரூ. 175.68 லட்சம் செலவில் கட்டப்பட்டுள்ளது. 1983-84 ஆம் ஆண்டில் தன்னிறைவு வீட்டு மனைகளை மேம்படுத்துவதற்கும் மற்றும் 5,000 குடியிருப்புகள் கட்டுவதற்கும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தை செயல்படுத்துவதற்காக, 1983-84 ஆம் ஆண்டின் வரவு-செலவுத் திட்டத்தில் ரூ. 300 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் இயக்கத்தை விரிவாக்குவதற்காக தன்னிறைவு வீட்டு மனைத்திட்ட வடிவில் "ஹட்கோ"விடமிருந்து அதிக நிதியுதவி பெறப்படும்.

சென்னை நகரில் குடியிருப்புகள் கட்டும் திட்டம்.

19. தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம் சென்னை நகரில் குடிசைப்பகுதி நீக்கும் திட்டங்களை மேற்கொண்டு வருகிறது. 1982 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் வரையில்



ரூ. 4,086.67 இலட்சம் செலவில் சென்னை நகரில் 40,770 குடியிருப்புகளை வாரியம் கட்டியுள்ளது. 1982-83 ஆம் ஆண்டில் ரூ. 420 லட்சம் செலவில், 2,200 குடியிருப்புகளைக் கட்டுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தைச் செயல்படுத்துவதற்காக 1983-84 ஆம் ஆண்டின் வரவு–செலவுத் திட்டத்தில் ரூ. 2.75 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 1983-84 ஆம் ஆண்டில் 1,900 குடியிருப்புகள் கட்டுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. 1983-84 ஆம் ஆண்டில் "ஹட்கோ" விடமிருந்து அதிக நிதியுதவி பெறப்படும்.

20. 1982-83 ஆம் ஆண்டில், குடிசை மாற்று வாரியம், "ஹட்கோ" விடமிருந்து ரூ. 395.60 இலட்சம் கடனுதவி பெற்றுள்ளது. ரூ. 75.98 லட்சம் செலவில் 716 குடியிருப்புகள் கட்டுவதற்காக 4 திட்டங்களுக்கு வீட்டுவசதி மற்றும் நகர வளர்ச்சி நிறுவனம் ஒப்புதல் அளித்துள்ளது. இந்த ஆண்டின் முடிவில் அல்லது மறு ஆண்டின் துவக்கத்தில் ரூ. 316.87 இலட்சம் பெறுமான 6 திட்டங்களுக்கு வீட்டு வசதி மற்றும் நகர வளர்ச்சி நிறுவனத்தின் ஒப்புதலைப் பெறலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

சென்னை நகரில் விரைவுபடுத்தப்பட்ட குடிசைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம்.

21. இத்திட்டம் 1977 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. விரைவுபடுத்தப்பட்ட குடிசைப் பகுதிமேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் பொதுக்கழிப்பிடங்கள், குடிநீர் வழங்கல், தெருவிளக்குகள், பொது இடங்களுக்கு இணைப்புச் சாலைகள் போன்ற அடிப்படை வசதிகள் செய்து கொடுக்கப்படுகின்றன. 1982 ஆம் ஆண்டு வரையில் 46,000 குடும்பங்கள் இத்திட்டத்தின் கீழ் பயனடைந்துள்ளன. 1982-83 ஆம் ஆண்டில் மேலும் 6,000 குடும்பங்கள் பயனடைவதற்கு ரூ. 50 லட்சம் செலவு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

22. அரசு மற்றும் இதர பொது நிலங்களிலுள்ள குடிசைகள் சென்னைப் பெருநகர் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் கொண்டு வரப்பட்டு விட்டதால் இந்தத் திட்டத்தின் விரிவாக்கம் குறைந்து கொண்டு வருகின்றது. ஆகையால், 1983-84 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் முதலீடு 2,750 குடும்பங்கள் மட்டும் பயனடைவதற்கு ரூ. 20 இலட்சமாகக் குறைக்கப்பட்டுள்ளது. ஐக்கிய நாடுகளின் சிறுவர் நிதியிலிருந்து உதவி பெற்று, சென்னை நகரில் ஒரு நகர்ப்புற சமுதாய வளர்ச்சித் திட்டத்தைச் செயல்படுத்த அரசு உத்தேசித்துள்ளது. இத்திட்டம், சென்னைப் பெருநகர் வளர்ச்சித் திட்டம் ஒன்றின் மூலம் மேம்படுத்தப்பட்ட இடங்களில் 50,000 குடும்பங்களை உள்ளடக்கி, நல்ல சுற்றுப்புற சூழ்நிலையையும் நடந்து வரும் திட்டங்களின் குறைகளைப் போக்குதல், இளைஞர்களின் பணிகள், பயிற்சி மற்றும் வேலை வாய்ப்புத் திட்டங்கள் ஆகியவைகளை வழங்குவதற்காக செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

(1983 மார்ச் 26

மானியக் கோரிக்கை எண் 34—நகர்ப்புற வளர்ச்சி.

23. நகர்ப்புற ஏழை மக்களுக்கு வீட்டு வசதி, குடிசைப் பகுதி மேம்படுத்துதல், தாய்-சேய் நலம், சத்துணவு, நகராட்சித் தொண்டு, போக்கு வரத்து ஆகியவைகளை முக்கியமாக வலியுறுத்துகின்ற நகர்ப்புற வளர்ச்சித் திட்டம் 1977—78 ஆம் ஆண்டு முதல் உலக வங்கியின் நிதியுதவியோடு சென்னை நகரில் செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

சென்னைப் பெருநகர் வளர்ச்சித் திட்டம்—I

24. சென்னைப் பெருநகர் வளர்ச்சித் திட்டம் 1977 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. இத்திட்டத்தின் மொத்த செலவு ரூ. 56.11 கோடியாகும். இத்திட்டம் கீழே கொடுக்கப்பட்டுள்ள பகுதிகளைக் கொண்டதாகும்:—

(1) தன்னிறைவு வீட்டு மனைத் திட்டம்.
(2) குடிசைப்பகுதி மேம்படுத்துதல்.
(3) தாய்-சேய் நலம்.
(4) குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீர் அகற்றல்.
(5) சாலை மற்றும் போக்குவரத்து மேம்பாடு.
(6) பேருந்து போக்குவரத்து.
(7) தொழில் நுட்ப உதவி.

25. இத்திட்டத்தின் கீழ், பேருந்து போக்குவரத்து மற்றும் தொழில் நுட்ப உதவி ஆகிய பகுதிகள் ஏற்கனவே முடிவடைந்து விட்டன. மற்ற பகுதிகளில் வேலைகள் முடிவடையும் நிலையிலுள்ளன. இப்பணிகள் 1984 ஆம் ஆண்டு டிசம்பர் மாத இறுதியில் முடிவடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

சென்னைப் பெருநகர் வளர்ச்சித் திட்டம்—II

26. சென்னை நகர்ப்புற வளர்ச்சித் திட்டம் ஒன்றின் கீழ் குறிப்பாகக் குடியிருப்புத் திட்டத்தின் கீழ் தொடங்கப்பட்ட குறைந்த அளவு செலவிலான மேம்பாட்டுப் பணிகளை மேற்கொண்டு விரிவுபடுத்துவதே சென்னைப் பெருநகர் வளர்ச்சித் திட்டம் இரண்டின் முக்கிய நோக்கமாகும். இத்திட்டத்தின் மொத்தச் செலவு ரூ. 73.90 கோடியாகும். 1982 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் வரையில் ரூ. 1,777.24 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. இத்திட்டம், கீழ்க்காணும் பகுதிகளை கொண்டுள்ளது.

(1) தன்னிறைவு வீட்டு மனை திட்டம்.
(2) குடிசைப் பகுதி மேம்பாடு.
(3) சாலைப் போக்குவரத்து.
(4) கழிவுப்பொருள்களை செவ்வையாகக் கையாளுதல்.
(5) தொழில் நுட்ப உதவி.



1983 மார்ச் 26)

சென்னைப் பெருநகர் வளர்ச்சித் திட்டங்கள் ஒன்று மற்றும் இரண்டின் கீழ் குடிசைப் பகுதி மேம்பாடு.

27. குடிசைப் பகுதிகளில் வாழ்கின்ற பொருளாதாரத்தில் நலிந்தவர்கள் பயனடையும் பொருட்டு தெருவிளக்குகள், சாலைகள், கழிவு நீர் அகற்றுதல், குடிநீர் வழங்கல், பொதுக் கழிப்பிடங்கள் முதலிய அடிப்படை வசதிகளைத் தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம் வழங்குகின்றது. சென்னைப் பெருநகர் வளர்ச்சித் திட்டம் ஒன்றின் கீழ் 24,802 குடும்பங்களை உள்ளடக்கிய 41 குடிசைப் பகுதிகளில் மேம்பாட்டு வேலைகள் முடிவடைந்து விட்டன. இத்திட்டத்தின் கீழ் 1982 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் வரையில் ரூ. 390.32 லட்சம் செலவிடப்பட்டுள்ளது.

28. சென்னை மாநகராட்சிக்குச் சொந்தமான இடத்தில் அமைந்துள்ள 4,137 வீடுகளை உள்ளடக்கிய 12 குடிசைப்பகுதிகளில் மேம்பாட்டு வேலைகளைச் சென்னை மாநகராட்சி செயல்படுத்தி வருகின்றது. இத்திட்டத்தின் கீழ் 1982 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் வரையில் ரூ. 50.84 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

29. சென்னைப் பெருநகர் வளர்ச்சித் திட்டம் இரண்டின்கீழ் குடிசைப் பகுதியிலுள்ள 50,000 குடும்பங்கள் சுகாதாரம், சத்துணவு மற்றும் குழந்தைகள் நலம் திட்டங்களின் மூலம் பயனடைவார்கள். 30,000 குடிசைப் பகுதிக் குடும்பங்கள் பயனடையும்வண்ணம் 250 பாலர் பள்ளிகள் மற்றும் 15 மருத்துவ நிலையங்கள் ஆரம்பிக்கப்படும், முதலாம் ஆண்டு திட்டத்திற்காக 250 பாலர் பள்ளிகளில் 20 பாலர் பள்ளிகளுக்கு அரசு ஒப்புதலளித்துள்ளது. 5 பாலர் பள்ளிகள் கட்டி முடிக்கப்பட்டு செயல்படத் தொடங்கி உள்ளன. குடியிருப்புகளுக்கு அடிப்படை வசதிகளைச் செய்ய மாத வருமானம் ரூ. 201 முதல் ரூ. 600 வரை உள்ளவர்களுக்கு ரூ. 1,500 முதல் ரூ. 3,500 வரை வீட்டு மேம்பாட்டுக் கடன் வழங்கப்படும். மாத வருமானம் ரூ. 200-க்குக் குறைவாக உள்ளவர்களுக்கு ரூ. 600 மானியமாகக் கொடுக்கப்படும். சென்னைப் பெருநகர் வளர்ச்சித் திட்டம் இரண்டின் கீழ் 51 குடிசைப் பகுதிகள் மேம்படுத்துவதற்கு எடுத்துக் கொள்ளப்பட்டு 9 குடிசைப்பகுதிகளில் மேம்பாட்டு வேலைகள் முடிவடைந்து விட்டன. 1982 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் வரை ரூ. 180.62 இலட்சம் செலவு செய்யப்பட்டுள்ளது. 1983-84 ஆம் ஆண்டின் வரவு—செலவுத் திட்டத்தில் ரூ. 450 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(1983 மார்ச் 26

### சென்னைப் பெருநகர் வளர்ச்சித் திட்டங்கள் ஒன்று மற்றும் இரண்டின்கீழ் தன்னிறைவு வீட்டுமனைகள்.

30. முழு வசதிகளடங்கிய குடியிருப்பு மனைகள், முக்கிய வீட்டு வசதிப் பகுதிகள், கட்டிடப் பொருள்கள், சமுதாய வசதிகள் ஆகியவைகள் அரும்பாக்கம், வில்லிவாக்கம் மற்றும் கொடுங்கையூர் ஆகிய இடங்களில் உள்ள தன்னிறைவு வீட்டு மனைத் திட்டத்தின் கீழ் பொருளாதாரத்தில் நலிவுற்றவர்களுக்கும், குறைந்த வருமானம் உள்ளவர்களுக்கும் செய்து தரப்படுகின்றன. இத்திட்டத்தின் கீழ் 1982 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் வரை ரூ. 1,201.48 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. 1983—84 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் ரூ. 120 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

31. சென்னைப் பெருநகர் வளர்ச்சித் திட்டம் ஒன்றின் கீழ் குறிப்பாக குடியிருப்புத் திட்டத்தின்கீழ் தொடங்கப்பட்ட குறைந்த அளவு செலவிலான மேம்பாட்டுப் பணிகளை சென்னைப் பெருநகர் வளர்ச்சித் திட்டம் இரண்டின்கீழ் மொகப்பேர் மற்றும் நெற்குன்றம் ஆகிய இடங்களிலுள்ள 15,000 குடும்பங்களுக்கு விரிவுபடுத்தப்பட்டுள்ளது. 123.5 ஹெக்டேர் நிலங்களில் மொகப்பேரிலுள்ள 62.1 ஹெக்டேர் நிலம் எடுத்துக் கொள்ளப்பட்டு அதில் வேலைகள் முன்னேற்றமடைந்து வருகின்றன. 1982 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் வரை ரூ. 479.95 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. 1983-84 ஆம் ஆண்டின் வரவு-செலவுத் திட்டத்தில் ரூ. 400 லட்சம் இத்திட்டத்தின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தால் செயல்படுத்தப்படும் தனித் திட்டங்கள்.

32. மேற்கூறிய திட்டங்களைத் தவிர, மணலி புதுநகர்த் திட்டம், மறைமலை நகர் திட்டம், கோயம்பேடு மொத்த விற்பனை அங்காடி, ஆலந்தூர், மாதவரம் மற்றும் கோயம்பேடு ஆகிய இடங்களில் வெளியூர் பேருந்துகளுக்கான நிலையங்கள் மற்றும் சுமை வாகன நிலையங்கள், சாத்தாங்காட்டில் எஃகு மற்றும் இரும்பு அங்காடி ஆகிய திட்டங்களைச் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் நேரிடையாகச் செயல்படுத்தி வருகிறது. இத்திட்டங்களின் முக்கிய அம்சங்கள் கீழே விவரிக்கப்பட்டுள்ளன.

**கோயம்பேடு மொத்த விற்பனை அங்காடி:**

33. சென்னை நகரில் மைய வாணிகப் பகுதியில் நெரிசலைத் தவிர்க்கும் பொருட்டு சென்னைக்குப் பத்து கிலோமீட்டர் தொலைவிலுள்ள, கோயம்பேட்டில் மொத்த விற்பனை அங்காடியை (துணி, தானியம், பழங்கள், காய்கறிகள் மற்றும் பூக்கள் மாற்றுவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. இங்கு 97.17 ஹெக்டேர் நிலப்பரப்பில் 3,200 கடைகள் கட்ட திட்டமிடப்பட்டுள்ளது, இத்திட்டத்திற்கு தற்காலிகச் செலவு ரூ. 64.12



1983 மார்ச் 26)

கோடியாகும். ஏறக்குறைய 32 ஹெக்டேர் பரப்புள்ள தனியார் நிலங்கள் கையகப்படுத்தப்பட்டுள்ளது. சென்னைப் பெருநகர் குடிநீர் மற்றும் வடிகால் வாரியம் இந்த இடத்திற்குத் தண்ணீர் வழங்குவதற்கு ஏற்பாடு செய்து வருகிறது. மாநில அரசும் மற்றும் மத்திய அரசும் கடைகளைக் கட்டுவதற்கு நிதியுதவி வழங்க ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது 1983-84 ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்டத்தில் ரூ. 500 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### வெளியூர் பேருந்துகளுக்கான நிலையங்கள் மற்றும் சுமை வாகன நிலையங்கள்.

34. திறமையான பேருந்துப் பணியினை வழங்குவதற்கும், சென்னை நகரின் போக்குவரத்து நெரிசலைக் குறைக்கவும், வடக்கிலிருந்தும் தெற்கிலிருந்தும் வருகின்ற போக்குவரத்தினை நகரின் உள்ளே நுழையாமல் பாதை மாற்றவும் ஆலந்தூர், மாதவரம் மற்றும் கோயம்பேடு ஆகிய இடங்களில் 3 பயணிகள் பேருந்து மற்றும் சுமைவாகன நிலையங்கள் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேலே குறிப்பிட்டுள்ள மூன்று இடங்களும் உள் வட்டச் சாலையை ஒட்டியே அமையும். ஆலந்தூரில் 20.7 ஏக்கர் நிலப்பரப்பில் ஒரு பயணிகள் பேருந்து நிலையம் மட்டும் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதற்கு வேண்டிய நிலங்கள் கையகப்படுத்தப்பட்டு வருகின்றன. 1983-84 ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்டத்தில் ரூ. 100 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**இரும்புப் பொருட்கள் அங்காடி:**

35. மைய வணிகப் பகுதியின் நெரிசலைத் தவிர்க்கும் பொருட்டு சென்னை ஜார்ஜ் டவுனிலிருந்து இரும்புப் பொருட்கள் அங்காடியை மாற்றுவதற்காக தகுந்த நிலத்தைத் தேர்ந்தெடுக்கும் செயற்குறிப்பு பரிசீலனையில் உள்ளது. நிலத்தைச் சீர்படுத்துவதற்கும் மற்றும் முதனிலைப் பணிகளுக்கு ரூ, 10 லட்சம் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. 1983-84 ஆம் ஆண்டின் வரவு செலவு திட்டத்தில் ரூ. 200 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**மணலி:**

36. சென்னைக்கு வடக்கேயுள்ள மணலியில் ஒருங்கிணைந்த ஒரு புதுநகரம் அமைக்கப்பட்டு வருகிறது. இந்த இடத்திலும் இதன் சுற்றுப்புறத்திலும் உள்ள தொழிற்சாலைத் தொழிலாளர்களுக்கு வீட்டு வசதிகளை வழங்குவது இத்திட்டத்தின் நோக்கமாகும். கடைகள், அங்காடிகள், பள்ளிகள் ஆகியவைகளைத் தவிர இத்திட்டத்தின் முதல் பகுதியில் 2,702 வீட்டு மனைகளை மேம்படுத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. இது தவிர 44 ஏக்கர் நிலப்பரப்பில் சமுதாய வசதிகள், பூங்காக்கள், விளையாட்டுத் திடல்கள் மற்றும் சாலைகள் முதலியன அமைக்கப்பட்டுள்ளன. இந்த வளர்ச்சிக்கு ''ஹட்கோ''

நிறுவனம் நிதியுதவி அளித்துள்ளது. இதுவரை 542 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டு தொழிற்சாலைத் தொழிலாளர்களுக்கும் மற்றவர்களுக்கும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. இரண்டாவது திட்டத்தில் 416 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டு ஒதுக்கீடும் செய்யப்பட்டுள்ளன. சென்ற ஆண்டில் கட்டுவதற்கு ஆரம்பிக்கப்பட்ட 270 நடுத்தர வருவாய்ப் பிரிவினருக்கான வீடுகள் முடிவடையும் நிலையிலுள்ளன. இதுதவிர, 100 திறந்த மேம்படுத்தப்பட்ட மனைகள் பலவகைப்பட்ட வருவாய்ப் பிரிவினருக்கும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. 1983-84 ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்டத்தில் ரூ. 135 லட்சம் இத்திட்டத்திற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மறைமலை நகர்:

37. இது ஒரு லட்சம் மக்கள் தொகையை கொண்டுள்ள 1600 ஹெக்டேர் நிலப்பரப்பில் சென்னையிலிருந்து 45 கிலோ மீட்டர் தூரத்தில் சென்னை-திருச்சி தேசிய நெடுஞ்சாலை மற்றும் சென்னை-திருச்சி புகை வண்டிப் பாதையில் உருவாக்கப் பட்டுள்ள ஒரு புதிய நகரமாகும். புறநகர் திட்டம் ஒன்றில் 64 ஹெக்டேர் நிலம் வீட்டு வசதிக்கு 184 ஹெக்டேர் நிலம் தொழிற்சாலைகளுக்கும் மேம்படுத்தப்பட்டுள்ளன, இந்தப் புறநகர் திட்டம் 1197 வீட்டு மனைகளும், தொழிற்சாலைகளுக்கென ஒதுக்கப்பட்ட இடம் 79 மனைகளையும் கொண்டது. 399 திறந்த வீட்டு மனைகள் வீட்டு வசதிக்காகவும், 84 மனைகள் தொழிற்சாலைகளுக்காகவும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. ''ஹட்கோ''வின் நிதியுதவியோடு குறைந்த வருவாய்ப் பிரிவினருக்கான 144 வீடுகள் கட்டப்பட்டு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. புறநகர்த் திட்டம் ஒன்றின்கீழ் இரண்டாவது திட்டமாக 214 குறைந்த வருவாய்ப் பிரிவினருக்கான வீடுகள் முடியும் தருவாயிலுள்ளன. புறநகர்த் திட்டம் இரண்டின் கீழ் 216 குறைந்த வருவாய்ப் பிரிவினருக்கான வீடுகளும் 30 நடுத்தர வருவாய்ப் பிரிவினருக்கான வீடுகளும் கட்டி முடிக்கப்பட்டு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. 51 ஹெக்டேர் நிலப்பரப்பில் புறநகர்த் திட்டம் இரண்டு மற்றும் மூன்றின் கீழ் குறைந்த வருவாய்ப் பிரிவினர்களுக்கு 504 வீடுகளும் மற்றும் 214 வீடுகளும் மேலும் நடுத்தர வருவாய்ப் பிரிவினருக்கு 30வீடுகளும் ரூ. 134.27 லட்சம் செலவில் கட்ட வேலைகள் 1980-81 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டன. ரூ. 388 லட்சம் செலவில் பாலார் குடிநீர்த் திட்டம் ஆரம்பிக்கப்பட்டு குடிமைப் பணிகள் முடியும் தருவாயிலுள்ளன. 1983-84 ஆம் ஆண்டின் வரவு-செலவுத் திட்டத்தில் ரூ. 125 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

நகர் நாட்டுப்புற அமைப்புத் திட்டம்.

சென்னைப் பெருநகரில் திட்ட அனுமதிக்கு விதிகள்

38. கழிவுநீர் அகற்றல், குடிநீர் வழங்கல் போன்ற அடிப்படை வசதிகளை வழங்குவதில் நெருக்கடியை உருவாக்குகின்ற சென்னைப் பெருநகரில் குறிப்பிட்ட இடங்களில் ஏற்படுகின்ற கூட்டு கட்டிட வளர்ச்சியையும் மற்றும் நெரிசலையும்



136017
600 008.

ஒழுங்குபடுத்துவதற்காக ''தனிக் கட்டிடங்கள்'' மற்றும் ''கூட்டு வளர்ச்சிக் கட்டிடங்கள்'' என்ற வரையறுப்பின்கீழ் தனி விதிகளை அரசு அங்கீகரித்துள்ளது. இவ்விதிகள் 27-10-1982 முதல் அமல்படுத்தப்பட்டு வருகிறது. கட்டிடங்களுக்கு முன்னும், பின்னும், மற்றும் பக்கத்தில் அதிகமான திறந்த வெளியும் சமுதாய மற்றும் பொழுது போக்கு வசதிகளுக்குத் திறந்த வெளி இடங்கள் இருக்க வேண்டுமென்று இந்த விதிமுறைகள் முன்பு இருந்த விதிகளைவிட அதிகம் வலியுறுத்துகின்றன.

39. ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின் கீழ் சிறிய மற்றும் நடுத்தர நகரங்களை முன்னேற்றம் செய்வதற்காக 1981-82 ஆம் ஆண்டில் ரூ. 202 லட்சம் நிதியுதவி வழங்கப் பட்டது. 1982-83 ஆம் ஆண்டில் ரூ. 168 லட்சம் 6 நகரங்களுக்காக வழங்கப்பட்டுள்ளது. 1982-83 ஆம் ஆண்டில் கூடுதல் திட்டங்களுக்காக மத்திய அரசும் ரூ. 75·50 லட்சம் வழங்கியுள்ளது.

40. மேலும் மன்னார்குடி, நாகப்பட்டணம், செங்கல்பட்டு, தர்மபுரி, கோபிச்செட்டிப்பாளையம், மேட்டுப்பாளையம், ஹோசூர், உதகமண்டலம் மற்றும் உடுமலைப்பேட்டை ஆகிய நகரங்களுக்கு நிதியுதவி வழங்குவது குறித்து மத்திய அரசின் பரிசீலனையில் உள்ளது.

41. 1983-84 ஆம் ஆண்டில் மாநில அரசு நகர மற்றும் ஊர்ப்புற வளர்ச்சி நிதியிலிருந்து உள்ளாட்சிகளுக்கு அதன் வருவாய் தரத்தக்க திட்டங்களுக்குத் தொடர்ந்து நிதியுதவி அளித்து வரும். 1982-83 ஆம் ஆண்டில் ரூ. 113.25 லட்சம் கடன் உதவி வழங்கப்பட்டது. 1983-84 ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்டத்தில் ரூ. 160 லட்சம் ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளது. இது மத்திய அரசால் சிறிய மற்றும் நடுத்தர நகரங்களில் அபிவிருத்தித் திட்டங்களுக்கு அளிக்கப்படும் நிதி உதவிக்கு மேல் கூடுதலாக அளிக்கப்படுகிறது.

42. மண்டல வளர்ச்சிப் பகுதிகள் வளப்படுத்தித் தங்களது சார்புப் பகுதிகளுக்குப் பயன்படும் வகையில் மதுரை, கோயம்புத்தூர், சேலம் மற்றும் திருச்சிராப்பள்ளி நகர்ப்புற வளர்ச்சித் திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. நகரங்களில் இன்றியமையா வசதிகளிலுள்ள குறைகளைப் போக்குவதும் பொருளாதாரத்தில் நலிந்த பிரிவினரின் பிரச்சினைகளை சீர்படுத்துவதும் இதற்காக வெளியிலிருந்து நிதியுதவித் தேடுவதும் இத்திட்டத்தின் நோக்கமாகும்.

43. பல ஆண்டுகளுக்கு முன்னதாக உள்ளாட்சிகளால் அனுமதிக்கப்பட்டதும் பூர்த்தியடையாததுமான வளர்ச்சித் திட்டங்களை விரிவாக ஆய்வு செய்ய அரசு உத்தேசித்துள்ளது. இந்தப் பணி மதுரையிலும் கோயம்புத்தூரிலும் முதன்முதலில் மேற்கொள்ளப்பட்டு மற்ற நகரங்களில் படிப்படியாக செயலாக்கப் படும்.